VOL. VIII

D. 3074 - 3169.

A DESCRIPTIVE CATALOGUE

OF THE

TAMIL MANUSCRIPTS

IN THE

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS

BY

T. CHANDRASEKHARAN, M.A., L.T.
Curator, Government Oriental Manuscripts Library, Madras
and the staff of the Library

(*Prepared under the orders of the Government of Madras*)

VOLUME VIII

Manuscripts of Mackenzie Collection—continued
D. Nos. ~~2950~~ to 3169.
3074 – 3169

PRINTED BY THE SUPERINTENDENT
GOVERNMENT PRESS
MADRAS
1953

No. 3074. நிமிந்தபட்டி நீலியப்பக் கவுண்டன் வமிசாவளி.

NIMINDAPAṬṬI NĪLIYAPPAKKAVUṆḌAN VAMIŚĀVAḶI.

Pages, 9. Lines, 22 on a page. Condition, injured. Extent, 126 granthas.

Begins on fol. 181 (*a*) of the manuscript. described under D. No. 3036. Complete.

A genealogical account of the Palaiyakar Nīliyappakkavuṇḍan in the village of Nimindapaṭṭi, Aravakkurichy taluk, near Dhārāpuram.

Beginning :

தாராபுரம் துக்குடி அரவக்குரிச்சி தாலூக்காவுக்குச் சேர்ந்த நிம(ர்)ந்த பட்டி கிராமத்திலேயிருக்கும் பட்டக்காரன் நீலியப்பக் கவுண்டன் என்றப் பட்ட பூர்வத்துப் பாளையக்காரர் கைபீது * * * * * கோத்திரத்தில் "நீலியப்பக் கவுண்டன்" என்னப் பட்டவனுக்குச் சிறிது பல முங்கூட்டி "ஒட்டியராசாவைச்" செயம் பண்ணி வரச்சொல்லி உத்தரவு செய் தார்கள். * * * *

End :

மகாராச ராச ஸ்ரீ [கும்]ப(கம்)னியாருடைய தயவுக்குப் பாத்திரனாய் "நிமந்தபட்டி," கிராமத்திலே குடியிருப்புக்காரனாய் மிகவும் வணக்கத் துடனே காத்துக்கொண்டு இருக்கிறேன்.

நீலியப்பக்கவுண்டன் ஒப்பிதம்—

(கு. - பு.).—

இது, அரவக்குரிச்சி தாலூக்காவிலுள்ள "நிமிந்தபட்டி," என்ற கிராமத்தில் பாளையப் பட்டக்காரராகிய "நீலியப்பக் கவுண்டர்," என்பவர்தமது வமிசாவளியை கூறும் வகையிலேயமைந்திருக்கிறது. இதில் சாலி சகம் ௲௩௱௧ாக (1301 ஷூ) முதல் ௲௭௱௰௨ (1712 ஷூ) வரையில் தம்முடன் மொத்தம் பட்டக்காரர்கள் 21 பேர் என்று விளக்கியுள்ளார் "முதல்பட்டக்காரர்," நீலியப்பக் கவுண்டர், என்பவர் பாண்டிய தேசாதிபதி நாயக்கர் அவர்களின் கீழிருந்து ஆளுகையிலே, அங்குள்ள சில கள்ளர்களையடக்கிக் குத்தினபோது, அதில், ஒரு தம்பிரானுரது திருமுடியும் அறுபட்டுக் கிடக்கையிலே அவர் தமது அறிவின்மைக்கு வருந்தி அங்கு அப்பெரியாரின் பெயரால் "முடிகொண்ட சோழபுரம்," என்ற ஊரையும் நிருமித்தார் என்பதுவும் விளக்க மாகிறது.

No. 3075. தொண்டைமான் யுத்த சரித்திரம்.

TOṆḌAIMĀN YUDDHA CARITTIRAM.

Substance, Paper: size, 10×7½ inches. Pages, 24. Lines, 18 on a page. Character, Tamil. Condition, much injured. Apperance, old. Extent, 216 granthas.

Begins on fol. 1 (*a*). The other works here in are :—

Āṟukaṭṭuppūrvīka carittiram, 16 (*a*).

Aḻipaḍaitāṅkikōṭṭai Bauddharājā carittiram, 26 (*a*).

Jainasamhāra carittiram, 38 (*a*).

Tāymān Naḻḻiccōḻan enṟa Mudaṟ, Cōḻan varalāṟu 57 (*a*)

Complete.

This is one of the manuscripts of the Mackenzie Collection and it is same as that describd under D. No. 829 of Taylor's Catalogue pp. 421–426.

An account of the war of Tondaimān Chakravarthi and Viśuvāvasu-rāja, who was a King of the North.

Beginning :

தொண்டைமான் யுத்த சரித்திரம்:—தொண்டைமான் சக்கிரவர்த்தி விசுவாவசுராஜா என்றவர்களினுடைய யுத்தத்தினுடைய மகாவிசேஷித்ததும், கவனிக்கப்படத்தக்கதுமான சரித்திரம்:—குலோத்துங்க சோழராசாவுக்கு நாகி " நாகரத்தினம் " என்னப்பட்ட கன்னிகையினாலே, உத்பவமான "ஆதொண்டைச்சோழன்" என்ற தொண்டைமான் சக்கிரவர்த்தி, குறும்ப(ர்) சம்மாரம் பண்ணித் தண்டகாரணியத்திலே மூன்றும் பங்காயிருக்கப்பட்ட இந்தத் தொண்டைமண்டலத்திலே இராச்சிய பரிபாலனம் பண்ணின எல்லை திட்டம் எப்படியென்றால்:—

End

* * * படி இராச்சியம் பண்ணுகிற தொண்டைமான் தன் மந்திரிகளை வைத்துப் போட்டு * * * ப்பட்டு இந்தச் சுருதபுரிக்கு வந்து சிகரகோபுரங்கள், வீடுகள், மதில்கள், மண்டபங்கள், வாகனங்கள், வீதிகள் சகலமுஞ்செய்வித்தான். உத்தராயணம், தட்சிணாயணம் இரண்டிலேயும் உத்சவங்கள், மாசம் வருகிற பஞ்சபர்வ உத்சவங்கள்[ளும்] முதலானவைகளும் தன் செலவிலே நடப்புவித்தான்.

(கு. - பு.).—

இது, தொண்டைமான் சக்கிரவர்த்தி உத்தரதிக்கிலிருந்து வந்த விசுவாவசுராஜா என்றவனைப் போரில் வென்று வெட்டுவித்தவரலாறு முதலாயினவற்றை விளக்குகிறது. இதில், இத் தொண்டைமான், தேவேந்திர சாபத்தால் பூலோகத்திலே " விசுவாவசு " என்ற பேரோடு பிறந்திருந்த ராசாவைச் " சுருதபுரி " அல்லது " வேதபுரி " என்ற க்ஷேத்திரத்துள்ள ஈசுவரனது அனுக்கிரகத்தினால் போரில் வென்று முன்போல வரசு செலுத்தியவனாய் இறுதியில் ஆட்சியை மந்திரியிடம் ஒப்பிவித்து வேதபுரீசுவரரது சந்நிதியிலே தங்கியிருந்து அநேக திருப்பணிகளைச் செய்துகொண்டிருந்தார் என்றுள்ளது. இவ் " விசுவாவசு " என்பவன் தேவேந்திரனுடைய திருவோலக்கத்தில் வீணைவாசிப்பவனும். 13, 14 ஆன ஏடுகள் எழுதப் பெருமலிருக்கின்றன. மிகச்சிதிலம் ஆயது. பிழையுள.

No. 3076. ஆறுகாட்டுப் பூர்வீக ராஜர் சரித்திரம்.

ĀṞUKĀṬṬUPPŪRVĪKA RĀJAR CARITTIRAM.

Pages, 17. Lines, 15–18 on a page. Condition, injured. Extent, 155 granthas.

Begins on fol. 16 (*a*) of the manuscript described under D. No. 3075.

Complete.

An historical account of Arcot (Āṟukāḍu) or Ṣaḍāraṇyam.

Beginning :

ஆற்காட்டுப் பூர்வீக சரித்திரமும் அதன் ஆதிமூலங்களும்:—பூர்வீகத்திலே வேதவியாசராலே சொல்லப்பட்ட பிரம்மாண்ட புராணத்திலே க்ஷீரநதியகத்துவத்திலே சொல்லப்பட்டிருக்கிற பத்ததியென்ன வென்றால் கல்ப்ப காலத்திலே நந்திகேசுவரன் கருவத்தையடைஞ்சு. * *

End :

இப்படி * * * * நாள் துலுக்கர் பிரபுத்துவம் நடந்து வந்தது. மகா ராஜ ராஜ ஸ்ரீ இங்கிலீஷ் கம்பெனியாருக்கு இராச்சியம் சுவாதீனமாய் ஆனபிற்பாடு ஆற்காடு மகாக்ஷேத்திர மானபடியினாலே சனங்கள் போத்துதல்ப்படி அவர்களுடைய இடுக்கண் தீர்ந்து சல்லாபத்து அருளப்பட்டு சௌக்கியத்தையடைந்திருக்கிறார்கள்.

(கு - பு.) —

இது, இப்போது 'ஆற்காடு' எனவழங்கப்பெறும் 'ஆறுகாடு' அல்லது ஷடாரண்யம், என்ற ஊரின் பூர்வோத்தர வரலாறுகளையெடுத்து உணர்த்துவது. இத்தலத்தில் பண்டைய நாளில் "நிம்பாரண்யம்" "சமீவனம்", 'காரைவனம்" "விஷவனம்", "குடமல்லிகாவனம்", "சூதவனம்" என்று இவ் வாறு வனங்களும் இருந்து பின்னர் அவை நாடாகி இப்போது முறையே, வேம்பூர், வன்னிமேடு, காரைமேடு, விஷவூர்க்கிராமம், குடமல்லிகையூர், புதுப்பாடி என்ற பேர்களால் வழங்கப்பட்டு வருகின்றன என்றும், வேம்பூரிலே வசிஷ்டர் பூசைசெய்ததால், வசிஷ்டேசுவரம், ஷ ஈசுவரர் எனவும், வன்னிமேட்டில் அகத்தியர் தவஞ்செய்ததால், அகத்தியேசுவரர், அகத்தியேசுவரம் எனவும், காரைமேட்டில் கௌதமர் தவம் செய்ததால் ஷ ஈசுவரர் எனவும், விஷவூரிலே வான்மீகர் பூசை செய்ததால் வான்மீகேசுவரம் ஷ ஈசுவரர் எனவும், குடமல்லிகையூரில் காசியபர் தவஞ்செய்ததால் காசியபேசுவரம், ஷ ஈசுவரர் என்றும் புதுப்பாடியில் (சூதவனம்) பாரத்துவாசர் பூசித்ததால் பாரத்துவாசேசுவரம், ஷ ஈசுவரர் எனவும் இப்படியாகக் கோவில்களும், சிவமூர்த்தங்களும் ஏற்பட்டிருந்தன. பின்னர் ஆதொண்டைச் சோழன் பேறுகொண்ட நல்லபொம்மைய நாயுடு, திம்ம நாயுடு முதலான சில பிரபுக்களால் நாடாகிச் சீர்திருத்தம் அடைந்து பண்டையபேரான ஷடாரண்யம், ஆறுகாடு என்ற பெயராலே வழங்கப்பட்டு வருகின்றது, என்றிவை முதலியவை இதிலிருந்து நன்கு விளக்க முறுகின்றன. முற்றுமிருக்கிறது.

No. 3077. அழிபடை தாங்கிக் கோட்டை பௌத்த ராசர்கள் சரித்திரம்.

AḺIPAḌAITĀṄKI KŌṬṬAI BAUDDHARĀJAKKAḶ CARITTIRAM.

Pages, 22. Lines, 15-18 on a page. Condition, much injured. Extent, 200 granthas.

Begins on fol. 26 (*a*) of the manuscript described under D. No. 3075.

Complete.

An account of the Bauddha King "Yamaśī taḷa mahārāja, " in the of Aḻipaḍaitāṅki near Arcot.

Beginning :

அழிபடை தாங்கி கோட்டையில் இராச்சிய பரிபாலனம் பண்ணின புத்த ராசாக்களுடைய மகா விசேஷித்த கை பீது :—

அழிபடைதாங்கி யென்னப்பட்ட சப்த பிராகாரங்களை யுடைத்தான கோட்டையிலே * * பௌத்த ராசாக்களுடைய ? மகாவிசேஷித்த சரித்திரம்.

பூர்வீக காலத்திலே இந்த மூன்று பங்காகிய தெண்டகாரணயத்திலே பௌத்தர்கள் வாசம் பண்ணினார்கள். * * * சிந்தித்துக் கொண்டு ஷடாரண்யத்துக்கும், சயின கஞ்சிக்கும் மத்தியிலே " அழிபடை தாங்கி ", யென்ற ஸதலத்திலே மகா வித்தாரமும் சிறப்புமான ஏழு சுற்றுக் கோட்டையைக் கட்டி இராச்சிய பரிபாலனம் பண்ணினார்கள்.

* * * * *

End :

* * [யீ] (ய) ம சீதளமகாராசா முதல் சர்வத்ராளும் பவுத்தர்கள் தோற்றார்கள் என்று ஏக சப்தமாய்ச் சொல்லப் பவுத்தர் களும், ஒத்துக் கொண்டார்கள். அப்போது " அகளங்காசாரியார் ", இராசாவை அணிகிட்டப் போய்ச் சமஸ்கிருதத்திலே சொன்ன சுலோகங்கள் ஆவன. ? * * * * * * *

(கு. - பு.).—

இது, ஆறு காட்டுக்கும், சைன கஞ்சிக்கும் நடுவிலே உள்ள " அழி படை தாங்கி ", யென்ற ஊரிற் பௌத்த மன்னர் கோட்டையிலே அரசு செய்த மன்னர்களுடைய சரித்திரத்தை யெடுத்துக் கூறுவதாகும். இதில், வட தேயத்திலிருந்து சில ஜைன சந்நியாசிகள், பௌத்த சந்நி யாசி யிடத்துப் பாடங் கேட்டுப் போவது வழக்கம் என்றும், அங்ஙன் ஒரு நாள் மதத்தைப் பற்றிப் பாடம் நடக்கையில் இருதிறத்தாருக்கும் மதப் பிணக்கு ஏற்பட்டுக் கடைசியில் அக்காலத்து அரசரான பௌத்த மதம் தழுவிய " யம சீதள மகாராசா ", வென்றவரிடத்தில் அவர்கள் முறை யிட்டுக்கொள்ள, அம் மன்னன், " தோற்றவரைக் கற்காணத்திலிட்டு ஆட்டுவது ", என்ற நிபந்தனைக்கு இருதிறத்தினரையும் மனமிசையச் செய்து, வாதம் புரிவிக்க, அதில், சுவாலினீ தேவதையின் அனுக்கிரகத் தால் ஜைனாசிரியரான " அகளங்காசார்யர், " என்பவர், பௌத்தரை வாதில் வென்று தம் மதத்தைப் பரவச் செய்தனர் ; அரசனும் ஜைன மதத்திற் சேர்ந்தனர் என்றிவை முதலியன விளக்கப் பட்டிருக்கின்றன. முற்றும் இருக்கிறது. மிகச் சிதிலமானது. எழுத்துப்பிழை சொற்பிழை கள் மிகக் காணப்படுகின்றன.

No. 3078. சைன சம்ஹார சரித்திரம்.

JAINA SAMHĀRA CARITTIRAM.

Pages, 34. Lines, 16–18 on a page. Condition, much injured. Extent, 306 granthas.

Begins on fol. 38 (*a*) of the manuscript described under D. No. 3075.

Complete.

An account of the destruction of Jains or Śamaṇās.

Beginning :

பேர்போன சம்பந்த மூர்த்தி என்னப்பட்டவராலே நடந்த சைனர் அல்லது சமணர்கள் சம்மாரத்தினுடைய விசேஷித்த சரித்திரம் :—

பூர்வ காலத்திலே பூமியெல்லாம் சமணர்க்குலம் மிகுந்து இராசாக்கள் மனிதர்கள் சகலரும் அந்த மதத்திலே ஐக்கியப்பட்டு அந்தச் சாஸ்திர தரர்களாகி * * * பூமியெல்லாம் அருகத்தேவன் என்று அரையிலே கட்ட வஸ்திரத்துக்கும் தலையிலே மயிருக்கும் ஆசை யில்லாத தெய்வமான சமணர் தெய்வமே பூமியிலே இருக்கிற மட்டுக்கும் இன்பத்தைக் கொடுத்து.

* * * * *

End :

* * பக்தி வைராக்கியமுள்ள சமணர்களும் கழுவேறி உயிரை விட்டார்கள். சி [று] (ல) பேர் விபூதி சாத்திக் கொண்டார்கள். சிலபேர் இராசாவைக் காணுமல்ச் சந்துகளிலே நுழைந்து தப்பிப் போனுர்கள்.

இப்படி எண்ணுயிரம் பேரும் தீர்ந்து போனுர்கள். அந்தமதத்திலே உட்பட்ட சகல சனங்களும் விபூதி பூசிக் கொண்டார்கள். இந்தப்பிர காரம் சமணப் பூண்டுகள் எல்லாம் அற்றுப் போனபின்பு அந்தத் தெய்வ மிருக்கிற கோவில்களை யிடித்து நிறுவி எண்ணுயிரம்பேர் இருந்த மடத்தையும் தரையோடு தரையாய் இடித்து நீருக்கி, அந்தப் "புனை தகை," யென்கிற நகரத்தையும் ஊரையும் அழித்து நிலமாக்கிப் போட் டார்கள்.

(கு. - பு.).—

இது, திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளால் சமணர் எண்ணுயிரம் பேரும் அழியப் பெற்றுச் சைனமதம் ஒழிந்த வரலாற்றினை யெடுத்துக் கூறுவதாம். மற்றும், இது, மதுரை, சுருதிபுரி முதலாகிய விடங்களில் சம்பந்த மூர்த்திகள் தங்கி யிருந்தமையையும், கந்தநதிக்குத் தென்கரை யிலே இருந்த சமணர்கள் எண்ணுயிரம் பேரும் ஒரு யாகஞ்செய்து அதி லிருந்து தோன்றிய ஓர் சர்ப்பத்தைச் சம்பந்தர்மேல் கடிக்குமாறு ஏவி விட, அவர் திருவோத்தூர் சிவ பெருமானை வேண்டி அதனை யொழித்து அர சனையும் சனங்களையும் காத்த வரலாற்றையும் வைகைமா நதியில் ஏடிட்ட வரலாற்றையும் மிகச் சுருக்கமாக விளக்குகின்றது. முற்றும் உள்ளது. சிதைவுற்றுளது. பிழையுட னிருக்கிறது. கடையில் ஓர் ஏடு ஒன்றும் எழு தப் பெருமலிருக்கிறது.

No. 3079. தாய்மான் நள்ளிச் சோழன் என்ற முதற் சோழன் வரலாறு.

TĀYAMĀN NAḺḺICCŌḺAN ENṞA MUDAṞCŌḺAN VARALĀṞU.

Pages, 14. Lines, 16 on a page. Condition, injured. Extent, 112 granthas.

Begins on fol. 57 (*a*) of the manuscript described under D. No. 3075.

Complete.

An historical account of the First Choḻan called by the name of "Tāymān Naḻḻicchōḻan" who founded Choḻamaṇḍalam.

Beginning :

சோழ மண்டலத்தை யுண்டு பண்ணின தாய்மனம், நள்ளி, அல்லது தாய்மான் நள்ளிச் சோழனுடைய மகா விசேஷித்த கைபீது : * * * * முதற் சோழ ராசாவினுடைய மகா விசேஷித்த கை பீது :—

வெகு பூர்வீகமான காலத்திலே பாண்டிய மண்டலம், சோழ மண்டலம், சேரமண்டலம் என்று பேர் உடைத்தாகிய இந்த மூன்று மண்டலமும் ஏகா ரண்யமாய், இருந்தது. இதில் மகா பலசாலியாகிய "தெண்டகன்," என்கிற ஒரு இராட்சதன் இருந்த படியினாலே இந்த மூன்று மண்டலமும் தெண்டகாரண்யமென்று அழைக்கப் பட்டிருந்தது.

End :

* * அந்தக் காவேரி மேற்றண்ணீரை முதல் இந்த விண்ணுற்றிலிட்டு இதனாலே சில சீமைகளுக்குப் பாயப் பண்ணி மேற்கு கிழக்கே யுள்ள தூரத்தையும் தேசத்தின் கலம் விஸ்தாரத்தையும் அளந்து யோசித்தறிந்து இவ்வளவு தண்ணீர் தேசத்துக்குப் போதும் என்றறிந்து மேன் தண்ணீரைப் போகும் படியாய் அணை போட்டு வைத்தான். இவன் தேசத்தை யளந்து கண்டவனானபடியினாலே "மண்ணளந்த சோழன்," என்னும் பேர்பட்டான். இவன் அம (80) வயதிருந்து காலம் பண்ணினான். இவனுக்கு ஒரு பிள்ளை. அவன் பேர் காவேரிச் சோழன். இவன் இந்தக் காவேரியாற்றைச் சமுத்திரக்கரை மட்டும் வெட்டி விட்ட படியினாலே "காவேரி கரைகண்ட சோழன்", என்றும் பேர் வந்தது.

(கு. - பு.).—

இது, முதன் முதலாகச் சோழ மண்டலத்தை யுண்டு பண்ணின "தாய்மான் நள்ளி", யென்னும் முதற் சோழனுடைய வரலாற்றைக் கூறுவதாம். இதில், ஷெ சோழ மகாராசன் அயோத்திக் கருகில் ஒரு தேயம் ஆண்டிருந்தனர் என்றும் பின்னர், தென்றிசைக்கு வந்து காடு வெட்டி நாடுகளாக்கிச் "சோழ மண்டலம்", எனப் பெயர் வைத்துத் திரிசிராப் பள்ளியைத் தலை நகர மாகக்கொண்டு ஷெ மலையில் "தாய்மான் ஈசுவரர்," என்று இலிங்கப் பிரதிஷ்டை செய்து காவேரியாற்றைப் பலநாடுகளிலும் பாயுமாறு வெட்டுவிக்க முயற்சிசெய்து, 86 வயது வரையில் ஆண்டி-

தான் ; எனவும், மற்றிவரது மகன் " விண் சோழன், " என்ற வ்ன் தன் பேரால் " விண்ணூற்றை ", வெட்டி வைத்துத் தேயத்தை யளந்து கண்டமையால் மண்ணளந்த சோழன் எனப்பட்டு 80 வயது வரை ஆண்டிருந்தான் ; அவன் மகன், காவேரிக்குக் கரை கண்டமையால் " காவேரி கரைகண்ட சோழன் ", எனப்பட்டான் என்று இவைகள் நன்கு விளங்குகின்றன. முற்றும் உளது, சிதலுற்றுள்ளது ; மிகப் பிழை யுடன் இருக்கிறது.

No. 3080. முப்பந் தோட்டிப் பட்டணக் கைபீயத்து.

MUPPANTŌṬṬIP PAṬṬAṆAK KAIFIETHU.

Pages, 8. Lines, 5 on a page. Condition, much injured. Extent, 50 granthas.

Begins on fol. 16 (*a*) of the manuscript described under D. No. 560, Vol. II. wants 2 Foll. in beginning.

This is one of the manuscripts included in the Mackenzie's Collections and it is same as the manuscript described under D. No. 2341 of Taylor's Catalogue, Vol. III and this seems to be the Original manucsript of R. No. 336, Vol. III.

(கு. - பு.).–

இது, மூவருடக் காடலாக்கு 336-ஆம் நம்பர் பிரதிக்கு மாதுருகை யாகும். இப் பிரதியில் இது போழ்து முதலில் (2) ஏடுகள் காணப்பெற வில்லே. அவை ஒடிந்து விழுந்து விட்டன போலும். மிகச் சிதைந்திருக் கின்றது. மிகப் பிழையுடன் உள்ளது. மெகென்ஸி தொரையவர்களால் சம்பாதிக்கப் பெற்றதாகும். டைலர் தொரை காட்லாக்கிலே 2341-ஆம் நம்பரில் வருணிக்கப் பெற்றிருக்கிறது.

No. 3081. சேதுபதி வரலாறு.

SĒTUPATI VARALĀṞU.

Pages, 3. Lines, 5 on a page. Condition, injured. Extent, 20 granthas.

Begins on fol. 40 of the manuscript described under D. No. 559, Vol. II.

Incomplete.

A historical account of Sētupati who was ruling at Tiruvanantapuram under the control of Tirumalai Nāyakar.

Beginning :

சேதுபதி உண்டான வரலாறு, என்ன வென்றல் முன்னே தஞ்சை நகரம் விசைய ரகுநாத நாயக்கர், திருச்சிராப்பள்ளி திருமலே நாயக்கர், மதுரைச் சொக்கலிங்க நாயக்கர், இப்படி இராச்சியம் ஆண்டு கொண்டி ருந்தார்கள்.

* * * * *

End :

இராமநாத புரத்திலே கோட்டையும் போட்டுக்கொண்டு அந்தத் தெற்குச் சீமையைக் கட்டிக்கொண்டு திருச்சிராப்பள்ளியிலே நாயகருக்குத் தோப்பாவுங் கொடுத்துக்கொண்டு "சேதுபதி சேதுபதி," யென்று அப்போது உண்டான சேதுபதி.

(கு. - பு.).—

இது, "சேது பதியென்று," திருமலை நாயக்கரது ஆளுகையில் இராமநாதபுரம் அதிலே கோட்டை கட்டிக்கொண்டிருந்து கள்ளர் பயம் நீக்குவித்த ஒரு மறவர்ச் சாதியினரது வரலாற்றினை யெடுத்து உணர்த்துகிறது. முற்றும் இல்லை எனவே தோற்றுகிறது.

No. 3082. பழவேர்க்காடு வரலாறு.

PAḺAVĒRKKĀḌU VARALĀṞU.

Substance, paper. Size, 10 × 8 inches. Pages, 24. Lines, 30–36 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old. Extent 540 granthas.

Begins on fol. 1 (*a*). The other works herein are. Tiruppālaivanam Avimuttīśuvarar kōvil Śilāśāsanam, 14 (*a*) ; Tiruppālaivanam Kaifiethu 17 (a) ; Kummaḍippūṇḍi Śilāśāsanam, varalāṟu, 18 (*b*) ; Ponnēri Kuṟumbark-kōṭṭai varalāṟu, 20 (*a*), ; Kummaḍippūṇḍi Pāliśuvaran kōvil Kaifiethu, 21 (*a*) ; Mummaṇḍala Pāṇḍaiyamannar varalāṟu, 22 (*a*) ; Koḍumuḍi dēvasthāna varalāṟu, 48 (*a*) ; Kaliyuga Rājākkaḷum avarka' Āṇḍa vāruṣaṅkaḷum, 54 (*a*).

Complete.

This manuscript belongs to the Mackenzie collection of Mss. and is the same as described under D. No. 812 of the Taylor Catalogue, pp. 370–371. Herein the landing of the Dutch in about the year 1578 A.D. and forming a settlement is mentioned (Paḻavēṟkāḍu). Information is given about their trade and the final conquest of the Dutch by the British. A fortress was built with the permission of one Aurangazeb of Golgonda. Further information is furnished about the residents of the place, the food they eat and the differen varieties of fish found in the place. This is perhaps the same place as Pulicat.

Beginning :

பழவேர்க்காடு கை பீயத்து:—சாலி வாகன சகம் ௲௬௱௬௰அ௵ (1738 ௵) பூர்வத்தில் இந்தப் பழ வேர்க்காடு எருக்கங் காடாய் இருந்தது அதை வெட்டி ஊர் உண்டான படியினாலே இந்த ஊருக்குப் [பளவறகாடு ? (பழவெருக்கங்காடு) என்று பேராயிற்று. சகம் ௲௫௱௲௵ல் இல்

,' இறவி ", யென்கிறவள் இந்தப்[பளவற]. பழவேர்க்காட்டிலே அதி காரம் பண்ணிக் கொண்டிருந்தாள். அப்போது சந்திரகிரியிலே இராயர்ப் பட்டம் துரைத்தனம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். அதிலே இந்தப் பழவேர்க்காடு செல்லுபடியாயிருந்தது. * * * *

End :

* * கரையாருக்கு ' முதலி, ' யென்றும், பட்டண வருக்குச் ' செட்டி, ' யென்றும் பேர். செம்படவர்க்கு ' நாயகர், ' என்று பேர், இட்ட வைக்கிற தில்லை. அடக்கிற மட்டுக்கும் அடக்குவார்கள். அடங் காதே போனுல் வியபிசாரித்தனம் பண்ணினுல் ? * *

(கு. - பு.).—

இது, இப்பொழுது " பழவேர்க்காடு, " என்று வழங்கப்பெறும், " பழ வெருக்கங்காடு, " என்ற ஊரின் பூர்வ வரலாற்றை யெடுத்துக் கூறுவ தாம். இவ்வூர் சாலி-சகம். 1500 ஆம்ஹூ இல் " இறலி, " யென்னும் மாதின் ஆட்சியிலிருந்ததாய், அக்காலம் சந்திரகிரியிலே அரசாட்சி புரிந் திருந்த இராய சமஸ்தானத்துக்குச் சேர்ந்ததா யிருந்தது. அங்கு, வியா பாரத்துக்காக வந்த " உலாந்தக்காரர் ", என்றவர்களால் கோல கொண்ட " ஔரங்கசீப் ", என்றவரது உத்தரவின் மீது கோட்டை முதலாயின கட்டப்பெற்றன. இதில் பல்வேறு விதமான வியாபாரங்களும் நடந்தேறி வந்தன. தங்கசாலையும் ஒன்று இருந்தது, " எருக்கந்தீவு, வஞ்சிப்பாக் கம், அவிரிப்பாக்கம், (உப்புவிளையுமிடம்) கணவன்றுறை, தாங்கற் பெரும் புலம், " என்னும் 5 கிராமங்களும் மற்றுஞ் சிலவும் இவ்வூர்க்குச் சார்ந்த தாய் இருந்தன. மற்று " இதில் வலைஞர், கரையார், பட்டணவர், வேடர், எனுதி, இருளர், வில்லியர், குறவர், இடையர், முதலான நாநாசாதியின ரும் குடியேறி யுள்ளார். அவர் அவர்கட்கு ஆம் தொழில், ஆசாரங்கள், இன்னின்னவையாம் ; இதில் வீடுகள், வீதிகள், குளங்கள், கோயில்கள். முதலானவைகள் இத்துணை இத்துணையனவாம், அதில், " ஆதிநாரா யணப் பெருமாள் கோவில் ", " சமையேசுவரன் கோவில் " என்றவை பண்டைய காலத்திலிருந்து " திரிசங்கு மகாராஜாவால், " பிரதிஷ்டை பண்ணுவிக்கப் பெற்றவைகளாம் " என்று இன்னோரன்னவை பலவற்றை யுஞ் செவ்வனே விளக்குகிறது. எழுத்துக்கள் புரிய வில்லை, பிழையதிக மாய் உள.

No. 3083. திருப்பாலைவனம் அவிமுத்தீசுவரர் கோவில் சிலாசாஸனம். (2).

TIRUPPĀLAIVANAM AVIMUTTĪŚUVARAR KŌVIL ŚILĀŚA-SANAM.

Pages, 7. Lines, 30 on a page. Condition, injured. Extent, 105 granthas.

Begins on fol. 14 (*a*) of the manuscript described under D. No. 3082.

Complete.

This section gives some of the stone Inscriptions of the śiva temple of "Avimuttīśuvarasuvāmi" in the village of Tiruppālaivanam, Chingleput district.

Beginning :

இதிலே திருப்பாலைவனம், அவிமுத் தீசுவர சுவாமி கோவில் சிலா சாஸனம். சு (6). கொம்மடிப் பண்டி கோவில் சிலாசாஸனம், 2. குறும்பர் கோட்டை விபரம், பொன்னேரியிலே குறும்பர் கோட்டை விபரம் இவைகள் எல்லாம் இருக்கின்றன.

செங்கல்பட்டு ஜில்லா ஆவூர் மிட்டா திருப்பாலைவனம், அவிமுத் தீசுவர சுவாமி கோவில் கெர்ப்பகிருகம் வடபுறத்தில் புறத்து மதிலிலே எழுதி யிருந்த சிலாசாசஸனத்துக்கு நகல் :—

க. வது. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கிரவர்த்திகள் ஸ்ரீ ராஜா ராஜ தேவர்க்கு யாண்டு பன்னிரண்டாவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப் பையூர்க் கோட்டத்து உடையார்த் திருப் பாலைவனமுடைய நாயனாருக்குத் திரு நாட் களில் பத்து நாளும், மதுராந்தகப் பொத்தப்பிச் சோளன் கண்ட கோபா லன் வரமாக ஆசந்திரார்க்ககாலம் திருச்சாந்து சாத்துவதாக * * * தென் கழனியில் கண்ட மடங்கப் பிரித்து விட்டகுழி ஆரு யிரம். * * * * * * * *

End :

சு-வது. செங்கல்ப்பட்டு ஜில்லா ஆவூர் மிட்டா திருப்பாலைவனம் யோகாம்பாள் கோவில்க் கருப்ப கிரகம் தென் மேற்குப் புறத்து மதிலில் எழுதி யிருந்த சிலா சாஸனத்துக்கு நகல் :—

ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடையப்பன் மாறன், திரிபுவன சக்கிரவர்த்திகள் ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவருக்கு யாண்டு மிசு ஞு. ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப் பையூர் கோட்டத்து உடையார்த் திருப்பாலை வனம் உடைய நாயனார்த் திருக்காமக் கோட்டம். * * திருநறையூர் நாட்டு நறையூர்க் கிழவன் தேவர்கள் தேவனேன். இவ் வாண்டை ஆனிமீ எட்டாந்தேதி நாயற்றுக்கிழமையும் மகமும் பெற்ற நாள் வைத்த திரு நுந்தா விளக்கு ஒன்றுக்கும் இக்கோயில் சிவப் பிராமணராவோம் கைக் கொண்ட பணம் சய. இப்பணம் நாற்பதும் கைக்கொண்டு சந்திராதித்தர் வரை இத்திரு நுந்தா விளக்கெரிக்கக் கடவோம். இக்கோயிற் சிவப் பிராம்மணராவோம்.

(கு. - பு.).

இது, செங்கல்பட்டு ஜில்லாவுக்குச் சேர்ந்த "திருப்பாலைவனம்" என்ற ஊரில் அவிமுத் தீசுவர சுவாமி கோவிலுக்குரிய (6) ஆறு சிலா சாஸனங்களை யெடுத்து உணர்த்துகிறது. முற்றும் உள்ளது, அதில் 6-ஆவது சாஸன மாகிய பகுதி ஷெ கோவிலுள் யோகாம்பாள் சந்நிதியின் கருப்பக்கிரகத் திலே காணப்படுவதாகக் குறிக்கப் பெற்றிருக்கிறது. மிக எழுத்துப் பிழை யுடன் இருக்கிறது.

No. 3084. திருப்பாலை வனங் கைபீயத்து.

TIRUPPĀLAIVANAM KAIFIYAT.

Pages, 3. Lines, 36 on a page. Condition, injured. Extent, 50 granthas.

Begins on fol. 17 (*a*) of the manuscript described under D. No. 3082.

Complete.

An account of the village of Tiruppālaivanam alias "Tērtturai" in Chingleput district.

Beginning :

திருப்பாலைவனம் கைபீயத்து. பழ[வேர்]க் (வெருக்கங்) காட்டுக்கு மேற்கே நாலுநாழி வழி தூரத்திலே தேர்த்துறையாகிய திருப்பாலைவனம் சிவஸ்த்தலம்.

அது உண்டானவிதம் பூர்வத்திலே குலோத்துங்க சோழன் பூமி யெல்லாம் சிவலிங்கப் பிரதிஷ்டையுண்டு பண்ணினபோது இந்தத் திருப்பாலை வனத்திலே சிவலிங்க பிரதிஷ்டை யுண்டு பண்ண வேணும் என்கிறதாய்த் தன்னுடைய சேனையோடு வந்து இறங்கி. * * *
அங்கே யிருந்த பாலை மரங்களை வெட்டு வித்தான் * *
அந்தப் பழைய சிவலிங்கத்தை மூலஸ்தானத்திலே வைத்துப் பிரதிஷ்டை பண்ணி "அவிமுத் தீசுவரர்", சுவாமி யென்று பேரிட்டு. * *

அந்த ரதத்தை அந்தத் திருப் பாலைவனத்துக்கு மேலண்டை யருகாமையிலே ஒரு மடுவு மேற்கே யிருந்து கிழக்கே போகிறது. அதிலே விட்டு விட்டுப் போய் விட்டான். ஆனபடியினாலே அந்த ரதம் வெகு நாள் வரைக்கும் சகலருக்கும் தோற்றப்பட்டுக் கிடந்தது. ஆனபடியினாலே அந்த ஊருக்குத் "திருத் தேர்த்துறை", யென்று பேருண்டாயிற்று.

End :

இப்போது இங்கிலீஷ்க் கும்பெனியார் இந்தக் காஞ்சி தேசத்திலே திருக் காஞ்சிபுரம், திருவண்ணுமலை * * பெரிய பாளையம் இப் படி இருபத்தேழு ஸ்தலத்துக்குத் தர்மங் கொடுத்து நடப்பிக்கிறார்கள். அதிலே இந்தத் திருப்பாலைவனம் ஒரு ஸ்த்தலமாய்த் தருமங் கொடுத்துத் தேர்த் திருநாள் முதலானதும் நடப்பிக்கிறார்கள். திருப்பாலைவனமும் மற்றொரு கிராமமும் இந்தச் சுவாமிக்குச் சுரோத்திரியம் நடக்கிறது. (கு. - பு.).

இது, பழ வெருக்கங்காட்டுக்குச் சமீபத்திலேயுள்ள "திருத்தேர்த்துறை", யென்ற "திருப் பாலைவனம்", கிராமத்தில் அவி முத்தீசுவரர் சுவாமி கோவில் குலோத்துங்க சோழனால் கட்டப்பட்டு அவிமுத்தீசுவர சுவாமி, திருப்பாலைவனத்தீசுவரர் என்பதாக இரு இலிங்கங்களும் பிரதிஷ்டை பண்ணுவிக்கப் பெற்றன; அங்குப் பாலைவனமா யிருந்த படியால் அதை வெட்டுவித்து ஊர் உண்டாக்கிய காரணத்தால் "திருப்பாலைவனம்", என்று பெயர் பெற்றது ; அதற்கறிகுறியாகப் பாலை மரமும் ஒன்றிருக் கிறது ; என்றிவை முதலாயின வற்றை யெடுத்து விளக்குகின்றது. முற்று மிருக்கிறது. சிதை வுற்றிருக்கிறது, மிகப் பிழையுடன் உள்ளது.

No. 3085. கும்மடிப்பண்டி சிலா சாஸனமும் வரலாறும்.
KUMMADIPPANDI ŚILĀŚĀSANAMUM VARALĀṚUM.

Pages, 3. Lines,29-38 on page. Condition, injured. Extent, 50 granthas.

Begins on fol. 18 (*b*) of the manuscript described under D. No. 3082.

Complete.

An account of the village of "Kummaḍi Paṇḍi" in Sathavēḍuśīmai Chittoor district.

This work contains two inscriptions on stone of Kuṟumbarkōṭṭai in that village. First one is on the tank of that Fort; Second is on the Vaiṣṇava temple of Chennakēśavapperumāḷ.

Beginning :

(1) கும்மடிப் பண்டிக்கு ஈசானம் ஒன்றரை நாழி வழி தூரத்தில் "தேர் வெளியூர்". இந்தத்தேர் வெளியூருக்கு அடுத்த நிருருதி மூலை கால் நாழிவழி தூரத்திலே "குறும்பர்க் கோட்டை", அந்தக் குறும்பர்க் கோட்டைக்கு அடுத்த அக்கினி மூலையிலே துர்க்கி, அஷ்டபுஜ சக்தி, **ஏகாத்தை கோவில்** பக்கத்திலே இடைகல்லிலே யெழுதி யிருந்த சிலா சாஸனத்துக்கு நகல். * * * * * *

(2) சித்தூர் ஜில்லா சத்தவேடு சீமை கும்முடிப்பண்டி சென்ன கேசவப் பெருமாள் கோவில் முன் மண்டபம் வாசப் படி மேற்கல்லில் எழுதியிருந்த சிலாசாஸன நக்கல். பூசை யில்லாத கோவில். ஸ்ரீ கலியுகத்து ௵ சதசூஙாசஙட (4643-௵) க்குமேல் பிலவ௵ புரட்டாசிமீ உ௰௨ பெரியட்ட பறபரியம் நகரத்தூரில் கணந்தை கோத்ரம் சன்னம் நயிஞ செட்டி தும்மணி குமாரன் தும்மணி சென்ன கேசவப்பெருமாள் கோயில் வேலை சத செய்தது.

* * * * *

கும்முடிப் பண்டிக்கு ஈசான மூலை ஒன்றேகால் நாழிவழி தூரத்திலே சகடப் பாதைக்கு அடுத்த கீழண்டையில் குறும்பர்க் கோட்டை பெரியது முப்பது முப்பத்தைந்து காணி விஸ்தீரணத்திலே வட்டமாக ஒன்றிருக்கிறது. அதைச் சுற்றி அகழியும் இருக்கிறது. அதன் தென்புறத்திலே மாத்திரம் தண்ணீர் ஆழ முண்டா யிருக்கிறது.

* * * * *

End :

கொல்லர்ச். சாதியிலே குறும்பர்க் கொல்லர் என்றும், தொட்டியக் கொல்லர் என்றும், ஆக இரண்டு சாதி, அந்தத் தொட்டியக் கொல்லர் மாத் திரம் மதுரைச் சீமையிலே இருக்கிறார்கள். குறும்பர்க் கொல்லர் இவ் விடங்களிலே இல்லை. கிருஷ்ண தீரத்திலே இருக்கிறார்கள் என்று சொல்லு கிறார்கள்.

இப்படி முத்து நாயக்கன் சொல்லி யெழுதுவித்த கை பீயத்து.

(கு. - பு.).

இது, கும்மடிப் பண்டி, என்னும் ஊரின் வரலாற்றினையும், அதில் உள்ள தொரு குறும்பர்க் கோட்டையின் வரலாற்றையும், அதற்கருகிலே யிருக்கும் "ஏகாத்தா", யென்ற கோவிலுக் கருகிலே யுள்ள சிலா சாஸ

னம் ஒன்றையும், ஷெ யூர் சென்ன கேசவப் பெருமாள் கோவிலுக்கு உரிய சிலா சாஸனம் ஒன்றையும், இவ்வூர், சித்தூர் ஜில்லாவில் சத்தவேடு சீமைக்கு. உரித்தானது என்றிவை முதலாயினவற்றையும் எடுத்துச் சுருக்கமாக விளக்குகின்றது. மற்றும், இதிலிருந்து, இவ்வூர்க்குச் சுற்றிலும் உள்ள ஊர்கள்—சத்தவேடு, ஊற்றுக் கோட்டை, நாகலாபுரம், நிண்ணேயூர், நாரணவனம், திருவள்ளூர்க்கடுத்துள்ள குசத்தலை யாற்றுக்குச் சமீபத்தில் செம்மேடு, வேளூர், திருமுல்லைவாயில் என்பவைகளாம் எனத்தெரிகிறது. இவைகளிலே யெல்லாம் ஒரு குறும்பர்க் கோட்டை யுண்டென்றும் விளக்கமுறுகின்றது. முற்றும் இருக்கிறது, சிதைவு உற்றிருக்கிறது, எழுத்துப்பிழைகள் மிகவுள.

No. 3086. பொன்னேரி குறும்பர்க் கோட்டை வரலாறு.
PONNĒRI KURUMBARKŌṬṬAI VARALĀṚU.

Pages, 2. Lines, 36 on a page. Condition, injured. Extent, 40 granthas.

Begins on fol. 20 (*a*) of the manuscript described under D. No. 3082.

Complete.

An acccount of the Kurumbarkōṭṭai at the village of Ponnēri, Chingleput district.

Beginning :

பொன்னேரி குறும்பர்க் கோட்டை கை பீயத்து :—

பொன்னேரியிலே மேற்கே கலந்திருக்கிற கும்ப மங்கலம். அந்தக் கும்ப மங்கலத்துக்கு அடுத்த வட வண்டையில் ஒரு ஆறு மேற்கே யிருந்து கிழக்கேறப் போகிறது. அந்த ஆற்றுக்குத் தென்கரையிலே அகத் தீசுவரன் கோவில். அந்தக் கோவிலுக்கு அடுத்த மேலண்டையிற் " குறும்பர் கோட்டை ", இருக்கிறது. அது அஞ்சு ஆறு காணி விஸ்தாரம் இருக்கும். அதிலே முக்கால் வாசியை அகத் தீசுவரன் கோவிலின் தர்ம விசாரணை செய்கிற ஆறுமுக முதலி தோட்டம் வளைத்துக் கொண்டான். * *

End :

அந்த வீரபத்திரன் கோவில் பத்தடி யகலமும் இருபதடி நீளமும், சாதியடி யிருக்கும். * * * இப்போது பூசையில்லாமல்ப் பாழாய்க் கிடக்கிறது. அந்தக் கோவில் தோட்டத்திலே அகப்படாமல் புறம்பாய் இருக்கிறது. இப்படி சத்தைய முதலி எழுதுவித்த கை பீயத்து.

(கு. - பு.).

இப்பகுதி, " பொன்னேரி, " யென்ற ஊரின் வரலாற்றை யெடுத்து விளக்குவதாம். இதில் கும்பமங்கலம், என்கிற கிராமமும், அதற்கு அருகிலே ஒரு ஆறும், ஆற்றின் தென்கரையில் அகத் தீசுவரன் கோவிலும், அதற்கடுத்து ஒரு குறும்பர் கோட்டையும் உள. இக் கோட்டையிலிருந்து மாரி காலத்தில் செம்பு பொன்னூலான நாணயங்கள் அகப்படுவது வழக்கம். மற்று அக் கோட்டையில் ஒரு வீரபத்திர சுவாமி கோவில், துர்க்கை

கோவில் என இரண்டு கோயில்களும் இருக்கின்றன. ஆனல் இக் கோட்டை தற்காலம் அகத்தீசுவரர் கோவிலினது தரும கருத்தரான " ஆறுமுக முதலியார் ", என்றவரின் தோட்டத்தில் அகப்பட்டுள்ளது என்றிவை முதலான இவ்வூரின் வரலாறுகள் பல புலனுகின்றன. முற்றும் இருக்கிறது. மிகச் சுருக்கமாயது. மிக எழுத்துப் பிழையுடனிருக்கிறது. சிதைந்துள்ளது.

No. 3087. கும்மடிப்பண்டி பாலீசுவரன் கோவில் கைபீயத்து. KUMMAḌIPPAṆḌI PĀLĪŚUVARAN KŌVIL KAIFIETHU.

Pages, 2. Lines, 30 on a page. Condition, injured. Extent, 30 granthas.

Begins on fol. 21 (*a*) of the manuscript described under D. No. 3082.

Complete.

An account of the temple of Pālīśuvarasuvāmi who is worshipped at the village of Kummāḍippaṇḍi near Pa̱laverukkaṇkāḍu.

Beginning :

கும்மடிப்பண்டி பாலீசுவரன் கோவில் கை பீயத்து :—

கும்மடிப் பண்டிக்குக் கொஞ்சம் வட கிழக்கே பாலீசுவரன் கோவில் ஒன்றிருக்கிறது. அது பூர்வத்திலே அரண்யமா யிருந்தபோது பிரமதேவன் அங்கே சிவலிங்கப் பிரதிஷ்டை பண்ணினுன். இப்போது அந்தக் கோவில் அந்த ஊரவர்க்கு தர்மமாய் அஞ்சாறு காணி மானியம் நடந்து வருகிறது.

* * * * *

End :

கும்மடிப்பண்டி குறும்பர் கோட்டைக்கு அக்கினி மூலேக்கிட்ட துர்க்கி, அஷ்டபுச சத்தி கோவில் ஒன்றிருக்கிறது, சின்னது. அந்த விக்கிரகம் நூறு வருஷங்கட்கு முன்னே [பழவற] (பழ வெரு)க்கங்காட்டுக்குத் தெற்கே நாலுநாழி வழி தூரத்திலே கடலோரத்திலே சிவன் கோவில் ஒன்றிருக்கிறது. அங்கே அந்தக்கடலிலே வலேயிலே யகப்பட்டது. அப்போது அந்தக் கும்மடிப்பண்டி பாளேயக்காரன் நல்லப்ப நாயக்கன் காவலான படியினுலே அவன் அதை அழைப்பித்து வைத்துப் பூசை பண்ணினுன். இப்பவும் பூசை நடந்து வருகிறது.

(கு. - பு.).

இது, " கும்மடிப்பண்டி ", யென்ற ஊரின் வரலாற்றை விளக்குவதாம். இதிலிருந்து, பூர்வத்திலே இங்குப் பிரம்ம தேவனுல் பிரதிஷ்டை பண்ணு விக்கப்பெற்ற பாலீசுவர சுவாமி கோவில் ஒன்று உண்டு; அருகிலே உரோமச முனிவரால் நாலு மூலேயிலும் நந்தியைப் பிரதிஷ்டிப்பித்த ஒரு திருக்குளமும், மற்று, சந்திர சேகர சுவாமி கோவிலும், கேசவப்பெருமாள் கோவிலும், இருக்கின்றன. சிறிது தூரத்திலே ' குறும்பர் கோட்டை ', யொன்றிருக்கிறது. அதற்கருகிலே ஒரு துர்க்கை கோவில் உண்டு. அது, " நல்லப்ப நாயக்கன் ", என்ற வொரு பாளேயக்காரரால் பிரதிஷ்டை பண்ணுவிக்கப் பெற்றுள்ளதாம். இதுக்கு அருகிலே " பொன்னேரி ", யென்ற கிராமமும், அதில் ஸ்ரீ கிருஷ்ணசுவாமி கோவி

லும், ஒரு குளமும், ஒரு புண்ய நதியும், அதன் கரையிலே அகத்தியே சுவர சுவாமி கோவிலும், மூன்று நாழிகை வழி தூரத்திலே "புது ரயல்", "பெருவாயல்," என்ற ஊர்களில் சைனக் கோவில் களும் உண்டு, இன்னும் பத்து நாழிகை வழி தூரத்தில் "**விச்சூர்**", என்ற ஊரும், அதில் பூமியிலே பாதியும் மேலே பாதியுமாகப் புதைந்து கிடக்கும் ஒரு சைன விக்கிரகமும் இருக்கிறது ; என்பன ஆகிய இவைகள் எல்லாம் விளக்க முறுகின்றன. சுருக்கமாய் அமைந்தது, மிகப் பிழைகள் இருக்கின்றன. சிதைந்திருக்கிறது.

No. 3088. மும்மண்டல பண்டைய மன்னர் வரலாறு.
MUMMANḌALA PANḌAIYAMANNAR VARALĀṞU.

Pages,36. Lines, 34–36 on a page. Condition, injured. Extent, 650 granthas.

Begins on fol. 22(*a*) of the manuscript described under D. No. 3082.

Complete.

An historical account of the former Kings of the Three Kingdoms of Pāṇḍiya maṇḍalam, Cholamaṇḍalam and Toṇḍaimaṇḍalam. It is same as the manuscript described under D. No. 2765 and No. 812 of Taylor's Catalogue, pp. 370–71.

(கு. - பு.)—

இது, டிஸ்கிருப்டிவ் காடலாக்கில் 2765-ஆம் நம்பரில் வந்துள்ளதேயாம். இப்பிரதியில் அதில் உள்ளவளவே இருக்கிறது. முற்றுமிருக்கிறது. டைலர் தொரை காடலாக்கில் 812-ஆம் நம்பரிலே வருணிக்கப்பெற்றுள்ளது. மிகவும் எழுத்துப்பிழையுடன் இருக்கிறது. p.p. 370–71. இப்பிரதி, "இந்திராக்ஷியம், தக்ஷிணதிக்கம், பாண்டிமண்டலம், சோழமண்டலம், தொண்டைமண்டலம் பூர்வீக ராஜசரித்திர வொழுங்கு" என்ற பெயரால் பழைய பெயர் அட்டவணையில் குறிக்கப்பெற்றிருக்கிறது. இது, முடிந்த பின்னர், 41-45 இவ்வைந்து ஏடுகளும் ஒன்றும் எழுதப்பெறுமல் இருக்கின்றன. சிதைந்திருக்கிறது.

No. 3089. தொண்டைமண்டலத்தளவு.
TOṆḌAIMAṆḌALATTAḶAVU.

Pages, 2. Lines, 28 on a page. Condition, injured. Extent, 42 granthas.

Begins on fol. 46 (*a*) of the manuscript described under D. No. 3082.

Complete.

Remarks on the boundaries of the Toṇḍaimaṇḍalam.

Beginning :

செயங்கொண்ட தொண்டைமண்டலத்துக்கு அளவு.—கிழக்கே கடல், தெற்கே பெண்ணையாற்றங்கரை, மேற்கே திருவண்ணமலை, வடக்கே காளஹஸ்த்தி. இந்தச் சதுரம் முழுதிலும். * * * *

End :

அப்போது எழுதிக்கொடுத்த செப்பேடு காஞ்சீபுரம் காமாக்ஷியம்மன் பீடத்தின்கீழ் இருக்கிறது என்று சொல்லப்படும். இது தொண்டைமண்டலத்தினுடைய வயணம். இந்தத் துளுவ வேளாளருக்குக் குடிமக்கள் பதினெட்டு பேர். இவர்களுக்கு இந்தமண்டலத்திற் குடிவாரம் அஞ்சு பங்கும், [ரு](ரா)சாவுக்கு ஆறில் ஒரு கடமையும் உண்டு.

(கு. - பு.)—

இது, தொண்டைமண்டலம் ஆதொண்டைச் சோழனால் உத்பத்தியாய் அதிற் சேரமான் தேயத்தில் ஆன துளுவநாட்டிலிருந்து துளவவேளாளரிற் சிலர் குடியேறிய வரலாற்றையும், இம்மண்டலத்தின் அளவு—கிழக்கே கடலும், தெற்கே பெண்ணையாற்றங்கரையும், மேற்கே திருவண்ணாமலையும், வடக்கே காளஹஸ்தியும் எல்லையாகக்கொண்டு உள்ள தேசத்தினையும் விளக்குகின்றது. மிகச் சுருக்கமானது, முற்றும் உளது. பிழைகள் இருக்கின்றன. இறுதியில் 47-ஆம் ஏடு வெற்றேடாயுள்ளது.

No. 3090. கொடுமுடி தேவஸ்தான வரலாறு.
KOḌUMUḌI DĒVASTHĀNA VARALĀṞU.

Pages, 12. Lines, 20 on a page. Condition, much injured. Extent, 160 granthas.

Begins on fol. 48 (*a*) of the manuscript described under D. No. 3082

Complete.

An account of the temple of koḍumuḍi in Erode taluk, Coimbatore district.

Beginning :

கோயமுத்தூர் ஜில்லா, ஈரோடு தாலூக்கா, கொடுமுடி தாலூக்கா கைபீயத்து. ஷெ ஸ்த்தலத்தார் எழுதுவித்துக்கொடுத்தது :—

பூர்வத்தில் மக(ா)மேரு பருவதத்திலே தேவ சபையிலே ஆதிசேஷனுக்கும், வாயுபகவானுக்கும் சம்வாதம்வந்து நீ பெரியவன், நான் பெரியவன் என்று சம்வாதம் வந்து சேஷபகவான் தன்னுடைய பலபராக்கிரமத்தினாலே மகாமேரு பருவதத்திலே யிருக்கப்பட்ட சிருங்கங்களை அடக்கிப் பிடித்தார். * * * * * * * *

End :

பெருமாள் வீரநாராயணப்பெருமாள் கோவிலுக்குத் தெற்கு இலட்சுமி கோவில். அதற்கு தெற்கு ஆஞ்சனேயர் கோவிலுக்கு வடக்கு, சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்குக் கிழக்கு, கனகசபை. இப்படிச் சமஸ்தான தேவதைகளும் ஒரு பிராகாரத்திலே வாசம்பண்ணிக்கொண்டு இருக்கிறார்கள்.

ஃஅாஎஹு மேஶீ யிகூவ. * * * * * *

(கு. - பு.)—

இது, "திருப்பாண்டிக் கொடுமுடி", என வழங்கிவந்த "கொடுமுடி", என்ற திவ்வியதலத்துள்ள, "மகுடேசுவரர்", 'வீரநாராயணப்பெருமாள்', பிரம்மதேவன் ஆகிய மும்மூர்த்திகளும் இருக்கப்பெற்ற கோவிலினது

வரலாற்றை யெடுத்து விளக்குவதாம். இத்தலம், மகாமேருவின் சிகரங்களில் ஐந்து சிகரங்கள், இப்பரத கண்டத்தில் வீழ, அவைகளில் ஒன்று இம்மலையில் விழுந்து "கொடுமுடி", யென்ற பெயர்பெற்றிருக்கிறது. இது மிகப் பண்டையகாலத்தது முன்னர் "பாரத்துவாசாசிரமம்", என்று வழங்கப்பெற்றிருந்தது. பின்னர், கலியில் "குலசேகரபாண்டியன்", இங்கு ஈசுவரரை வந்தனை வழிபாடுகள் முதலியன செய்தமையால் "திருப்பாண்டிக் கொடுமுடி", "குலவர்த்தனீபுரம்", என்ற பெயர்களாலும் வழங்கப்பட்டு வந்திருக்கிறது என்றிவை முதலாயின வரலாறுகள் இதிலிருந்து விளக்கமாகின்றன. முற்றுமிருக்கிறது. மிகச் சிதைந்திருக்கிறது. பிழைகளுடன் உள்ளது.

No. 3091. கலியுக ராசாக்களும் அவர்கள் ஆண்ட வருடங்களும்.

KALIYUGARĀJĀKKAḶUM AVARKAḶ ĀṆḌA VARUḌAṄGAḶUM.

Pages, 2. Lines, 15 on a page. Condition, injured. Extent, 32 granthas.

Begins on fol. 54 (*a*) of the manuscript described under D. No. 3082.

Complete.

A list of the Rajās, who ruled in the Kaliyuga with their dates beginning from Abimanyu to the end of the Rāyar's dynasty.

Beginning :

கலியுகம் ஆண்ட ராசாக்கள் :—

பரீக்ஷித்து, ௵ சூ௰௧, துவாபரயுகத்தில் ௵ ௨௰ போய்க் கலியுகத்தில் ௵ ௬௰.

செனமெசயன், ௵ ௨௱௮௰௫.

இராசநரேந்திரன், ௵ ௨௱௰௫.

[வு](உ)த்தரராயன் ௵ ௮௰௨.

கௌடபோக மகாராசா ௵ ௨௱௮௰௨.

வல்லாளன் வமிசம் ௵ ௫௱௰௮.

சூத்திர(க) மகாராசா வமிசம் ௵ ௱௫௰௮.

மகோதரன் ௵ ௬௰௮.

இராசசேகரன் ௵ ௩௱௭௰௯.

விஷவர்த்தனன் ௵ ௱௫௰.

[வு](உ)த்தர ரகுபுத்திரராயர் ௵ ௱௯.

விக்கிரமார்க்கன் ௵ ௲௯௰௧.

சாலிவாகனன் ௵ ௯௰௫.

போசராசா ௵ ௨௱௰௭.

அன்புருபெறுநிருபன் வமிசம் ௱௰௮.

End :

பெனுகொண்ட திருமலைராயர் ௵ ௭.

சீரங்கராயர் ௵ ௮.

வேங்கடபதிராயர் ஷ்ஷ ௩௰௩.

வேலூரில் கெவுரிராயர் ஷ்ஷ ௩.

இராமதேவராயர் ஷ்ஷ ௰௨.

நாரணபுரத்தில் வேங்கடபதிராயர் * * * * ஷ்ஷ ௬.

ஆக ஷ்ஷ சதுஊளாசயிச (4744-ஷ்ஷ) கர ஷ்ஷ வரைககும் துலுக் காணிய ஷ்ஷ ராஉ௰அ. ஆக ஷ்ஷ சதுஅாஎ௰௨) (4872-ஷ்ஷ).

(கு. - பு.)—

இது, பரீக்ஷித்து மகாராசன் காலம் தொடக்கமாக இராயர் வமிச ராசாக்கள் வரையில் ஆண்ட பல மன்னர்களுடைய பெயரையும் அரசாட்சியின் கால அளவினையுமெடுத்து விளக்குகிறது. மிகமிகப் பிழையுடன் இருக்கிறது. ஏடு சிறிது சிதைந்து உள்ளது. இப்பிரதி டைலர் தொரை காடலாக்கில் 812-ஆம் நம்பரில் இறுதியில் வருணிக்கப்பெற்றிருக்கிறது.

No. 3092. பழனிபாளையப்பட்டு சின்னப்ப நாயகன் வமிசாவளி.

PAḺANI PAḶAIYAPPAṬṬU CINNAPPA NĀYAKAN VAMIŚĀVAḶI.

Substance, paper. Size, 10 × 7¾ inches. Pages, 18. Lines, 21–34 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old. Extent, 230 granthas.

Begins on fol. 1 (*a*). The other work herein is Paḻanisthala varalāṟu 11 (*a*).

Complete.

A genealogical account of a Pāḷayakār Chinnappa Nāyakan of Paḻani Paḷaiyappaṭṭu. Mentions some of the informations of Daṇḍāyudhapāṇi temple and ornaments, Golden Pot, etc., which were granted by Kings and others.

Beginning :

வையாபுரிநாட்டுப் பழனிபாளையப்பட்டு சின்[ன](ன)ப்ப நாயகன் வமிசாவளி. ஆயக்குடியில் உள்ளவர் எழுதுவிச்சது :—

மகாராஜராஜஸ்ரீ கர்னல் காலன் மெக்கெஞ்சி சாயபு சர்வேயர் ஜனரெல், இண்டியாதுரை அவர்கள் உசூருக்கு—தரியாபத்து நிட்டலநாயன்ன அய்யர்.

திண்டுக்கல் வகைரா தாலூக்கா, கோயமுத்தூர் ஜில்லாவைச் சேர்ந்த செபிதி பாளையபட்டாகிய பழனி பாளையப்பட்டு விசையவையாபுரிசின் னப்ப நாயகன் மிகவும் வணக்கத்துடனே சலாம் செய்து எழுதிக்கொண்ட விண்ணப்பம் என்னவென்றால்,—

என்னுடைய வமிசாவளியான முன்னோர்கள் வரலாறுகள் எல்லாம் நாளது ஆயக்குடி ஜமீன்தாரி, மட்டி[கொ](கு)மார கொண்டம நாயக்கர் அவர்கள் என்னுடைய தாயார் [ஒ](உ)டன் பிறப்பு, என் மாமனர் ஆகை யினாலே அவர் வமிசாவளி சங்கதியில் உள்ளபடியே என் முன்னோர்களும்

வடக்கேயிருந்து வந்து பழனிமலைச் சரிவிலே சேர்ந்து பழனி பாளையப்பட்டுக் காரராக இருந்து பாளையப்பட்டு ஆண்டுவந்தார்கள்.

* * * * * * * *

End :

என் மாமனாராகிய ஆயக்குடி ஜமீன்தாரி வளவில் ? இருக்கிறேன்.

நான் பழனி பாளையப்பட்டு வமிசஸ்த்தன் ஆகையினாலேயும் வெகு குடும்பியாகக் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறதில் .... நான் மிகவும் வெகுமானப்பட்டுக் கம்பெனியார் அவர்கள் தயவுக்குப் பாத்திரனாகவும் கம்பெனியார் தயவினாலே எனக்கும் என்னைச் சேர்ந்தவர்களுக்கும் மிகவும் கஷ்டமில்லாமல் உள்ளது போலே ஜீவனம் கிடைக்கவேணும் என்று காத்து இருக்கிறேன்.

பழனிசபுத்தி சமீன்தாரி, விசையவைகாபுரி
சின்னப்ப நாயகன் ருசு.

௲அ௱௰௬௵ எப்ரல்மீ ௰௯உ.
(19-4-1816-ஷ்)

(கு. - பு.—)

"பழனி," யென்ற ஊரில் இருந்த பாளையக்காரர் "விசைய, வைகாபுரி, சின்னப்ப நாயக்கர்," என்பவர் தமது முன்னோரான கோஜல, சின்னப்ப நாயகன், பாணிபாத்திர உடையாரது சீடர் பழனியில் திருமஞ்சன பணிவிடை செய்தவர், முதறகொண்டு தம்வரையிலான 19 பட்டக்காரர் களுடைய வமிசாவளியை ஈஸ்டு இண்டிய துரை மக்களிடத்தே யெடுத்து உரைத்து ஷியாரின் மிகுந்த தயை கோரும் வகையிலே இது அமைந்து இருக்கிறது. இவருடன் மொத்தம் இதில் 19 பட்டக்காரர் என்று தெரிகிறது. வமிச விருக்ஷம் உணர்த்தும் ஒரு படமும் எழுதப்பெற்றிருக்கிறது. முற்றும் உளது. பிழைகள் இருக்கின்றன. இவர் ஆரடிசுதுரை காலத்தவர். 10-ஆம் ஏடு வெற்றேடு.

மற்று, இதிலிருந்து முதற் பட்டக்காரர் மதுரை விசுவநாத நாயக்கர் உத்தரவின்மீது வராககிரி சமீபம் பழனி ஸ்தலத்துக்கு வந்து பால்மா நதிக்குச் சமீபத்தில் தம் குருவின் திருக்கையால் அஸ்திவாரக்கல் நாட்டுவித்து பாலாம்பிகையின் பேரால் ஊர் உண்டாக்கிக் கோபாலப்பெருமாளைப் பிரதிஷ்டிப்பித்தார் என்றும், பத்தாவது பட்டக்காரர் பழனியில் தண்டாயுத பாணிக்கு ஆறுகால பூசை நைவேத்தியம் முதலியன நடக்க ஏற்படுத்தினர் என்றும், (11) பதினோராம் பட்டக்காரரது நாளையில், மதுரை தளவாய் "**இராமப்பய்யன்**", என்கிறவர் இங்குவந்து அஷ்டபந்தனம், இரத்தின மகரக்கொடி முதலான சில திருவாபரணம் பல திருப்பணிகள் செய்வித்தார் என்றும், **கிருஷ்ணராஜ உடையாரின்** தளவாய் "குமாரதளவாய்", என் பவர் இங்குவந்து குழிநாட்டை ஆக்கிரமிக்கத் தொடங்கிப் பழனியில் சுவாமி தரிசனஞ் செய்தபின்னர் அஃதொழிந்து இத்தலம் மதுரையாரின் அபி மானம் பெற்றிருந்ததையறிந்தும் சுவாமிக்கு இரத்தின கிரீடம், கேயூரம், புஷ்ப பதக்கம் முதலானவை திருப்பணியாகக் கொடுத்தும் வைகாபுரி நாட்டின் எல்லையைக் குறித்த நாற்பாலினும் "மயில்வாகனக் கல்லுகளை," நாட்டுவித்துக் கொடுத்தார் என்றும், மற்று ஷி பட்டக்காரரால் கிரியைச்

சுற்றி நந்தவனம், தெருக்கள், "குமாரசமுத்திரம்" என்ற பிராம்மண அக்கிரகாரம் முதலாயினவும், பல திருப்பணிகளும் செய்விக்கப்பெற்றிருக்கின்றன என்றும், (12) பன்னிரண்டாம் பட்டக்காரரது நாளில், ஆறு சத்திரங்கள், பல அக்கிரகாரங்கள், உண்டாக்கப்பெற்றிருக்கின்றன; அக்காலத்திலே "மைசூர் நஞ்சராஜ உடையார்", என்பவர், முருகப்பிரானுக்குத் திருமஞ்சன பொற்குடம் ஒன்றும், யானையும் தருமமாக வழங்கினர்; பின்னர் 'அமிதர்' அதிகாரியானர் என்றும், இன்னும் இன்னோரன்ன செய்திகள் பலவும் நன்கு விளக்கமாகின்றன. நிற்க, இவர், தம் முன்னோர்களின் பிருதுகள், முதலாயினவற்றை உணர்த்தும் "வெடபூறி?" என்கிற "பாடல் புத்தகம்" ஒன்றிருப்பதாகவும் உணர்த்தியிருக்கிறர். ஆனல் அதன் சரியான பெயர் இன்னதென்றும் இத்துணை பாடல் கொண்டது, எங்குள்ளது என்றுதியன ஒன்றும் இதிலிருந்து விளங்கவில்லை. ஆனல், இதனிறுதியில் "பாஷாகவி" யென்னப்பட்ட பிராம்மணன் சொல்லப்பட்ட "பழனி சின்னப்ப நாயகன் வமிசாவளி பாட்டு," எனுந் தலையங்கத்தின் கீழாக ஒரு தமிழ்ப்பாடல் மாத்திரம் காணப்படுகிறது. அது, மேற் (12)-ஆம் பட்டக்காரர் ஆகிய— "விஜயகிரி வேலாயுத சின்னப்ப நாயகர்", என்பவர்மேல் துதிரூபமாகப் பாடப்பெற்ற முத்தப்பருவப் பாடலில் ஒன்று ஆம் என்று, இறுதியில் உள்ள, "பரராசசேகர குமார சின்னப் பையன், பாரரசு செய்தபின்பு, சிஷ்டர்பணி செங்கோல் நடத்திவரு மிரகுவீர செம்பவழ முத்தமருளே! திருமருவு" விசயகிரிவேல் சின்னப்பையா செம்பவழ முத்தமருளே! என்ற சில அடிகளால் விளக்கமாகிறது.

No. 3093. பழனித்தல வரலாறு.

PAḺANITTALA VARALĀṞU.

Pages, 20. Lines, 26 on a page. Condition, injured. Extent, 260 granthas.

Begins on fol. 12 (*a*) of the manuscript described under D. No. 3092.

Complete.

An account of the Holy Place of the God Subrahmanya who is wor-shipped at the village of Paḻani in Dindical taluk. "Tiruvāvinankuḍi." Mentions the name of a Hero Irāmappa ayyan who was a Daḻavāy of Tirumalai Nāyakar at Madura.

Beginning :

௲அ௱௰சுஹு௰ ஏப்ரல்மீ உஉ ௨ (22–4–1816).

கோயமுத்தூர் தாலூக்கா, ஜில்லா வகைராவுக்குச் சேர்ந்த திண்டிக்கல் தாலூக்கா அய்யம்பள்ளி துக்குடி கசுபா பழனி மகாஸ்தலம் வரலாறு. தரியாபத்து நிட்டலநாயன் அய்யன்.

ஸ்காந்த புராணத்தில் கிரிப்பிரகாச காண்டத்தில் வராககிரி பிரசமசயிலச் சரிவில் உள்ள "திரு[வி] ஆவினங்குடி," யாகிய சுப்பிரமணிய ஸ்தல மகிமையை விளக்கமாய்ச் சொல்லச்சொல்லி நைமிசாரண்ய ஸ்தல வாஸிகளான இருஷிகள் கேட்க, சூத[பு](பௌ)ராணிகர் சொல்லப்பட்ட

"பழனிப்புராணம்," என்கின்ற இருபத்துநாலு சருக்கங்கொண்டுள்ள கதையில் ஸ்தலமகிமை, கிரிமகிமை, வனமகிமை, மூர்த்திமகிமை யாகிய இனமகிமைகள் சொல்லிவருகிறது.

பூர்வத்தில், திரு - இலட்சுமி; ஆ - காமதேனு; இனன் - சூரியன், கு - பூதேவி; இடி - அக்கினி; இவர்கள் அஞ்சுபேரும், ஒரு காரணார்த்தத்தினாலே (இங்கு)த் தபசுசெய்து சாபவிமோசனம் ஆனதினாலே "திருவாவினன்குடி," என்று பெயர் வரலாச்சுது. * * * * *

End :

௩௰௪. தண்டாயுதபாணி ஸ்வாமியாருக்கு அலங்காரம்பண்ணும் அளவில் வேலும், கத்தியும் கூடி ஆயுதபாணியாக அலங்காரம் பண்ணுகிற அலங்கார தீபாராதனம்போது (மூர்த்தி பாளையக்காரனைப்போலே யிருக்கும்) சாலக்கிராம சிலை யென்றும், எழு வயசு பிள்ளைபோலேயிருக்கும் என்று சொல்லப் படுகிறது.

௩௰௫. இரண்டு ஆயுதம் தங்கமொலாம் செய்த உறை போட்ட கத்திகள் இருக்கின்றன. அந்த ஆயுதம் மலையாளம் இராமராஜர் கொடுத்தது (க) என்று, பாளையக்காரன் கொடுத்த ஸ்வாமி கோவிலது. (க) ஆக இரண்டு இப்போது இருக்கின்றன. உத்ஸவத்தில் உண்டிவைத்துக் காணிக்கை விடுகிறது சர்க்காருக்குத் தாக்கல். வெள்ளிக்கிழமை, திங்கட் கிழமையும் உண்டிவைத்துச் சிலுவான காணிக்கை சர்க்காருக்குத் தாக்கல்.

(கு. - பு.).—

இது, "பழனி," யென்னும் சுப்பிரமணியர் ஸ்தலத்தின் வரலாற்றை யெடுத்து விளக்குவதாம். இத்தலம் திண்டுக்கல் தாலூக்கா அய்யம்பள்ளி துக்குடிக்குச் சார்ந்ததாகும். இந்தத் தலத்தின் மகிமை, "ஸ்காந்தபுராணம், கிரிப்பிரகாச காண்டத்தில் (24) இருபத்துநாலு சருக்கங்களைக்கொண்டுள்ள பகுதியால் விளக்கமுறும் என்று முதலில் தெரிகிறது. இத்தலத்துக்குத் தமிழிலே "திருவாவினன்குடி" யென்ற பெயரும் வழங்கப்பட்டுவருகிறது. இப்பெயருக்குக் காரணம், ஆதியில் இலட்சுமிதேவி, காமதேனு, சூரியன், பூமிதேவி, அக்கினி என்ற இவ்வைவரும் ஒரு காலவிசேடத்திலே இத்தலத்தில் வந்து தபசுசெய்து தங்களுக்கு இருந்த சாபத்தை நீக்கிக்கொண்டதேயாம் என்றும், இப்பதம் அவ் வைவரையும் குறிப்பினால் விளக்கும் என்றும் முதலில் குறிக்கப்பட்டிருக்கிறது. "பழனி," என்ற பெயர், ஒரு காலத்தில் சுப்பிரமணியரைச் சிவபெருமான் "பழம் நீ" யென இங்குக் கொஞ்சிக் குலாவிய காரணத்தால் வந்தது எனவும் விளக்கப்பட்டுள்ளது. நிற்க, முன் நாட்களில் இது, சபரபுரம், சிவபுரம், சிவகிரி, இலட்சுமீநாராயணபுரம், முதலிய பல பெயர்களாலும் வழங்கப்பட்டு வந்திருக்கிறது. இத்தலத்தில் மதுரைத் தலத்து தளகர்த்தராம் "**இராமப்பய்யன்**" என்பவர் இங்குவந்து பழனியாண்டவருக்கு அபிஷேகம், சில திருப்பணிகள் முதலாயின நடத்திப் போந்து தலத்தில் ஒரு மகிமை பெற்றிருந்த "ஸ்தலராஜ பண்டிதர்," என்றவரை மெச்சிப் பல சிறப்புக்களும் பிருதுகளும் கொடுத்து உதவினார் என்றதும், மற்று, சந்நிதியில் 24 பண்டாரம் அவர்களில் பாளையக்காரரில் ஒருவர்; தீர்த்தவாசிகள் 64 பேர்கள் என்றும், இவர்கள் எல்லோரும்

திருமஞ்சனப் பண்டாரம் எனப்படுவர். ராயப்பர் பல பணிவிடைகள் செய்வார்கள், என்றுமிவை முதலியன இதில் விளக்கமாகின்றன. முற்று மிருக்கிறது. எழுத்துப் பிழைகள் உள. சிதலுற்றிருக்கிறது.

No. 3094. திருவிடைச்சுரங்கோட்டை வரலாறு.

TIRUVIḌAICCURAṄKŌṬṬAI VARALĀṚU.

Substance, paper. Size, 22½ × 16 inches. Pages, 6. Lines 34 on a page. Character Tamil. Condition, much injured. Appearance, old. Extent, 150 granthas.

Begins on fol. 1 (*a*). The other works herein are :—Tiruviḍaiccuraṅdēvasthāna varalāṟu,4 (*a*); Panṭakkuḻi yenṟa Kallaṟaikaḻin varalāṟu,5 (*a*); Toṇḍaimān Chakkiravarthi Charithiram; 17 (*a*) ; Tiruviḍaiccuraṅkōṭṭai varalāṟu, 27 (*a*) ; Tiruvidaiccuran dēvasthāna varalāṟu, 35 (*a*) ; Ponviḷainda Kaḷattūr varalāṟu, 39 (*a*) ; Paḍuvūrppandukkuḻimudalāna viḍattuppudaiyal varalāṟu, 47 (*a*) ; Toṇḍaimaṇḍala varalāṟu, 53 (*a*) ; Marudaṅkuṟumbarkōṭṭai varalāṟu or Veṅkāḷammāḷ akkirahāram uṇḍāna varalāṟu, 69 (*a*) ; Madhurāntakam varalāṟu, 73 (*a*) ; Aviḍulāṅkikōṭṭai varalāṟu, 77 (*a*).

Complete.

An account of the first of Tiruviḍaiccuram, in Chingleput district. where Kuṟumbars ruled. Adoṇḍaicchōḻan came from Tanjore and destroyed them. He established in their place the Koṇḍi kaṭti Vēḻḻāḷar. Afterwords the " Vanniyar " with the permission of Adoṇḍa colan built a Fort for themselves. Cāttava rāyan, and Chethuraya came to power. They built their old fort very strongly. They were very powerful. Kandawayan, was most war like and he rejected all claims of customary tribute from superior Kings. In those days, The Rayar's general " Krishnadeva Rayar " came here, and with the help of the (*a*) Poligar " Uyyāḻvān " cut off his head through the help of " Kuppacci ", who was a dancing girl. After that the Poligar ttacking the enemies took, the Fort and then it became a dependency of the Anaigundi Kings.

This manuscript belongs to the Mackenzie's Collection and is same as the manuscript described under D. No. 830 of in Taylor's Catalogue, pp. 426-434.

Beginning :

செங்கற்பட்டு ஜில்லாவைச் சேர்ந்த திருவிடைச்சுரத்தில் இருக்கிற புராதனக் கோட்டையில் ஆண்டுகொண்டிருந்த வன்னிய அரசர்களான "காத்தவராயன், சேத்துராயன்," என்றவர்களின் விசேஷித்த சரித்திரம். சகாதேவ நாட்டான் வாக்குமூலத்தைப்பிடித்து எழுதினது.

பூர்வீகத்தில் இந்தத்தலத்தில் குறும்பர் பிரபுக்கள் புராதனமாய் இராச்சிய பரிபாலனம் பண்ணிக்கொண்டு வந்தார்கள். அவர்களை ஆதொண்டைச் சோழன் தஞ்சை நகரத்திலிருந்து வந்து சம்மாரம் பண்ணித் தொண்டைமான் சக்கிரவர்த்தி யென்கிற கிதாப்பு பெற்ற பின்பு அவர்களுக்குப் பதிலாகக் "கொண்டைகட்டி வெள்ளாழர் ஸ்தாபிக்கப் பட்டார்கள். அந்த நாள்களில் "வன்னியர்", யென்ற பள்ளிகள் இந்தக் கோட்டையை தேசாதிபதியின் உத்திரவின்படிக்குச் சுவாதீனம் பண்ணிக் கொண்டு பிரபுத்துவம் பண்ணிக்கொண்டு வந்தார்கள். ஆனால் இவர்கள் ஆந்திர, கன்னட, திரவிட தேசாதிபதிகளுக்குக் கப்பங் கட்டிக்கொண்டு வந்தார்கள். இவர்களின் பிரபுத்துவத்தின் வமிசாவளி சரித்திரம் ஒருவராலும் காக்கப்பட்டதில்லை. இப்படி வருகிற நாளையில் இவர்கள் வமிசத்தில் "காத்தவராயன், சேத்துராயன்", என்ற இரண்டு அரசர்கள் இந்தப் பட்டத்துப் பிரபுத்துவத்துக்கு வந்தார்கள். இவர்கள் அதிக புத்திவந்தர்களாயிருந்தபடியினாலே தாங்களிருந்த பூர்வீகக்கோட்டையை மகாபலமாய்க் கட்டினார்கள். * * * * * * * * *

End :

அப்போது உய்யாழ்வாரானவன் தன்னுடைய சேனை பரிவாரங்களுடனே வந்து இந்தத் திருவிடைச்சுரத்தின் கோட்டையின்பேரிலே விழுந்து இருபத்தாறு நாள் சண்டைபண்ணி வெகு சேனைகள் இருதிறத்தாரின் தண்டுகளிலும் மடிந்து கடைசியில் காத்தவராயன் தம்பி சேத்துராயனை யடித்துத் திருவிடைச்சுரக் கோட்டையைப் பிடித்து இடித்துப்போட்டுக் கிருஷ்ணராயருடைய அர்ப்பணையின் பிரகாரம் தனது பாளையத்துக் காவலுக் குள்ளாக்கிக்கொண்டு வெள்ளாளருக்குப் பிரீதிவரும்படியாக நடந்து (கொண்டான்). அந்நாள் முதல் இந்த ஊர் ஆனைகொந்தி ஸமஸ்த்தானத்துக்கு அடக்கமாயிருந்தது. இந்தச் சரித்திரத்தை இந்த ஊரார் எல்லாரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள்.

(கு. - பு.).—

இது, செங்கற்பட்டு ஜில்லாவில் இருந்து வந்த "திருவிடைச்சுரம்", என்ற திவ்விய தலத்தில் உள்ளதொரு குறும்பர் கோட்டையையும், அதில் அரசு செலுத்திய வன்னியர் குலத்துதித்த காத்தவராயன், சேத்துராயன் என்றவர்கள் மிகப் பலசாலியாயிருந்து, தாம் வழக்கம்போல் கொடுக்க வேண்டிய அரசர்திறையை மறுத்திருந்து அங்கு ஆதொண்டைச் சோழனால் குறும்பர்க்குப் பதிலாகக் குடியேற்றுவித்திருந்த "கொண்டைகொண்ட வேளாளர் சந்ததியினரை மிக வருத்திக்கொண்டிருக்கவே, அதையவர்கள், ஆனைகொந்தி நகரில் அரசுசெலுத்திய கிருஷ்ணதேவராயரிடம் முறையிட, ஷியார் இங்குவந்து காத்தவராயனுடன் பலவாறு சண்டைசெய்தும் பலியாமற்போய்க் கடைசியாக "உய்யாழ்வான்", எனும் பாளையக்காரர் ஒருவரைத் தமக்கு உதவியாகப் பெற்று அவனைக்கொண்டு வேவுக்காரர்களால் "குப்பச்சி", யென்ற தாசியின் மோகவலையுள் சிக்குண்டிருந்தமையைச் சூழ்ச்சியினால் அறிந்து அத்தாசிக்கு, நான்குபை கொண்ட பொன்திரவியங் களைக்கொடுத்துக் கொல்விக்குமாறு மனமிசையச் செய்வித்து அவனால்

காத்தவராயனைத் தலையையறுத்துக் கொல்லுவித்த வரலாற்றினையும் எடுத்து உணர்த்துகின்றது. அது முதற்கொண்டு இத்தலம் ஆனைகொந்தி கிருஷ்ண தேவராயரது ஆளுகைக்கு உட்பட்டிருந்தது எனவும் குறிக்கப்பட்டிருக்கிறது. மற்று இதில் ஷெ கோட்டையின் மொத்த சுற்றளவு "தெற்கு, வடக்கு, ௲௱௪௰௯ (1149) அடி, கிழக்கு, மேற்கு, ௲௨௱௰௬ (1216) அடி. அலங்கற் சுவர் இருபதடி விசாலம். கோட்டையைச்சுற்றிலும் முப்பதடி விசாலத்துக்கு ௨௱௫௰௧ (251) அடி ஆழமும் இருக்கிறது", என்பதும் இன்னும் இன்னோரன்ன செய்திகள் பலவும் விளக்கமுறும். இச்சரித்திரத்துக்கு இதிலே "காந்தவராயன்", என்று அத்தாட்சியாகக் குப்பச்சிக்குளம் பிணையேறி இருப்பது "காத்தவராயன்", என்று இருக்கவேண்டும் போலும். இது சரித்திர ஆராய்ச்சியாளர்க்கு மிகவும் உபயோகமாகும். முற்றும் இருக்கிறது. ஆனால் இதன் எழுத்துக்கள் எளிதில் படித்துணரமுடியாமலிருக்கின்றன. மிகச் சிதைந்திருக்கிறது.

No. 3095. திருவிடைச்சுரம் தேவஸ்தான வரலாறு.

TIRUVIḌAICCURAM DĒVASTHĀNĀ VARALĀṚU.

Pages, 2. Lines, 34 on a page. Condition, much injured. Extent, 35 granthas.

Begins on fol. 4 (*a*) of the manuscripts described under D. No. 3094.

Complete.

An account of the holy place of "Tiruviḍaiccuram" in the Arcot-district or Chingleput district (In which is the above fort). This manuscript is same as the manuscript described under D.No. 830, p. 429.

Beginning :

திருவிடைச்சுரம் தேவஸ்தான வரலாறு.

பூர்வீகம் முதல் இந்த ஸ்தலம் அநாதியாய் இருக்கப்பட்டது. இது, குலோத்துங்க சோழன் திருப்பணி, அப்புறம் மற்றச் சோழ ராஜாக்களாலும் இராயர்களாலும் சீர்ணோத்தாரம் பண்ணினது. இதன் மகத்துவத்தைப் பற்றித்தலபுராணம் இருந்தது. சீர்ணமாகிப் போய்விட்டது. இப்பால் இதன் வரலாறு—அப்பர், சுந்தரர் இந்த வழியாய்த் திருக்கழுக்குன்றத்து மலைமேல் பாடப்போகிறபோது அவர்களுக்குக் கண் தெரியாமற் போயிற்று. இந்த ஸ்தலத்துச்குச் சமீபத்திலே ஒரு "இடையன்" நின்றான். * * * * * * * * *

End :

இந்தக் கோயில் [க்ஷே](சே) மத்திலேயும் சில தனம் கிடைக்கிறதாம்; பரிசோதனை பண்ணினால் எல்லாம் தெரியவரும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் இங்கே சோதனை பண்ணவேணுமானால் இந்தக் கோயிலுக்கு ஒரு சிறிது சேதமும் இல்லாமல் சோதிக்கலாம். தளவரிசை மாத்திரம் கொஞ்சம் போக்கவேண்டியிருக்கும். மற்றபடியதனாலே கோவிலுக்கு ஒரு குறைச்சலும் இல்லை.

11

(கு.பு.).—

இது, "திருவிடைச்சுரம்", எனும் சிவதலத்தின் மகிமையைக் கூறு கின்றது. இது திருஞானசம்பந்தரால் தேவாரப்பாடல் பெற்றதலமாம். இதன் தல புராணம் ஒன்றிருந்து சீர்ணமாய்ப் போனதாகத் தெரிகிறது. முன்னர், குலோத்துங்கச் சோழனுல் திருப்பணி செய்விக்கப் பெற்றும், பின்னர், மற்றச் சோழராலும், இராயர்களில் சிலராலும் திருப்பணிகள் செய்விக்கப் பெற்றதும் ஆகும். நிற்க, இங்கு அப்பர், சுந்தரர், இருவருங் கூடி தல யாத்திரையாய்த் திருக்கழுக்குன்ற மலைக்குப் போகுந்தருவாயில் இடை வழியில் அவருக்குக் கண் தெரியாமற் போகவே, அவர்கள் ஆராய்ந்து நிற்கையில் பரமசிவன் ஒரு இடையனுகத் தோன்றி இத்தலத்தைச் சுட்டிக் காட்டி மறைந்தார்; ஆதலால் இத்தலம் "திரு இடைச் சுரம்," எனப் பெயர் பெற்றது. இக்கோயிலுக்குச் சோழனுல் திருப்பணி நடந்ததாகவும், மானியம் முதலாயின விடப்பெற்றுச் சாஸனமும் இருக்கிறது. இங்குள்ள திருநந்தி விக்கிரகத்துக்கு முன்னிலையிலும் சேமத்திலும் வெகு கோடி தனம் புதைக்கப்பட்டிருக்கிறது என்றிவை முதலாயினவற்றையும் இது விளக்குகின்றது. முற்றும் இருக்கிறது. ஆனுல் மிகச் சுருக்கமானது, பிழைகள் உள.

No. 3096. பாண்டுக்குழியென்ற கல்லறைகள் வரலாறு.

PĀṆḌUKKUḺI ENṞA KALLAṞAIKAḶ VARALĀṞU.

Pages, 18. Lines, 16 on a page. Condition, much injured. Extent, 144 granthas.

Begins on fol. 5 (*a*) of the manuscript described under D. No. 3094.

Complete.

An account of the Panḍukkuḻis(Panḍukkuḻis) or Kallaṛais or Suraṅgams. Excavations which are at various places Jaghirs and Arcot district, etc.

Beginning :

பாண்டுக் குழி வரலாறு :—

பாண்டுக் குழியைப்பற்றி யாதொரு புஸ்தகத்திலும் எழுதப்பட்டதில்லை யென்று யாவரும் யாவரும் பிரசித்தியாய்ச் சொல்லுகிருர்கள். ஆன படியினுலே இந்தப் பாண்டுக் குழியினுடைய வரலாறு ஒருவராலும் வகை யாய்ச் சொல்லப்படாத பிரகாரமாயிருக்கிறபடியினுலே இதற்கடியிற் சொல்லப்படுகிற பிரகாரம் பல பேருடைய வாக்கு மூலத்தைப் பிடித்து எழுதப்பட்டது.—என்னவென்றல் முதலாவது இப்பாண்டுக்குழி ஒரு பேராய்க் கூப்பிடப்படாமற் பல பேரால் தம் * * * *

End :

இதுவல்லாமல் சீமான்கள் குழிகளிலே அவர்களாலே சம்பாதிக்கப் பட்ட திரவியங்கள் எல்லாம் வைக்கப்பட்டிருக்கின்றனவென்றும், வெகு பேர்கள் அதைச் சோதனைபண்ணி எடுத்து இருக்கிருர்கள் என்றும், சொல்லு

இருர்கள். மத்த குழிகளிலே ஒன்றுமில்லாமல் பானைகள், சட்டிகள் அரிவாள்மணை துருவு பலகை, கத்தி, காம்பில்லாக் கொடுவாள், கோடாரி, சுண்ணும்புக் கலசம், கற்குண்டுகள் * * * இருக்கின்றன. சீமான்கள் குழிகளிலே அளவற்ற திரவியங்கள் இருக்கின்றன வென்றும், வெகுபேர்கள் எடுத்து இருக்கிருர்கள் என்றும் சித்தமாய்ச் சொல்லுகிருர்கள்.

(கு.பு.).—

இது, இப்போது "பாண்டுக்குழி", யென்று உலக வழக்கில் வழங்கப் பெறும் நிலக்கல்லறைகளின் வரலாற்றைப்பற்றிக் கூறுவதாம். ஆனல், இதன் உண்மை வரலாறு இது வரையிலும் சரியாகப் புலனுகவில்லை. இதன் இயற்பெயரும் சரியாக விளங்கவில்லை. இக்கல்லறைகளைப் பண்டைய காலத்தவர்கள் தமக்குச் சேமிப்பாக உள்ளதொரு இடத்தைத் தேடிக் கொள்ளும் வகையிலே கட்டியுள்ளார்கள். அவைகளே "பண்டக்குழி" அல்லது "பாண்டக்குழி", யென்று முன்னர் வழங்கப்பெற்றிருக்கவேண்டும் என்பது மாத்திரம் புலனுகின்றது. இதில் இதற்குப் பெயர், பல்வகையாக ஊகித்தும் அதற்கேற்ப சில ஐக்யங்களும் சொல்லப்பெற்றிருக்கின்றனவாமாயினும், அவைகளில் ஒன்றேனும் சரியாக விருக்குமென்று தோற்றவில்லை. இதிலிருந்து நாம், இக்குழிகள் எங்கெங்கு இருக்கின்றன என்பதனை மாத்திரம் உணரலாம். இதில், கம்பெனிக்குள்ளான சில ஜாகீர்த்தலங்களிலும் படுவூர், வல்லம், மும்மை, செங்கற்பட்டு, நத்தம், ஆனியூர், குன்னத்தூர், ஆவாதூர், காவாதூர், வையாவூர், கொளத்தூர், சித்தாமூர், உத்தரமேரூர், ஆயர்ப்பாக்கம், விளாம்பாக்கத்துத் திருப்பரமலை முதலான இடங்களிலும், சித்தூர், திருத்தோணி, செஞ்சி, பவாணி, முதலான சில சீமைகளிலும் இக்கல்லறைகள் அல்லது பண்டுக் குழிகள் இருக்கின்றன வென்பதாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. முற்றும் இருக்கின்றது. மிகப் பிழைகளுடன் இருப்பதோடு எழுத்துக்களின் மையும் அழியப் பெற்றும் மிகச் சிதைந்தும் இருக்கின்றது.

14—16 ஆன ஏடுகள் வெற்றேடுகள்.

No. 3097. தொண்டைமான் சக்கிரவர்த்தி சரித்திரம்.

TOṆḌAIMĀN CAKKIRAVARTHI CARITTIRAM.

Pages, 11. Lines, 18–20 on a page. Condition, much injured. Extent, 110 granthas.

Begins on fol. (*a*) of the manuscript described under D. No. 3094.

Complete.

An historical account of "Toṇḍaimān" or Ātoṇḍaicchōḻan, who was a ruler with capital at Kāñchīpuram (Conjeevaram) in Chingleput district.

In this manuscripts it is mentioned that, Thondaimān Chakravarthi alias Āthondaicchōlan chakravarthi, was born to Kulottungacholan, and a dancing girl who was named Nagi, or Nagarathinam.

Beginning :

தொண்டைமான் சக்கிரவர்த்தி சரித்திரம்.
முன்னிருந்த சோழர் (சச) (44) தலைமுறை ஆண்டு வந்தார்கள். ஆனால் இவர்கள் எல்லோரும் தங்கள் கற்பைக் காத்துக்கொண்டு வந்தார்கள். ஆனால், கடைசீ சோழனாகிய குலோத்துங்க சோழனுக்குப் பட்டத்து ஸ்த்ரீ வயிற்றில் ஒரு பெண் பிள்ளையும் ஒரே ஆண் பிள்ளையும் பிறந்தனர். ஆனால் [இந்தப் பிள்ளையைக்] கம்பன் மகனைச் சோழன் கொன்றபடியினாலே, கம்பன், சோழன் பிள்ளையைக் கொன்று போட்டான்.

* * * * *

End :

அப்புறம் குலோத்துங்க சோழன் பிள்ளையாகிய ஆதொண்டைச் சோழனைக் காஞ்சீபுரத்தில் சருவக் குடிகளையும் வைத்துக்கொண்டு இவன் கிராதகானக் குடிகளைச் செயங்கொண்டபடியாலே இந்தத் "தொண்டை மண்டலத்துச் சக்கிரவர்த்தி" என்று நாமமுங் கொடுத்துப் பட்டங்கட்டி வைத்தான்.

(கு.பு.).—

இது, ஆதொண்டைச் சக்கிரவர்த்தி அல்லது, "தொண்டைமான் சக்கிர வர்த்தி", என்ற சோழனுடைய சரித்திரத்தை யுணர்த்துவதாம். இதில், இப்போது சரித்திர உலகிற் காணப்பெறும் முறைபோல் அல்லாமல், இச் சோழனைக் குலோத்தங்க சோழனுக்கு வேலைக்காரியாகிய நாகி, அல்லது நாகரத்தினம் என்றவளிடத்து இரகசியமாகப் பிறந்த மகன் என்றும், சோழன், இவ்விழிவை மறைத்துக்கொள்ள உயாபதி? என்றவளிடத்து மறைவாக இப் பிள்ளையைப் பொன்தவிசிலே கிடத்தி ஆதொண்டம் பூ (மாலையு)ங் கூடப் போட்டுத் தான் ஸ்நானம் பண்ணும் துறைமுகத்திலே விட்டு விடச்சொல்ல அவள் அங்ஙனமே செய்துவிடவே, பின் ஷ சோழன் இக் குழந்தையைப் புதிதாக வெடுப்பது போல எடுத்துத்தன் பட்டத்து மகிஷியி னிடஞ் சேர்ப்பித்து வளர்த்துவர, மணஞ் செய்யுங் காலத்திலே, மந்திரிமார் தமது சூழ்ச்சியின் இவனுக்குப் பெண் கொடுக்க, சுற்றத்தினர் மறுத்து விட்டனர் என்பதாகக் கூறி விட்டனர். அது காரணமாக இவன் சிலகாலம் தாழ்த்தி வைக்கப்பட்டிருந்தான். பின்னர், இவன், தம் பிதாவானவர் குறும்பராசர்களை யடக்கப் போய் அபசெயம்படவே, தான், சுவாமியின் அரு ளாலே செயித்துப் போட்டான். அதனால் பிதா அகமகிழ்ந்து இத்தொண்டை மண்டலத்துக்கு அரசனாக்குவித்து ஷ பெயர்களை வழங்கினான் என்றிவை முதலாயின விளக்க முறுகின்றன. முற்றும் உளது.

23–26 ஏடு வெற்றேடுகளாம். பிழையுடனிருக்கிறது. சிதிலமானது.

No. 3098. திருவிடைச்சுரங்கோட்டை வரலாறு.
TIRUVIḌAICCURAṄKŌṬṬAI VARALĀṞU.

Pages, 13. Lines, 18–20 on a page. Condition, much injured. Extent, 150 granthas.

Begins on fol. 27 (*a*) of the manuscript described under D. No. 3094.

Complete.

Same work as that, described under D. Nos. 3094 and 830 of Taylor's Catalogue.

(கு,பு.).—

இது, டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 3094–ஆம் நம்பரில் வந்துள்ள நூலே யாகும். இது மெகென்ஸி, தொரையால் சம்பாதிக்கப்பெற்றது. டைலர் துரை காட்லாக்கில் 830–ஆம் நம்பரில் வருணிக்கப் பெற்றிருக்கிறது. முற்றும் இருக்கிறது. எழுத்துக்கள் மை யழியப்பெற்றுளது. மிகச் சிதில மாயது. பின்னர், 34-ஆம் எடு வெற்றேடு.

No. 3099. திருவிடைச்சுரம் தேவஸ்த்தான வரலாறு.
TIRUVIḌAICCURAN DĒVASTHĀNA VARALĀṞU.

Pages, 6. Lines, 13–14 on a page. Condition, much injured. Extent, 36 granthas.

Begins on fol. 35 (*a*) of the manuscripts described under D. No. 3095.

Complete.

Same work as that described under D.Nos. 3095 and 830 of Taylor's Catalogue.

(கு.பு.).—

இது, டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 3095-ஆம் நம்பரில் வந்துள்ளதேயாம். டைலர் துரை காட்லாக்கில் 830-ஆம் நம்பரிலே வருணிக்கப் பெற்றதாம். முற்றும் உளது. மிகச் சிதலமானது. 38-ஆம் எடு வெற்றேடு.

No. 3100. பொன்விளைந்த களத்தூர் வரலாறு.
PONVIḶAINDA KAḶATTUR VARALĀṞU.

Pages, 13. Lines, 14–15 on a page. Condition, much injured. Extent, 91 granthas.

Begins on fol. 39 (*a*) of the manuscripts described under D. No. 3094.

Complete.

A historical account of the village of "Ponviḷainda Kaḷattur" in Chingleput district.

This manuscript belongs to the Mackenzie's Collection and is described under D. No. 830 of Taylor's Catalogue, pp. 429-30, Vol. III.

Beginning :

பூர்வத்தில் களத்தூரில் பொன்விளைந்த சரித்திரம்.

பூர்வீகத்தில் இந்தக் களத்தூர் புழற் (கோட்டம்) குறும்பர் இராசாங்கத் துக்கு இரண்டாவது கோட்டையாய் இருந்தது. இவர்கள் ஆதொண்டை

சக்கிரவர்த்தியினலே சம்மாரம் பண்ணப் பட்டபின்னர் இந்தக் கட்டடத்துக்குக் கொண்டைகட்டி வேளாளர், தொண்டை மண்டலாதிபர் என்று கிதாப்புப் பெற்றவர்கள். பத்துக்கனக தண்டிகைக்காரப்பிரபுக்கள் அரசுக்கு வைக்கப்பட்டார்கள். இவர்கள் இராசாவுக்கு உட்புகலாயிருந்துகொண்டு தேசத்தை, நடத்தை பண்ணிக்கொண்டு வந்தார்கள். இவர்களுடைய நாட்களிலே இந்த ஊரில் ஒரு ஏழைப் புரோகிதன் இருந்தான். அவன் இந்தத் திருவாலீசுவரர் தேவஸ்த்தானத்தில் இருந்து புரோகிதஞ் சொல்லிக்கொண்டு போவான். ஆனல் இவனுக்குப் புரோகிதத்தில் வருகிற சம்பாத்தியம் காலக்ஷேபத்துக்குக் கட்டிவராமல் களத்தூரில் இருந்த வேளாள பிரபுவினிடத்தில் ஒரு காணி நிலம் வாங்கி அதைப் பயிரிட நினைத்துக்கொண்டு மறு நாட்காலமே திருவாலீசுவரருக்குப் புரோகிதஞ் சொல்லப் போனன்.

* * * திரும்புகையில் திருவாலி வீசுவரன் இவனுடனே பேசி * * நீ உழுது புழுதியாக்கி விதை விதைக்கிறபோது நமக்கு அறிவி என்று சொன்னர். அந்தப் படி * * திருவாலீசுவரருக்கு அறிவித்தான். அப்போது திருவாலியீசுவரர் விருஷப வாகனரூடராய் எழுந்தருளித் தம்முடைய கையினலே ஒருகைகொண்ட விதையை வாங்கி இறைத்து மாயமாய்ப் போனர்.

* * * * *

இந்தப் புரோகிதன் பயிர் வெகு நாளைக்குப் பின் கதிர் வீச துவக்கிச்சுது. அப்போது ஆகாசம் எல்லாம் சொர்ணநிறமாச்சுது * * இதை அந்த நாளிலே யிருந்த "அரி அரராயர்", கேட்டு இராணுவங்களை யனுப்பிப் பாராபோட்டு ஏற்றகாலத்தில் தாமே வந்து அறுப்புக்கு விட்டு ஒப்படி பண்ணிக் குடிவாரம், அரண்மனை வாரம் போகச் சுவதந்திரக்காரர்களுக்குள்ள சுவதந்திரம் சரியாய்ப் பொன்னளந்து கொடுக்கப்பட்டது. இதை ஒப்படியாகக் களஞ் செங்கல்லினலே காரையிட்டு வைக்கப்பட்டது. ஆனதினலே இந்த ஊர் "**பொன்விளைந்த களத்தூர்**" என்னப்பட்டது.

* * * *.

End :

இந்தக் களத்தூர் தொண்டைமான் சக்கிரவர்த்தி நாள் முதற்கொண்டு கிருஷ்ணராயர் நாள் வரைக்கும் வேளாளரால் இந்தக்கோட்டை ....பிரபுத்துவம் நடப்பிக்கப்பட்டது. கிருஷ்ணராயர் அகோ [பள] (பில) மடத்துச் சந்நியாசியார் போதனைப்படிக்கு இதை அக்கிரகாரமாகப் பண்ணவேணுமென்று வேளாளரைக்கேட்க, அவர்கள் சம்மதியாததால் இராயர் தண்டு வந்து விழுந்து ஆறுமாதம் சண்டை கொடுத்துக் கடைசியில் வேளாள்ர் பிராணச்சேதம் மிச்சம் வருகிறதென்று கோட்டையை அக்கிரகாரம் பண்ணவிட்டு விட்டார்கள். அப்புறம் இந்தக் களத்தூர் இரண்டு அக்கிரகாரமாகக்] கிருஷ்ணராயர்புரம், பருயிழுசபுரம்? என்று பண்ணப் பட்டது.

(கு.பு.).—

இது, செங்கற்பட்டு ஜில்லாவிலே உள்ள "பொன்விளைந்த களத்தூர்," என்னும் ஊரினது பூர்வ வரலாற்றை யெடுத்து உணர்த்துவதாம். இதில் இவ்வூர் புழற்கோட்டத்துக் குறும்பர் கோட்டைகள் இருபத்துநாலில், இரண்டாவது கோட்டையாக எண்ணப்பட்டு வந்தது என்றும், முதன் முதலில் இங்குத் "தொண்டைமான் சக்கிரவர்த்தியானவர்," வந்து ஷ குறும்பர்க் குடியை மாற்றிக் கொண்டைகட்டி வேளாளரை குடியேற்றுவித்தான். அது முதல், இத்தலம் தொண்டைமானது ஆளுகையிலிருந்து வந்து பின் அரி அரராயர், கிருஷ்ணராயர் என்றவர்களுடைய காலம் வரையிலாக இடையிற் சிலகாலம் வரையில் வேளாளர் ராச்சியமாக இருந்து வந்தது. பிறகு கிருஷ்ண தேவராயர், இக்கோட்டையை அகோபிலமடத்துச் சந்நியாசியின் போதனையின்பேரில் இதை அக்கிரகாரமாக்க அங்கிருந்த வேளாளரை வேண்டியும் அவர் அதற்கு உடன்படாமல் (6) ஆறு மாதம் வரை சண்டைசெய்து வலியிழிந்து இறுதியில் விட்டுக்கொடுக்க, உடனே இரண்டக்கிரகாரமாக்கி ஒன்றைக் கிருஷ்ணராயர்புரம் என்றழைத்துப் போந்தார். மற்று, இத்தலத்தில் கோயிற்கொண்டிருக்கும் வாலியீசுவரஸ்வாமியானவர் தனது புரோகிதர்க்காக ஒரு திருவிளையாடற்புரிய அருள்புரிந்து விருஷபவாகனத்தின் மீதேறி வந்து ஷயாரின் விளை நிலத்திலே தாமே ஒரு கை கொண்ட விதையை விதைத்துவிட்டு மறைந்தார். அந்நிலம், பொன் கதிர் வைத்துப் பொன்னுக விளைந்திருந்தது. அச் செய்தியினை யக்காலத்து அரசராக விருந்த "அரிஅர ராயர்" என்னுமவர் அறிந்துகொண்டு பாராவைத்துத் தாமே அறுவிடை செய்து அப்பொன்னை நியாயமாகக் குடிக்கு வழங்கினர். அப்பொன்னைக் குவித்த இடமான "களமே", "பொன் விளைந்த களத்தூர்", என வழங்கப்படுகிறது. நீர்ப்பாய்ச்சின கால்வாய் "பொன் கால்வாய்", எனவும் வழங்கப்பட்டு வருகின்றது. அப்பொன் கதிரிற் சில ஷ தேவஸ்தானத்திலேயும், குடுமியீசர் கோயிலிலே சிலவும் சேமித்து வைக்கப் பட்டிருக்கின்றன, என்றிவை முதலாயினவை விளக்கப்பட்டிருக்கின்றன. முற்றும் உளது. எழுத்து படித்தற்குப் புரியவில்லை. மையழியப் பெற்றது.

45—46 எடு வெற்றேடாம்.

No 3101. படுவூர்ப் பாண்டுக்குழி முதலான விடத்துப் புதையல் வரலாறு.

PAḌUVŪRPPĀṆḌUKKULI MUDALĀNAVIḌATTUPPUḌAIYAL VARALĀṞU.

Pages, 7. Lines, 18 on a page. Condition, much injured. Extent, 63 granthas.

Begins on fol. 47 (*a*) of the manuscripts described under D. No. 3094.

Complete.

An account of the places in Arcot and Chingleput districts where treasures were hidden.

This belongs to the Mackenzie collection manuscripts and is described under D, No. 830, p. 430, Vol. III.

Beginning :

(1) படுவூரில் மூடு பாறையோடு இருக்கிற நாலு பாண்டு குழிகளில் தனப்புதையல் இருக்கிறதென்று சொல்லப்பட்டிருக்கிறது.

(2) திருவிடைச்சுரத்தில் பிடாரி கோவிலில் துர்க்கை விக்கிரகத்துக்கு அடியில் ஒரு தனப்புதையல் இருக்கிறதென்று மிகப் பிரசித்தியாய்ச் சொல்லப்படுகிறது. இதன் சிலாசாஸனம், அக்கட்டான் கண்ணுக்கும், முக்கட்டான் குண்ணுக்கும் அவ்வையார்ப் [பிழ] (புற)க்கடைக்கும் அக்கட்டோ இக்கட்டோ ஆறு கிடாரம் பொன்னிருக்கிறது. இதைப்பற்றி அந்தத் திருவிடைச் சுரம் கிராமத்தார் கொடுத்தவாக்குமூலம். துஆரயிசு 1816-ம்௵ ஜூலை௴ ௰௫ (15௳) மகாராஜ ராஜஸ்ரீ, ஸர்வேயர் ஜெனரல் கர்னல் மெகென்சி துரையவர்களுடைய குமாஸ்த்தாவுக்குத் திருவிடைச்சுரங் கிராமத்தார் சகாதேவ நாட்டான் மணியப்பிள்ளை எழுதிக்கொடுத்த வாக்குமூலம். ஷெயூர் பிடாரிகோவில் சமீபத்தில் தெற்குப் பட்டைபாக்கம் போகிற பாட்டைக்குத் தென்புறம்? எட்டிமார சீக்குணை மரத்தின் கீழ் துர்க்கை பார்வையில் ஏழு கிடாரம் பொன்னிருக்கிறது.

* * * * * * * * * *

End :

(14) நாட்டேரியில் சாசனத்தோடு தனப்புதையல் இருக்கிறதாம்.

(15) அவிடுதாங்கியிலும் அந்தப்படியிலே இருக்கிறது என்கிறதாய்ச் சொல்லுகிறார்கள்.

(16) பிரம்மதேசம்.

(கு.பு.).—

இது, படுவூரில் மூடுபாறையுடனிருக்கிற 4 பாண்டுக்குழிகளிலும் பல நிதியஞ் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது என்றும், மற்று, திருவிடைச்சுரம் துர்க்கை (பிடாரி) கோயிலுக்கருகிலிருக்கும் ஏழுகிடாரம் பொன்னிலிருந்து ஒரு வாசியைச் சில தொம்படவர் எடுத்து வந்துவாசியிற்றங்கினார். அதனால், அத்தலம், "வந்ததுவாசி" எனப்பெற்றது என்றும், இதைப்போல், நேயமாலி மலைப்பாங்கிலும் அடுத்த சில கிராமங்களிலும், செங்கற்பட்டு மும்மை நத்தத்தில் மூடு பாறையுடன் ஆன பாண்டுக் குழிகளிலும், களத்தூரில் திருவாலீசுவரர்கோவிலிலும், குன்றத்தூர்ப் பாண்டுக் குழிகளிலும், மலையடியிலும் செங்கற்பட்டுக்கடுத்த வெம்பாக்கத்தில் துர்க்கை கோவிற் பார்வையிலும் உத்தரமேரூர்ப் பிரசன்ன வரதாது ஸந்நிதியிலும், ஷெ ஏரிக்கரையிலும், களத்தூர் சமீபம் ஆனியூர் அரசர்க் கோவிலில் ஏழுசாடிப் பொன்னும், விளாம்பாக்கத்தையடுத்த திருப்ப ன்மலை மேலும், சைன விக்கிரகத்தின் பார்வையிலும், அருங்குணம் தெத்துவாடியில், 5 கிடாரம் பொன்னும், ஆசிலியம் நாட்டேரி, அவிடுதாங்கி, பிரம்மதேயம் என்றவைகளிலும் பொன் நிதியங்கள் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றன வென்றும்,

சிற்சிலவிடத்துத்தக்க ஆதாரங்களும், சில சாஸனமும் இருக்கின்றன என்றிவை முதலாயினவற்றையெடுத்து விளக்குகின்றது. மெகென்ஸி துரையால் ஈட்டப்பெற்றது. முற்றும் உள்ளது. மையழியப்பெற்றும் சிதலுற்றும் இருக்கிறது. மிகப்பிழைகள் காணப்படுகின்றன. பின், 5 பக்கங்கள் எழுதப் பெறாமல் வெறுமனே யிருக்கின்றன.

No. 3102. தொண்டைமண்டல வரலாறு.

TONḌAIMANḌALA VARALĀṞU.

Pages, 29. Lines, 14–17 on a page. Condition, much injured. Extent, 235 granthas.

Begins on fol. 53 (*a*) of the manuscripts described under D. No. 3094.

Complete.

Ancient history of Toṇḍaimaṇḍalam and its earlier inhabitants called Vēdars and Kurumbars. This country was once a vast forest, inhabited by wild beasts. A race of men called "Vēdars" arose, who destroying the beasts, dwelt in certain districts. Many years after, the Kuṟumbars arose in the "Dottanādu" of Carnataka country. They were murderers. So they were called "Cuṛumbars". Some of them spread into the Dravida country, as far as the Thoṇḍamaṇḍalam country. They are now found near "Uttaramerur" in "Śalappakkam village", etc. But they were more civilised. They ruled the country for some time. One of them named "Camanda Cuṛumba Prabhu" was chosen as a King by them, to lie a chief of the Dravida country. He chose "Puḻalūr" as his capital in which he built a famous beautiful Fort. He divided the Cuṟṟumbar-land into twenty-four (24) parts or "Coṭṭam" and constructed a fort in each district. Of these the names of ten are :—Puḻalūr, the royal Fort, Caḻattūr, Amūr, Puliyūr, Chembur, Ūṛrukkāḍu, Kaliyam, Veṅkunam, Ikkāḍu, Paḍuvur.

A Jaina ascetic came and converted them to the Jaina creed. So, the Puḻal King built a Jaina Basthi in Pulalur, after the name of that ascetic, which is still remaining there. They were similar to the Jainis of the present day.

At length Ā'hoṇḍaichoḻan of Tanjore to came this place, with army and defeated them The place where he halted is still called Chōḻanmeḍu. After a little more fighting the other forts also were taken and the Curumbars were destroyed. He acquired the name of Chakravarthi, from rescuing the people from their troubles. The name of "Curumbabhūmi" was discontinued; the country was called 'Toṇḍaimaṇḍalam".

This manuscript belongs to the Mackenzie's Collection of manuscripts and is same as that described under D. No. 830 of Taylor's Catalogue, pp. 430–32.

Beginning :

தொண்டைமண்டல வரலாறு.

ஆதிகாலங்களிலே யுகாந்தப் பிரளயத்துக்குப் பிற்பாடு இந்தத் தொண்டைமண்டலமானது முழுதுங் காடு மூடி அதிதுஷ்டமிருகங்களுடைய சஞ்சாரமாய்க்கிடந்தது. அந்த நாட்களிலே "வேடர்", என்று பேர்கொண்ட வேட்டைக்காரர் (கிராதகர்) ஒருவிதமான காட்டுச் சாதியினர் எழும்பி இந்தக் காட்டுப் பிலங்களிலே சஞ்சாரம் பண்ணி இப்போது "வேடர்பாளையம்", என்றழைக்கப்படுகிற ஸ்தலங்களிலே யதிகமாய்ப் பிரபலித்து மிருகங்களை வெகுவாய்ச் சம்மாரம் பண்ணிச் சில காடுகளை யழித்து அந்த இடங்களிலே குடிசை போட்டுக்கொண்டு ஒரு ராசாவும் இல்லாமல் தங்கள் சுவயமனதின் படியே நடந்துகொண்டிருந்தார்கள். * * * இருக்கையில் "குறும்பர்", என்ற சாதியார் கர்னாடக தேசத்தோடொத்தநாடு[மு]களிலே பெருகிக் கர்னாடக தேசத்தை முழுதும் நிரப்பித் தங்கள் கடோரத்தக் கர்னாடகதேசத்திலே யதிகமாய் விரித்தார்கள். இவர்கள் ஒரு விதமான பத்திக்காரரும் கொலைகாரருமானார்கள். இவர்கள் தங்கள் கடோரத்தைத் தங்கள் பிறந்த அகமாகிய கர்னாடக தேயத்தில் விரித்து அவ்விடத்திலே இவர்களுக்கு இவர்கள் பண்ணின கடோரம் அல்லது குறும்பினாலே "குறும்பர்". என்கிற பேருண்டாச்சுது. இவர்கள் அவ்விடத்திலிருந்து தங்கள் கடோரத்தை இந்தத் திரவிட தேசத்துத் தொண்டை மண்டலம் மட்டும் விரித்து * * உத்திரமேரூருக்கடுத்த "சாலப்பாக்கத்தில்", இருக்கும் "குறும்பர்", என்று இன்னும் பேர் உண்டாயிருக்கிறது. இத் தளத்தில் சற்று யோக்கியராயிருக்கப்பட்டவர்கள் வந்து குடியேறினார்கள்.

* * * * * * * *

End :

அன்று முதல் தெய்வ பக்தனாயிருந்தான் "தொண்டைமான் சக்கிரவர்த்தி", என்கிற பேரும் வந்தது. "குறும்பர் பூமி", யென்றழைக்கப் பட்ட இந்தப் பூமி, "தொண்டைமண்டலம்", என்றழைக்கப்பட்டது. அந்த நாள் முதல் குறும்பருடைய இருபத்துநாலு கோட்டையும் தொண்டைமான் சக்கிரவர்த்தி கோட்டையென்று அழைக்கப்பட்டது. இவன் இந்த மண்டலத்தை நாடுகளாகவும், நத்தங்களாகவும் பிரித்துக் காடுகளாய்க் கிடந்த வெகு பூமிகளைத் திருத்திப் புதுப்பேர் உண்டாக்கினான்.

இவனாலே இந்தத் தொண்டை மண்டலம் சீர்ப்பட்டது என்று யாவருக்கும் பிரசித்தமாய்த் தெரிந்திருக்கிறது.

(கு.பு.).—

இது, "தொண்டைமண்டலம், என்றதின் ஆதிவரலாற்றையுணர்த்துவதாம். இம்மண்டலத்தில் வேடர் சாதியினர் குடியிருந்தனர். பின்னர்,

கர்ஞடக தேயத்தோ டொத்தநாடுகளிலே பெருகியிருந்த சில குறும்ப சாதி யினர் இத்தொண்டைமண்டலத்து உத்தரமேரூர்க்கு அடுத்துள்ள சாலப்பாக்கம் முதலான பல் வேறிடங்களிலுங்குடியேறி இவர் தங் குறும்பால் "குறும்பர்" என்ற பெயரும் பெற்றிருந்தனர். இவர்களில், "கமண்டபிரபு", என்றவன் மிக நாகரீகம் பெற்றவனுயிருந்து அர்சனுகி "கமண்டக் குறும்பப் பிரபு", திராவிட தேசாதிபதி, "புழற்கோட்டரசர்" என்ற பெயர்களால் அழைக்கப் பட்டிருந்தானுய் புழலூரில் மிகச்சிறப்பு வாய்ந்ததொரு பெரிய கோட்டையைக் கட்டி ஷி ஊரையே இராசதானியாகக் கொண்டிருந்தான். இவன் இந் நாட்டைக் "குறுபர்பூமி", யென்றதாக அழைக்கச் செய்து நாடுபல்கியதால் (24) இருபத்து நான்கு கோட்டையாகப் பிரித்து ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு கோட்டையையுங் கட்டுவித்தான். இவனுக்குக் காவிரிப்பூம்பட்டினத்துச் செட்டு வாணிகரிடம் தோழமை உண்டாய்ப் "பட்டிப்புலம், சாலக்குப்பம், மெய்யூர், கடலூர், ஆலம்பரை, மரக்காணம் முதலான பல ஊர்களிலே கப்பல் வியாபாரத்துக்காகச் சில கோட்டைகளேயும், புழலூர்க் கோட்டை, களத்தூர்க்கோட்டை, ஆமூர்க்கோட்டை, புலியூர்க் கோட்டை, செம்பூக்கோட்டை ஊற்றுக்காட்டுக் கோட்டை, காலியூர்க்கோட்டை, வெங்குணக்கோட்டை, ஈக்காட் டுக்கோட்டை, படுவூர்க்கோட்டை முதலான சில பிரதானக் கோட்டைகளேயுங் கட்டுவித்தான். ஜைன சந்நியாசியின் உபதேசத்துக்கு உட்பட்டு ஜைனமதம் மேற்கொண்டிருந்தான். ஷி சந்நியாசியின் பெயரால் புழலூரில் உள்ள ஒரு ஜைன பஸ்தியும் இதற்குச் சான்று பகரும். இக்குறும்பர்கள் தமது பழக்க வழக்க ஒழுக்கங்களால் பகுவாகச்சைனரை யொத்திருக்கின்றனர் என்றும், இவரை தஞ்சையிலிருந்து "ஆதொண்டைச் சோழன்", என்னும் அவர், படையெடுத்து வந்து முதலில் முறிந்துபோய் புழற் கோட்டத்துக்கு அருகில் உள்ள "சோழன்மேடு", என்ற ஊரிற்றங்கியிருந்தார்.

அவருக்கு, அருகிலுள்ள "திருமுல்லைவாயில்", என்ற திவ்வியத்தலத்துச் சுவாமி, கனவிற்ருேற்றியதாம். ஆற்றுவித்து மீட்டும் போர் புரியமாறுசெய்ய, ஷி சோழன் மீட்டும் குறும்பருடன் போர்புரிந்து அக்கோட்டையை யழித்துப் போட்டு அவன் குறும்பை யடக்கினுன். திருமுல்லைவாயில் தேவஸ்த்தானத் திலே ஷி கோட்டையிலிருந்த தூண்களே வைத்துக்கோயில் கட்டியும், வெங் கலக்கதவைத் தஞ்சை தேவஸ்த்தானத்துக் கருப்பகிரத்திற் பிணைத்தும், பின்னர்க் காலக்கிரமத்தில் மற்ற (23) இருபத்துமூன்று கோட்டைகளேயும் தம் வயப் படுத்திக்கொண்டும், இங்கெல்லாம் சோழிய வேளாளர், துளுவ வேளாளர், கொண்டைகட்டி வேளாளர் என்றவர்களேக்குடியேற்றுவித்துச் சில கனகதண்டிகளேக் காவலாக வைத்தும் இன்னும் இன்னேரன்ன செய்திகள் பலவற்றையுஞ் செய்து போந்தான். அது முதலாகக் குறும்பர் பூமி காநாடு என்ற வழக்கு வீழ்ந்து போய் இம் மண்டலம் தொண்டை மான் சக்கிரவர்த்திக்கு உரிமைபூண்டு "தொண்டை மண்டலம்", என் றழைக்கப்பட்டுள்ளது, என்றிவை போல்வன பலவும் இதிலிருந்து விளக்க முறுகின்றன. முற்றும் உள்ளது. சிதல் உற்றும், மையழியப் பெற்றும், எழுத்துத் தெரியாமலும் இருக்கப்பெற்றது. இது முடிந்த பின் மூன்று (3) பக்கம் எழுதப் பெருமல் உள.

இது, மெகென்ஸி துரையால் சம்பாதிக்கப் பெற்றதாம். டைலர் தொரை காட்லாக்கு 830-ஆம் நம்பரில் வருணிக்கப் பெற்று இருக்கிறது. (pp. 430—32.) நோக்குக.

No. 3103. மருதங்குறும்பர் கோட்டை வரலாறு அல்லது (வெங்காளம்மாள் அக்கிரகாரம் உண்டான வரலாறு).

MARUDAṄ KUṞUMBAR KŌṬṬAI VARALĀṞU.

OR (VENGALLAMMAL AGRAHKARAM UNDANA VARALARU.)

Pages, 7. Lines, 14 on a page. Condition, much injured. Extent, 50 granthas.

Begins on fol. 69 (*a*) of the manuscript described under D. No. 3094. Complete.

An account of the Cuṟumbar's fort at "Marudam," near to Uttara merurin Chingleput district. It is stated herein, that, "This fort of mud, wasformerly built by the Curumbars." It is covering more than forty acres of ground with two boundary walls. In the time of Krishnarayar, his dependent, the raja of Chingleput, named, Timmarāja, fought with them. Curumbars were destroyed and he took that fort. He gave it as Jaghire to one of his near relatives who was named Govinda Raja. He built two temples—Hanumar temple and Viṣṇu temple in this fort. Established an agraharam for the Brahmins. Now it is called Veṅgalammaḷ agraharam. He built a "Nata Bhavi" also in his wife's name. It is called "Veṅkaḷammā Naṭa Bhavi."

This belongs to the Meckenzie's Collection of manuscripts and is described under D. No. 830 (pp. 430) of Taylor's Catalogue, Vol. III.

Beginning :

மருதங் குறும்பர் கோட்டை வரலாறு.

முன்னுளிலே இந்தக் கோட்டை குறும்பராலே கட்டப்பட்டது. இந்தக் கோட்டை மண்ணினுலே கட்டப்பட்டிருக்கிறது. சுமார் (40) நாற்பது காணி விஸ்தீர்ணம் இருக்கிறது. கோட்டை சுவர் அகலம் இரண்டுகோல் இருக்கிறது. இது வெகுநாளாய்க் குறும்பராலே யாளப்பட்டது. அப்புறம் வாளராயர் கிருஷ்ணராயர், பிரபுத்துவம் வரைக்கும் ஆண்டு (ராயர்) கிருஷ்ண ராயர் நாளிலே அவருக்குள் செங்கல்பட்டுக் கோட்டை ராசாவானவன் இவர்கள் மேல் யுத்தத்துக்கு வந்து திருப்புலிவனத்தில் எதிர்க்கோட்டை போட்டுக்கொண்டு வெகு நாள் சண்டை கொடுத்துக் கடைசியில் குறும்பர் முறியடிக்கப் பட்டு குறும்பர் பிரபுவை அநீதமாய்ச் சம்மாரம் பண்ணித் திம்மராசாவானவன் இந்தக் கோட்டையைக் கட்டிக்கொண்டான்.

* * * * *

End :

இந்தக் கோட்டை பிராம்மணர்களுக்கு உபகாரமாக அக்கிரகாரமாக்கப் பட்டு இன்னுள் வரைக்கும் அந்தப் புண்ணிய[த்தி] (வதி)யின் நாமத்

தினலே "வெங்காளம்மாபுரம்", என்று அழைக்கப்பட்டிருக்கிறது. இதனுடைய வரலாற்றை விஸ்தாரமாய் எழுத இரண்டு மூன்று நாள் இவ்விடத்திலிருந்து தரியாபத்து பண்ணினல் எல்லாருக்கும் விசதமாய்த் தெரிகிறதாய்க் குறும்பர் கைபீது எழுதலாம்.

(கு.பு.)—

இது, செங்கற்பட்டு ஜில்லாவில் உத்தரமேரூர்க்கு அருகில் உள்ள "மருதம்." என்ற வழங்கப்பெற்று வந்த இடத்தில் இருக்கும் குறும்பர் கோட்டையினது வரலாற்றை யெடுத்து உணர்த்துவதாம். இதில், இத் தலத்துக் காணப் பெறும் கோட்டை, மண் கோட்டையாயிருந்து சுமார் (40) நாற்பது காணி விஸ்தீர்ணமானது. குறும்பரால் கட்டப்பெற்றது. நெடுநாள் வரை இவர்களது ஆட்சிக்குள்ளிருந்தது. கிருஷ்ணராயர்க்குக் கீழிருந்த "திம்மராஜா" என்றவர் செங்கற்பட்டில் அரசு செலுத்திக் கொண்டிருந்து திருப்புலிவன வனத்தில் ஒரு எதிர்க் கோட்டையைக் கட்டிக்கொண்டு இக் கோட்டையிற் குறும்பருடன் போர் புரிந்து அவரை இறுதியிற் கொன்று போட்டாராய் ஷ கோட்டையைத் தன்வயப்படுத்திக் கொண்டார். பின்னர், இக்கோட்டையைத் தம் சுற்றத்தவரான கோவிந்த ராஜா என்றவருக்கு ஜாகீராகக் கொடுத்தார். இவர், சிருங்காரப் பிரியராகையால் தம்மனைவியாம் "வெங்காளம்மாள்", என்ற மாதுடன் ஜலக்கிரீடை புரிவதற்காக இங்கு ஒரு நடபாவியை மனைவி பெயரால் கட்டி விளையாடினர். இக்கிணறு "வெங்காலம்மா சலக்கிரீடை நடபாவி" யென்று வழங்கப்பட்டு வருகிறது. இக்கோட்டையில் அவரால் அனுமார் கோயில் ஒன்றும், பெருமாள்கோயில் ஒன்றுங் கட்டப்பட்டிருக்கின்றன. அவைதி சிலமாயிருக்கின்றன. விக்கிரகம் மிகச் சுந்தரமானவையாம். பின்னர் அவர் இத்தலத்தை பிராமணர்களுக்கு அக்கிரகாரமாக்கிக் கொள்ள உபகரித்தார். அது, அக்கிரகாரமாய் "வெங்காளம்மா அக்கிரகாரம்", என்று அழைக்கப்படுகிறது என்று இன்னோரன்னவை விளக்கமுறுகின்றன. முற்றும் உள்ளது. மிகப்பிழையுடனிருக்கிறது. எழுத்து மை தெளிவில்லை.

இது மெகென்ஸி தொரையால் சம்பாதிக்கப் பெற்றதாம். டைலர் தொரை காட்லாக்கில் 430-ஆம் பக்கம் 830-ஆம் நம்பரிலே வர்ணிக்கப் பெற்றிருக்கிறது

No 3104. மதுராந்தகம் வரலாறு.

MADHURĀNTAKAM VARALĀṚU.

Pages, 7. Lines, 15 on a page. Condition, injured. Extent, 42 granthas.

Begins on fol. 73 of the manuscript described under D. No. 3094.

Complete. An account of Madhurāntakam (Jaghire), Chingleput district.

This place being the ancient boundary of the Madura kingdom, was called Madhurāntakam (the end of Madura) and Vaḍa Madhurāi (the northern Madura). In proof of this there is an image called

"Madhuraicchelvi yamman." There is also a very ancient Saiva temple. It is said that Nalarāja, in his sorrowful pilgrimage came to this place, and by drinking the muddy water of that pool (Puskaraṇi) was cured of his leprosy. He built a temple there to commemorate his cure. So, the tank was called by him, "Viṣahara tīrtha." The Chōla king built many other temples—twelve Śaiva temples, twelve Viṣṇu temples, and 108 Vinayakar temples in this place; and himself lived there for a considerable time. The sthala māhātmya of this place is connected with the sthalamāhātmya of Madura. But, their own names of Pandya and Chōla are not mentioned herein.

Beginning :

மதுராந்தகம் வரலாறு :—பூர்வத்தில் மதுராந்தகமானது மதுரையில் ஆண்ட [பாண்டிய] பாண்டிய ராசாவுக்கு வடபுறத்துக்கடை எல்லையாக விருந்தபடியினாலே இது "மதுராந்தகம்" என்றும், "வட மதுரை", யென்றும் அழைக்கப்பட்டது, இதற்கு அத்தாக்ஷியாக மதுரைப் பாண்டிய ராசாவினாலே இந்த வடகரை யெல்லைக்குக் காவலாய் வைத்த "பிடாரியார்" இந்நாள் வரைக்கும் "மதுரைச் செல்வி யம்மன்", என்றழைக்கப்படு கி[றது](ருள்). இந்த இலிங்கம் பூர்வீகத்திற் சூரியனால் பூசை பண்ணப் பட்டதாம். அப்புறம் காடு மூடி வெகுகாலமாய்க்கிடந்து கடைசியிலே "நளராசாவானவன்", குஷ்டரோகம் பிடித்து வெகு நாள்அவதிப்பட்டுக் கடைசியில் உபாதி பொறுக்கமாட்டாமல் விஷத்தைச் சாப்பிட்டுப் பரதேசம் புறப்பட்டு இந்த விடத்தில் வருமிடத்தில் இந்த இலிங்கத்துக்கு எதிராக விருக்கிற தீர்த்தத்திலே விழுந்து புரண்டு அப்போது அதில் தண்ணீரில் லாமற் சேறாய்க்கிடந்ததால் அந்தச் சேற்றை வாரி சாப்பிட்டான். உடனே யவன் குட்டரோகந் தீர்ந்துபோய் விஷபானமும் முறிந்துபோயிற்று

* * * *

End :

சோழராசாவால் கட்டிவைக்கப்பட்டது. அவரே இந்த மதுராந்தகத்திற் பன்னிரெண்டு சிவாலயம், ௰௨ விஷ்ணுவாலயங்கள் ௱௮ பிள்ளையார் கோவில் களைக் கட்டிவைத்தார். அவைகள் இன்னம் இருக்கின்றன. இது அல்லா மல் ஒரு அக்கிரகாரமுங் கட்டிவைத்தார். அதுவும் இருக்கிறது. இந்தப்படிச் சோழராசா இந்த மதுராந்தகத்தில் வெகு நாள் வரையில் வாசஞ்செய்தார். இந்த ஊர் தலமகத்துவம் மதுரை ஸ்தல மகத்துவத்துடனே சேர்ந்திருக் கிறது.

(கு.-பு.).—

இது, செங்கற்பட்டு ஜில்லாவில் உள்ள "மதுராந்தகம்", என்ற ஊரின் வரலாற்றை யெடுத்து உணர்த்துவதாம். இத்தலம், மதுரைப் பாண்டிய மன்னரது ஆட்சிக்கு உரியதாயிருந்து அதுக்குக் கடை யெல்லையாயிருந்தமை யால், "மதுராந்தகம்", என்ற பெயர் பூண்டிருக்கிறது. அதற்கு அறி குறியாக இவ் வெல்லையில் பாண்டிய மகாராசனால் "மதுரைச் செல்வி"

என்ற அம்மனும் பிரதிஷ்டைப் பண்ணப்பெற்றாள். இது "வட மதுரை" என்ற பெயராலும் அழைக்கப்பட்டிருந்தது. முன்னர் இத்தலத்தில் சூரிய பகவான் சிவபெருமானை வழிபட்டார். பிறகு சில நாள் வரை காடாக விருந்தது. நளமகாராசன் தனது குஷ்டரோகத்தை நீக்கிக்கொள்ள விஷம் அருந்தியும் அது நீங்கப்பெறாமல் பல தீர்த்தயாத்திரை செய்து வரும் வழியில் இத்தலத்திலுள்ள சிவலிங்கத்தை வழிபட்டு அருகில் இருக்கும் புண்ணிய தீர்த்தத்திலே புரண்டு, சேற்றின் நீரையருந்தவே, ஷ நோய் தீரப் பெற்றிருந்தான். முன் அருந்திய விடமும் முறிந்தது. அவன் அது கொண்டு விஷ"ஹாதீர்த்தம்", என்று பெயர் வைத்தானாய்க் கோயிலைக் கட்டினான். இத் தேவஸ்தானம் "சுவேதாரண்யர் தேவஸ்தானம்" என்னப் பெற்றிருந்தது. இதில் பாண்டிய மகாராசன் ஜீர்ணோத்தாரம் பண்ணுவித்தான். அவனுக்குப் பின் சோழ மகாராசன் னோன்றிப் பன்னிரண்டு சிவாலயம், பன்னிரண்டு விஷ்ணுவாலயம் (108) நூற்றெட்டு பிள்ளையார் கோவில் முதலாயினவற்றைக் கட்டுவித்தான். பின் ஒரு அக்கிரகாரமுங் கட்டிவைத்துப் வெகுநாள் வரையில் இங்கேயே வசித்து இருந்தான், என்றின்னோரன்னவை இதிலிருந்து விளக்கமுறுகின்றன. முற்றும் உள்ளது. சுருக்கமாகவிருக்கிறது. மற்று இத்தலத்துக்கு ஒரு தல புராணமும் உண்டு. அது, மதுரைத்தல புராணத்துடன் சேர்ந்திருக்கின்றது என்றுங் கூறப் பெற்றிருக்கிறது. இது, சிதைந்திருத்தலோடு எழுத்தின் மை யழியப்பெற்றுள்ளது. இதிற் சொல்லப்பட்ட பாண்டியன், சோழன், என்றவர்களின் இயற் பெயர்கள் இன்னவையென்று விளங்கவில்லை.

No. 3105. அவிடுதாங்கி கோட்டை வரலாறு.

AVIḌUTĀṄKI KŌṬṬAI VARALĀṚU.

Pages, 12. Lines, 14-15 on a page. Condition, much injured. Extent, 90 granthas

Begins on fol. 77-*a* of the manuscript described under D. No. 3094. Complete.

An account of the ruins of a fort with seven walls (one within the other) at Aviḍutāṅki near Brahmadēsam in Arcot district.

In the Arcot district not far from Brahmadēsam (Kadam) are the extensive remains of a very ancient fort of seven enclosures. It is now concealed by brushwood, and lies waste. Gold-cash, and other coins have been found there. Hyder Ally is said to have examined it and taken thence treasure. It was built many years after Toṇḍaiman Chakravarthi, by Vīranarasimharāja. He appointed a very stupid mantri or (Minister). There was no investigation of affairs; and this minister buried the treasures arising from the public revenues and stultified the king. A certain man, named Viḻal Vāṇan was wounded on the head by a neighbour; and going to make a complaint at the King's gate, could get no hearing. He thereupon went about the Town beating all he met; and as there was no inquiry, he managed to get some money and took post near a burning ground and exacted tribute

from all who came to perform funereal obsequies. By this means he became rich. After some time the King went out in disguise to ascertain the state of the town; heard a poor woman complain of having no money to pay the tribute. He inquired into the tax; and then went to the minister to ask, why it was imposed; he could give no account of it. The King sent for "Vil̲al Vānan," who refused to come; whereupon some troops were sent against him; these were worsted, and Vil̲al Vāṇan came, sword in hand, of his own accord; and falling down before the king narrated all his circumstances; thereupon the king had his minister beheaded, and put Vil̲al Vāṇan in his stead. There is no other tradition at Brahmadēśam, but possibly by going to Aviḍutaṅgi, something further might be learnt.

This manuscript belongs to the Meckenzie's collection of manuscripts, and is same as that described under No. 830 (pp. 433 and 434) of Taylor's Catalogue, Vol. III.

Beginning :

அவிடுதாங்கி கோட்டை வரலாறு. ஆற்காடுச் சுபாவில் பிரம்மதேசத்துக்குக் கிழக்காய் காத வழிக்கு மேலாய்யப் புறத்தில் புரா[தீ](கு)ன்மான மகாவிஸ்தாரமான சப்தபிரகாரங்களுடன் ஒரு கோட்டை இருக்கிறது. இது இப்பொழுது முழுவதுங் காடு மூடிப்போய் அவாந்திரையாய்க்கிடக்கிறது இதில் நாளைய வரைக்கும் பொற் காசுகள் முதலான[து](வை)கள் கண்டு பிடிக்கிறார்கள். இதில் அயிதர், முதலாய் இராயர் (சீமான்) அனு [போ](ம)தியின்படி வெட்டிச் சோதனைபண்ணிச் சில திரவியங்கள் கண்டுபிடித்தானும். இந்தக் கோட்டை தொண்டைமான் சக்கிரவர்த்தியின் காலத்துக்குப் பிற்பாடு வெகு நாளான வீரநரசிம்ம ராசாவால் கட்டப்பட்டது. அவன் இந்தக் கோட்டைக்குள் வெகு போகத்துடன் ஒரு அறிவீனனான மந்திரியை வைத்துக்கொண்டு ஆளுகை பண்ணினான். இவன் சீமா மூலத்தில் இராசாவுக்கு வருகிற திரவியங்களை யெல்லாம் புதையல் பண்ணப் பண்ணி இராசாவை மதித்துப்போகப் பண்ணினான்.

* * * * * * * * * * *

End :

அவர்களை முறியடித்துப் போட்டு உருகின கத்தியுடன் இராசாவின் அருகே சென்று சாஷ்டாங்க தண்டம் பண்ணித் தனக்கு நடந்த காரியத்தை விட்டுச் சொன்னான். அதன்பேரில் (இ)ராசா இவனுடைய ஆலோசனையைப் பார்த்துப் பிரமித்துத் தன் மந்திரியைச் சிரச்சேதம்பண்ணி இவனையே மந்திரிஸ்த்தானமாய் வைத்துக்கொண்டு இவனைக் குளூர்த்திப்பண்ணி ஊரை வெகு நீதியுடன் நடப்பித்துக்கொண்டுவந்தான். மற்ற சரித்திரம் இவ்விடத்தில் தெரியவில்லை. அவ்விடம் அவிடுதாங்கிப் போய்ப் பார்த்தால் அகப்படும் என்கிறார்கள். அதனைச் சோதனைபண்ணினால் நிதியகப்படும் என்கிறார்கள்.

(கு.-பு.).—

இது, ஆற்காட்டு ஜில்லாவிலே "பிரம்மதேயம்" என்ற ஊருக்கு காத வழியில் இருக்கும் "அவிடுதாங்கி", யென்னும் ஊரின் பழைமையானதொரு எழுப்பிரகாரங்கொண்டிருந்த கோட்டையினது வரலாற்றினை யெடுத்து உணர்த்துகின்றது. தொண்டைமான் சக்கிரவர்த்திக்குப் பின்னர் இருந்த "வீரநரசிம்மராசர்" என்றவரால் கட்டப்பட்டது. இதில், அவர் சீமானுய் வெகுபோகத்துடன் வசித்துவந்தார். இவர்க்கு ஒரு அறிவீனனுன மந்திரி யிருந்தான். அம் மந்திரி ஷ ராசாவைத் தன் மதங்கொண்டவனுக்குவித்துக குடிகளின் குறைகளைச் செவிகொடுத்துக் கேட்காதவாறு செய்வித்திருந்தான். அங்ஙனம் இருக்க, இந் நாட்டில் குடியிருந்த "விழல்வாணன்," என்றவனுக்கு அண்டையகத்தவனுல் தீங்கு நேரிடப்பெற்று அவன் அரசன் மாளிகையிற் சென்று முறையிட்டுக்கொண்டான். அதனை மந்திரியாவது அரசனுவது விசாரியாமல் கேட்பார் அற்ற இராச்சியமாக இருக்கவே, ஷ வாணன் இவர்க்கு புத்தி புகட்டுமாறு ஒரு விரகு தேடி ஒரு பிரம்பு கொண்டு வழியிற் போவார் வருவாரை யடித்தும் துன்புறுத்தியும் சில நாட்களுக்குள்ளாக மிகப் பலசாலியாய் மயானத்தில் சுடலை வரியைப் புதிதாக ஏற்படுத்திக் குடிகளிடமிருந்து ஒருவருக்கு ஐந்து பண விகிதமாகக்கொண்டு ஊதியங் கொண்டிருந்தான். ஒரு நாளில் மகாராஜா, ஒரு கூலிக்காரன் வேடந் தாங்கி நகர் சோதனையாக வரச்செய்தே, ஏழைக் கிழவி யொருத்தித் தன் இறந்த மகனைக் கொளுத்தச் சுடலை வரியில்லாமல் "வீட்டைப் பிடிங்கி விறகாய் எரித்தாலும் விழலான வீணனுக்கு அஞ்சு பணத்துக்கு எங்கே போவேன்", என்று சொல்லிப் பரிதபித்தழுதாள். அச்சத்தத்தை யரசன் குறித்துக்கொண்டுபோய் மறுநாள் மந்திரியுடன் ஆராய்ந்து பார்க்கையில் ஷ சுடலை வரியை விதித்தவன் "விழல் வீணன்", என்றறிந்து அவனைக் கொல்லுமாறு சில படர்களை ஏவ, படர்கள் அவனுடன் போர் புரிந்து மடிந்து விட்டனர். உடனே இவன் தானே உருவின கத்தியுடன் அரசனிடஞ் சென்று, முன் குறைகளை முறையிட்டுக்கொண்டான். அதைக் கேட்டு அரசன் இவன்றன் புத்தி வன்மையை மிகப் பாராட்டி இவனையே தனக்கு தக்க மந்திரியாகக்கொண்டான். முன் மந்திரியைச் சிரச்சேதம் பண்ணுவித்தான். இக் கோட்டையிலிருந்து பல நாணயங்கள் கண்டு எடுக்கப்படுகின்றன. முன்னர் அயிதர்அலி அங்ஙனம் பொற் காசுகளை முதன் முதலாகக் கண்டு எடுத்தார் என்றிவை முதலானவை இதிலிருந்து தெரிகின்றன. மிகப் பிழையுடன் உள்ளது. சிதலமானது. எழுத்தின் மை யழியப்பெற்றிருக்கிறது. கடையில் பக்கங்கள் எழுதப் பெறுமல் உள.

No. 3106. திராவிட தேயத்துப் பண்டைய மன்னரது சக வருடங்கள்.

DIRĀVIḌA DĒYATTUPPANḌAIYAMANNARADU ŚAKAVARU-ḌANGAḶ.

Substance, paper. Size, 9¾ × 7¼ inches. Pages, 30. Lines, 16 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old. Extent, 70 granthas.

Begins on fol. 1 (*a*). The other works herein are Diravidadèsattu muniśuvara Kaviśvararkaḷin peyar aṭṭavanai 17 (*a*).

19

Diravidadēśattupputtaka śāsanam mudalanavaikaḷin peyar aṭṭavanai 24 (*a*).

Piradattamahārājan carittiram, or (Tiruvaṇṇāmalai mahatmiyam) 34 (*a*).

Vaccirāṅgada Pāṇḍiyan varalāṟu (Aruṇācalapuranam) 40 (*a*).
Karnāṭaka rājākkaḷ savisthara carittiram 50 (*a*).
Puttakam, Kaifiethu, Śāsanam, Vakaiyara peyar aṭṭavanai 66 (*a*).
Kāntakkōṭṭai varalāṟum, Silppiyar Veliyeṟiya varalāṟum 70 (*a*).
Kuṟumbar ennum Iḍaiccāthiyar varalāṟu 78 (*a*).
Dirāviḍa dēyattuppaṇḍaiyamannaradu Śaka varuḍaṅkaḷ 82 (*a*).
Uyyāḻvar ennum Pāḷaiyakkāran varalāṟu 88 (*a*).
Complete.

A chronological account or table of the ancient and modern Hindu (rājas) kings, who ruled in Drāviḍa country in the four ages.

A few names are wanting in the first three ages. The Kaliyuga list commences with Janamējaya. Rajēndra Chōḻa's date is given in an inscription as S.S. 460. Dēvamahārāyan's date as S.S. 1060; Virūpakshi raya's S.S. 1238. Śāḷuva Narasimha dēva raya's date as S.S. 1420. Vīra Narasimharāya's date as S.S. 1391. Aurunga zeelee's date as S.S. 1554.

This manuscript belongs to the Meckenzie's collection of manuscripts, and is described under No. 828 in pp. 414–420 of Taylor's Catalogue, Vol. III.

Complete.

Beginning :

கிருதயுகம் முதற்கொண்டு இந்த நாலு யுகத்திலேயும், அதிகாரஞ்செய்த ராசாக்களுடைய சகாப்த வருஷம் நிச்சயம் செய்யப்பட்டது.

கிருதயுகம் வருஷம் (இ) லட்சம் ௰௭௨௰௮௲.
மேற்படி யுகத்தில் ராசாக்கள் பெரிய அதிகாரஞ் செய்தது.

வித்தியுது, கிரத வித்தியுது, திரிசங்கு, ஹரிச்சந்திரன், முசுகுந்தன்(இ) ரைரவன், பரவானந்தன், உன்றுதன், பதுமநாபன், ஹிரண்யாக்ஷன், ஹிரண்யகசிபன், பிரஹலாதன், வைரோசனன், பாணசுரன், கபிலன், பரசுராமன், ஆகப் பெரிய ராசாக்கள் ௰௬. (பதினாறு பேர்).

திரேதாயுகத்தில் ராசாக்கள்.—

திரேதாயுக வருஷம் (இ) லட்சம், ௯௨. கூ௰சூநூ௵.
மேற்படி யுகத்தில் ராசாக்கள் பெரிய அதிகாரஞ் செய்தது.

மாந்தாதா, திருபன், பரதன், சுக்ரன், அமுசுமாரன், திலீபன், பகீரதன், ககுஸ்த்தன், இரகுமகாராசா, அசமகாராஜா, தசரதன், ஸ்ரீராமசந்திரன், குசலவர், ஆகப் பெரிய ராசாக்கள் ௰௩. (பதின்மூன்று பேர்).

துவாபர யுகத்தில் ராசாக்கள்—

துவாபர யுக சகாப்தம் ? இலட்சம் அ. கூ௰சநூ௵.

மேற்படி யுகத்தில் ராசாக்கள் பெரிய அதிகாரஞ் செய்தது. சலப்பிரளயம்

சோமன், புதன், தாராபுதன், அபிஞசு, பாரிசாதன், பாண்டு மகாராசன், தர்மராசா, பரீட்சித்து ஆகப் பெரிய ராசாக்கள் அ. (எட்டு பேர்.)

கலியுக ராசாக்கள்.—

இந்தக் கலியுகத்தில் ராசாக்கள் அதிகாரஞ் செய்தது.

கலியுகம் வருஷம் இலட்சம், ச, ௩௰உதூ௵. இதில் ஆதியில் செனமே செயன் வருஷம் ?

பாண்டவ சகாப்தம் வருஷம், சதூகூா௰அ.

இந்தத் தாது வருஷத்துக்குக் கலி௵ சதூகூாஎ.

செனமேசெய ராசன் ௵ . . . . .

யாதவராயன் காலத்தில் கலி சக ௵ தூாகூ௰ (சரி).

பெரிய வல்லாளராயன் கலி சக ௵ தூடுாஎ௰சு.

சந்திரகுப்தராயன் கலி சக ௵ உதூஉாச௰சு.

பைரவ சக்கிரவர்த்தி கலிசக ௵ உதூகூாக.

சூத்திரகராயன் கலிசக உதூநாகூ௰எ.

விக்கிரமாதித்தராயன் கலி சக ௵ ௩தூாடுா௰க (சரி).

போச ராசன் அதிகாரத்தில் கலி சக ௵ ௩தூா௩௰க (சரி).

சாலிவாகனனுடைய அதிகாரம் கலி சக ௵ ௩தூாஎ௰கூ (சரி).

இராசநரேந்திரராயன் சக ௵ அ௰எ.

மாதவராயன் நாளில் சாலிவாகன சக ௵ ா௩௰எ.

* * * * * *

End :

வேங்கடபதிராயர் சக ௵ தூடுா௰சு (சரி).

ஸ்ரீரங்கராயர் சக ௵ தூடுாடு (சரி).

கிரதுபுசாமுகராயர் சக ௵ தூடுாச௰க (சரி).

தாமல் வேங்கடப்ப நாயகன் சக ௵ தூடுா௰ (சரி).

அபருங்க செபயைஞ சக ௵ தூடுாடு௰ச.

விஷ்ணுதேவராயர் சக ௵ தூாசு௰.

பேட்டரராயர் சக ௵ தூா௩௰உ.

(கு.-பு.).—

இது, கிருத யுகம், திரேதா யுகம், துவாபர யுகம் என்ற இம் மூன்றிலும் அரசாண்டிருந்த பெருநில மன்னர்களுடைய பெயர்களை மாத்திரம் கால வரையினைக் குறிக்காமல் பொதுவாக விளக்கியும் மற்றுக் கலி யுகத்தில் அரசு செலுத்திப்போந்த பெருநில மன்னர்களாம் "செனமேசெய ராசன்"

தொடக்கமாய் "பேட்டரராயர்", வரையிலான பல மன்னர்களுடைய பெயர் களையும், அதததற்கு நேராக அவர் அவர்களுடைய காலமான கலியுகாப்தம் சாலிவாகன சகாப்தங்களை யெடுத்து ஒரு பட்டிகை முறையிலே உணர்த்து கின்றது. முற்றும் உள்ளதென்றே தோற்றுகிறது. இப் பிரதி, எழுத்தின் மை அடியோடு யழியப்பெற்றுப் படிப்பதற்கு மிக வரிதாகவிருக்கிறது, எழுத் துப் பிழையுடனுளது. இப் பகுதியின் பின்னர், 5 b to 16 (b) ஆன ஏடு களில் ஷ நூல் போன்று பல சைன மன்னர்களுடைய பெயர்களும், அவரது சகாப்த வருடங்களும் எழுதப்பெற்றதொரு பிரதியுள்ளதாமாயினும், அதில் இரண்டொரு பெயர்களே விளக்கமாய், மற்றவையெல்லாம் முற்றும் எழுத் தின் மை யழியப்பெற்று விளங்காமல் இருப்பதால், அது, வாசகர்களுக்கு ஒரு சிறிதும் பயன்படாதென்றே தோற்றுகிறது. மிகச்சிதைந்திருக்கிறது. இது, மெகன்ஸி துரையால் சம்பாதிக்கப் பெற்றதாம். டைலர் துரை காட்லாக்கில் 414—420 ஆன பக்கங்களில் வருணிக்கப்பெற்றிருக்கிறது. அக் குறிப்பை நோக்குக. இது பழைய காட்லாக்கில் "திராவிட தேசப் பூர்வீக ராச வாலாறு" என்ற பெயரால் வழங்கப்பெற்றிருக்கிறது. மெகன்ஸி பெரிய வால்யுமதில் P.P. 86—88 ஆன பக்கங்களில் பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றுளது.

No. 3107. திராவிட தேசத்துப் பூர்வீக முனீசுவரர்களின் பெயர் அட்டவணை.

DIRĀVIḌA DĒŚATTUPPŪRVĪKA MUNIŚUVARAR KAḶIN AṬṬAVANAI.

Pages, 4. Lines, 15 on a page. Condition, much injured. Extent, 20 granthas.

Begins on fol. 17(*a*) of the manuscript described under D. No. 3106.

Complete.

A list of ancient sages and poets with their places and dates in Diraviḍa country.

Beginning :

திராவிட தேசத்துப் பூர்வீக பிரபல முனீசுவரர்கள், கவீசுவரர்கள், அவர்க ளுடைய இடங்கள் வருஷங்கள் (இவைக)ளோடே கூடிய விசேஷித்த ஜாபிதா (அட்டவணை) :—

முனீசுவரர்களின் நாமங்கள்.		தேசங்கள்.	வருஷங்கள்.
1. அகத்தியர்	..	பாண்டியமண்டலம்.	கலியப்தம் பிறக்க க.ம் வருஷங்களுக்கு முன்னர்.
2. போகர்	..	ஷ	ஷ
3. கோரக்கர்	..	ஷ	ஷ
4. கயிலாசநாதர்	..	ஷ	ஷ
5. சட்டை முனிவர்	..	ஷ	ஷ
6. திருமூலர்	..	ஷ	ஷ
7. சுந்தரானந்தர்	..	ஷ	ஷ
8. உரோமருஷி	..	ஷ	ஷ

இவர்கள் பிரபலமான பதினெண் சித்தாதிகள். மலைய பர்வதத்திலே வாசஞ்செய்துகொண்டிருந்து அனந்த கிரந்தங்களைப்பண்ணி மனுஷ்யர்களைப் பண்படுத்தினவர்கள். * * * *

கவீசுவரர்கள்.

(1) கம்பன். (2) காளமேகன். (3) ஒட்டக்கூத்தன். (4) முத்துத் தாண்டவர். (5) அருணசலகவி. (6) மதுரகவி, வெள்ளிகந்தப்பையன், (7) சுந்தரதாசன். (8) காளிதாசன். (9) இரட்டையர்.

(கு.-பு.).—

இச் சிறிய பகுதி, அகத்தியர் முதலான பதினெண் சித்தர்களின் பெயர்களையும் எடுத்து விளக்குகின்றது. மிகச் சுருக்கமானது. எழுத்தின் மை யடியோடு அழியப்பெற்று படித்தற்கு மிக வரிதாகவிருக்கிறது. 20 (b)—23 (b) ஏடு வெற்றேடாம்.

No. 3108. திராவிட தேசத்துப் புத்தக சாஸனங்களின் பெயர் அட்டவணை.

DIRĀVIḌA DĒŚATTUPPUTTAKA, SAŚANAṄKAḶIN PEYAR AṬṬAVAṆAI.

Pages, 20. Lines, 17 on a page. Condition, much injured. Extent, 160 granthas.

Begins on fol. 24 (*a*) of the manuscript described under D. No. 3106.

Complete.

A general list of the books on accounts and inscriptions, etc., in Diraviḍa country.

It is not restored by Taylor. See the Notes of Taylor, pp. 414, Taylor's catalogue Vol. III.

Beginning :

பேர்வர்க்கங்கள்—எகாவுண்டங்களுடைய மொத்த சாபிதா.

(௬௨) திராவிட தேசத்தில் இருக்கப்பட்ட ஜயின கிராமங்களுடைய (ஜாபிதா).

(௬௩) திராவிட தேசத்து ஜினலயங்களின் (ஜாபிதா).

(௬௪) ஒரங்கல் ஸமஸ்தானத்தில் பிரதாபருத்திரனுடைய * * * * * * * * * *

(௭௭) சைனராசாக்கள் சந்ததி.

(௭௮) மொத்த ஜாபிதா.

(௭௯) கணேத்பத்தி.

(௮0) வர்ணேத்திபத்தி.

(௮௧) தேசிங்கு சரித்திரம்.

* * * * * * * *

(கு.-பு.).—

இது, திராவிட தேசத்தில் உள்ள புத்தகங்கள், ஜைன கிரந்தங்கள் ஊர்கள், ஷெ கோவில்கள், கைபீதுகள், வமிசாவளி, சாஸனங்கள், முதலானவை

களின பெயர்களைக் காட்டும் ஒரு அட்டவணையாம். எழுத்தின் மை யழியப் பெற்று படித்தற்கரிதாக வுள்ளது. இப் பகுதி டைலர் துரையாலேயே காபி செய்யப்பெருமல் விடப்பட்டிருக்கிறது. அப்பொழுதே இங்ஙனிருந்தது என்றதற்கு அத்தாட்சியாக ஷியாரது காட்லாக்கு 414-ஆம் பக்கக் குறிப்பை நோக்குக.

No. 3109. பிரதத்த மகாராசன் சரித்திரம். (திருவண்ணுமலை மகாத்மியம்.)

PIRADATTĀMAKARĀJAN CARITTIRAM (TIRUVAṆṆĀMALAI MĀHĀTMIYAM).

Pages, 8. Lines, 28 on a page. Condition, much injured. Extent, 168 granthas.

Begins on fol. 34 (*a*) of the manuscript described under D. No. 3106. Complete.

This seems to be a portion of the Tiruvaṇṇāmalai mahatmiyam. Brahma narrates an account of the visit of "Pradatta maharāja," a king of Benares and of the surrounding country. He came to the Arunachalēśuvarar's temple at Tiruvaṇṇamalai. He loved one of the Dēvadāsis of the temple, in consequence of which his face was transformed into that of a baboon (a monkey). Some of the great men said it was the reselt of an evil thought ; As advised by them he rendered special adoration to the image worshipped there, and recovered a beautiful form. These circumstances Brahma related to Sanaka maharshi.

Beginning :

பிரதத்த மகாராசாவுனுடைய சரித்திரம்.

இந்த அருணசலதிலே வாழப்பட்ட அருணசலேசுவரனுடைய உடமையை அணுமாத்திரமாகிலும் திருடினதே யுண்டாமாகில் மரணமாய் [எ](ய)மபுரம் அடைந்து அனலிலே யழுந்திப் பதைப்பார்கள். அதுவுமல்லாமல் வச்சிரா யுதத்தாலே நாக்கையும் அறுத்து வச்சிர உலக்கையாலே இடியுண்பர்.

* * * * * * * *

திசைமுகப் பிரம்மதேவன் முன்நடந்த ஒரு கதையையுஞ் சொல்லத்தொடங்கிஞர்.

முன்நாளிலே ஒரு நாள் வடதேசத்து ராசாவானவன் * * * உலகத்திலே கீர்த்தியுடைய "பிரதத்தராசா", வென்றும் பேரையுடையவன். தென்னன்றுணையாகிய திருவண்ணுமலை ஸ்தலத்திற்கு சேர்ந்து கங்காபாவனியைச் சடையிலே தரித்திருக்கப்பட்ட அருணசல ஈசுவரன் கோவில் புகுந்தான்.

* * * * * * * *

End :

பிரம்மாவும் தன்னுடைய நாலு முகமும் ஆயிர முகமாயிருந்து சொல்லத் தொடங்கிஞர் என்றவாறு. திருச்சிற்றம்பலம். உண்ணுமுலை யம்மன் துணை. அருணசலம் துணை யுண்டாவதாகவும்.

(கு.-பு.).—

இப்பகுதி, திருவண்ணுமலை மான்மியத்தின் ஒரு பகுதியாமன்று காணக் கிடக்கிறது. இதில், திருவண்ணுமலை தலத்தின் கோயிலுக்கும் அடியார்க்கும் உரித்தான யாதொரு வத்துவையும் திருட எண்ணலுமாகாது என்று ஜைநர்க்கு எடுத்துக்கூறி அதுக்கு உதாரணமாகப் "பிரதத்த மகாராசன்" தனது விருத்தாந்தத்தை யெடுத்துக்கூறும் பகுதி வரையிலுமே யிருக்கிறது: அஃதாவது—இம் மகாராசன் வடதேயத்துக்கு அரசனுய்க் காசியில் அரசாண் டிருந்தவன். இவன் தண்டியாத்திரைக்குப் புறப்பட்டு வழியிலே இத்திரு வண்ணுமலைத் தலத்திலேவந்து சுவாமி தரிசனம் செய்கையில், அக் கோயில் உருத்திரக்கணிகையைக்கண்டு மோகித்துத் தன்னுடன் அழைத்துச் செல்லு மாறு மனதால் எண்ணினுன். அது காரணமாக இவன் முகம் குரங்கு முகமாக மாறிற்று. உடனே காரணமதனை யாராய்கையில், இவனுக்கு அமைச்சரானுர், இங்கு ஏதாவது ஒரு அபசாரம் நேர்ந்திருக்கவேண்டும். யாதுஎண்ணினுய்? என்று கேட்க, அவன் நிகழ்ந்ததை உள்ளவாறு சொல்லி, ஈசுவரனைத் தன் குற்றத்தைப் பொறுக்குமாறுவேண்டியும், தன்பொருள்களை ஒன்றுக்குப் பத்தாக முழுமையும் திருக்கோவிலுக்குத் திருப்பணிக்காக தருமமாக வழங்கினுகைத் தனது முன்னுருவம் வரப்பெற்றுன் என்றது. இப் பகுதியில் டைலர் தொரையால் 2-ஆம் வால்யும் 89—92 ஆன பக்கங் களில் பெயர்த்து எழுதப் பெற்றிருக்கிறது. மிகச்சிதிலமானது. பிழை மிகுந்திருக்கின்றன. பின்னர் 3 பக்கங்கள் எழுதப்பெறுமலிருக்கின்றன.

No. 3110. வச்சிராங்கத பாண்டியன் வரலாறு. திருவண்ணுமலை தலபுராணம்.

VACCIRAṄGADA PĀṆḌIYAN VARALĀṞU. (TIRUVAṆṆĀMALAI TALA PURĀṆAM).

Pages, 20. Lines, 28 on a page. Condition, much injured. Extent, 325 granthas.

Begins on fol. 40(a) of the manuscript described under D. No. 3106.

An account of Vajrāṅgada Pāṇḍiyan. It seems to be a portion of the Tiruvaṇṇāmalai sthalapurāṇam. This story is described in 6th section "Vacciraṅgada pāṇḍiyaccarukkam", of Aruṇācalapurāṇam.

The king of the fertile country on the banks of the Vaikai one day set out on a hunting excursion, to the great terror of the elephants and other beasts. In the course of the hunt, he chased a Civat-cat, which ran directly for Tiruvaṇṇāmalai hill, and then went round the mountain, when it fell down being exhausted, and died; the horse (ghanavattam) on which the Pandiya king rode, also fell down from extreme fatigue and died. Immediately two Gandharvas appeared and said to the king, "Why do you grieve? We were imprisoned in bodies through the malediction of Durvasarshi, for having trodden on some flowers in his garden; so he commanded one of us to become a Civet cat and the other a horse. On our asking, when the spell would

be dissolved, he said, it would be by the Vajrangada Pāṇḍiya." These two animals then attained final happiness by the merit of having gone around Aruṇāchalam hill ; but as the king did not walk round, but went round on horse back, he had no part in the merit. He subsequently made over his kingdom to his son, named Arathanāṅgada Pāṇḍiya and became an asetic, residing near the hill. His son sent him much money with which he greatly added to the splendour and beauty of the same. while walking round it one day, God Siva met him in a visible form and told him that he also had been imprisoned, having heretofore been Indra, who threw his diamond-weapon (Vajranga) at him (Siva). In consequence of this he was condemned to live on earth as "Vajrāṅgada Pāṇḍiya", but that now from the virtue of his munificient acts to the temple he was re-admitted to his former state, and again he became Dēvēndra.

This manuscript belongs to the Meckenzie's collection of manuscript and is same as the work described under No. 828, pp. 415–416, Taylor's Catalogue, Vol. III.

Beginning :

வச்சிராங்கத பாண்டியன் சரித்திரம்:—(திருவண்ணுமலைமாகாத்மியம்) தோடுகமழ்வதாகிய புஷ்பவிதழினையுடைய மதுரவாசனையும் கொண்டுவந்து வளைந்து வளைந்து நீடியதமிழிசையாகிய நெடுநாளாகிய அன்னங்கள் போலே நடனம் பண்ணப்பட்ட [ஸ்ரீ] (ஸத்ரீ) ஜனங்கள் அன்னங்கள் போலே கல்வி யையுடைய பெண்கள் தென்றல்காற்றுகள் மிகுத்து வாசனையும் உடனே உலாவப்பட்ட வைகையினுடைய வளநாடு. * * * * * * * * * * அவனுடயை பெயர் எதுவென்றல் "வச்சிராங்கத பாண்டியன்" என்று * * * அப்படி யதிசயபராக்கிரம நீதியுடைய வச்சிராங்கத பாண் டியன் ஒருநாள் வேட்டையாடவேணும் என்று விருப்பமுடனே வெளிப்பட்டு * * * * நால்வகை சேனைகளும் பின்றொடர்நதுவரத் தானுந் தனியே ஒரு குதிரையின்மேலே ஏறிக்கொண்டு வடதிசையே நோக்கிப் பிரவேசமானன். * * * குதிரைமேலேறிவர ஒரு புனுகு பூனை யாகிய நாவிப்பிள்ளையைக்கண்டு பின்தொடர்ந்தான், வச்சிராங்கத பாண்டியன் பின்றேடர்ந்ததைக் கண்டு அந்தநாவிப் பிள்ளை ஓட்டமெடுத்து ஒளிய இடம் இல்லாமல் பயந்து ஓடி முன்பாகக் கண்ட அருணசல மலையைச்சுற்றி வலமாக ஓடுகிறபோது.

* * * * * *

End :

மார்க்கண்ட ரிஷி இந்த அருணசல மகிமையினுடைய பொருளிலே ஒரு எழுத்தாகிலுந்தெளியும்படி தக்காருடனே கேட்டுப்படித்தபேர்கள் சிவனு டைய சாயுச்சியபதம் என்றும். பெறுவார்கள் என்றல் இந்தப் புராண சாரத்தை முக்காலுங்கற்றுப் படித்தவர்களும் அதனுடைய பொருளாகிய அர்த்தத்தைச் செவியாரக்கேட்டு பெருஞ்சிவகதியடைவார் என்பது புது மையோ? அதுக்குச்சந்தேகம் உண்டோ? என்றார் திருநந்திகேசுவரன் என்றவாறு. திருச்சிற்றம்பலம். அருணகிரிநாதர் துணை, உண்ணுமுலையம் மன் துணை.

(கு. - பு.).—

இப்பகுதி, "வச்சிராங்கத பாண்டியன்," என்று மிகப்பிரசித்தி வாய்ந்தவனது வரலாற்றையுணர்த்துகிறது. "அருணாசலமகாத்மியத்தின்," பகுதியாய் இருக்கும் என்று தோன்றுகிறது. இதில், "வச்சிராங்கத பாண்டியன், வைகைக்கரையிலிருந்து நால்வகைப்படைகளும் புடைசூழந்து வரப்புறப்பட்டுக் குதிரைமீதேறி வேட்டையாடி வருகையிலே, வழியிலே ஒரு "புனுகு பூனையைக்," கண்டுதுரத்திக் கொண்டுபோகையில், அஃது ஓடி ஒளிய இடமில்லாமல் எதிரில் இருந்த இவ்வருணாசலமலையை ஒருமுறை வலமாகவந்து பாண்டியன் கண்முன்பாக வந்து வீழ்ந்தது. உடனே ஷ பாண்டியன் புரவியுங்கீழே வீழ்ந்தது. அதுகாரணமாகப் பாண்டியனுங்கீழே விழுந்து துயரப்படுகையில், தேவஉலகிலிருந்து விமானம் வந்து, அதில் ஏறியிருந்த காந்திதரன், கலாதரன் என்ற இரு கந்தர்வர்களும் இவனுக்குக் கண்முன்றோன்றி துயராற்றுவித்தனர். பின்னர், பாண்டியன் அவர்கள் முகவாயிலாகத்தனக்கு ஏற்பட்ட ஈசுவர சாபத்தையும், அவர்களது துர்வாச சாபவரலாற்றையும் உணர்ந்து கொண்டு அருணாசலேஸ்சுவரரைப் பல்வாறுகத் துதித்துத் துறவிபூண்டிருந்து, தன் புதல்வனாம் அரத்தனாங்கத பாண்டியனிடம்தன் அரசுரிமையைக் கொடுத்துதவி இங்கேயே வசித்துக்கொண்டிருந்தானாய் தன் அருமை மகனால் அனுப்பப்பட்ட நல் முத்துக்கள், இரத்தினங்கள் முதலான பல பொருள்களையுங்கொண்டு அருணாசலவீசுவரரது திருக்கோயிலின் திருப்பணிகளை முற்றுவித்தான் என்றும், இவ்வரலாறே கூறப்பெற்றிருக்கிறது. பாண்டியனுக்கு இருந்த சாபமாவது—இவன் மூன் ஜன்மதிலே தேவேந்திரனாயிருக்கையில் ஈசுவரனை மதியாமலிருந்ததேயாம். மற்று இந்தச்சன்மத்திலேயும் இங்கு ஈசுவரனை மதியாமல் புரவியேறி வந்ததுமாம். மற்று, அவ்விருவரும் முன்ஜன்மத்தில் "காந்திசாலி, கலாதரன்", என்ற கந்தருவராயிருந்து மேருபருவதத்திலே துர்வாசரது ஆசிரமத்திலே பூந்தோட்டத்திருக்கும் பூக்களை மிதித்ததனால் ஷ பாண்டியனின் புரவியாகவும், ஒருவன் முகர்ந்ததால் புனுகு பூனையாகவும் "கலாதரன்" என்ற கந்தருவனே புனுகு பூனையாகப் பிறந்தான், "காந்திதரன்", என்றகந்தருவனே இப்புரவியாகப்பிறந்தான். இருவர்க்குஞ் சாபவிமோசனம் ஷ வச்சிராங்கத பாண்டியனாலாம் என்பது ஆகப்பெற்று இருந்தனர். மிகப்பிழையுடன் உள்ளது. சிதைவுற்றிருக்கிறது காப்பிசெய்யப்பெற்றது.

No. 3111. கர்னாடக ராசாக்கள் ஸவிஸ்தார சரித்திரம்.

KARṆĀṬAKA RĀJĀKKAḶ SAVISTHĀRA CARITTIRAM.

Pages, 34. Lines, 28–32 on a page. Condition, much injured. Extent, 544 granthas.

Begins on fol. 50(*a*) of the manuscript described under D. No. 3106.

Complete. Mudaṟkāṇḍam only.

This manuscript belongs to the Meckenzie's collection of manuscripts and is same as the work described under No. 828, pp. 416 and 417, Vol. III.

Same work as that described under D. No. 2768. In end of this portion there is a list of the 25 books under the name of Pustakaṅkalin kaifieyat, on foll. 66 and 67.

End :

பூமிபாரம் அதிகமானபடியினாலே நாராயணன் இந்துஸ்த்தான்மத்தியில் அஸ்தினாபுரம் இடில்லிக்குத் தென்கிழக்கு இராசப்பட்டமாயிருக்கிற வடமதுரையில் உக்கிரசேனமகாராசன் மகன் கஞ்சன் சாதிசனத்தைக்கார்க்கப்பட்டவனைச் சாதிக்க அவன் தங்கை தேவகி, அவள் புருஷன் வசுதேவ மகாராசா [நந்தகோபன் எசோதை] இவர்கள் கருப்பத்தில் உற்பத்தியாய் துவாபரயுகாந்தியம் நூறுவருஷத்துக்குக் கொஞ்சங்குறையவருகிற ஆவணி மாதம் கிருஷ்ணபக்ஷம் அஷ்டமி, புதவாரம், உரோகணி நட்சத்திரம், இருஷப லக்கினம் இராத்திரி பதினைந்து நாழிகைக்கு அவதரித்தார். இவர் காரணப்படி கஞ்சனைக் கொன்று உக்கிர சேனனுக்கு வடமதுரை இராச்சியம் பட்டங்கட்டித் தன்தமையன் பலராமனுக்கு இந்த வரசுப்பட்டங்கட்டினார். உருக்குமணி, சத்தியபாமாவைக் கட்டிக்கொண்டு தன் தாய் தகப்பன்மாரோடே கூடவிருந்து அப்புறம் சமுத்திரக்கரை யோரத்தில் துவாரகை யென்றப்பட்டணத்தை அதில் இராச்சியபாரம் பண்ணினார்.

ஆதிகாண்டம் முற்றும்.

(கு-பு). —

இது, டிஸ்கிரிப்டிங்காட்லாக்கு 2768-ஆம் நம்பரிலே வந்துள்ளதே யென்று தோன்றுகிறது. இப்பிரதியில் "முதற்காண்டம் முற்றும்," என்ற தொடர்மொழி காணப்படுவதால் இந்நூலின் வடிவுகாண்டம் என்ற பிரிவுகளுடன்அமைந்தது என்று தெரிகிறது. இதில் முற்றுப் பெறவில்லை. மிகச் சிதைவுற்றிருக்கிறது. மெகென்ஸிதொரையால் சம்பாதிக்கப்பெற்றதாம். டைலர் காட்லாக்கில் 416-ஆம் பக்கத்தில் 828-ஆம் நம்பரில் வருணிக்கப் பெற்றதே. ஷை தொரையால் பெரியவால்யமதில் 104-117-ஆம் பக்கங்களில் பெயர்த்து எழுதிவைக்கப்பட்டிருக்கிறது. பிழையுடன் உள்ளது. "இந்துஸ்தானம் தவாரிக்கைசரிதத்தின் பாயிரம்" என்ற மற்றொரு பேரும் உண்டென்று தெரிகின்றது. இதன் கடையில் 66 and 67-ஆன ஏடுகளிலே "புத்தக கைபீது சாஸனவகையரா அட்டவணை" என்று 25 பெயர்கள் எழுதப்பெற்றுஉள.

No. 3112. புத்தகம் கைபீது சாசனவகையரா பெயர் அட்டவணை.

PUTTAKAM KAIFIETHU ŚĀSANA VAKAIYARA PEYAR AṬṬAVANAI.

Pages, 4. Lines, 18 on a page. Condition, much injured. Extent, 36 granthas. Complete.

A general list of the books, accounts, kaifieyats, inscriptions, etc., in different places. It is similar to the work described under D. No. 3108 in this same manuscript.

Beginning :

புஸ்தகங்கள் கைபீதுசாஸனம் வகையரா பெயர் அட்டவணை:—

(க) திருவத்தூர் ஸ்த்தலபுராணம். க. * *

(உ) மதுரைவீரன் சரித்திரம். க. * * *

(ங) வல்லாள ராசன் யக்ஷகானம் [அஷ்டகானம்] ? 6.

(ச) சதுர்மந்திரி சரித்திரம். க.

(ரு) காசீம்படைவெட்டு. க. * * * *

End :

உ௰உ. பாண்டுக் குழி கைபீது.

உ௰ங. மயிலாப்பூர் கைபீது.

உ௰ச. சைன மத ராசாக்கள் பலமதம் உண்டான வயணம், பூர்வீகம் இப்போழுதையில் * * பற்றின ஆற்காட்டு சுபாவினுள்ளோர் வாக்கு மூலம்.

உ௰ரு. சித்தாமூர் மடாதிபதிகள் சைன பட்டாசாரியரிடத்திருக்குங் கிரந்தங்களுக்குங் சேஷித்த சாபிதா.

(கு.பு.).—

இது, டிஸ்கருப்டிவ் காட்லாக்கு 3108-ஆம் நம்பரில் வந்துள்ள அட்டவணையையொத்து பலவிடத்திருக்கும் பலவித கிரந்தங்கள், புராணம், கைபீது, சாஸனம் முதல்ானவைகளின் பெயர்களை மாத்திரம் எடுத்து விளக்குகின்றது. இதில் 1-25 நம்பரிட்ட கிரந்தங்களின் பெயர்களிருக்கின்றன. மிகச் சிதைந்துள்ளது. எழுத்துமையழியப்பெற்றுப் படித்தற்கு மிக அரிதாகவுள்ளது. இப்பகுதி டைலர்தொரை காட்லாக்கில் பிரஸ்தாபிக்கப் பெறுமலிருக்கிறது. ஆனால் சோழராசாக்கள் கைபீது என்ற பெயரைப் பிரஸ்தாபித்துள்ளார். அது முதலில் எழுதப்பெற்ற பேரேடுமாத்திரமேயுள்ளது. (69-ஆம் எட்டில்) உளது ; ஆனால், சாரமில்லாததென்றார். இதனை பெரியவால்யும் 2-ஆம் வால்யுமதில், 140-ஆம் பக்கத்தில் பெயர்த்து எழுதிவைத்திருக்கிறார்.

No. 3113. காந்தக் கோட்டைவரலாறும் சில்பியார் வெளியேறிய வரலாறும்.

KAṄTAKKŌṬṬAI VARALĀṞUM ŚILPIYAR VEḶIYEṞIYA VARALĀṞUM.

Pages, 14. Lines, 16–18 on a page. Condition, much injured. Extent, 126 granthas.

Begins on fol. 66–*a* of the manuscript described under D. No. 3106.

Complete.

A historical account of the Kāntakkōṭṭai and of an emigration of the artificers from India, by sea, eastward.

In the ancient town of "Mādā," the Kammāḷar (5 artificers) lived closely united together and were employed by all ranks of men as there were no artificers besides them. They feared and respected no king. This offended certain kings, who combined against them and attacked them

with all kinds of arms. But as the fort in which the Cammaḷar lived was entirely constructed of Loadstone (Ūsikkāntam) it attracted and drew all the weapons away from the hands of the assailants. The king then promised a great reward to any one who should burn down their fort No one dared to do this. At length the Courtezans of a temple came forward and took the pledge of betel and areca engaging thereby to do so. The kings greatly rejoicing, built a fort opposite to it and filled it with courtezans, who by their singing attracted the people in the fort. One of these, at length succeeded in extracting from a youngman, the secret, that if the fort were surrounded with Varahu straw and set on fire, it might be destroyed. The king accordingly had this done ; and in the burning down of the fort, many of the Kammaḷar lost their lives ; some took to ships belonging to them and escaped by sea and went to China. In consequence, there were no artificers in that country.

One woman of the tribe, being pregnant took refuge in the house of a Chetty and escaped passing for his daughter. From a want of artificers who made implements for weaver, husband men, and the like, manufactures and agriculture ceased and great discontent arose in the country. The king being of clever wit played a trick to find out whether any of the tribe remained there. He sent away a piece of Coral and a piece of thread to all parts of the country and promised a great reward to any one who should succeed in passing the thread through the coral, which had a fine tortuous aperture running through it. None could accomplish it. At length the child that had been born in the Chetty's house undertook to do it and to effect it he placed the coral over the mouth of an ant-hole and having steeped the thread in sugar, placed it at some little distance. The ants took the thread and drew it through the coral. The king seeing the difficulty overcome, gave great presents, and sent much work to be done, which that child under the council and guidance of its mother performed. The king sent for the Chetty, and demanded on account of the child or young man, which the Chetty detailed. King having him married to the daughter of Chetty gave him grants of lands for his maintenance. He had five sons, who followed the five different branches of work of the Kammaḷar tribe. The king gave them the title of "Panchayat," It is added that the details of their destruction are contained in the Kalingattupparani which is a Tamil Poem by Jayamkoṇḍār of Dīpaṅkaḍi. This manuscript belongs to the Meckenzie's collection of manuscripts and is same as the work described under No. 828 in Taylor's Catalogue, pp. 418 and is restored by Taylor. See pp. 130–135 of Restored big Vol. II.

Beginning :

காந்தக் கோட்டை சரித்திரம்.

முற்கலத்தில் 'மாந்தா', புரியிலே கம்மாளர்கள் என்ற அஞ்சுபேர் களான கொல்லன், தச்சன், தட்டான். கன்னான், கற்றச்சன் என்ற இவ் வைவர்களும் ஒரேபந்துகட்டாய் இருந்து கொண்டு காந்தத்தினாலே ஒரு [ெ]பலத்தக் கோட்டையைக் கட்[டி](டு)வித்து அதற்குள்ளாக அவர்கள் எல் லோரும் இருந்துகொண்டு வெகு அறணிப்பும் நுண்ணிமையுமான வேலை கள் எல்லாஞ் செய்துகொண்டு வெகு செல்விக்கையாக வாழ்ந்தார்கள். இராசாக்கள் முதலான சருவத்திராளும் அவர்களிடத்துக்குப் போய்த்தங் களுக்குத் தேவையான சாமான்களைப் பண்ணிக் கொண்டு வருவார்கள். * * மேலும் இராசராசர்களுக்கும் அவர்கள் அஞ்சாமல் அவர்களைப் பறவா? பண்ணுமல் எதிரிடையாக நடந்துவந்தார்கள். அப்போது ராசாக்கள் பார்த்து அதிகோபம் அடைந்து அவர்களை யதம் பண்ணவேணும் என்று தீர்மானித்து * * * அவர்களுடைய கோட்டைக்கு எதிரே வந்து சண்டை பண்ணத் தொடங்கும்போது கோட்டைமுழுதும் ஊசிக்காந்தத் தால் கட்டப்பட்டதானபடியினாலே அவர்களுடைய ஆயுத முஸ்தீப்புக்களை யெல்லாம் வலித்து இழுத்துக்கொண்டதாம் * * * * * * *

End :

அப்போது இராசா இவர்களுக்கு பஞ்சாயத்தார் என்ற கிதாப்புங்கொடுத் தாராம். இப்பவும் இந்தவும் இந்த அஞ்சு பேர்களுக்குள்ளே கொள்வினை, கொடுப்புவினை சம்பந்தம் நடந்துவருகிறது. இவர்கள் செட்டிகளுக்குப் பிள்ளைமார் என்று பூனூல் தரித்துக் கொண்டு இருக்கிறார்கள். கப்பல் ஏறி ஓடிப்போனவர்கள் "சீனத்தில்"ப்போய்ச் சேர்ந்திருக்கிறார்கள் என்றுஞ் சொல்லப்படுகிறது. இவர்களது ஸவிஸ்தாரகதையைப் பற்றிக்கலிங்கத்துப் பரணி," யென்றும் புராண(காவியத்)திலே பார்க்கத்தெரியும் என் கிறார்கள்.

(கு.பு).—

இது, "காந்தக்கோட்டை", என்றதில் நடந்ததொரு பண்டைய சரித்திர வரலாற்றையும், அதிலிருந்து சிற்பியர்கள் பலரும் சீனம் முதலான பிரதேசங்களிலே கப்பல் மார்க்கமாக வெளிக்கிளம்பிக் குடியேறிய வரலாறு முதலாயினவற்றையும் எடுத்துத் தெரிவிக்கிறது. அதாவது— மாதாபுரியில் கொல்லர், தச்சர், தட்டார், கன்னார், கற்றச்சர் என்ற இவ் வைந்து சில்பியரும் ஒருங்குகூடி மிகக்கட்டுப்பாட்டுடனிருந்து ஊசிச்காந் தத்தாலாகியது ஒரு அரும் பெருங்கோட்டையுங் கட்டிக்கொண்டு மிகச்செல் வச்செருக்கு உற்றிருந்தனராய் மகாராஜாக்களையும் மதியாதிருந்தனர். அது காரணமாக மன்னர்கள் எல்லாரும் ஒருங்குகூடி இவர்களை வெல்ல படை யெடுத்துப் போர்புரிகையிலே ஷ கோட்டை காந்தமானமைபற்றி அது எல்லா ஆயுதங்களையும் வலித்திழுத்துக்கொண்டது ; மன்னர்கள் தம் முயற்சி பலன் உறுமற்போக மனம் புழுங்கி இறுதியாக இவர்களைச்சூழ்ச்சியின் வெல்ல எண்ணி இவர்களின் வலியடக்கினார்க்குப் பலநற்சிறப்புக்களையளிப் பதாகப்பறை சாற்றுவித்தனர். அப்பொழுது, தேவதாசியர்தம் வலிமை யடக்கி கோட்டையைதகர்த்து வைக்கின்றோம் என்ன, அக்கோட்டைக்கு எதிராக தாசிகளுக்குப் பல நன்மாளிகைகளைக் கட்டிக்கொடுத்தனர்.

அத்தாசிகள் மாளிகைகளில் இவர்களுக்கு நாளடைவில் போக்கு வரவு ஏற்பட்டு அதில் ஒரு சில்பியானவனவன் தாசிவலையிற் சிக்குண்டு அவளது மனங் கோணாமலிருப்பதற்காக "வரகுவைக்கோலை சுற்றிலும் போட்டுக்கொளுத் தினால் அக்கோட்டைவீழ்ந்து விடும்" என்பதான சூழ்ச்சியைச் சொல்லவே அத்தாசியும், அச்சூழ்ச்சியை அவ்வூர் யரசனுக்குத் தெரிவித்தனள். அரசன் அங்ஙனஞ் செய்து கம்மாளர்களைத் துன்புறுத்துகையில் அவர்கள் இந்நாட்டிலிருந்து வெளியேறினர். சிலர் சீனம் முதலிய தேசங்களிற் குடியேறினர் என்பது முதலானவைகளை விளக்குகின்றது. முற்றும் இருக்கிறது. மிகச்சிதைந்ததாம். இது மெகென்ஸிதொரையால் சம்பாதிக்கப் பெற்றதாய் டைலர் தொரை காட்லாக்கு 418-ஆம் நம்பர் 828-ஆம் நம்பரில் வருணிக் கப்பட்டிருக்கிறது. பெரியவால்யும் இரண்டாவதில் 130-133-ஆம் பக்கங் களிலே டைலரால் பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றிருக்கிறது. நிற்க, இவ் வரலாறு "கலிங்கத்துப் பரணியென்றும் பண்டையகாவியத்திலும் விளக்க முறும்," என்பதாகவும் கடைப்பாகத்திற் குறிக்கப்பட்டுள்ளது. அஃது ஆரா யற்பாற்று. முதலில் "மாந்தபுரி" என்றுள்ளது. இப்பெயரின் சரியான உருவம் தெரியவில்லை. இவ்வூர்எங்குள்ளது என்றுந்தெரியவில்லை.

No. 3114. குறும்பர் என்னும் இடைச்சாதியர் வரலாறு.

KUṞUMBAR ENNUM IḌAICCĀTIYAR VARALĀṞU.

Pages, 8. Lines, 16 on a page. Condition, much injured. Extent, 65 granthas.

Begins on fol. 78 *a* of the manuscript described under D. No. 3106.

Complete.

An account of the Kuṟumbar alias "Iḍaiyar", and a massacre of them by treachery. Under the Raya's Government the Cuṟumbars ruled in many districts. They constructed forts in the various places-Narumbur, Caturaṅgappaṭṭānam, etc., They tried to make the Mudaliyars and Vēḷāḷars render them homage to which the others did not consent; and the Curumbars in consequence greatly troubled them. Still they did not submit. Accordingly in betel gardens, and many other places they constructed very low wicket gates; so that the Hindus, coming to them must be forced to bow on entering. But the Mudaliyar, Vellalars instead of entering head foremost thrust their feet in first; and thus treated the Cuṟumbars with contempt. As the latter had power in their possession, they ty annized the said tribes. These at length went to a barber, and promising a gift of land, asked of him counsel how to destroy the Cuṟumbars. The barber gave them encouragement. He then went to the houses of all his tribe, and engaged their services by promise. It was the custom of the Kuṟumbars, that, if one of their people died, the whole family should have the head shaved. One of the seniors of the tribe of Curumbars died; and by custom the whole tribe

at one time sat down to have their heads shaved. The aforesaid barber on this occasion, charged all his associates each one to kill his man, which they did, each one cutting the throat of the person shaved. The women, thus suddenly widowed, had a great pile of fire kindled into which they leaped and died cursing their enemies. The ruins of the Curumbar's forts and villages are still visible, being heaps of mud: there are very old wells, some for instance, near Sadras; (Chaturaṅga-pattaṇam) Nerumbur. The bricks of these wells have an appearance of great antiquity.

This manuscript belongs to the Meckenzie collection of manuscripts and is same as the work described under D. No. 828 (pp. 420) of Taylor's Catalogue, Vol. III. It is restored in Meckenzie's Restored Vol. II, pp. 135–137.

Beginning :

குறும்பர் என்ற இடைய வமிசஸ்த்தர்களுடைய சரித்திரம்.

இராயர் ச ஸ்த்தானத்திலே 'குறும்பர்,' என்ற இடைச்சாதியர்கள் வெகு இடங்களிலே இராச்சியபாரம் பண்ணினார்கள். அவர்கள் நெடுமரம் அணைக்கட்டும், சாலப்பாக்கம், நெறும்பூர், என்ற இடங்களிலேயும் இன்னும் மற்ற இடங்களிலேயும் (பல) கோட்டைகள் கட்டிக்கொண்டு பிரபல்யமாய் வாழ்ந்தார்கள். அநநாட்களிலே குறும்பர்க்குடிகள், முதலிக்குடிகளையும் [வெள்] ளாளர்க்குடிகளையும் தங்களை வணங்கும்படியான பிரயத்தினம் பண்ணினார்கள். ஆனால் முதலிகளும் வேளாளரும் அதற்குச் சம்மதி கொடுக்கவில்லை. அப்போது குறும்பர்கள் அவர்களுக்கு வெகு இடுக்கண்கள் பண்ணினார்கள். அனல் அவர்கள் அதற்குச் சம்மதிகொடுக்கவில்லை. அதன் பேரில் அவர்கள் தெருவிலும், முச்சந்திகளிலும், வெற்றிலைத்தோட்டங்களிலும், இன்னும் வெகு இடங்களிலேயும் திட்டிவாசல்போலே கட்டி அதற்கு எதிராகக் குறும்பர்கள் உட்கார்ந்துகொண்டு சருவத்திராளும் அதிற்றலை குனிந்து நுழையும் படியாகவும் அதினாலே தங்களுக்கு வணக்கங்கள் நடக்கவும் யத்தினம் பண்ணினார்கள் * * * * * * * *

End :

அப்போது ஸ்த்ரீகள் நெரும்பூரிலே முப்போகும் விளைந்தாலும் உப்புக்கு நெற்கிடையாமல்போக வென்று சாபம் இட்டார்களாம். குறும்பராலே கட்டப்பட்ட கோட்டைகள் இன்னும் மேலாகச்சொல்லப்பட்ட இடங்களிலே முழுதும் இடிந்து வீழ்ந்து மண்மேடாய்க்கிடக்கிறது. அதைப்போய்ப்பார்த்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களால் க்ட்டப்பட்ட கேணிகள் அந்தந்த இடங்களிலே பாழாய்ப்போய்க்கிடக்கின்ற[து] (ன). அந்தக்கற்கள் பூருவங்கண்ட வெகுநாளையின் கல்லுகளாய் இருக்கின்றன.

(கு.பு.).—

இது, குறும்பர் "என்னும்" இடைச்சாதியினர் நெடுமரம், அணைக்கட்டு சாலப்பாக்கம், நெறும்பூர் முதலான பல ஊர்களிலும் அரும் பெருங்

கோட்டைகளைக் கட்டிக்கொண்டிருந்து இராயர் சமஸ்த்தானத்துக்கு உள்ளடங்கியவர்களாய் அரசு செலுத்திக்கொண்டு இருந்தனர். அங்ஙனம் அவர் ஆட்சியில் முதலிமார் வேளாளர் என்ற சாதியினரைத் தம்மை வணங்குமாறு பல சூழ்ச்சிசெய்து இடுக்கண்களை யவர்களுக்குச் செய்து கொண்டிருக்க [அது பொறுது] ஷ சாதியினர் பலரும் ஒன்று சேர்ந்து இவர்களது செருக்கையடக்குமாறு எண்ணி ஒருமயிர்வினைஞனது சூழ்ச்சியைக் கொண்டு ஷ குறும்பர்களுடைய தலைகளை யெல்லாம் வெட்டுவித்தனர். அவரது மனைவியார் பதிசோகத்தால் "அக்கினியில் வீழ்ந்து மரணம் அடைகையிலே நெரும்பூரிலே முப்போகம் விளையினும் உப்புக்கு நெற்கிடையாமற் போக" வென்று சபித்தார்கள். இங்ஙனமாக நெரும்பூர் கோட்டை முதலான பலவும் பாழாகி மண்மேடிட்டுக் கிடக்கின்றன என்று, இவை முதலான பண்டையவரலாறுகளை யெடுத்து விளக்குகின்றது. முற்றும் இருக்கிறது. மிகப்பிழையுடனிருக்கிறது. சிதலுற்றுள்ளது; இது மெகென்ஸி தொரையால் சம்பாதிக்கப்பெற்றது. டைலர் தொரை காட்லாக்கு 828-நம்பரிலே வருணிக்கபெற்றது. பி. பி. 420-ஆம் பக்கம் பார்க்க. இப்பிரதி, மெகென்ஸி பெரிய வால்யும் இரண்டாவதில் 135-137-ஆன பக்கங்களிலே டைலர் தொரையால் பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றிருக்கிறது.

No. 3115. திராவிட தேயத்துப் பண்டைய மன்னரது சக வருடங்கள்.

DIRĀVIDA DĒYATTUPPAṆḌAIYA MANNARADU ŚAKA VARUḌAṄGAḶ.

Pages, 12. Lines, 22 on a page. Condition, much injured. Extent, 72 granthas.

Begins on fol. 82-*a* of the manuscript described under D. No. 3106.

Complete.

Same work as that described under D. No. 3106.

(கு.-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 3106-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ள தேயாம். அது மிகவும் எழுத்தின் மையழியப்பெற்றிருக்கிறது. இது, எழுத்துத்தெளிவுள்ளது. கடைப்பிற் சில ஜைனமன்னர்களுடைய பெயர் மாத்திரம் சகவருடக்குறிப்பில்லாமலே எழுதப்பெற்றிருக்கின்றன. முற்றும் இருக்கின்றது.

No. 3116. உய்யாழ்வார் என்னும் பாளையக்காரன் வரலாறு.

UYYĀḺVAR ENNUM PĀḶAIYAKKĀRAN VARALĀṞU.

Pages, 6. Lines, 18 on a page. Condition, much injured. Extent, 55 granthas.

Begins on fol. 88-*a* of the manuscript described under D. No. 3106.

Account of the Uyyāḻvar mudaliyār, at Neruvapālayam.

The Cuṛumbars in the time of Appāych Rayar, built forts, causeways, etc. At that time Uyyāl̲vār came from Ayōddhyā in the north. He brought with him two tutelary goddesses, called Aṅgaḷammai and Uyyalammai, together with attendants. He first halted at Virapuram. At that period one Chenneppa Nayak was acting with great violence, killing many people. The Rayar, in consequence, promised this new man, that if he would remove the nuisance he would give him the district, so cleared, as his reward. In consequence, by the power of his goddess, he took those robbers ; and having obtained the district of Chennappa Nayak, Appācchi Rayar first gave it the name of [Kandakaḍi] (Kal̲l̲arkaḍi) Pāllaiyam. Subsequently as the Cuṛumbars gave much trouble, and insulted the Mudaliyars. The Rayar made great promises to this Uyyal̲vār if he would destroy the Cuṛumbars. The Uyyāl̲vār in consequence, by the aid of the Rayar's troops and a thousand men of his own destroyed the Cuṛumbars. The Rayar gave him great distinction and villages. for the same He established his goddesses in two villages ; and in one had also a Vaiṣṇava temple. He built a palace which was afterwards sold to discharge a debt.

This belongs to the Meckenzie's collection of manuscripts and is same as the work described under No. 828 in pages 420 and 421 of Taylor's Catalogue, Vol. III. It was restored in August 1837. See folio, Vol II, pp. 86–140 by Taylor.

Beginning :

உய்யாழ்வார் என்னும் நேர்வபாளையம் பாளையக்காரன் வரலாறு :—

இராயர் அப்பாச்சியாரது நாளையிலே இந்தப்பிராந்தியங்களிற் குறும்பர் இராச்சியப்பாரம் பண்ணினார்கள். அவர்களுக்குக் கோட்டைகள் நெடுமரம், அணைகட்டு நெரும்பூரு, சாலப்பாக்கம், இன்னும் மத்த விடங்களிலுங் கட்டிக்கொண்டு இருந்தார்கள். அந்தநாளிலே உய்யாழ்வார் என்ற [முத்திலிய]? முதலியார்க்கூட்டமாகிய இந்தப் பாளையக்காரர் வடக்கே அயோத்தியா புரியிலிருந்து வந்தார்கள். வருகிறபோது, அங்காளம்மையும், உய்யாலம்மையும் அவர்களுடைய பரிசாலகரைக் கூட அழைத்துக்கொண்டு வந்தார்கள். இவர்கள் இவ்விடத்தில் முதல் முதல் வீரர்புரத்தில் வந்து இறங்கினார்கள். அந்தநாட்களிலே இராயர் சமஸ்த்தானங்களிலே "சென்னப்ப நாயகன்," என்னப்பட்ட பள்ளிப்பாளையப்பட்டானலே வெகு சோரர்பரிகள் கொள்ளைகள் நடந்தன. அப்போது இராயர் அவர்கள் இந்தப்பாளையப் பட்டைப்பார்த்து நீங்கள் இந்தக்களவுகளைப் பிடித்துக் கொடுத்தால் உங்களுக்கே இந்தப் பாளையப்பட்டு ஸ்மஸ்தானத்தைத்தருகிறேன் என்றார். அதின் பேரில் இவர்கள் தங்களது தெய்வபலத்தினாலே இந்தக்களவுகளைப்பார்த்துப்பிடித்துக் கொடுத்தார்கள். அப்போது சென்னப்ப நாயகனின் பாளையப்

பட்டைவாங்கி இந்த உய்யாழ்வாருக்கு (க் கொடுத்து) முதன் முதல் [கந்தர் கடிபாளையபட்டு] (கள்ளர்கடிபாளையப்பட்டால்) என்று பட்டங்கொடுத்தார்கள்.

* *

End :

* * கொடுத்த, கீழ்ச்சேரி, நெடுமரம்[றெ], (இர)ட்டூர், தலைக்காண்குப்பம், என்ற இந்த நாலுகிராமங்களையும் இனுங்கொடுத்து, இஃதல்லாமல் செங்கற்பட்டுச் சீ[ர்]மை, கருங்குழி சீ[ர்]மை இந்த இரண்டுக்குங் காவற் செலவுங்கொடுத்து ஊருக்கட்டுக்காவல் மானியங் கட்டிக்கொடுத்து மேரையும் ? உண்டாக்கிக்கொடுத்து ரொக்க ஆதாயமும் உண்டாக்கிக்கொடுத்து இவர்களை மேன்மைப்படுத்தி ஆதிக்கியம் பண்ணித் "தூற்புராயர்" என்ற கிதாப்புங்கொடுத்து நடத்திவந்தார்கள். அந்தபிரகாரம் இவர்கள் அனுபோகம் பண்ணிக்கொண்டு வந்தார்கள். இவர்களுடைய அதிகாரநாட்களிலே இவர்கள் அரசாங்கத்துக்கு உதவி ஒத்தாசையாய் இருக்கவேண்டிய காரியங்களையெல்லாம் நடப்புவித்துக்கொண்டு வந்தார்கள். அந்த இரண்டு தேவதைகள் அவர்களாலே கொட்டவரப்பட்டவைகளுக்கு வீரர்புரத்திலே உய்யாலம்மை கோவிலும், அங்காளம்மைக்குக் கூவத்தூரிற் கோவிலும் கட்டி வைத்திருக்கிறுர்கள். இஃதல்லாமல் இவர்களாலே கூவத்தூரில் ஒரு பெருமாள் கோவில் கட்டிவைத்திருக்கிறுர்கள். இவர்களுக்கு ஒரு பெரிய அரண்மனையிருந்து கடன் காரன் இருந்து விற்றுப் போட்டான்.

(கு.பு.)—

இது, அயோத்தியிலிருந்து இந்நாடேறவந்து "வீரர்புரம்" என்ற ஊரிற்றங்கியிருந்த ஒருபாளையாக்காரர், "உய்யாழ்வார் முதலியார்" என்றவரது வரலாற்றினை யெடுத்துக்கூறுகிறது. இதில், ஷி பாளையக்காரர் தாம் இராயர் அப்பாச்சியாரது ஆட்சிக்கு உட்பட்டவராயிருந்து ஷி இராயருக்கு மாறுகச்சிலகளவு முதலாயின செய்து குடிகளைவருத்திவந்த "சென்னப்ப நாயகன்," என்ற பாளையப்பட்டான் ஒருவனைத்தமது தெய்வபலத்தால் அக்களவு முதலாயினவற்றைக் கண்டுபிடித்துப் போரில் வென்றுர். அது காரணமாக இவர்க்கு "அப்பாச்சி இராயார்" ஷி சென்னப்பநாயகன்றன் பாளையப்பட்டை இவர்வயமாக்கி அவ்வூருக்கு "கள்ளர் கடிப்பாளையம்," என்ற பெயரையும், கள்ளர் "கடிபாளையப்பட்டான்" என்ற நாமத்தையும் இவர்க்கு வழங்கச்செய்தனர். பின்னர் அங்ஙனம் குறும்பமன்னரிற் சிலரும் அடங்காது தீங்கிழைத்துவர, அவரை வெல்ல வேண்டி இப்பாளையக்காரரைத்தூண்டிக் குறும்பரைப் போரில் வென்று தமக்குச்சயங் கொடுத்தால், பல வூர்ச் சிறப்புக்களையும் (32) முப்பத்திரண்டு பிருதங்களையும் அளிப்பதாகச் சொல்லி, இவர், அங்ஙனஞ்செய்து கொடுக்கவே 32 பிருதுகளையும் கீழ்ச்சேரி, நெடுமரம், இரட்டூர், தலைகாண்குப்பம் என்ற இந்நாலு கிராமங்களையும் இவ்வுய்யாழ்வாருக்குச் சன்மானமாக இனுங்கொடுத்தும், மற்று, செங்கற் பட்டுச் "சீமை கருங்குழிச் சீமைகளது ஊர்காவலையுங் கொடுத்து உதவினுர். "தூர்ப்புராயர்" என்ற பட்டமதனையும், அளித்து உதவினுர். இவ்வுய்யாழ்வார், தமது குலதெய்வம் ஆகிய "உய்யாலம்மை," "அங்காளம்மை," என்ற இவ்விருதெய்வங்களையும், முறையே வீரபுரத்தி

லும், கூவத்தூரிலேயும் கோவில்கள் கட்டிப் பிரதிஷ்டைப்பித்துள்ளார். இஃதல்லாமல் கூவத்தூரில் ஒரு விஷ்ணு கோவிலும் இவரால் கட்டப் பட்டுள்ளது, என்று இன்னோரன்னவைகள் நன்கு விளக்கப்பட்டிருக்கின் றன. முற்றுமிருக்கிறது. மிகச்சிதைவுற்றது. மெக்கன்ஸி தொரையால் சம்பாதிக்கப்பெற்றதாம். டைலர் தொரையது காட்லாக்கில் (420–21)-ஆம் பக்கம் 828-ஆம் நம்பரிலே வருணிக்கப்பெற்றதாம். மெகென்ஸி, பெரியவால் யும் இரண்டாவது வால்யத்தில் 138–140-ஆன பக்கங்களிலே பெயர்த்து எழுதப்பெற்றிருக்கிறது. இவ்வுய்யாழ்வார், முன்னர் D. No. 3094-ஆம் நம்பரில் பிரஸ்தாபிக்கப்பெற்ற கிருஷ்ணதேவராயரது சமகாலத்தவரான உய்யாழ்வாரிலும் வேறு ஒருவராவர் என்று தோற்றுகிறது.

No. 3117. பழனி சக்கிரகிரியிலாண்ட பூர்வமன்னர் வரலாறு.

PAḺANI CAKKIRAGIRIYIḺĀṆḌA PŪRVAMANNAR VARALĀṞU.

Substance, paper. Size, 9½ × 7½ inches. Pages, 12. Lines, 24–26 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old. Extent, 156 granthas.

Begins on fol. 1(*a*).

The other work herein is Paḻani Chinnappa Nāyakan Vamisāvali 7 (*a*).

An historical account of the ancient kings, Kumaṇan and others who ruled in Chakkiragiri taluk of Palani. This manuscript belongs to the Meckenzie collection of manuscript and is ame as the work described under No. 844 of Taylor's Catalogue. See the notes of Taylor, pp. 300, Vol. III.

Beginning :

பழமைப்பட்ட ராஜாக்களாக ஆண்டு வந்த பேர் என்னுல் கேள்விப் பட்டதில் பழனி சக்கிரகிரி வகையராவில். முன் ஆண்டு வந்த ராசாக்கள் முதலாகியவர் பேர்கள் விவரம் தரியாபத்து நிட்டலநாயன் அய்யர்.

பூர்வத்தில் காடாரண்ணியமாகிய வனுந்திரமான இடங்களாக விருக்கும் நாளையில் பஞ்சபாண்டவர்கள் வனவாசஞ் செய்த இடங்கள் என்றும், பஞ்சபாண்டவர் வாசம் பண்ணியிருந்த மலையானதினலே 'ஐவர் மலை' யென்று பேர் வரப்பட்டது என்று சொல்லப்படுகிறது.

இப்போது நாளது ௲௮௱௬ ௵ எப்ரல் ௴ ௩௰௨ யில் நான் கண்டு ......அயிவர் மலை (ஐவர் மலை) என்கிற மலை. ரெட்டயம்பாடி மிட்டா ஈவுக்குச் சேகரமாகிய எல்லையில் முன் பழனி சீமைக்குச் சேகரம் என்கிற பழனிக்கு நேர் மேற்கு அஞ்சி நாழிகை வழி தூரத்தில் உள்ள மலையில் காணப்படுகிற விவரங்கள். எப்படி யென்றால்—தெற்கு வடக்காகவும் ஈசானியம் ஒட்டமாய்க் கிழக்குப் புறம் கொஞ்சம் நீண்டு இருக்கும்

* * * * * * * *

End :

இப்படிக்குக் (குமணன்புர) பட்டணம் நிரம்பவும் பிரபலமாகவிருந்து அதன் பிற்காலம் அவர்களது நோக்கம் அடங்கி க்ஷயிச்சு காரு செடிகள் வளர்ந்து காடு கொண்டு ஒடுக்கம். "கிருஷ்ண ராசா, பால ராசா" வென்று இரண்டு பேர் மச்சானுமாக ஒருவர்க்கொருவர் மனம் பொறுமல் அலை கொலஞ்சி (குலைந்து) சீமை காடுகொண்டு இருக்கிற நாளையிலே வடக்கே யிருந்து இராயர் சமஸ்த்தானத்துக் கர்த்தாக்களிடத்திலிருந்து மதுரை சமஸ்தானம் உண்டாச்சுது என்று சொல்லப்படுகிறது. இப்படிக்குப் புராதனத்தில் குமுணன் நிமுணன் (இவ்விர)ண்டு பேருக்குப்பின் பால ராசா, கிருஷ்ண ராசா (என்றவர்களின்) நாள், சேர சோழ பாண்டியர் நாளிலே ? யென்று சொல்லப்படுகின்றது. ஷ நாளுக்குப் பின் காலம் காடுகொண்டு கறம்பு ஒறச்சிருக்கும் நாளையில்.,........

(கு. - பு.).—

இது, பழனியில், 5-நாழி வழி தூரத்தில் சக்கிர கிரி யென்ற தவத்தின் அருகில் பண்டைய நாளில் அரசாண்டிருந்த "குமணன், நிமுணன்," முதலான சில மன்னரது வரலாறுகளை எடுத்து விளக்குகின்றது. இச்சக்கிர கிரி மலை பஞ்சபாண்டவர் தமது வனவாசத்தில் இந்தகத்திற்றங்கியிருந்தமை பற்றி "ஐவர் மலை", எனப் பெயர்ப் பெற்றிருக்கிறது. இதில் பல மறைவான இடங்கள் உண்டு. இதற்கு மேற்கே 2 நாழி வழியிற் "குதிரை யாறு", பெருகுகின்றது. அருகில் "கொழுமம்", என்ற ஓர் ஊர் இருக்கிறது. மலையில் "பராபர தீர்த்தம்", எனப் பெயர் கொண்டு என்றும் வற்றாததொரு புண்ணிய தீர்த்தம் சுனை வடிவாக உளது. அதில் ஒரு எலுமிச்சம்பழம் போட்டால், அது தெற்கில் காத வழியிலே "மந்த காளியம்மன்" சந்நிதிக்கருகிற் பெருகும் "பொருந்தலாறு", என்பதிற் போய்ச் சேரும். அதற்கருகில் வராககிரியுளது. அம்மலைச் சாரலிற் "விற்பட்டி," என்ற ஒரு கிராமம் உண்டு. அதில் விபூதி விளையும் ஓர் இடமும் இருக்கிறது. அத்தலத்திலே அர்ச்சுனன் தவம்புரிந்து பாசுபதம் பெற்றான். இதுக்கு 4 நாழிகை வழியிலே வராகக்கிரியிலிருந்து பொருந்தலாறு பெருகும். அதில், பாண்டவர் துரோபதையின் மனதை யறியவேண்டி நெல்லிக்கனியைப் பொருந்தினபடியால் இவ்வியாறு "பொருந்தலாறு" என்னப் பெற்றது. ஷ "பராபர தீர்த்தம்" என்ற அச்சுனையின் கீழ்ப்புறமாக இரண்டு டனை உயரம் ஏறில் அங்கு சில குகைகள் உண்டு. தருமராசர் முதலானரது பதினறு பிம்பங்கள் பிரதிஷ்டை பண்ணப்பட்டிருக்கின்றன. அக்குகை 200 அடி நீளமும் (56) அடி அகலமும் கொண்டு உள்ளதாய் செங்கற்சுவருடன் அமைந்து வரிசையாய் எழு வீடுகளைப்போல் காணப்பெற்று எழு துவாரங்கொண்டிருக்கும். அவ்வழியேறிச் சென்றால் உள்ளிற் சில இரகசியத்தலங்களிருக்கும். (9) ஒன்பது குகையறைகள், திண்ணை முதலியனவைகளைக் கொண்டமைந்திருக்கும்.

மற்றும் ஒரு (16) பதினாறு குகைகளும் இருக்கும். அங்கு மறவ சாதியராம் ஒருபண்டாரம், பல சந்நியாசிகளுடன் 20 வருடம் வரை வாசஞ்செய்துவந்தார். அங்குப் பல துறவிகளுக்காம் அரும் வனமூலிகைகளும் உண்டு. அப்பண்டாரத்துக்கு உடனிருந்தவரில் "மல்லையன்" என்ற ஒரு துறவி மிக நண்பர் ஆவர். அப் பதினாறு விக்கிரங்களையன்றி மற்றுஞ் சில கவுண்டர் விக்கிரங்களும் காணப்படும். நிற்க, உச்சி மலையில் ஒரு உச்சிப்பிள்ளையார் கோவிலும் உண்டு. அதில் கருப்பப் பண்டாரம் என்ற சோழிய வெள்ளாளர் பூசை செய்து வந்தார். ஷி உச்சிப்பிள்ளையாரது மூர்த்தம் பாண்டவரால் பிரதிஷ்டிக்கப்பெற்றதாயும். இந்நாட்டில், சக்கிரகிரி தாலூகாவைச் சேர்ந்ததொரு "கொழுமம்" என்ற கிராமத்தில், "குமணன், நிமுணன்," என்ற இரு தமிழ் மன்னர் இருவரும் ஒரு அரும்பெருங் கோட்டையை யமைத்துக்கொண்டு அரசாண்டிருந்தனர். அங்ஙனம் அரசாண்டிருக்கையில் ஒரு நாள் இரட்டைப்புலவர் (முடவனும், குருடனுமாக இருந்தவர்) குமணன் முன்றோன்றிப்பாடுகையில் அவருக்குச் சன்மானமாக ஒரு கிராமத்தையும் சில நிலங்களையும், அரசன் தானஞ்செய்தான். அது கொண்டே அக்கிராமம் "இரட்டையர்பாடி" (இரட்டையம்பாடி) யென்று பெயர் கொண்டிருக்கிறது என்று இன்னோரன்னவைகளையெடுத்து விளக்கினதற்குப்பிறகு ஷி குமணன் விஷயமானதொரு பண்டைய கதையும் விளக்குகின்றது. இறுதியில், அருகில் பெருகுகின்ற குதிரையாற்றின் வெள்ளமானது திடீரெனத் தோன்றி ஷி கோட்டையையும் குமணனது குதிரைவெள்ளத்தினையும் கொள்ளை கொண்டு போனதுபற்றி அவ்யாறு "குதிரையாறு" என்னப் பெற்றுள்ளது என்றும், ஷி கொளுமம் குமரலிங்கத்தில் சபாபதி விக்கிரகம் ஒன்றினை குமண மன்னர் பிரதிஷ்டிப்பித்துள்ளார் என்றும், குமணனுக்குப் பின்னர் ஒரு சில மன்னர்களிருந்து. இறுதியில், "கிருஷ்ணராசர்", "பல்லராசர்", என்ற இவ்விருவரும் ஷி குமணன்புரிக்கோட்டையிலேயிருந்து கொண்டு பழனியையுங் கைக்கொண்டு அரசாண்டிருந்தனர். அவரில், பாலராசன், என்னும் மன்னர், "பிரம்மநம்பி, பாலநம்பி" யென்ற கோவிற் பூசைசெய்வாரில் பிரம்ம நம்பியார் என்னும் அவரை பழனியிற் கோவிலுக்கு முன்னர் உள்ளதொரு கம்பத்துக்குப் பூசைசெய்யுந் தருவாயில், கொன்று போட்டார். அந்நாளிலேயே, பாலசமுத்திரம் என்ற ஊரையும் கட்டினார். குதிரையாறு அணை, பஞ்சந்தாங்கியணை, பெரிய கரை வழியணை, முத்துக்குளத்தணை, (குமணன் நாளையில் இக்குளத்தில் முத்து விளைந்தன). பார்ப்பான் குளத்தணை, சங்கிராம நல்லூர் அணை என்ற இவ்வைந்து அணைகளும் அவராலே கட்டப்பட்டனவாம் என்றும் இவர் காலத்துக்குப்பின் இராயர் சமஸ்த் தானத்திலே இப்பழனியின் அதிகாரஞ் சேர்ந்ததாய் மதுரையாரது ஆளுகையிலேயிருந்தது என்றின்னோரன்ன பண்டைய வரலாறுகள் கூறப்பெற்றிருக்கின்றன. முற்றும் உள்ளது. பிழையுடனிருக்கிறது. இது டைலர் தொரைக்காட்லாக்கு 844-ஆம் நம்பரில் வருணித்துக்கூறப் பெற்றுள்ளது. 300-ஆம் பக்கம் அதனை நோக்குக.

29

No. 3118. பழனிபாளையப்பட்டுச் சின்னப்ப நாயகன் வமிசாவளி.

PAḺANI PĀḺAIYAPPAṬṬU CCINNAPPA NĀYAKAN VAMIŚĀVAḶI.

Pages, 44. Lines, 24–27 on a page. Condition, much injured. Extent, 600 granthas.

Begins on fol. 7(*a*) of the manuscript described under D. No. 3117. Complete.

A genealogical account of a Palliyakār Chinnappa Nāyakan at Paḻani Pālaiyappaṭṭu.

Beginning :

யதுகுலவமிசவரலாறு விபரம் ௲அ௱௰௬௵ ஏப்ரல்ீ௴ உ௰௯௨ தரியாபத்து நிட்டல நாயன் அய்யன்.

திண்டு[டி]க்கல் வகையரா கோயமமுத்தூர் ஜில்லாவுக்குச் சேர்ந்த அய்யம்பள்ளிதுக்குடிக்குச்சேகரம் பழனி வைகாபுரி நாட்டுப்பாளையக் காரனுகிய இம் முடிப்பட்டத்துக் குமார விஜயகிரி, வேலாயுத சின்[னே](ன)ப்ப நாயகர் வமிசாவளி வரலாறு—ஷ ஆதீனத்தில் கணக்குஸ்தானம் உள்ள, " விருமி யண்ணப்பிள்ளை " யென்கிறவன் வமிசஸ்தனுன ஷ தாயாதி வமிசம் " கறுப்பன் பிள்ளை ", யென்றவனிடத்தில் இருந்து கண்ட பழமைப்பட்ட ஏடுகளுக்கு நக்கல் :—

உத்தர திக்கில் கவுசில (கௌசில) தேசத்திலே கலியுக சகாப்தம் ௲௰௬ ? மேல் செல்லாநின்ற வஞந்திரத்திலே யெதுகுலம் என்றும், யாதவர் என்றும், வேடர் என்றும், கம்பளர் என்றும், போகி யென்றும், நாயக்கர் என்றும், கோசலவர் என்றும், கங்கராதியர் என்றும், வனத்தார் என்றும் * * * * * * * * * * *
இந்த வமிசத்தில் வனத்தில் யெதுவன் என்றும், ஒரு காவல[வ]ன். அவன் மகன் பெத்துராவாட நாயகன், அவன் மகன் அபரஞ்சிவா[ண] நாயக்கன், அவன் மகன் பொம்முலுவாட நாயக்கன், அவன் மகன் காக்கி வாட நாயக்கன், அவன் மகன் சொலவாட நாயக்கன், அவன் மகன் கடும்பிலவாட நாயக்கன், அவன் மகன் கனகவாட நாயக்கன், அவன் மகன் வேங்கிட கிருஷ்ணம நாயக்கன் இவர்கள் பத்து தலை முறைக்கு வெளுப்பெல்லாம் பாலும், கருப்பெல்லாம் தண்ணீர்; அந்த வனத்திலே வச்சிரங்கள் விளையுங்காடு உண்டு. அதிலே கல்லு பொறுக்கிக்கொண்டு போய் கோதும்பைக்கும், கேம்பைக்கும் விலை பண்ணிச் சிறிது காலம் * * * * * * * தாட்டிக் கொண்டிருந்தார்கள். வேங்கிட கிருஷ்ணம நாயகருக்குத் ஒரு ஸத்பாத்திரமாக * * * * * நல்ல பிள்ளையைப் பெற்றுள் * * * ஏறக்கம்மாள்.

பெரிய மாதவ நாயக்கரைப் பெற்றுள். இவர்கள் வமிசம் பூர்ணசந்திரன் போல விளங்கிற்று.

* * * * * * * * *

End :

அன்று முதல், காங்கேயம், காடை நகர், பழனியூர் இந்த மூன்றும் "நாடேர்ப்பாளையப்பட்டு", என்றும் பிரக்கியாதியாயிருக்க, இம்முடி, குமாரகாங்கேய மன்றுடியாருக்கும், சிதம்பர பல்லவராயருக்கும், பழனியார் பட்டங்கட்டிப் பரிவட்டங்கட்ட, பழனியூராருக்கும் இம்முடி குமாரகாங்கேய மன்றுடியாரும், சிதம்பர பல்லவராயரும் பட்டம் பரி வட்டங்கட்ட, "நாடேர்" என்று சம்ஸ்தானங்களுக்கும், குறு நில மன்னர்களுக்கும் அசேஷத்தாருக்கும், உத்தாருக்கும், பயம் சனிக்க அரசு ஆண்டு இருந்தோம். இந்த நாட்டார் சத்தியம் தப்பினாலும், பாளையப்பட்டார் சத்தியம் தவறினாலும் * * வமிசம் விருத்தியாகாது. பட்டம் நீடூழியாகாது. தெய்வம் துணை செய்யாது. இந்தப் பட்டையம் வாசித்து வரலாறு காண வேணும் என்றால் . . . .

* * * * * * * *

காமியில்லாத தேகமும் படைத்து நீடூழிகாலமும், வமிசா(த்)வமிசம் உள்ள வரைக்கும் வாழ்ந்து, பதினாறும் பெற்று பெருவாழ்வும் வாழுவார்கள். சிவமயம்.

குமாரதளவாய் கொடுத்தபட்டையத்துக்கு விவரம்.—தஞ்சை நகர் துக்கோசிசாமி மகாராஜாவும், சரபோஜிராசாவும், பிரதாப்பு சிங்கு மகாராசாவும், புதுச்சேரி மாந்தியராசாவும், தேவனாம்பட்டணம் சச்சிராயரும்

* * * * * * * *

பல நாயக்கர், நாடேர்பாளையப்பட்டும் சகலருமாகக்கூடி வைகாபுரி நாட்டை மானியம் என்று செம்புப்பட்டையமும் எழுதி மயில் வாகனத்துக்கும் நாட்டிச் சுப்பிரமணியருக்குத் திருமஞ்சனத்துக்கு மானியம் என்று குமாரதளவாய் (மைசூர்) முன்படச் செப்புப்பட்டையம் எழுதிக்கொடுத்தார்.

* * * * * * * *

பழனிபாளையப்பட்டு ஆண்டு வந்தவர் தலை முறையும் அவர்கள் பெண் சாதி மார் பேர்கள் உடன் பிறந்தவர்கள் முதலாகிய பேர்கள் விவரம், இதன் கீழே யெழுதி வருகிறது.

* * * * * * * *

End :

ஷெ சின்னெப்பள் அம்மாள் வளர்த்து வருகிற மசையாண்டி நாயக்கன் மகன் ஷெ வேலாயுத நாயக்கன் என்னப்பட்டவனுக்குப்பாத்தியமேயன்றியில் மதுரையில் இறந்து போன விசையகிரி நாயக்கன்னும் பட்டத்துக்கு [அறுளனல்லா] (அருகனல்ல.) அவன் மக்கள் இப்போது ஆயக்குடியிலே உள்ள பசங்களுக்கும் [அருள] (அருக)த்துவம் வரமாட்டாதென்று ஷெ பட்டக்காரியாகிய சின்னப்பளம்மாளும், பெரியக்கோட்டை ஜமீன்தாரராகிய லக்ஷ்மீநாயக்கரும் சொல்லுகிறார்கள்.

இப்டிக்குப் பழனிச் சீமையில் விசாரணை செய்து முடிவு எழுதிய பழனி சின்[னே] (ன)ப்ப நாயக்கர் வமிசாவளி வரலாறு.

(கு-பு.) —

இது பழனியில், பாளையப்பட்டில் அரசாண்டிருந்த் பாளையக்காரர் குமார, விசையகிரி, சின்னப்ப நாயக்கன் என்பவரது வமிசாவளியை யெடுத்துக் கூறுகிறது. முன்னர் 3092-ஆம் நம்பரில் வந்துள்ளதொரு "பழனி சின்னப்ப நாயக்கர் வமிசாவளி", யென்றதினும் இது மிக வித்தாரமாக அமைந்திருக்கிறது. இது, வேங்கடகிருஷ்ணம நாயக்கரது மகனாகிய பெரிய மாதவ நாயக்கர் (முதற்பட்டம்) முதலாக, 12-ம் பட்டம். குமார விசையகிரி வேலாயுத சின்னப்ப நாயக்கரது மகனாம் வேலாயுத சின்னப்ப நாயக்கர் வரையிலாக (13) பதின் மூன்று பாளையப்பட்டக்காரர்களது வரலாற்றினை யெடுத்து விளக்குகின்றது. இதில், மதுரையிலிருந்து, சம்பந்த பாண்டியனார் என்பவர், இராயர் ஸமஸ்த்தானத்து, கிருஷ்ணதேவராயரை பேட்டி கண்டு உதவி பெறுமாறு இராயவேலூரிலே 1 வருட காலம் வரைகாத் திருந்து கடையில் ஒரு நாளிற் கிருஷ்ணதேவராயரைத்தாமே பயிர்செய்து வளர்த்துவந்த புல்லடகினை(கீரை)க் கொடுத்து, நேசமாக்கிக்கொண்டாராய் இராயர் சமஸ்த்தானத்திலிருந்த நாகம நாயக்கரையும், விருது கட்டாரிசாளுவராயனையும், சிதம்பரம் பிள்ளையினையும், சுந்தரபல்லவரையும், தமக்கு உறு படைத்துணைவராகப் பெற்றுத்தன்னுடேறப்போய் மதுரைச்சீமையை யாக்கிரமித்திருந்த ஈழ நாட்டான் ஒருவனை (பெயர் தெரியவில்லை) வெருட்டியோட்டுவித்தார், என்ற வரலாறும், பின்னர், ஷை நாகம நாயக்கனார்தாமும், அங்குள்ள "மதுரை, மீனாட்சியையன்" என்ற ஒரு பிராம்மணனறனது துர்ப்போதனையால் ஷை சம்பந்தப்பாண்டியனைச் சிறைப்படுத்தி அந்நாட்டைத் தம் வயமாக்கிக் கொள்ளக் கருதினாராக அச்செய்தியைப்பாண்டியன் உணர்ந்து கொண்டு கிருஷ்ணதேவராயர்க்கு அறிவிக்க, இராயர், ஷை நாகம நாயக்கரது மகனாகிய விசுவநாத நாயக்கரை மதுரைக்கு அனுப்புவித்து மதுரை நாட்டைப் பாண்டியனிடம் ஒப்புவிக்குமாறு செய்தார்; ஆனால் அது அங்ஙனம் நடைபெறுது போயிற்று. காரணம், ஷை மீனாட்சியையனார், தந்தை, மகன் இவ் விருவரையுமே சூழ்ச்சியால் மனமிசையச்செய்தனர் என்பது. அதேசமயம், கிருஷ்ணதேவராயர் மீது இராயவேலூரிலே துலுக்க மன்னர் "பாதுஷா" படையெடுத்து வந்தனர். பின் சம்பந்தப்பாண்டியர், நாகம நாயக்கருக்குப் பின்னிட்டுப் போனார் அது முதல் மதுரை ஸமஸ்த் தானம் நாகம நாயக்கர் கைவசமாயிற்று; அவர்க்குப்பின் அவர் மகன் விசுவநாத நாயக்கர் ஆண்டு வந்தனர், என்றிவை முதலான பல வரலாறுகளும் நன்கு விளக்கமுறுகின்றன. இது, மெகென்ஸி தொரையால் சம்பாதிக்கப்பெற்றதாம். டைலர் தெரரை காட்லாக்கில் 300-ம் பக்கத்தில் வருணிக்கப்பெற்றதே. பிரஸ்தாபத்தில், மைசூர் குமாரதளவாய் வையாபுரி நாட்டின் எல்லையை மயில் வாகனக்கல்லுகளை நாட்டிப் பழனி சுப்பிரமணியர் திருமஞ்சனத்துக்குத்தானமாக மானியம் எழுது வித்து செம்புப் பட்டயமும் அடித்துக்கொடுத்த செய்தியும் வந்துள்ளது. சுந்தர பல்லவராயன், சிதம்பர பல்லவராயன் பாலசமுத்திரம் பாலராசர் கிருஷ்ண ராசர் (கொழுமம்) முதலான குறுநில மன்னரது பல பெயர்களும் எடுக்கப் பெற்றிருக்கின்றன. முற்றும் உளது. பிழையதிகமாகவுள.

No 3119. மராட்டிய ராசாக்கள் வரலாறு (தஞ்சை, etc.)
MARĀṬṬIYA RĀJAKKAḶ VARALĀṞU (TAÑJAI).

Substance, paper. Size, 9¾ × 7½ inches. Pages, 190. Lines, 21–22 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old. Extent, 2,100 granthas.

Incomplete.

History of the Maraṭṭa (rajas) kings of Tanjore, Poona, Bangalore, etc.

Beginning :

(தஞ்சை, பூனு, பெங்களூர், சிவலங்கை முதலான விடத்து) **மராட்டிய ராஜாக்கள்** வரலாறு—ஸ்ரீமத் போசல வங்கிஷத்தின் ஆதி முதல் புருஷர் ஸ்ரீமன் நாராயணன். அவர் பரம்பரையாய் ஸ்ரீ சூரிய நாராயணன் அவரிடத்திலிருந்து உண்டானவர் மனு. மனுவினுடைய சந்ததியில் இட்சுவாகு * * * அந்த வங்கிஷத்தில் இப்போது கலியுகத்தில் செம்பு பருவத பிராந்தியத்தில்[மாருஸ்ட்ட] (மகாராஷ்ட்ர) தேசாதிபதி சௌர்ய ஔதாரிய குணப்பிரக்கியாதியாயுள்ள ராசா 'செம்பு என்கிறவர் அவதாரமானார் * * * * * * * * அவருக்குப் பிரதம எகோஜிராஜா பிறந்தார்.

க. ஆவது, அந்த எகோஜிராஜாவானவர் செம்புப்பருவத பிராந்தியத்தில் விகிதமார்க்கமாய் இராச்சியபாரம் பண்ணிக் கொண்டிருக்கச் செய்தே சாம்பசிவன் அனுக்கிரகத்தினுல் அவருக்கு "முதற் சரபராஜா" என்கிறவர் பிறந்தார்.

End :

அப்போது ஆற்காட்டிலேயிருந்து "மகமதல்லிகான்," ஒருத்தருக்குந் தெரியாமல் புறப்பட்டு நாகப்பட்டணத்துக்குப்போய் இரண்டு மூன்று வருஷங்கள் அங்கேயிருந்து அப்பால் பிரதாப சிம்மராஜாவுக்குக் கடுதாசி எழுதியனுப்புவித்தார். மகாராஜவும் அந்தக்கடுதாசியை [யி] (நீ) ரம்பவும் மரியாதையுடனேயும் வேளை சமயத்தையும் யோசனை பண்ணிக்கொண்டு நம்மைப்பிரார்த்தித்தவனுக்கு நாமா சாரம் பண்ணுகிறது விகிதம். அப்பால் சந்தாசாயபு "இராசதமோதீன்கான்" கிட்டவிருந்து வருகிற [உ]பத்திரம் வரமட்டும் பார்த்துக்கொள்ளுவோம் என்று தீர்க்கயோசனை.

(கு-பு.).—

இது, தஞ்சை, பூனு, பெங்களூர் முதலியவிடத்து அரசு (மகாராஷ்டிர) மராட்டிய உய்த்த மன்னர்களுடைய வரலாற்றினை யெடுத்து உணர்த்துகிறது. இந்த வமிசத்துக்கு முதற்புருடரான முதல் எகோசிராஜாவை முதற்கொண்டு, தஞ்சையில் அரசு செலுத்தியிருந்த பிரதாபசிம்ம மகாராஜாவரையிலானுரது சரித்திரங்களைக்கூறுகின்றது. இப்பிரதாபசிம்மர், ஆற்காட்டிலிருந்த "மகமதல்லிகான்" மற்று, சந்தாசாயபு, ஆதவானியிலிருந்த இராசதமோதீன்கான் என்றவர்களுடைய சம காலத்தவர் என்று இறுதிப்பாகத்தால் தெரிகிறது. நிற்க, இங்கிலீஷ்காரருக்கும், பிரதாப

சிம்மருக்கும் உயுத்தம் நேர்ந்து இவர் சேனுதிபதி மானேசிராவு என்றவரைத்தூண்டிக் கொள்ளிடக்கரையில் இங்கிலீஷ் காலாட்படைகளை எதிர்த்துத்தாக்கிய விதமும், பின்னர் ஷெ இருவரும் சமாதான உடன்படிக்கையை யெழுதிக்கொண்டு தஞ்சாவூர்க் கோட்டையை இங்கிலீஷ்காரருக்கு சுளாசமிகூஸூ (1749-ம்ஸூ)த்திலே பிரதாபசிம்மர், கொடுத்த வரலாறும் இதிலிருந்து விளக்கம் ஆம். இறுதியில் அரைகுறையாகவிடுத்து இருப்பதால் முற்றுப்பெறவில்லை. மிக எழுத்துப் பிழைகளுடனிருக்கிறது. இது, பெரிய வால்யும் 4 ஆவதில் 277-ம் பக்கத்தில் எழுதப்பெற்றுள்ளதிலும் வேறுனதாகும்.

No. 3120. மலையாளம் நம்பூதிரிமார் வரலாறு முதலியன.

MALAIYAḶAM NAMBŪDIRIMĀR VARALĀṞU MUDALIYANA.

Substance, paper. Size, $7\frac{1}{4} \times 6\frac{3}{4}$ inches. Pages, 198. Lines, 20 on a page. Character, Tamil. Condition, very much injured. Appearance, very old (damaged). Extent, 1,812 granthas.

This belongs to the Meckenzie collection of manuscript and is same as the work described under D. No. 842 of Taylor's Catalogue, page 662.

Contain (31) thirty-one sections (in Taylor's notes).

An account of the manners of various orders of Nambūdiri Brahmins and other inferior castes in the Malayalam country.

(கு-பு.).—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2819-ம் நம்பர் பிரதிக்கு மாதுருகை போலும். இது, கேரளதேயம் எனப்படும் மலையாளதேயத்தில் பல ஊர்களிலும் உள்ள நம்பூதிரிமார், முதலான நாநாசாதியருடைய வரலாறுகளை மிகச் சுருக்கமாக விளக்குவதென்று தெரிகிறது. ஆனுல் இந்தப் பிரதியின் ஏடுகள் எல்லாம் மிகப்பொடிப்பொடியாய்ச்சிதைவுற்று எடுத்துப் பார்ப்பதற்கும் முடியாமல் இருப்பதால் முழுவதும் பரீக்ஷிக்க இயலவில்லை. மெகென்ஸிதொரையால் சம்பாதிக்கப்பெற்றது. டைலர் தொரை காட்லாக்கில் 662-ம் பக்கத்தில் வருணிக்கப்பெற்றிருக்கிறது. பக்க எண்களும் கொடுக்கப்பெறுமல் இருந்தது. இப்போது எண்ணியதில் 1–76 ஆன ஏடுகள் மிகப் பொடியானவை. 77—100 ஆன ஏடுகள் மாத்திரம் சிறிது சுமாராயிருக்கின்றன. 85—88—97—101 ஆனவை வெற்றேடுகள் ஆம். மிகுதியானபகுதிகளில், நாயன்மார் வரலாறு, கணிச்ச சாதி வரலாறு, பாணன் சாதி வரலாறு, முக்குவசாதிவரலாறு, ஈழவர் சாதி வரலாறு, என்ற ஐந்து சாதி வரலாறுகளே அடங்கியிருக்கின்றன. இதனை டைலர் தொரை பெயர்த்து எழுதிவைக்கவில்லையென்றுதோற்றுகிறது. அப்போதே இது மிகச்சிதைவுற்றிருந்தது போலும்.

No. 3121. மலையாள தேயத்துப் பிராமணர் முதலான சாதி விவரங்கள்.

MALAIYAḺA DĒYATTUPPIRAMMAṆAR MUDALĀNA JĀTI VIVARAṄKAḶ.

Substance, paper. Size, 10½ × 8¾ inches. Pages, 24. Lines, 20–28 on a page. Character, Tamil. Condition, very much injured. Appearance, very old. Extent, 350 granthas.

This manuscript belongs to the Mackenzie collection of manuscripts. It is same as that described under D. No. 821 of Taylor's Catalogue, page 397.

Similar to the above work, Taylor mentions in his notes that, there are four sections. The first two sections are in Telugu; the last two in Tamil. But, now, the first two items are not available.

Complete.

Beginning :

ஸ்ரீராம ஜெயம்.

மலையாளத்தில் இருக்கும் பிராம்மணர்கள் முதலாய் ஜாதி விவரங்கள்—மலையாளலிபியில் இருக்கப்பட்டதைத் தமிழில் எழுதினது. நிட்டல நாயன் அய்யன்.

பிராம்மணர்கள் பிரம்மண்ணியத்தையுடைய புண்ணியத்தினுலே அத்தியயினம், அத்தியாபனம், யஜனம், யாஜனம், தானம், பிரதிக்கிரகம் இப்படிக்கு உள்ள ஆறு கருமங்களும் உள்ளவர் பிராமண சிரேஷ்டர் என்றும், அவர்களுக்கு அவிட கிரஹம் ஆட்டியம்மார் என்றும், "நம்பூதிரிமார்" என்றும், சொல்லப்படுகிறது. இப்படிக்கு நம்பூதிரியும் பட்டதாரியம் உண்டு. ஸ்ரீ பரசுராமர், பிராம்மணர்களை யஜ்ஞம் செய்யவேண்டு மென்று உத்தரவு செய்தார்களே, ஹிம்ஸா தோஷம் சங்கித்து யஜ்ஞம் செய்யக்கூடா தென்று அறிக்கை செய்தார்களே. ஆட்டியன் மார்க்கு யஜ்ஞம் இல்லை. அதனுலே சிரேஷ்ட தைக்கு ஒரு குறைச்சலும் இல்லை.

* * * * * * * *

End :

* * நல்லூர் தம்பிரானும் கிருங்காட்டு நம்பூதிரியும் அரிய "**சேரமான் பெருமாள்**, என்னப்பட்ட ராஜா அவர்கள் கொடுத்து இருக்கப்பட்ட திருவெழுத்தும்படி அவிடேயிருந்து கலிகம்ஸம் கொல்லம் ௪௱௮௰௬-ம்வருஷ கர்க்கட வியாழம் மகறடு சாயற்? ௰௫௨ திங்களா ௩௪௪ அள்ளுண்ணந் துனிண்ணு தம்புறுக்கள் என்ற ராஜாக்களை தீறுதன் தொட்டும் கூடி கொண்டு வந்ததந்தம்மாளேமான விக்கிறன் பணிக்கர் இரண்டு பேரும் கொடுத்த கோழிக்கோட்டு அசத்தப்பொருக்கலமானிக்கிறன் கண்டு என்ற பறம்பிலியிருத்தியதில் சேஷம் அசதாறயனமாறக்குக்கொடுத்த ஸ்தானங்கள். இதில். * * * * * * * *

மேல் எழுதின ஓலை இரண்டு போக மூன்றுவது ஏடு எழுதிக்கொண்டிருந்த

ஓலை யாரோ எடுத்தும் இத்தைக் கீழே பாதி ஏடு கண்டு, பாதி ஏடு காணுமல் போனதினுலே ௲௮௱௪௪௵ மே௴ ௨௰௧௳ பகல் (௩) மணிக்கு இவை நிறுத்தலாச்சுது.

22-ம் பாகத்தில்—ஆசாரி மூசாரி, பெருங்கொல்லன், பெருந்தட்டான், செக்கான், வெள்ளான் செட்டி, வெளக்கத்தநாயர், * * * * * * கொங்கணீயர், ஒட்டர், ஆடு மேய்க்கிற இடையன், மாயமாக நடக்கிறவன், மலைவாசிகள், [கொற] (குர) ங் கோட்டி

௲௮௱௰௪௵ மே௴ ௨௰௪௳ எழுதித்தீர்ந்த புஸ்த்தகம்.

(கு-பு.).—

இந்நூல், கோளதேயம் என்றும் மலையாள தேயத்து உள்ள, நம்பூதிரி மார் முதலான நாநாசாதியினரது சாதியாசாரம், பழக்கம் ஒழுக்கங்கள் தொழில்கள் முதலானவற்றை யெடுத்து உணர்த்துகின்றது. இதில், நம்பூதிரிமார், ஆட்டியன்மார், (ஷெ சமமானவர்) மூசத்துமார், அகப்பொதுவாள் மூசத்து, கோவிலகத்து அடுக்களக்கார் இளையன் மார் [எ] (சூத்திர புரோகிதனுயிட்டு) மலையாள க்ஷத்திரியரில், கோவில், திருமுப்பாடு, தம்புராக்கன் மார் என்று மூன்று வகையர், அஷ்டவைத்தியன் மார், (இரகநாம தேயக் குட்டிமூசுன்மார்) அகப்பொதுவாள், அம்பலவாசி வகையில், நம்பீசன் . . . பகன் மார், நம்பீசன் இளயது மூசது, (புஷ்ப்பகன் மார், தீயாடி நம்பி, பிஷாரோடி, வாரியர் (**பாரசவன்**), சாக்கியர், நங்கையார், நம்படி மார், அடிகள் சாமந்த பரிஷை, சூத்திர சாதியிலே, சிரியம், சாற்ணந்து அத்திக்குரிச்சி, பட்டக்காடு, பறப்பூர், சூத்திரர் என்று ஆறு வகையும், பாணன் என்ற சாதியும், ஆகிய இவ் விருபத்தைந்து சாதியினது வரலாறுகள் விளக்கப்பட்டிருக்கின்றன. நிற்க, இறுதியில் அடியன்கள், என்ற சாதியை விளக்கு மிடத்தில், யாதைலரகிராமத்தில், "இருஷ்ணராயர்" என்னப்பட்ட ராஜா அவர்கள் சொல்லியனுப்பின "அடியன்கள்" எங்கிற நாலுகுடிகள் [அதில்], அவையிற்றில் அலைகொறவர், மலைக்கொறவர், ஆண்டிக்கொறவர் பாண்டிக்கொறவர் என்று இப்படிக்குள்ளவர் மலையாளத்துக்கு வந்து குடியேறினர், என்ருதியான சில வாலாறுகளும் விளக்கப்பட்டிருக்கின்றன. இதில் முற்றுப்பெறவில்லை யென்று தோற்றுகிறது. மற்று, 22-ம் பக்கத்திலே ஆசாரி; மூசாரி, பெருங்கொல்லன், பெருந்தட்டான், செக்கான், முதலான பலவகை சாதியின் பெயர்கள் மாத்திரம் எழுதப் பெற்றிருக்கின்றன. இது, மெகென்஬ி தொரையால் ஈட்டப்பெற்றதாகும் ; டைலர் தொரை காட்லாக்கு 397-ம் பக்கம், 821-ம் நம்பரிலே வருணிக்கப்பெற்றிருக்கின்றது. ஆனுல், இது போது இதன் முதலில் காணப்பெறும். பேரேட்டிலே காணப்பெறும், "பாலக்காட்டு மன்னர் வமிசாவளி" பாலக்காட்டு பகவதியம்மை வாலாறு, என்ற இவ் விருபகுதிகளும் காணப்பெறவில்லை. அதுக்குக்காரணமும் விளங்கவில்லை. மிகப்பிழையுடன் உள்ளது. இப்பிரதியைப்பெயர்த்தெழுதிய மற்ருேர் பிரதி இனி, 3177-வது நம்பரில் வருணிக்கப்பெறும்.

No. 3122. மலையாள தேயத்து நம்பூதிரிமார் முதலான ஜாதி வரலாறு.

MALAIYAḶA DEYATTU NAMBUDIRIMĀR MUDALĀNA JĀTIKAḶIN VARALĀṚU.

Substance, paper. Size, 9 × 7 inches. Pages, 22. Lines, 24–28 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old. Extent, 310 granthas.

Complete.

An account of different castes of Nambūdirimār (Brahmins) and others in Malaiyalam (or Keralam) country.

This manuscript belongs to the Meckenzie collection of manuscripts.

Smiliar to the work described under D. No. 3121.

Beginning :

மலையாள ராஜியத்தில் பிராம்மண ஜாதி நம்பூதிரிமார் முதல்குஜாதி பேர்களுடைய வரலாறு :—

(1) பிராமண ஜாதி அத்தியயனம், அத்தியாபனம், யஜ்னும், யாஜனம், தானம், பிரதிக்ரஹம் இப்படிக்கு ஷட்கர்மம் உள்ள பேர் பிராம்மண [பூறனத] (பூர்ணதை) உள்ள பேர் என்றும், அஷ்டகிரகத்தில் "நம்பூதிரி பாடு," என்றும், "நம்பூதிரி" யென்றும், "பட்டதிரி" யென்றும், அதில் "ஆட்டியன் மார்" என்றும், "ஆசியமார்" என்றும், இப்படிக் குச்சொல்லப்படுகிறது.

* * * * * * * *

End :

பராஜ்ஜியத்திலிருந்து வரப்பட்ட ஜாதி விவரம்—சோள தேசத்தார், பட்டம்மாள் ளென்னப்பட்ட பிராம்மண ஜாதி, பிரபு ஜாதி, பொம்பாய்க்காரர், பப்பட செட்டிகள் ஜாதி, சோள பாண்டிய தேசத்தார், குஜிராத்தியர், [ஜயினி] (ஜைன) சாதி சூரத்தி ராஜாக்காரர்.

(கு. பு.).—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 3121-ம் நம்பரில் வந்த நூற்போன்றதாய், மலையாளதேயத்து உள்ள பிராம்மணர் அல்லது "நம்பூதிரிமார்" என்ற ஜாதியரை முதற்கொண்டு பல்வேறு சாதியினரது பழக்க வொழுக்கங்கள் முதலாயின வற்றையெடுத்து உணர்த்துகின்றது. இறுதியில், சூத்திரஜாதியரில் சாறுண்ண ஜாதியர் என்னும், "அத்தி[க்குறிச்சி] முறிச்சி," யென்ற ஒரு வகையர் உள்ளனர். அத்திமுறிச்சியாளர், மலையாளதேயத்து ஸ்ரீ **ஆதிசங்கராசாரியர்** தாம் தமது தாய்க்கு ஈமச்சடங்குகளையைச் செய்கையிலே அவர் சந்நியாசியாதலால் அவர்க்கு உதவியாயிருந்து அம்மாதின் அங்கங்களை முறிச்சு அக்கினி குண்டத்திலே சேர்ப்பித்தனர்; ஆகையால் "**அத்திமுறிச்சி**", யென்னப்பெற்றனர். ஆகவே, இன்றையவரைக்கும் அவர் அம்மாதிரியாகப் பிராம்மணர்களுக்கு ஸம்ஸகாரக்கிரியைகளில் உதவி செய்து வருவது வழக்காறு என்றுங் கூறப்பெற்றிருக்கிறது. நிற்க, வெள்ளாக்

கறெஞுயர் ஜாதி, (விளக்கிற நாயர் ஜாதி) (க்ஷவரகன்) முதலான பல சாதியினரது பெயர்களையும் அவைகளின் விளக்கமும் எழுதப்பெற்றிருக்கின்றன. இது, மெகென்ஸிதொரை [மானஸ் கிருப்ட்ஸ்] கையெழுத்துப் புத்தகங்களில் ஒன்றாகும். இதுக்குரிய டைலர் தொரை காட்லாக்கு நம்பரை இது போது நிச்சயிக்கக்கூட வில்லை. ஆய்ந்து உணரற்பாற்று. முற்றுப் உள்ளது. மிக வெழுத்துப் பிழையுடனிருக்கிறது. எடுகள் மிகச்சிதைந்துள இருபுற அட்டைகள் கூட இல்லாமல் அத்துணைக்கிழிந்திருந்தது.

No. 3123. மல்லராயன் வரலாறு. அல்லது வல்லங் கிராம வரலாறு.

MALLARAYAN VARALARU OR VALLAṄKIRĀMA VARALĀṞU.

Substance, paper. Size, 10 × 7 inches. Pages, 18. Lines, 18 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, very old. Fxtent, 162 granthas.

Begins on folio 1. The other works herein are, Vāmanathapuram enṟa Paḻaiya Mayilāpur Varalāṟu, 11 (*a*). Cittāmūr Jaina Mathādhipathı yidattuḻḻa Jainaputtakaṅkalin aṭṭavaṇai, 22 (*a*). Samaṇa Matattilirundu Siva Bauddha Vaiṣṇava Mataṅkaḷ uṇḍāna varalāṟu 25 (*a*). Dirāviḍa tīyattuppaṇḍaiya Munīśuvarar Kavīśuvarakaḻin peyarkaḷum nūlhaḻum 29 (*a*). Munibaddirā cāriyaradu virudu 33 (*a*).

This manuscript belongs to one of the Meckenzie collections of manuscripts and is same as the work described under No. 816 of Taylor's Catalogue, Vol. III, pages 372 to 374.

An account, of the village of "Vallam", near Kānchipuram. It narrates the accounts of the Mallarāyan and Irāyadīvarāyar descendants of Annamadēvarāyar a king of Vijayanagaram. The Malla tribe of athlectics came from Vijayanagaram country, and settled in and near, Conjeveram, (Kāñcipuram). A Malla, called "Tuntusetti", who was a Divān ' distinguished himself in a single handed combat, with a tiger, and the King in appreciation of it rewa ded him. The new inhabitants did not always get on with the older residents. One of these Rajamalla ruled Kāñcīpuram and he did many well services to some of the temples of God Siva and Viṣṇu in various places and briefly recorded those services in inscriptions. It seems, that originally the Vallam village belonged to the Mohomedans ; and later was granted to a Brahmin by the queen named "Kalyani", of Irāyadēvarayar or Dēvarāyar, in her sētu yātra.

Beginning :

விசைய நகரத்திலிருந்து வந்த மல்லராயர் அன்னம தேவராயர் என்கிற வர்களுடைய [மகாவிசேஷித்தகைபீது.] வரலாறு :—

சாலிவாகன சகாப்தம் ௲ (1000-ஞ்ு) ஞ்ு ஆன பின்பு விசைய நகரத்திலே கர்னுடக பிரபுவாயிருந்த அன்னம தேவராயர் ராச்சிய பரிபாலனம் செய்துகொண்டு திராவிட தேயம் ஆன காஞ்சிப் பட்டணங்கட்டிக்கொண்டு வெகுநாளாய் இந்தத் தேசத்திலே பிரபுத்துவம் பண்ணிய பிறகு அவர் வமிசத்திலே இராய தேவர் என்கிறவரும் ஆந்திர கர்னுடக திராவிட தேசங்களும் கட்டிக்கொண்டு தரும நீதியாய் இராச்சிய பரிபாலனம் பண்ணிக்கொண்டிருக்கையிலே, அவருடைய பட்ட ஸ்திரீ கலியாணம்மாள் சேது யாத்திரைக்குப் போகச் செய்தே இந்தக் காஞ்சீபுரத்திலேயிருந்து சிறிது] (ல) பிராம்மணர்கள் * * * * காஞ்சிபுரத்துக் குடியிலே வல்லம் என்கிற கிராமம் இருக்கிறது * * * * * * *

End :

அந்த வல்லத்துத்துருக்கன் மாரிலே திருமலைப் பட்டர் என்கிறவர் அவ்விடத்திலே ராசாவின் பேட்டிக்கு வந்திருந்த விடத்தில் இந்தத் துருக்கர்கள் பேரிலே தயவு வைத்து நாற்பதிஞயிரம் வராகன் மட்டுக்குங் கொடுத்துக் கோவிலுக்குத் திருப்பணிகளை நடப்பிவிக்கச் சொல்லித் திட்டஞ் செய்து அனுப்புவித்தார் * * * * * * *

அந்த மல்லர் முன்னாலே இந்த ஊரிலே மேலைப்புறம் ஏரியின் கீழே வரதராஜப் பெருமாள் என்று பேருண்டாய்ப் பிரதிஷ்டை செய்திருக்கிறுர்கள். அந்தச் சுவாமியாருக்குக் கோவில் மண்டபம் முதலானவை கட்டுவித்து நடப்பித்தாராம்.

(கு - பு.).—

இது, "வல்லம்" என்ற கிராம வரலாருகும்; விசைய நகரத்திலே அரசாண்டிருந்த அன்னமதேவராயரது வமிசத்தில் உதித்த இராய தேவர் என்றவர் அரசாளுகையில் ஷெ சமஸ்த்தானத்திலிருந்து வந்த "துந்து செட்டி" மல்லராசரென்பவர், இக் காஞ்சி மாநகருக்கு அருகிலிருக்கும் "வல்லம்", என்ற துருக்கர் கிராமத்திற் குடியேறியிருந்து திவானுயிருக்கையில், அவன் வெகு துன்மார்க்கனுய் வெகு இடுக்கண்களை நாட்டுக்கு இழைத்து வருகையில், ஸ்த்தானீகராம் துருக்கர்கள் அவைகளை இராய தேவருக்கு அறிவிக்க, மன்னர் துந்து செட்டியார் அம் மல்லனை பலிஷ்டனுகையால் வஞ்சனையிற் கொல்ல வெண்ணிப் பேட்டிக்கு அழைத்து வரச் செய்து, அப்போது தந்திரத்தில் இவன் முன்னுக ஒரு கடும் புலியினைக் கொல்லுமாறு ஏவிவிட யதை யம்மல்லன் கொன்று போட்டான் எனவும், அங்ஙனமாய விருத்தாந்தத்தை யறிவிக்க அப் புலியையும் மல்ல ராசனையும் சிலையிலே யமைத்திருக்கும் ஒரு கல் கூட ஷெ கிராமத்தில் இருக்கிறது. மற்று திருமலைபட்டர் என்ற ஒரு துருக்கர் இராசாவைப் பேட்டிக்கண்டு நாற்

பதினாயிரம் வராகன் பொன் வாங்கி வந்து மன்னராஜையால் சிவாலயம் விஷ்ணுவாலயம் என்றவைகளில் பல்வேறு திருப்பணிகளை முற்று வித்து (12) சிலை சாஸனமுங் கண்டிருக்கிறார் எனவும், இக் கிராமமதனைப் பிராமணரிற் சிலர், இராயதேவரது மனைவி யாம் கலியாணியம்மாள் சேது யாத்திரைக்குப் போயிருக்கையில் இவ் வல்லங் கிராமத்தைத் தானமாகப் பெற்றார்; அது கொண்டு அவரிற் சிலர் துருக்கர்க்கு தீங்கிழைக்க மல்லரிற் சிலரை யனுப்புவித்து யவரை யடக்குகையில் ஒரு பிராம்மணர் வைக்கோற் போரிற் புகுந்து மல்லர் கையிலிருந்து மாண்டனர்.

அப் பிரம்மத்தி தோடம் போவதற்காக மல்லராால் ஒரு கோவிலும் (அகத்தியேசுவரம்) தானீகர் துருக்கராலே ஒரு கோவிலுங் கட்டப் பெற்றிருந் தன. இவைகளிரண்டையும் பாழ்படுத்தி "சுலுப்புகான்" என்றவர் வந்த வாசி கோட்டை கட்ட எடுத்துப்போனன் எனவும், அப் பிரமத்தி விமோ சனம் ஆனதற்கு அறிகுறியாய் அப் பிரம்மத்தி வடிவம் எழுதப்பெற்ற ஒரு சிலையும் குளத்தருகில் காணப்படுகிறது எனவும், இன்னும், இன்னோ ரன்ன வரலாறுகளை யறிவுறுத்துகின்றது. இதற்கு வல்லங்கிராம வரலாறு, அல்லது மல்லராசன் வரலாறு என்று பெயரிட்டு வழங்கல் வேண்டுமெனத் தோற்றுகிறது. முற்று மிருக்கிறது. மிக எழுத்துப் பிழையுடனிருக்கிறது. இது மெகென்ஸி தொரையால் சம்பாதிக்கப்பெற்றது. டைலர் தொரைக் காட்லாக்கு 372-ம் பக்கம், 816-ம் நம்பரிலே வருணிக்கப் பெற்றிருக்கின்றது. கடைசியில் 10-ம் ஏடு வெற்றேடாம்.

No. 3124. வாமநாதபுரம் என்ற பழைய மயிலாப்பூர் வரலாறு.

VAMANĀTHAPURAM ENṞA PAḺAIYA MAYILAPPUR VARALĀṞU.

Pages, 18. Lines, 18 on a page. Condition, much injured. Extent, 162 granthas.

Begin on fol. 11 (*a*) of the manuscript described under D. No. 3/23. Complete.

An account of Vamanathapuram alias Paḻaiyamayilāppūr. Ancient Mayilāppur (Saint Thome).

This manuscript belongs to one of the Meckenzie collections of manuscripts and is same as to work described under No. 816 (in page 372) of Taylor's Catalogue, Vol. III.

Originally this town was wholly inhabited by Jainas. One of these sages had a dream in which he was informed that, within a few days the town would be flooded by the sea and he then described that dream to the King named "Mayilaimān" (Jainist). The King

having heared it from the Jain sage, removed the image further inland; and three days after, the old town was submerged by the Sea. The Jainas appear afterwards to have had fanes, with many images in each, in a town called "Mayilaimānagaram". Another night vision announced the submerging also of this town within three days; and ordered the removal of the image further inland. This command was obeyed. At a later period Brahmanās came from the Chōla country and, by superior skill in astrological, and astronomical calculations and with their knowledge of the Ātharvana Vēda (arts of magic) they succeeded in turning the people from the Jaina credence. The image was taken away by some of its votaries towards the west, as far as Chittāmur. The paper adds that there is a traditional statement current, in reference to the whole coast from Mayilapur to Mahabalipuram (from St. Thome to the Seven Pagodas).

Note.—This manuscript deserves some attention.

Beginning:

வாமநாதபுரம் என்ற பழைய மயிலாப்பூரினுடைய மகா விசேஷித்த [கைபீது] வரலாறு :—

ஆதி காலத்திலே இந்த மூன்றும் பங்காகிய தண்டகாரண்யத்திலே சமுத்திரக்கரை யோரத்திலே "வாமநாதபுரம்," என்று ஒரு பட்டணம் இருந்தது. அதில் சைனர் பிரபுத்துவம் பண்ணி வந்தார்கள். அவர்களுடைய வமிசாவளியைப் பற்றின சரித்திரம் ஒருவராலும் காப்பாற்றப்பட்டிருக்கவில்லை. இந்த வாமநாதபுரத்திலே ஒரு மகா பிரபலமான சைன ஆலயம் இருந்தது. அதில் [சயி] (னச) னபிம்பம் மகா முக்கியமானதாகவிருந்தது. நேமிநாத சுவாமி அல்லது தீர்த்தங்கள் என்றும், அப்போது இருந்த சருவ சைனர்களாலும் சுவீகரிக்கப்பட்டிருந்தது.

* * * * * * * * *

End:

மயிலாப்பூரில் கப்பல் வர்த்தகம் பண்ணிய ஒரு வைசியனுக்குச் சுவர்பனமாகி அவன் வந்து சித்தாமூரில் பல திருப்பணிகள் செய்தான். ஏறக்குறைய அளஞூல்-க்கு முன், சூா ஞூல்த்துக்கு பின் பழைய திருப்பத்து . . . மயிலாப்பூர் மகாபலி புரத்தில் இன்னும் சமுத்திரத்தருகில் இருக்கிற சில பட்டிணங்களைச் சமுத்திரங் கொண்டுபோனதாய்ச் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

* * * * * * * * *

(கு. - பு.).—

இது, "வாமநாதபுரம்", என்ற "பழைய மயிலாப்பூர்" (Saint Thome) என்ற ஜைன ஊரின் வரலாற்றினை விளக்குவதாகும். இத்தலம் முன்னர் சைனர்களால் குடியிருக்கப் பெற்றதாகும்.

இத்தலம், சமுத்திரக்கரை யோரத்தில் உள்ளது. இத்தலத்தில் ஜைனர்களுக்கு உரியதொரு பெருஞ் ஜினாலயம் இருந்ததாகத் தெரிகிறது. நகரமானது கடல் கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதில் மிக சக்தி வாய்ந்த

நேமிநாத தீர்த்தங்கரரது விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்ததாய் எல்லாராலும் பிரார்த்தனைகள் செலுத்தப்பட்டிருந்தது. இங்கு ஒரு நிர்வாண சுவாமி வாசஞ்செய்து வந்தார். இவர்க்கு ஒரு நாள் கனவு கண்டது யாதெனில், இன்னும் இரண்டு மூன்று நாளில் இவ் வாமநாதபுரம் அதனைச் சமுத்திரங் கொள்ளும் என்பதாக அதனை அப்பொழுது மன்னராயிருந்த "மயிலைமான்" என்றவர்க்கு உரைக்க அதனைக் கேட்டு இத்தலத்துக்கு மேற்றிசையில் இப்பொழுது காணப்பெறும் மயிலைமான் நகரத்தைப் புதிதாகக் கட்டுவித்து அதில் வசித்து வந்தார். இந் நிகழ்ச்சி கலி பிறந்து சுமார் உது ஷூத்து சில்வானம் ஷூ களில் நடந்ததாகக் கூறப்பட்டுள்ளது. பின்னர், இந் நகரில் இருந்த சில முக்கிய ஜைன விக்கிரகங்கள் சித்தாமூர் முதலான ஜைன தலங்களுக்கு கொண்டு போகப்பட்டன. மயிலைமான் அரசனுக்குப் பின் மயில் பூசித்த ராசனும், அவற்குப் பின் "சம்பந்த பத்திரராசனும்", அவற்குப்பின், சாந்தகுண சீலனும், அவற்குப் பின், சாமுண்டநாதனும் ஆக ஜைன மன்னர்கள் பலரும் இந் நகரில் பட்டம் பெற்று அரசாண்டிருந்தனர். அங்ஙனிருக்கையில், சோழ தேசத்திலிருந்து வந்த சில சைவப்பிராமணர் கணிதம் சோதிடம ஆதர்வணம் முதலானவை கற்றிருந்து தமது மந்திர பலத்தால், அக்காலத்து அரசனை சைவ மதத்துக்கு உள்ளாக்கு வித்து இலிங்க பிரதிஷ்டை பண்ணுவித்தனர். அம் மன்னனது குமாரன் கந்தப்பராசன் என்பவர் என்றிருக்கிறது. வெளியேறிய விக்கிரகங்களில் ஒன்றான நேமிநாதரது பிம்பமானது வண்டியேறி வருகையில் சித்தாமூரில் வண்டி (சகடம்) முறிந்து விழுந்தபடியால் அங்கேயே அப்பிம்பம் பிரதிஷ்டை செய்யப் பெற்றது. மயிலாப்பூரில் கப்பல் வியாபாரியாயிருந்த ஒருவர் தாம், சுவப்பனங்கண்டு சித்தாமூர் வந்து அவ் விக்கிரகத்துக்குப் பல திருப்பணிகளை முற்று வித்தார், என்றின் னோரன்ன வரலாறுகள் கூறப்பெற்றிருக்கின்றன. முற்றும் உளது. மிகப் பிழையுடன் உளது. டைலர் தொரை காட்லாக்கு 372-ம் பக்கம் 816-ஆம் நம்பரில் குறிப்பை நோக்குக. இறுதியில் 2 பக்கங்களில் சில வடமொழி சுலோகங்கள் மிகத் தப்புடன் இருக்கின்றன. 20-ம் ஏடு வெற்றேடாம்.

No. 3125. சித்தாமூர் ஜைன மடாதிபதி யிடத்துள்ள ஜைனமத புத்தகங்களின் அட்டவணை.

CHITTĀMŪR JAINA MATHĀDHIPATHIYIDATTUḶḶA JAINA PUTTAKAṄHALIN AṬṬAVANAI.

Pages, 8. Lines, 22 on a page. Condition, much injured. Extent, 150 granthas.

Begins on fol. 21 (*a*) of the manuscript described under D. No. 3123.

Complete.

A list of the Jaina Books which are in the monasterium at Chittamūr, Chettu Paṭṭu taluk. See Taylor's Notes in 816, page 372, Vol. III.

Beginning :

சேத்துப்பட்டு தாலூக்காவில் இப்போது இருக்கும் சித்தாமூர் மடாதி பதியாயிருக்கும் சைன பட்டாசாரியாரிடத்தில் இருக்கும் ஜைன புஸ்த்தங் களின் விசேஷித்த ஜாபிதா.

* * * * * * * * *

புத்தங்களின் பெயர் :—	விஷயம் :—
மகாபுராணம்.	புராணம்.
[சக்ஷு]த்திர சூடாமணி.	காவியம்.
முனிஸுவிரத காவியம்.	
சந்திர பிரபை காவியம்.	

* * * * * * * * *

End :

செயமாலே, சிக்க சம்பந்த பத்திரம், தெண்டனு ஸ்துதி, புஷ்பாஞ்சலி, சூத்திமுத்தாவளி. ஸஹஸ்ரநாமம் சித்தாமூர் சிலாசாஸனம் (ஈ). சித்தா மூர் தாம்பிரசாஸனம். (க.) பௌத்தம்ஞ்ஞான பீடகம், வினயபீடகம்,

* * * * * * * *

(கு. - பு.).—

சித்தாமூர் மடாதிபதியாயிருந்த ஜைன பட்டாசாரியர் அவர்கள் தம்மடத் துக்கு உரியவைகளாயிருக்கும் ஜைன புஸ்தகங்கள் முதலானவைகளைக் குறித்து எழுதிக்கொடுத்த புத்தக [ஜாபிதா] அட்டவணையாகும். இதில், புராணம், காவியங்கள், வியாகரணம், தருக்கம், ஆசாரவிதி, தரும சாஸ் திரம் சரித்திரங்கள், பிராகிருதம், தமிழ் நூல்கள் சிநேந்திர மாலே, சிந்தா மணி, சூடாமணி, மேரு மந்திரமாலே, யசோதர காவியம், நாலடியார், திருக்குறள், உதயண குமார காவியம், கலிங்கத்துப் பரணி, மண்டல புருட நிகண்டு, (2) லோகஸ்வரூபம், (2) லோகசூடாமணி, உள்ளமுடை யான், முதலானவைகளும், இம்மாதிரியாக வடமொழி தென்மொழி பிராகிருதங்களிலான பல்வேறு விஷயமான பண்டைய நூல்கள் ஆம், முற்றும் உளது. மிகச் சிதைந்து உள்ளது. பிழையதிகம். டைலர் தொரை காட்லாக்கில், 816-ஆம் நம்பர் (p.p. 372)-ஆம் பக்கத்தின் குறிப்பை நோக்குக.

No. 3126. சமணமதத்திலிருந்து சைவ, பௌத்த, வைணவ, மதங்கள் உண்டான வரலாறு.

ŚAMAṆAMATATTILIRUNDU ŚAIVA, BAUDDHA, VAIṆAVA, MATAṄKAḶ UṆḌĀNA VARALĀṞU.

Pages, 5. Lines, 18 on a page. Condition, much injured. Extent, 50 granthas.

Begins on fol. 25 (*a*) of the manuscripts described under D. No. 3123.

Complete.

Account of the derivation of the Śaiva, Bauddha and Vaiṣṇava systems from the Śamaṇa or Jaina mode of credence.

This manuscript belongs to one of the Meckenzie 's collections of manuscripts and is same as the manuscripts, described under No. 816 of Taylor's Catalogue, page 373, Vol. III.

Beginning :

பூர்வீகம் சமண மதத்திலிருந்து சைவ, பௌத்த, வைஷ்ணவ மதங்கள் உற்பத்தியானத்தினுடைய மகா விசேஷித்த கைபீயத்து.

பூர்வீகத்தில் விருஷப தீர்த்தங்கார் காலத்திலே பரதராஜ சக்கிரவர்த்தி யினுடைய புத்திரன் மரீசி குமாரன், கபிலர் முதலானவர்களுடனே[சயி] (சை)ன மதத்திலே சந்நியாசம் பண்ணிக்கொண்டு இந்திரிய நிக்கிரகம் பண்ணமாட்டாமல் தங்கள் மனசுக்குச் சம்மதியானபடி நடக்கத் தங்கள் வித்தியா சாமர்த்தியத்தினுலே * * பேதமாகிய பாஷண்டி மதங்களுக்கு உற்பத்தி ஸ்த்தானமாகிய சைவ மதத்தைக் கலப்பித்து வெகு ஜனங்க ளுக்கு உபதேசம் பண்ணினுர்கள். * * * * * * *

End :

(ச). அந்த மா[ற்] (த்) துவ மதத்தில்? "இராமாநுஜாசாரியார்" என்கிறவர், தன்னுடைய வித்தியா பலத்திஞலே [ஜெ்ஷதம்] வசிஷ் டாத்வைதம் என்கிற வைஷ்ணவமதம் ஏற்படுத்தினுர். அதுவுங்கொஞ்சம் ஏற(க்குறைய) ரூாஸூக்கு மேற்பட்டிருக்கிறதாய் காணப்படுகிறது.

(கு. - பு.).—

இது, ஆதியில், சமண மதமே யிருந்தது. பின்னர், பார்சுவநாத தீர்த் தங்காரது காலத்தில் பௌத்தமதம் புத்தி கீர்த்தி யென்றவரால் ஏற் பட்டது. விருஷப தீர்த்தங்காரது காலத்திலே பரதராசன்றனது புத்திர னும், மரீசி குமாரன் என்றவர், கபிலர் முதலானுருடன் சேர்ந்து சைவ மதத்தைப் பிரவர்த்திப்பித்தார். பின்னர், மாத்துவ மதத்தை ஸ்ரீ மத்துவாசாரியரும், "விசிஷ்டாத்தவைத்ம்", என்ற ஸ்ரீ வைஷ்ணவ மதத்தை இராமாநுஜாசாரியரும் ஏற்படுத்தினுர்கள், என்ற இவை மாத்திரம் காரணம், வகை, முதலானவற்றை யொன்றையுங் கூருமல், விளக்கப்பட்டிருக்கின்றன. தொடர்மொழிகளில் சில மரபு வழுக்கள் காணப்படுகின்றன. ஆகவே, இது, மிக மலைவுடன் எழுதப் பெற்றதென்று துணியப்படும். டைலர் தொரை காட்லாக்கில் 373-ஆம் பக்கமதிலே 816-ஆம் நம்பரின் 4-ஆம் பிரிவினது குறிப்பை நோக்குக. மிகச் சுருக்க மானது. சிதைவுற்றது. இதன் பின்னர் 28-ஆம் ஏடு ஒன்றும் எழுதப் பெருமலிருக்கிறது.

No. 3127. திராவிட தேயத்துப் பண்டைய முனீசுவரர் கவீசுவரர்களின் பெயர்களும் நூல்களும்.

DRAVIDA DEYATTUPPANDAIYA MUNIŚUVARAR KAVIŚUVARARKALIN PAIYARKALUM NULKALUM.

Pages, 7. Lines, 17–20 on a page. Condition, much injured. Extent, 60 granthas.

Begins on fol. 29(*a*) of the manuscript described under D. No. 3123. Complete.

A list of the names of the famous Jaina sages and poets and their books or works in Draviḍa country.

This manuscript belongs to one of the Meckenzie's collections of manuscripts and is same as the work described under No. 816 (page 373) of Taylor's Catalogue, Vol. III.

Beginning :

இந்தத் திராவிட தேசத்தில் அவர்கள் பண்ணின கிரந்தங்களுடன் அதிகமாய் அங்கீகாரம் பண்ணப்பட்டிருக்கிற ஜைன பிரபல முனீசுவரர்கள் கவீசுவரர்களுடைய நாமங்களின் விசேஷித்த ஜாபிதா (அட்டவணை).

1	2	3	4
கவீசுவரர் முனீசுவரர் நாமங்கள்.	அவர்கள் பண்ணின கிரந்தம்.	எந்தப் பாஷை.	எந்த ராஜாங் கத்தில்.
(1) ஜின ஸேநாசாரியர்.	மகாபுராணம் (ஸ்ரீ புராணம்.)	ஸம்ஸ்கிருதம்.	போச ராஜாவின் நாளிலே.
	பாரிசுவநாதாப்யுதய காவியம்.	ஷை	
	பூசாங்க விதி.	ஷை	
	ஜின சங்கிதை.		
	கிரியாவந்தனை ?	ஷை	
(2) நேமிச சக்கி ராச்சியர் ?	திரிலோகஸாரம்.	பிராகிருதம்.	சாமுண்ட ரா... காலம்.
	கோமடசாரம்.	ஷை	
	லப்தீசாரம்.	ஷை	—
ந.			
(3) குண்டகுந் சாரியர்.	பிராபிருத்திரயம்.	ஷை	
(4)	[ஞா]		
ச. சம்பந்த பத்திராசாரியர்.	நியாய சாஸ்திரம்.	ஷை	
	ரத்தினகாண்டம்,	ஷை	

* * * * * * * * * *

End :

உந.. ஜிநேந்திர கவி.	ஜிநேந்திர மாலை.	தமிழில்.	
(23)			
உச. பவணந்தி முனி.	நன்னூல்.	ஷை	
(24)			

(கு. - பு.).—

இது, ஜைன மதத்தில் ஸுப் பிரசித்த மகா கவிகளாகவும் முனீசுவரர்களாகவும் உள்ளவருடைய பெயர்களையும், அவரவர் இன்னின்ன

அரசாங்கத்தில் இருந்து இன்னின்ன நூல்களை இயற்றியுள்ளார் என்பதனைத் தெரிவிக்கும் ஒரு புத்தக அட்டவணை வடிவிலே யமைந்திருக்கின்றது. இதில் வடமொழி, பிராகிரதம், தமிழ் மொழி யென்ற பல பாஷைகளிலும் பல விஷயகங்களாய் அமைந்துள்ளவைகளைத் தெரிவிக்கின்றது. ஜிநஸேநாசாரியர் (வடமொழி கவி) தொடக்கமாக, தமிழ்க் கவியாம் பவணந்திமுனி வரையிலாக (24) இருபத்து நான்கு கவிகளுடைய பெயர்களையும் அவரவர் இயற்றிய நூல்களையும் அறிவுறுத்துகிறது. இதில் (13) ஹேளாசாரியர் என்பவர் தமிழில் ஒரு "குறள்" என்ற நூலை இயற்றியிருப்பதாகத் தெரிகின்றது. அந்நூல் எங்குள்ளது என்று ஆராயற்பாலதாம். முற்றும் உள்ளது. மிக்ச் சுருக்கமாயது. மிகச் சிதைவுற்றதாம். மெகென்ஸி தொரையால் சம்பாதிக்கப் பெற்றதாய் டைலர் தொரை காட்லாக்கில் 816-ஆம் நம்பரில் 373-ஆம் பக்கத்திலே வருணிக்கப் பெற்றதேயாம். பின்னர், 33 (b)-34 (a) எட்டில் "முனிபத்திராசார்யரது கிதாப்பு" என்ற பெயருடன் அவரது பிருதை யுணர்த்தும் பகுதி ஒன்று எழுதப் பெற்றிருக்கிறது.

No. 3128. முனிபத்நிராசார்யரது விருது.
MUNIBHADDIRĀCARIYARADU VIRUDU.

Pages, 2. Lines, 15 and 16 on a page. Condition, much injured. Extent, 16 granthas.

Begins on fol. 33 (*b*) of the manuscripts described under D. No. 3123.

Complete.

Narrates the greatness of "Munibhadrāchārya", a famous Jainācharya (Jaina sage).

Beginning :

முனிபத்திராசாரியருடைய கிதாப்பு சுவஹ்ஸி ஸ்ரீமத் ராஜ ராஜ குரு மண்டலாசாரிய மஹாவாத வாதிஸ்வரராய் வாதி பிதாமஹ ஸகல வித்வஜ்ஜன சக்கிரவர்த்திகளும், * * * *

End :

விருதாவலி விராஜ மானர்களும், * * * ஸ்ரீமத் டில்லி கொல்லாபுரி ? சினகஞ்சி, பௌங்கொண்டை சதுரத ? சிம்மாஸனர்களும், ஸ்ரீமத்[ற](ர)த்னதி(ற)ர பரஞலங்கிருதர்களும், ஆகிய தேவமானிய தேவ ஸ்ரீ முனிபத்திர் தேவபட்டாச்சாரிய சுவாமிகள் ?

(கு. - பு.).—

இது, "முனிபத்திராசார்யர்", என்னும் ஒரு ஜைஞசாரியருடைய சில பிருதங்களை யெடுத்துக் கூறுவதாகும். மிகச் சுருக்கமானது. மிகப் பிழையுடனிருக்கிறது. டைலர் தொரை காட்லாக்கு 816-ம் நம்பரிலே 6-ஆம் பிரிவிலே வருணித்துக் கூறப்பெற்றதேயாம். 373-ஆம் பக்கம் குறிப்பை நோக்குக.

நிற்க, டைலர் தொரை, தாம் தமது (குறிப்பில் 7—12 ஆன பிரிவு களில் உள்ளவைகளாகக் குறிக்கப்பட்டிருக்கிற (6) பகுதிகள் இப்பொழுது இவ்வால்யு. ஆனால் மதில் காணப்பெறவில்லே. அஃது யாது காரணம் பற்றியோ. ஆனல் இப்பிரதி D. No. 1930-ம் ஜனவரி 9௨. பெயர்த்து எழுதி வைக்கப்பெற்றிருக்கிறது. (Restored in October of 1906) அதி லும் முன்னுள்ள 1—6 பகுதிகளே எழுதப்பெற்றிருக்கின்றன. ஆகவே, அக்காலத்திலேயே அவை காணப்பெறவில்லை போலும் அவை, இது போது 1938-ம் எப்ரல் 17௨ Shelf No. என்ற ஷெல்ப் நம்பர் கொடுக்கப் பெற்றுத் தனி பிரதியாக நினைக்கப் பெற்று கட்டப்பட்டிருக் கின்றன. ஆதலின், அவை, D. No. 2996—D. No. 3002 நம்பர்களில் வருணிக்கப்பெற்றிருக்கின்றன.

No. 3129. மலேயாள தேயத்து பல்வேறு ஜாதிகளின் வரலாறு முதலியன.

MALAIYAḶA DĒYATTUPPALVĒṞU JĀTIKAḶIN VARALĀṞU MUDALIYANA.

Substance, paper. Size, $9\frac{3}{4} \times 7\frac{1}{2}$ inches. Pages 184. Lines, 25–38 on a page. Character, Tamil, Telugu and Malayalam. Condition, much injured. Appearance, old. Extent, 3,220 granthas.

Complete.

Contains 9 sections. An account of Malaiyaḷam country. This manuscript belongs to the Mackenzie's collection of manuscripts Itis same as the work described under No. R. 366. It was restored in Meckenzie's Restored, Vol. V, see pages 71 to 144.

For the extract see R' No. 366 of Tamil Triennial Catalogue, Vol. III; (கு. - பு.).—

இது, மூவருடக் காட்லாக்கு 366-ஆம் நம்பரில் வருணிக்கப் பெற்றுள்ள நூலுக்கு மாதுருகை பிரதியாகும். மெகென்ஸி பெரிய வால்யும் (5) ஆவதில் 71—144 ஆன பக்கங்களில் பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றிருக் கிறது. முற்றுமிருக்கிறது. இதில் மலேயாள தேயத்துள்ள பல சாதியாரின் வரலாறு. திருக்கன்கோடு கோவில் வரலாறு, கவளப்பாரை நாட்டு நில வருமான விவர வரலாறு (Revnue account), கவ்ளப்பார நாட்டு ஜமீன் தார் கவளப்பாரைநரயரின் வமிசாவளி, கள்ளிக்கோட்டை ஸம்ஸ்த்தானத்துச் சேநாதிபதியினிடமிருந்த ஷ சமஸ்த்தானத்துக்குரிய சில ரிகார்டுகள், பூகோள அமைப்பு (தேச விவரணம்) (Geographical account) நடுவட்டம் நாட்டுக்குரிய சில ரிகார்டுகள், மலேயாள தேயத்துப் பாலக் காட்டிலிருக்கும் புதுச்சேரி வரலாறு, திருவந்தூர் (திருவாங்கூர்) சத்திரம் கோயில் முதலான வற்றின் வரலாறு என்ற இவையடங்கி யிருக்கின்றன. முற்றும் உளது. உரிய டைலர் தொரை காட்லாக்கு நம்பர். No. 815 ஆங்கிலக் குறிப்பை (Page. 372) நோக்குக. மலேயாள பாஷையில் அமைந்துள்ளது. இடையில், மலேயாள எழுத்தாலேயே எழுதப்பெற்றிருக்கின்றது. ஒரேவிடத்துத் தெலுங்கெழுத்தும் காணப்படுகிறது.

38

No. 3130. சல்லிப்பட்டி பாளையக்காரன் எரம நாயகன் வமிசாவளி.

SALLIPATTI PAḶAIYAKKARĀN ERAMA NĀYAKAN VAMIŚĀVAḶI.

Substance, paper. Size, 10 × 8 inches. Pages, 12. Lines, 21 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old. Extent, 145 granthas.

Begins on fol. 1(*a*). The other works herein are Siñjuvāḍi Pālayakkārar Śambē Nāyakkār Vamiśāvali. 7(*a*) Bhuvanacakkiram. 11(*a*) Puravipālaiyaṅgōpaṇa manṟādiyārid ttulla Aindujāte Varalaru or Koṅ kumaṇḍala varaḻāṟu. 25(*a*) Āvuḍaiyārpuram Palaiyakkārar Mallarājaṅ. Varalāru 29(*a*). Maṟuturaikirāmam Alālasundaṟa pandithar varalāru. 38(*a*) Do. Śaivamathadhipati Ālālasundarapaṇḍithaṟ kuṟiya Bhūdāna silāsāsanam. 42 *a*) Sivagiri Suppīramaniyasuvāmi Tala varalāṟu. 44(*a*) Andippaṭṭūpāḷaiyakkārar Bommanāyakan vamiśāvali. Aravakkurich Tālūkkā kirāmakkaṇakkarkali ḍattirunda paṇḍaiyakaṇakkukaḷ varalāru 58(*a*). Kalāsakṣēttira mānmiya varalāṟu 69(*a*).

Complete.

A genealogical account of a Palliyakkar or a local chief Eramanāyakan of Sallipaṭṭi village, Poḻḻāchi taluk, near Dhārāpuram.

This manuscript belongs the Meckenzies Collection of manuscripts and is same as the work described under No. 809, pages 369–370 of Taylor's Catalogue, Vol. III.

Beginning :

தாராபுரம் துக்குடி [பு] (பொ) ள்ளாச்சி தாலூக்கா சல்லிப்பட்டி எரம நாயகன் என்னப்பட்ட பாளையக்காரனுடைய வமிசாவளி முதலான கைபீயத்து என்னவென்றால் :—

பூர்வத்தில் யாதவ வமிசத்தில் உர்பத்தியான ஒன்பது கம்பளத்தில், தொட்டிய கம்பள சாதியான குச்சல பொம்ம நாயக்கன் நாளையில் வடக்கு இராஜீயத்தில்(இ)டில்லி பாதுஷஹா சீ [ற்] மையிலே குறுச்சி யெ[ணாண] (ன்ன) ப்பட்ட பாளையப் பட்டுக்கு மன்னன் தனமாக ஆண்டுகொண்டு இருக்கும் நாளையில் அக்காலத்துக்கு, (இ) டில்லி பாதுஷஹா, கம்பள சாதியில் பெண்வாங்கிக் கொள்ளவேணும் என்று நினைச்சு இருந்த படியினாலே துலுக்கனுக்குப் பெண்ணைக் கொடுக்க மாட்டாமல் கம்பளசாதியினர் அனை வரும் எக கூட்டமாய்ப் புறப்பட்டு * * * * * அக்காலத்துக்கு இராயர் ஸம்ஸ்த்தானமான **விஜயநகரப்** பட்டணம் பிரவேசிச்சு இருந்தார்கள். * * * நீர் நம்முடைய சில்லரை பாளையக்காரர்களுக்கெல்லாம் முதன்மைக்காரராக இருமென்று சொல்லி, பல்லக்கு; உபய சாமரம் கொடுத்து * * * * பட்டத்து ஆனை மேல் பட்டணப் பிரவேசமும் வந்து பட்டங் கட்டினார்கள். * * * குச்சவி

பொம்ம நாயக்கர் இருக்கிற நாளையில் அவர் குமாரன், பரபேதாதுல நாயக்கன். இவருக்குப் பிள்ளைகள் இருவர் :—

1. எத்துல முத்தைய நாயக்கன்.
2. எரம நாயக்கன்.

* * * * * * * * *

என் வழிசத்திலே எரம நாயக்கர் புறப்பட்டு இவ்விடத்துக்கு வந்து சேர்ந்து நல்லுறுக்கம் நாட்டிலே அளகாபுரி யென்கிற ஊருக்குச் சேர்ந்து இராயர் அவர்கள் சமூகத்தில் உத்தரவின்படிக்குத் தம்முடைய அத்துக்குச சேர்ந்துள்ள கானல்களை வெட்டி வைச்சுச் "சல்லியபட்டி", யென்கிற ஊர் உண்டு பண்ணி அதற்குச் சேர்ந்துள்ள கிராமங்கள் ௰௪ (14)-க்குஞ் "சல்லிப்பட்டி, பாளையக்காரர்" என்று பேர் பிரசித்திப் பட்டவர்களாய்ச் சகல விருதுகளுடனே ஆண்டுகொண்டு வந்தார். அந்த நாள் முதல் சல்லி வாகன சகாப்தம் ௲உ௱சூ௰அ. 1268 ௵ முதல் சகாப்தம் ௲எ௱உ௰௩ (1723) ௵ சாரு௰௫ (455) ௵க்கும் ஆன (உ௰க) பட்டங்களுடைய வரிசையும் அவர் அவர்களுடைய நடத்தைகளும் இதன் கீழே எழுதப் பெற்று வருகின்றன.

* * * * * * * * * *

End :

மகா-ராஜ-ராஜ-ஸ்ரீ கும்பினி (கம்பெனி) சர்க்காரிலே என்னையும் என்னைச் சேர்ந்த சனத்தையும் "திண்டுக்கல்" முதலான இடங்களிலே கைதியிலே வைச்சு இருந்து தொரைகள் தயவுசெய்து எனக்கும் என்னைச் சேர்ந்த சனத்துக்கும் ஆகப் படி மாதம் (க) ஒன்றுக்கு [வீருயன்] வரா கன் (3½ ரூபாய்) இருபத்து நாலு பொன் நியதி செய்து ஊரிலே போய் இருக்கச் சொல்லி உத்தரவு செய்தபடியினாலே அரண்மனையார் கட்டளை யிட்டபடிக்கு மாசம் மாசம் படியும் பெற்றுக்கொண்டு இருக்கிறேன்.

நான் பதினாலு வயசுச் சிறு பிள்ளையாய் என்னைச் சேர்ந்த குஞ்சு குழந்தை சகிதமாய்க் கைதியாய்ப் போயிருந்து வந்த செனத்துடனே நாற்பது சனத்துடனே தயவுசெய்து இருக்கிற படியிலே ஜீவனம் பண்ணிக் கொண்டு சல்லிப்பட்டிக்குச் சேர்ந்த தொண்டைமான் புதன் ஊரு கிராமத் திலே ஆசரிலே இருந்து வருகிறேன். மகா-ராஜ-ராஜ-ஸ்ரீ கும்பினி (கம் பெனி) துரைகள் தயவுக்குப் பாத்திரனாய்க் காத்துக்கொண்டு இருக்கிறேன்.

[யேற்றமனையக்க ருசு.] (பெ. எரமநாயக்கன் ருசு.)

(கு. - பு.).—

இது, பொள்ளாச்சி தாலூகாவில் தாராபுரம் துக்குடிக்குச் சார்ந்துள்ள **சல்லிப்பட்டிக் கிராமம்** பாளையக்காரர் "எரம நாயக்கர்", என்பவர், தமது வமிசாவளியை யெடுத்துக் கூறும் துறையிலே யமைந்திருக்கிறது. இராயர் சமஸ்த்தானத்துக்கு உட்பட்டிருந்து, விஜய நகரத்திலிருந்து தென்றிசைக்கு வந்து அளகாபுரி யென்னும் ஊரிலே குடியேறிக் காடுவெட்டி நாடாக்கி நல்லூரு நாட்டிலே சல்லப்பட்டி கிராமமதனை யுண்டாக்கி யதனைப் பாளையப் பட்டாகி ஷ, கிராமத்தைச் சார்ந்த (14) பதின்நான்கு கிராமங்களையும் ஆண்டு கொண்டிருந்த முதற்பட்டக்காரராம். "எரம நாயக்கர்," என்ப வரை முதலாக் கொண்டு தம் வரையிலாக முன்னிருந்த (உக) இருபத்

தொரு பாளையப்பட்டதாரிகளுடைய வரலாறுகளையும், அவரவர் ஆண்ட வருடங்களது எண்களையும் நன்கு விளக்கி யிருக்கிறார். இதில் இடையில், (19) பத்தொன்பதாம் பட்டக்காரரான வேங்கடபதி நாயக்கர் காலத்திலே யவர் மைசூர் தொரை அயிதர் அல்லீகான் உத்தரவின்மீது பாலக்காட்டு மன்னரை பு[லி](லிக்) கோட்டையிலே முற்றுகை செய்து ஷி கோட்டையை வசமாக்கிக்கொண்டு இருந்து இறுதியில் வெட்டுண்டு போனார். (20) இருப தாம் பட்டதாரியான "அரங்கப்ப நாயக்கன்," என்னும் அவர் "டிப்பு சுல்த்தான்", என்றவர்க்கு அடிமையாகிச் சல்லிப்பட்டிப் பாளையத்திலே யிருந்தனர். (21) இருபத்தோராம் பட்டதாரியான **பெரியநல்லமுத்து** நாயக்கன் என்னுமவர் ஈஸ்டு இண்டியா கம்பெனி துறைமக்களுக்கு அடிமை யாய் நியதிப்பணஞ் செலுத்தி வந்தனர் என்றின்னோரன்னவைகளும் கூறப்பட்டிருக்கின்றன. முநறுமிருக்கிறது. மிகப் பிழையுடன் உளது. இது, மெகென்ஸி தொரையால் சம்பாதிக்கப்பெற்றவைகளில் ஒன்றாகும். டைலர் தொரை காட்லாக்கு 369–370 ஆம் பக்கங்களில் 809-ஆம் நம்பரில் வருணிக்கப்பெற்றிருக்கிறது. இப்பகுதி, 1946-ம்௵ மே௴ 17௳ D. ஆம் வந்துள்ள பாதியிலே பெயர்த்து எழுதப்பெற்றிருக்கின்றது. அதன் குறிப்புகளை நோக்குக.

No. 3131. சிஞ்சுவாடி பாளையக்காரர் சம்பே நாய்க்கர் வமிசாவளி.

SIÑJUVĀḌI PĀḶAIYAKKĀRAR ŚAMBĒ NĀYAKKAR VAMIŚAVAḶI.

Pages, 4. Lines, 19–23 on a page. Condition, much injured. Extent, 88 granthas.

Begins on fol. 7(*a*) of the manuscript described under D. No. 3130. Complete.

A genealogical account of a Palliyakkar. Sambē Nāyakkar of Suñjuvāḍi Paḷaiyam in Poḻḻācchi taluk near Dhārāpuram. This manuscript belongs to the Meckenzie's Collection of manuscripts and is same as work described under No. 809 of Taylor's Catalogue, Vol. III, pp. 369.

Beginning :

பொள்ளாச்சி தாலூக்கா சிஞ்சுவாடி பாளையக்காரர் "சம்பே நாயக்கர்", என்கிற பாளையக்காரர் வமிசாவளி முதலான கைபீயத்து
என்னவென்றால்,—

பூர்வத்தில் பாதுஷஹா சீ[ற்] மையில் பாளையக்காரர் பாளையப்பட்டா யிருக்கப்பட்ட **கம்பள** சாதி(யர்) அனைவரும் இராயர் சமஸ்த்தானத்துக்கு வந்த தருணத்தில் இராயர் சமஸ்த்தானக்காரர் எங்கள் வமிசஸ்த்த ரான பாலால சித்தம நாயக்கர் இராயர் சமஸ்த்தானத்தில் குமார வர்க்கம் என்று பேர் பிரசித்தி பட்டவர்களாய் இருக்கும் நாளையில் அவ ருடைய பிள்ளைகள் எழு பேரிலேயும் இரண்டாம் பிள்ளை பிறந்தது. எத்துல முத்தைய நாயக்கருக்கு ஒரு பிள்ளை பிறந்து உடனே யந்த பிள்ளைக்குத் தாயார் தெய்வகதியானாள். அந்தத்தாய் இல்லாத குழந்தையைக் * *

* ஈனுத பத்தினிப் பசுவினிடத்தில் போட்டுப் பிரதட்சணம் நமஸ்காரம் பண்ணி வேண்டிக்கொண்டபடியினுலே அந்தப் பசு தன் பிரீதினுலே தானுகக் குழந்தையிடத்துக்கு வந்த மூன்று காலமும் பால் கொடுத்துக் கொண்டு இருக்கிறபடியினுலே இது செய்திகளை இராயர் ஸமஸ்தானபதிக ளான சோம தேவராயர் அவர்கள் கேட்டு அந்தப் பசு மாட்டையும் குழந்தை யையும் தருவித்துப் பார்த்து மகா ஆச்சரியப்பட்டு அந்தக் குழந்தையிடத் தில் நிரம்பவும் பிரீதியாக அபிமானம் வைத்தபடியினுலே தினம் தினம் பிரவிருத்தமாய் வளர்ந்துகொண்டு இருந்ததுடன் இராயர் அவர்களும் தினகாலமும் அந்தக் குழந்தை சுகமாவென்று விசாரித்துக்கொண்டிருப்பார் கள். அந்தக் குழந்தை பசும்பால், கொடுத்து வளர்ந்த "சின்னம நாயக்கன்", என்றவனுக்கு மூன்று வயசு ஆனவுடனே இராயர் ஸமஸ்த் தானத்தில் அரண்மனைக்கு கூட்டிப் போய் வைச்சுக்கொண்டு * * பதினறு வயதான உடனே பல்லாக்கு, உபயசாமரம் * * * முப்பத் திரண்டு பிருதும், பதினெட்டு மேள வாத்தியமும் கொடுத்து வேண்டிய வெகுமதிகளையும் பண்ணித் தட்சிணப் பிரதேசத்திலே நம்பி புத்தூர் கெடியும், கோரிக்கடவு கெடியும் இந்த இரண்டு கெடிகளுக்கும் சேர்ந்த சீமைக்கும் நீரே மனசுபேதாரராய் இரும் என்று பட்டாபிஷேகம் பண்ணி ஞர்கள். * * * * * * * *

End :

நாளது ஆசரிலே யிருக்கப்பட்டவன் "மூத்துமலையாண்டி சம்பே நாயக் கன் நானும் என்னைச் சேர்ந்த ஜனமும் திண்டுக்கல் முதலான விடங்க ளில் கைதியிலே யிருந்து மகா-ரா-ஸ்ரீ காரோ சாயபு துறையவர்கள், கடாட் சஞ் செய்து மாசம் * * * * நியதப்படிக்கு * * ஆசரிலே என்னைச் சேர்ந்த ஜனம் பதனைந்து ஜனத்துடனே ம.ரா.ஸ்ரீ. துரையவர்கள் கட்டுப்பண்ணினபடியிலே ஜீவனம் பண்ணிக்கொண்டு சிஞ்சுவாடியிற் குடியிருப்புக் காரனுய் [கும்பிணி] கம்பெனியார் தயவுக்குப் பாத்திரனுய்க் காத்துக்கொண்டு இருக்கிறேன்.

சம்பே நாயக்கன் ருசுவு.

(கு. - பு.).—

இது, பொள்ளாச்சி தாலூக்காவிலே "சிஞ்சுவாடி", யென்ற பாளையத் திலே யிருந்த 25 ஆம் பட்டாதாரியான "முத்து மலையாண்டி சம்பே நாயக் கன்", என்ற பாளையக்காரர், தாம், தமது மூல புருடராய், இராயர் சம்ஸ்த் தானத்து சோமதேவராயரது அரண்மனையில் அபிமான புத்திரராக வளர்ந்து வந்து 16-ம் வயதிலே ஷி இராயரால், தென்றிசையிற் கருவூருக்கு மேற்கு "நம்பிபுத்தூர்", என்னும் ஊரிலே பாளையப்பட்டில் முடிசூடப் பெற்றிருந்த, "உண்டாடி சின்னம நாயக்கர்", என்றவரை முதற்கொண்டு தம்வரையிலாக (25) இருபத்தைந்து பாளையக்காரது தோன்றல் முறைமையினையும் அவர் அவர் ஆண்டிருந்த மொத்த வருடங்களையும், வீரச் செயல்களையும் எடுத்துக்காட்டி ஈஸ்ட்டு இண்டியா துறை மக்களுக்குத் தமது வமிசாவளியைக் கூறும் துறையிலே யமைந்திருக்கிறது. இதில் இவர் ஒரேவிடத்து சுச்சுவாடி அல்லது சிஞ்சுவாடி என்று இவ்வூரின் பெயரை திரித்துக்கூறியிருக்கிறுர். ஆதலின், இதன் உண்மையான பெயரை

வாசகர் தெரிந்துகொள்ள இயலவில்லே. ஆயினும், உலகில் இது போது, “ சிஞ்சுவாடி ”, யெனச், “ சகர இகர ”, ங்கொண்ட பெயரே வழக்கத்தில் இருப்பதாகத் தெரிகின்றது. இப் பெயர் வந்த காரணம் இன்னதென விளங்கிற்றிலது. இப் பாளேயப்பட்டுக்கு உரிய கிராமங்கள் “நம்பிபுத்தூரும்”, “ கோரிக்கடவும்”, பிற கிராமங்களும் (14) ஆம் என்றுள்ளது. இதில் சாலிவாகன சகாப்தம் ஹூ ௲உ௱யிஉ (1212) முதல் ௲எளஉயிஉ (1722) ஹூ வரையிலாக இடைக்காலத்திலிருந்தவர்களின் சரித்திர வரலாறுகள் இருக்கின்றன. முற்றும் இருக்கிறது. மிகப் பிழைப்பட எழுதப் பெற்றுள் ளது. மெகென்ஸி தொரையால் சம்பாதிக்கப் பெற்றதாம். டைலர் தொரை காட்லாக்கு 369–370 ஆன பக்கங்களில் 809-ஆம் நம்பரிலே வருணிக்கப் பெற்றிருக்கின்றது. இதனைப் பழைய புத்தகப் பெயர் அட்ட வணையிலே சமச்சுவாடி பாளேயக்காரன் [சம்பே] “ சாம்ப நாயக்கன் வமிசா வளி ”, என்ப்தாக வழங்கியிருக்கிறுர்கள். மிகச் சிதிலமானது. இப் பகுதி, மற்றொரு விடத்திலே பெயர்த்து எழுதப் பெற்றுள்ளது. 1946-ம்ஹூ மேமீ 17ௗ. D. No. . நம்பரது குறிப்பினை நோக்குக. உண்டாடி சின்னம நாயக்கர் இராயர் ஸம்ஸ்த்தானத்து பாலால சித்தம நாயக்கரது பிள்ளைகள் எழுபேரில் இரண்டாம் அவரான சீத்துல முத்தைய நாய்க்கர்க்கு மகனுகப் பிறந்தவர். இவர், பிறக்கச் செய்தே தாய் இறந்தாளாகப் பசுவின் பால் தானுகச் சுருக்க எக்காலமும் பருகி வளர்ந்தவர் ஆவர். அது காரணமாக உண்டாடி சின்னம நாயக்கர் என்று வழங்கப் பெற்றனர் என்பதாகக் குறிக்கப் பெற்றுள்ளது.

No. 3132. புவனசக்கிரம்.

BUVANACAKKIRAM.

Pages, 28. Lines, 23 on a page. Condition, much injured. Extent, 740 granthas.

Begins on fol. 11(*a*) of the manuscript described under D. No. 3130. Complete.

A treatise on Cosmology as explained by Nendiśvara to Tirumūla-dēvar. of T.D.C. Similar to the work described under D. No. 2172, Vol. V. This manuscript belongs to the Meckenzie's Collection of manuscripts and is same as the work described under No. 809 of Taylor's Catalogue, Vol. III, pp. 369–370.

Beginning :

தாராபுரம் துக்குடி சக்கிரகிரி தாலூக்காவுக்குச் சேர்ந்த **மாறூரு பாளே**யத்திலே யிருக்கும் நகரத்துச் செட்டி சாதியிற் சிதம்பர தாண்டவ செட்டி குமாரன் முத்திருள [பொ](பு)லவர் இடத்தில் இருக்கப்பட்ட **புவன சக்கிரம்** என்னப்பட்ட தமிழ்க் கிரந்தத்தில் சொல்லி வருகிற வரலாறு.

நொடி ௲௱சூயி கொண்டது ஒரு நாழிகை. இப்படிக்கு நாழி(கை) யாமங் கள், நாள், மாதம், நிர்ணயப்படிக்கு மாதம் ிஉ கொண்டது ஒரு வருஷம். வருஷம் பன்னிரண்டு கொண்டது ஒரு மாமாங்கம். மாமாங்கம் அஞ்சு கொண்டது ஒரு ஆண்டு, என்று சொல்லப்பட்டது. இப்படிக்கு யாண்டு

இலட்சங்கொண்டது ஒரு யுகம். இப்படி யுகம் மிஉக்கு விபரம். அனந்தம் என்பது ஒரு யுகம். பதினறு கோடி வருஷம். அர்ப்புதம் என்பது ஒரு யுகம். பதின்மூன்று கோடி வருஷம் கொண்டது.

End

இப்படிக்கு நான்கு திசையுங் கூடப்பட்டது நவகாண்டம் எனப்பட்டது. அது ஆகாசம் சூழ்ந்து கிடக்கும், ஆகாயத்தை வாயு சூழ்ந்து கிடக்கும். அஷ்ட திக்குகளுக்கும் எட்டு பேரும், எட்டு கஜமும், எட்டு நாகமும் தாங்கியிருக்கிறபடி. இந்த அஷ்ட நாகத்தைத் தாங்கப்பட்டது "கமடம்," என்றும் ஒரு யாமை.

அண்டரண்ட பிண்டாண்ட பிரமாண்டங்களுக்கு நாயகனுய் இருக்கப்பட்ட (வர்) ஸ்ரீமந் நாராயணமூர்த்தி.

சிவன் உமையவளுக்குச் சொல்ல, உமையவள் நந்தீசுவரருக்குச்சொல்ல, நந்தீசுவரர் தம்முடைய சிஷ்யரான திருமூலதேவருக்கு அருளிச் செய்தார்.

ஷெ புவனச்சக்கிரம் என்னப்பட்ட கிரந்தத்தில் [லார்](அகப்)பட்ட பாட்டு—

திக்(ெ)கலாம் புகழுங் கலியுக மிகவுஞ்செலுத்த சம்வத்சர கணக்கு
மிக்கதோர் சக்கிரம் முந்நூற்றி இருபதினில் விகிருதி கார்த்திகையேழிற்
தக்க சுக்கிரனுள் அசுபதி தசமியத் தித்தினத்திற் சந்திரனும்
சக்கரை மொழிசேர் கோபணதுறைக்குத்தந்தனன் மகுடமும்மின்றே(க)
பாண்டியனுங் கோபணபூபாலனுக்குப் பொன் முடியும்
வேண்டு வெகுமதி கொடுத்துமேன்மைக்கு—ஆண்டி
மணியாரன் சொக்கலிங்கம்மன்று புகழ்ச்சிவலியூர்க்
கணியாரன் சாட்சி யென்பார்கள். (உ)
வீராதி சூரரும் மூவேந்தர் மற்றும் மிகவுமுள்ளோர்
தீராதனியாமுந் நீறக்கறை ? கோபண தீரனுக்கு
மாராத செம்பொன் மகுடமும் நாமமன்ருடியென்று
பேராகச் சொல்லி யழைத்தனன் பாண்டியன் பேர்பெறவே ? (ங)
துட்டர்கள் பணியும் சந்திர பாண்டியனும்
சுகிருத கோபண மகிபனுக்கு
இட்டமதாகக் கொடுத்த பொன் முடியும்
எழிற்பெறு தன்குலப் பெயருங்
கட்டளையுறத்தன் நாமமுங் கொடுத்த
கதையெல்லாம் விபரிதமாக ?
. அட்டதிக்கெங்கும் புகழுமல்ல[ெ]னும்
ஆய்ந்த செந்தமிழ் உரைத்தனனும். (ச)

(கு-பு):

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு **2172**-ஆம் நம்பரில் வந்துள்ள நூலைப் போன்றதாய், இப்புவன சக்கிரத்தில் சக்கிரம்-(மண்டலம்) அடங்கியுள்ள நவகாண்டம், எழுபெரும் புறக் கடல்கள், மேரு பருவதம் முதலான மலைகள், நதிகள், தீவுகள், தேயங்கள், மற்று காலஅளவுகள், மனிதர், தேவர், அவர் அவர் ஆயுள் முதலானவற்றை விளக்கிப் போகின்றது. இறுதியில், இந்நூல், "அண்டாண்ட பிண்டாண்ட பிரம்மாண்டங்களுக்கும்

நாயகனுயிருக்கப்பட்டவன் ஸ்ரீமன் நாராயண மூர்த்தியாவர்'', என்ற தொடர் மொழியோடு முடிவுற்றிருக்கிறது. பின்னர், இவ்விடயம் திருநந்தி தேவரால் திருமூல தேவருக்கு உபதேசிக்கப்பெற்றதாம் எனவுங் குறிக்கப் பெற்றிருக்கின்றது. நிற்க இப்பிரதிதான் தாராபுரம், துக்குடி சக்கிரகிரி தாலூக்கில் இருக்கும் மானூர்ப் பாளையம் அதில் நகரத்துச் செட்டி சாதி சிதம்பரதாண்டவ செட்டியாரின் புதல்வராம் முத்தருட்புலவரிடத்துள்ள "புவனசக்கிரம்'' என்ற செந்தமிழ் நூலின் பிரதியிலிருந்து பெயர்த்து எழுதப்பெற்றதாம், எனவும் நூலாரம்பத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது. இந்நூல் முடிவுற்ற பின்னர், கலி ஆயிரத்து முந்நூற்றிருபதாம் யாண்டான விக்கிருதி வருஷம், கார்த்திகைமீ எஉ திதி தசமி,சுக்கிரவாரம், அந்நாளிலே "சந்திரபாண்டியனூர்'', என்ற "கோபணமன்ருடியார்'', என்ற வீரருக்கு "மன்ருடியார்'' என்ற பேரும், மகுடமும் அளித்ததொரு மிகப் பண்டைய வரலாற்றையுணர்த்தும் நான்கு செந்தமிழ்ப் பாடல்கள் ஷெ பிரதியில் நின்றும் இங்குப் பெயர்த்து எழுதப்பெற்றுள என்ற ஒரு சொற்ருெடரும் காணப்படுகின்றது. முற்றும் உளது. ஆனுல், இப்பிரதி மிக எழுத்துப் பிழைகளுடன் எழுதப்பெற்றிருக்கிறது. மிகச் சிதைவுற்றதாம். இது மெகன்ஸி துரையால் சம்பாதிக்கப்பெற்றது. டைலர் தொரை காட்லாக்கு 809-ஆம் நம்பரில் (pp. 369-370) வருணிக்கப்பெற்றதே. இதற்கு மற்ருெரு பெயர்த்தெழுதப்பெற்றபிரதியும் 1946-ம் ஷு மேமீ 17உ D. No. நம்பரில் வந்துள்ளது.

No. 3133. புரவிபாளையங்கோபண மன்ருடியிடத்துள்ள ஐந்து ஜாதி அல்லது கொங்குமண்டல வரலாறு.

PURAVI PĀLAIYAṄ GŌPAṆA MANṞĀḌIYIḌATTUḶḶA AINDUJĀTI OR KOṄKUMAṆḌALAVARALĀṞU.

Pages, 8. Lines, 25–27 on a page. Condition, much injured. Extent, 140 granthas.

Begins on fol. 25(*a*) of the manuscript described under D. No. 3130.

Complete.

An account of the different 5 castes in Koṅkumaṇḍalam. The book was copied from a book of a Palliyakar Gōpaṇa Manṟādiyar of Puravipālaiyam village, Pollachi taluk near Dharapuram. (It is also called Koṅkumaṇḍala varalāṟu.) This manuscript belongs to the Meckenzies Collection of manuscripts and is same as that described under No. 809 (pp. 369) of the Taylor's Catalogue, Vo. III. It was restored in the year 1891.

Beginning :

தாராபுரம் துக்குடி [பு](பொ)ள்ளாச்சி தாலூகா. [பொ](பு)ரவிபாளையம் கோபண மன்ருடியிடத்தில் இருக்கும் [அஞ்சு](ஐந்து)சாதி வரலாறு என்ற புத்தகத்துக்கு நக்கல் :—

கொங்குமண்டலம் பூர்வ வரலாறு.

ஜமதக்கினி பகவான் என்ற இருஷியின் (பெண்சாதி) "இரேணுகா தேவி", யென்பாள் ? இந்தப் புத்திரனில்லாமல் தவஞ்செய்து

கொண்டிருக்கிற காலத்திலே மகாவீர ரிஷி வந்து [பரமேசுவரன்] ? (பரசுராமன்) என்று மழுவாயுதத்துடனே பிள்ளையாக வந்து சகல சாஸ்திரங்களுங் கற்றுப் பிரபலனாகி * * * இருக்கிற காலத்தில் இருள் வகைச் சக்கிரவர்த்தியருள்ள ஆதித்தன் வங்கிஷத்திலே உதித்த [காத்திகை வீரன்] (கார்த்தவீரியார்ச்சுனன்) என்பான் வந்து உள்ள ராசாக்களை வெட்டி இரத்தம் எல்லாம் ஒரு குண்டலத்திலே விட்டு முழுகி எழுந்திருந்தான். பர[மேசுவரன்] சுராமன் இது கண்டு, பயந்து, உண்டான [காத்திகைவீரனை]? கார்த்தவீர்யார்ச்சுனனை ஜயித்துப் பரசுராமருக்கு அடிமை புகுந்தார்கள். அடிமை புகுந்த அரசமக்கள் அக்கினிகுண்டத்துக்குக்காவலாக இருந்தார்கள், இந்த அக்கினி குண்டத்துக்குக் காவலுமிட்டு வாறக வனத்திலே ? [பரமேசுவரன்] (பரசுராமர்) சிறிது காலம் எழுந்தருளியிருந்து வைகுண்டத்துக்கு எழுந்தருளி வருகிற தருவாயிலே அக்கினிச் சாலையைக் காத்திருந்த அரச மக்களை அக்கினி விஷமர் என்று பே[ர்]ரிட்டார். அப்போது அடியெங்களுக்கு இருக்கிறத்துக்குத் தேசம் வேணும் என்று கேட்டுப் [பரமேசுவரன்] ? பரசுராமன் ஓமத்திரவியங் கொண்டுவந்து சுளகையெடுத்துத் தெற்குநோக்கி எறிநதார். அப்போது, சமுத்திரம் ஆயிரத்து நூற்றுக்காதம் வாங்கிப்போய் விட்டது. இந்தப்பூமி உங்களுக்கு (உரிய) தேசம் என்று கற்பித்து அக்கினி காரியம் வழுவாமற் செய்து பிராம்மணரையும், குருவையும், தெய்வத்தை யும், பேணுங்கள் என்றும், பெண் கொலை வேண்டாம் என்றுங் கற்பித்து வைகுண்டம் ஏறப் பரசுராமன் எழுந்தருளியிருந்த கற்பனைபடிக்கு இராச்சியம் செய்து "**சேரமண்டலம்**", என்று பேரானது. இதுக்குச் சிறப்புப் பெயர். சேரமான் பெருமாளுக்குக் கொங்கர் என்று பேர். அந்த முன்னிலையிலே "கொங்குமண்டலம்" என்று பேர் நடந்து வந்தது. இப்படிக் கொத்த கொங்குமண்டலத்துப் பெருமை வரலாறு.—பவானி நொய்யில், காவேரி, ஆண் பொருந்தல், ஆளியாறு, திருமணிமுத்தாறு, தொட்டையாறு, ஆக நதிகள் (எ.) ஏழு, ஆம். சிவாலயத்து வரலாறு—கருவூர், வெஞ்சை மாக்கூடல், கொடுமுடி, திருநண்ணுவி, திருமுருகன் பூண்டி, அவிநாசி, பேரூர். ஆகத் திருப்பாட்டு பா[டு](ட)ல், பெற்ற திருப்பதிகள் (எ.) ஏழு. ஏழுநதியும், ஏழு படைவீடும் உண்டானபடியினாலே கொங்குமண்டலம் "ஏழுகரைநாடு", என்று சொல்லப்பட்டது. * * * *

* * * * * * * *

ஆகக் கொங்குமண்டலம் நாற்பத்திரண்டு நாடு. இந்த நாட்டில் மிகுந்த நாடு பூந்துறைநாடு. இப்பூந்துறையைப் பட்டணமாகச் செய்துகொண்டு சேரமான் பெருமாள் இருந்து இராச்சியபாரம் செய்துகொண்டிருந்தார். இப்பால், வேறு :—

தொண்டைமண்டலத்து, கொத்தப்ப நாட்டு உடுப்பூரிலே வேடர் நூற்றறுபதினாயிரம் பேர் ஒக்கவிருந்து வேட்டையாடி திருக்காளஹஸ்தியில் பொன்முகரீ (சுவர்ணமுகரீ) ஆறுசூழ்ந்த மலையிலும் மிருக வேட்டையாடி இருப்பார்கள். இந்தப் புலிவேடரில் "**நாகன்**", என்று ஒரு வேடன் பெண்சாதி தத்தை யென்பாள். * * * * *

* * *

End :

கொங்கு மண்டலத்துப் பூர்வ வரலாறுவது :—பரசுராமர் சமுத்திரத்துத் தண்ணீரை ஆஜ்ஞையினாலே யகற்றிச் சேரமான் பெருமாளுக்குக் கொடுத்த பூமி கொங்கு மண்டலம். இதற்குப் பூர்வம் சேரமான் பெருமாள் சேரன், சோழன், பாண்டியன், இந்த மூன்று இராசாக்களு[க்கு]ம் இராச்சியம்செய்து மகாமேருவிலே சோழன் புலிக் கொடியை யெழுதினான். பாண்டியன் மீனக் கொடியை யெழுதினான். சேரன் விற்கொடியை யெழுதினான். இப்படியே மகாமேரு அளவுக்கும் ஆண்டார்கள் [மூன்று பேரானவன்]. விருமவங்கிஷத்து மகாவிருஷி புத்திரனானவர்கள் நாலுபேர் உண்டு. கலியாண வாசலுக்குக் கணக்கு எழுத கண்டீசுவரனைக் கொண்டுபோய் வைத்தார்கள். அமராபதி பட்டணத்திலே தேவேந்திரன் வாசலுக்குக் கணக்கு எழுதும்படிக்கு யியமதறகாரனென்கிறவனை வைத்தார்கள். தன்மபுத்திரன் என்கிற பட்டணத்திலே யியமருசன் ? வாசலுக்குக் கணக்கெழுதும்படிக்குச் சித்திரபுத்திரனை வைத்தார்கள். பூலோகத்திலே சேரன் சோழன் பாண்டியன் இவர்கள் மூன்று பேருக்கு வாசலுக்குங் கணக்கெழுதும்படிக்குத் திருக்கருணன் என்பானை வைத்தார்கள். திருக்கருணன் பிள்ளைகள் பூலோகத்துக்குக் கணக்கெழுதும்படிக்கு வைத்தார்கள் என்றவாறு :—

(கு - பு).--

இது, கொங்கு மண்டலத்தின் ஆதி வரலாறு உணர்த்தும் ஒரு நூலாம். இம் மண்டலத்தில், முதன் முதலில் "சேரமான் பெருமாள் சேரர்", என்பவர், கொங்கு நாடுகள் (42) நாற்பத்திரண்டினுள், பூந்துறை நாட்டிற், "பூந்துறை", என்பது மிகச் சிறந்ததா யிருந்தமைபற்றி அதனையே தமக்குரிய முக்கிய பட்டணமாகக் கொண்டவராய் ஆட்சிபுரிந்திருந்தனர். அங்ஙன் அவர் ஆட்சி புரிகையிலே அவர், தொண்டை மண்டலத்துக் கொத்தப்பநாட்டு, உடுப்பூரில் வாசஞ் செய்துகொண்டிருந்த "திண்ணன்". என்ற கண்ணப்ப நாயனரது காளஹஸ்தீசுவரர் திறத்திற் செய்த அடிமைத்திறனைச் செவியுற்றுத் தமது பரிவாரத்துடனே வந்து "காளகத்திநாதனை வணங்கி வழிபட்டுப் பின்னர், அங்கிருந்து கண்ணப்ப நாயனரது திருக்குடியிலிருந்து (14) பதினாலாயிரம் வேடர்ச் சாதியினரைக் கூட்டிவந்து தமது நாட்டிலே குடியேற்றுவித்தார். அக் குடியில், ஒரு சிலரை நித்தியக் கட்டளையில் ஒருநூற்றறுபது கலப்பூவெடுக்கும் தமது பூந்தோட்டத்துக் காவலாக வைத்தும், சிலரை ஊர் வழிப்பாட்டையிற் கள்ளர் முதலானோரைக் கண்டுபிடித்து ஒறுக்கக் காவலாக வைத்தும், மற்றுச் சிலரைத் தமக்கு மெய்க்காப்பாளராகவும் வைத்துக்கொண்டு சிறிதும் நீதிகுன்றுமல் அரசு செலுத்தினர். பூந்தோட்டக் காவலர் பூவலவர் - மெய்க்காப்பாளர் (பாடிகாவல்) காவலவர் ; கள்ளர்களை தேடி யொறுத்து வெட்டுபவர் வேட்டுவர் ; என்னப் பெற்றனர். பூவுலவர் ? காவுலவர் ? என்று காணப்பெறுபவை, அவையிற்றின் திரிசொற்போலும் காணப்படுகின்றன.

பின்னர், இக்கொங்கு மண்டலத்தில், வீரராசேந்திர சோழன்," என்னும் அவர், படையெடுத்துவந்து சேரமான் பெருமாளைப் போரில் வென்று

ராய், "வீர சோழவளநாடு", என்ற ஊரையும் ஏற்படுத்தி, இங்கு "வீர சோழீசுவரமுடையான்", என்ற ஒரு சிவலிங்கம் பிரதிஷ்டை செய்தனர். தன் நாடான தஞ்சையை விட்டுவந்து தமக்குப் படைவீடாகக் கருவூரைக் கொண்டு அரசு செலுத்தி வந்தார். இம் மரபில், வீரசோழன், விக்கிரம சோழன், குலோத்துங்க சோழன், இராசேந்திர சோழன், உத்தம சோழன், கரிகாற் சோழன் என்றிச் சோழமன்னர் தோன்றினர்கள். அதற்குப் பிறகு, இம் மண்டலத்திற் பாண்டிய மன்னர்கள் தோன்றியவர்களில் வீர பாண்டியன், சுந்தரபாண்டியன், திரிபுவனசக்கிரவர்த்தி, கோச்சடையப்பன், மாறன், கோனேரின்மைகொண்டான் என்ற இம் மன்னர் ஆட்சி புரிந்த னர். அதற்குப்பின், அம் மூன்றுகுடிக்கும் உரிய பெருமாள் என்ற பாண் டியன் தோன்றி அரசுசெலுத்தி "கொங்கேற் பெருமாள்" என்று பேர் பெற்றிருந்தனர். இப் பாண்டிய மன்னர், மேற்கூறிய பூவுலவர், காவுல வர், வேட்டுவர் தாம் தமது ஒழுக்கங்குன்றியிருந்து கள்ளுங் கறியும் உண்டு அஞ்சுமணிக் கோவணமுங் கொண்டிருந்தமைபற்றியவர்களைக் காவலில் நின்றும் விலக்கிப் பாண்டி மண்டலத்திலிருந்து பாலைக் குடியில் பாலைக் கூட்டத்தில் சில வேளாளரையும் குடியேற்றிவைத்து ஒக்கலரை ஏற் படுத்தினர். அவர்களுக்கு விடுதிகளை தென் [பொங்கலூர்] (பெங்களூர்)க் கால்நாட்டுத் திருமணிப் பருத்தியூரிற் சேர்ந்த சேதிமலையிலே ஏற்படுத்தி னார்கள் என்றும், ஆக வேளாளர்ச்சாதி, ஐந்தாம். அவை ஆவன (1) தென் றலை வேளாளர், (2) செந்தலை வேளாளர், (3) காவலவர், (4) பூவலவர், (5) வேட்டுவர் என்பன. இக் கொங்குநாடு அல்லது சேரநாடு முன்னம், சேரமான் பெருமாளுக்குப் பரசுராமரால் சமுத்திரத்தை யப்புறப்படுத்தி யளிக்கப் பெற்றதாம். இதில், மும்மண்டல முடிமன்னரும் மேருமலை யளவாக அம்மலையில், சேரன் வில்லுக் கொடியையும், சோழன் புலிக் கொடியையும், பாண்டியன் மீன் கொடியையும் பொறித்துப் போந்தனர் என்றின்னோரன்ன இக்கொங்கு மண்டலத்தின் பண்டைய அருமை பெருமைகள் பலவும் கூறப்பெற்று மிளிர்கின்றன. ஆகவே, இந்நூல், சரித்திர நூலாராய்ச்சியாளருக்கு மிக ஊதியம் பயக்கும் எனக் கூறுவது மிகையாகாது. இது மெகென்ஸி தொரையால் சம்பாதிக்கப்பெற்றதாகும். இதுக்கு "ஐந்து சாதி வரலாறு" என்ற குறியீடுங் காணப்படுகின்றது. மற்று கொங்கு மண்டல வரலாறு என்றுலும் பொருத்தமாம். டைலர் தொரை காட்லாக்கு 369-ஆம் பக்கம், 809-ஆம் நம்பரில் வருணிக்கப்பெற் றிருக்கிறது. முற்றும் உள்ளது. மிக எழுத்துப் பிழையுடனிருக்கிறது. மிகச்சிதிலமானது.

No. 3134. ஆவுடையார்ப்புரம் பாளையக்காரர் வமிசாவளி [மல்லராசன் வரலாறு ?]

ĀVUḌAIYĀRPPURAM PĀḶAIYAKKĀRAR VAMIŚĀVAḶI [MALLARĀJAN VARALĀṚU]

Pages, 16. Lines, 22 and 23 on a page. Condition, much injured. Extent, 250 granthas.

Begins on fol. 29-*a* of the manuscript described under D. No. 3130.

Complete.

A genealogical account of the Palaiyakkārar [Malla Rājan] of Āvuḍaiyārpuram Palaiyam near Dhārāpuram.

Beginning :

ஆவுடையார்புரம் பாளையக்காரர் வமிசாவளி.

பூர்வத்தில் வெகுநாளாய்ப் பாளையப்பட்டாயிருந்து சிறிது நாள் பாளையப் பட்டு எடுபட்டுப்போய் இருந்தது. அப்புறம் சாலிவாகன சகாப்தம் ௲௩௱-க்கு சித்தார்த்தி வருடம் எங்கள் வமிசத்தில் ஒருத்தர் மதுரைக்குப் போய் அக் காலத்துக்கு மதுரை சமஸ்த்தானதிபதியான "வரகுணராம சிந்தாமணி பாண்டியராசர்" அவர்கள் இடத்திற்போய்ப் பேட்டி பண்ணிக்கொண்டு * * அறியப் பண்ணிக்கொண்டது என்னவென்றால் * * *

* * * * * * * *

End :

* * * * சித்திரபுத்திர தேவனுக்கு ஆண் சந்ததியில்லாத படியினாலே அவருடைய சகோதரர் கல்லியாணம் பண்ணிக்கொண்டிருந்த இராமசுவாமி தேவனைச் சித்திரபுத்திர தேவனுக்கு அவசான காலத்திலே தருவித்து நீ யெனக்குத் தாயாதியானவன் அதுவல்லாமல், மாப்பிள்ளை யானபடியினாலேயும், நமக்கு ஆண் சிசு இல்லாதபடினாலேயும், உமக்குப் பட்டங்கட்டுகிறோம் என்று சொல்லிப் பட்டங்கட்டிப் போட்டுப் போனார்கள். அது முதற்கொண்டு இந்தப் பதினாலு வருஷமாய்க் [கும்பிணி](கம்பெனி)க்கு உண்டான தோபா கொடுத்துக்கொண்டு பாளையப்பட்டு அனுபவித்துக் கொண்டு வருகிறேன். * * * * * * *

(கு. - பு).—

இது, தாராபுரம் சமீபத்தில் உள்ள ஆவுடையார்ப்புரம் பாளையக்காரராம் சித்திரபுத்திர தேவரது சகோதரரான இராமசுவாமி தேவன் என்பவர், தாம், தமது வமிசாவளியைத் தெரிவிக்குந் துறையிலே யிருக்கிறது. இவர் தம் முன்னோரான வரகுணராம சிந்தாமணிபுலித் தேவர் என்பவர், மதுரை மன்னர். வரகுணராமசிந்தாமணி பாண்டியனரது சமுகத்துக்கு தன் குறைகளை யறிவித்திருந்து ஷ மன்னரது ஆணையால் 16 அடி நாகபருவதத்தில் இருந்த ஒரு கடும்புலியைக் கட்டாரியினாற் குத்திக் கொன்றுபோட்டு, அதனால, "வரகுணராமசிந்தாமணிபுலித்தேவன்," என்ற அப்பாண்டியன் பெயரையே துணைப் பெயராகப், பெற்றிருந்து வச்சிரப் பல்லாக்கு முதலான பல வெகுமதியும் பெற்றார். பின்னர், இவரது புதல்வர் "வடக்காத்தான்புலித் தேவன்" என்னும் அவர், சா. சகம் 1346-ஆம்ஸ்ரீ பர்ண்டிய மன்னரது அரசாட்சி வீழ்ந்துபோய் இராயர் சம்ஸ்தானத்துக்கு உரிய "நாகம நாயக்கனரது" அண்மையில் அமர்ந் திருந்து ஊழியஞ் செய்து வந்தார். பின்னர் விசுவநாத நாயக்கரது ஆட்சி யிலும், அரியநாயக முதலியார் அவர்கள் தளகர்த்தராய்ப் பிரதானியர்

யிருக்கையில், அவரையும் பேட்டிகண்டு தன்னை அறிமுகப்படுத்தி அவர் மூலமாக விசுவநாத நாயக்கரது அருள் நோக்குக்கு இலக்காயிருந்தனர். இருந்து, மதுரைக் கோட்டைக்கு வடவண்டையில் **திருமஞ்சன தர்வாசா வுக்கு?** கிழக்கு முதல் கொண்டு வலமாக இருபத்திரண்டாங் கொத்தளம் வரையில் காவற் காத்துக்கொண்டிருந்தனர். பின்னர், 10-ஆம் பட்டக் காரரான **காத்தப்புலித் தேவன்** நாளில், கர்னுடக அரசாட்சி **வீழ்ந்து**போய், துருக்கர் துரைத்தனமாய் பெரிய நவாபு "மாபூசுல்தான்," என்னும் அவர் இவர்மீது மிக்க தயை அருள் செய்திருந்தார். அதுகொண்டு "மகமத் அல்லீகான்," அவர்கள், மகம்மது "**ஈஸபல்கானை**"த் தூண்டி யனுப்பி போர் புரியச்செய்து பாளையபட்டத்தில் நின்றும் நீக்குவித்தாராகப் புலித் தேவன், இராமநாதபுரத்தில் சில நாள் வரை தங்கியிருந்தார். பிறகு, மேற்சொன்ன **ஈசபல்கானுக்கும்** "**நபாபு சாயுபு**," அவர்களுக்குஞ் சிறிது மனஸ்தாபம் நேர்ந்திருந்தது. அப்போது ஷ நவாபு சாயபு அவர்கள் இப் புலித்தேவரைச் சென்னைக்கு அழைத்துக்கொண்டுபோய் அருகில் அமர்த்திக்கொண்டார்கள். கொண்டு, "நவாபு சாயபு," அவர்கள் அம் மகமது "ஈஸபல்கான்," மீது தண்டெடுத்துவந்து மதுரைக் கோட்டையை முற்றுகை யிட்டாராய் "ஈஸபல்கானை," சிறைப்படுத்தியும், மற்றுச் சில பாளையக்காரர்களையும் தளவாய்களையும் **பாளையங்கோட்டையிலே** சிறையிலே பிடித்துக்கொண்டு போனுர்கள். நிற்க, மேற்கூறிய காத்தப்பபுலித்தேவர் மிகப் போர் வீரராயிருந்ததோடு மகா சிவபக்தராயும் இருந்தார். நித்தம் மகா நியமநிஷ்டையும் புரிந்திருந்தாராய்ப் பெரும் வள்ளலாகவும் இலங்கினுர். இவர் நாடோறும் சிவவழிபாடு செய்து, பின், சிவன் அடியார்களை வெள்ளியாதனத்தின்மீது இருத்திப் பொற்பூவாலும் வெள்ளிப்பூவாலும் பூசித்து வந்தவர் ஆவர். ஆந்திரங் கற்றுக் கவிவாணராகவுமிருந்தார். தமது வாழ்நாளில் ஒரு நாளையும் வீண்நாளாகக் கழித்தவர் அல்லர். எப்பொழுதும் வித்தியாப் பிரசங்கத்துடனேயே இருப்பர். அங்ஙன் ஆக, இம் மகானுபாவர் தமது பதினெட்டாம் பிராயம் தொடங்கியே வாழ்ந்து வந்தார் என்பது. இங்ஙன் இருக்க இவர் மீது, **சிவகிரிபாளையக்காரர்** அழுக்காறுகொண்டு மூவாயிரம் போர் வீரருடன்வந்து இவர் நாட்டு, மாடுகளை யெல்லாங் கொள்ளையடித்துப் போனுர்களாம். (இதுவே நம் தமிழ் நாட்டுப் போர் முறையில் பண்டைய வழக்காறு போலும்). அத்தருணம் இவர், தன் 'பாலா'வை யெடுத்து நூற்றைம்பது போர்வீரர் புடைசூழ்ந்துவரச் சென்று அச் சிவகிரியானைத் துரத்திக்கொண்டுபோய்க் கிரீடியை யொத்துப் போர் புரிந்தாராய்ப் பகைவரை வெட்டித் தள்ளிப்போட்டு "வாசுதேவ நல்லூர்," முதற்கொண்டு அச் சிவகிரிக்கோட்டை வரைக்கும் பிணக்குவிய லாக்குவித்துத் தமது ஆநிரையை மீட்டுக் கொண்டுவந்து வாகைபுனைந்தார். அதன் பின்னர், அங்ஙனுக இவர் மீது, "ஈசபல்கான்," என்னும் போர் வீரரும், படையெடுத்து வந்து பாளையக்காரர் (40) நாற்பதினுயிரவரையும், மலையாளியினர் (5) ஐயாயிரம் பேர்களையுந் துணையாகக்கொண்டு போர் புரிகையிலே இப்புலித் தேவரும், ஒரு மண் கோட்டையிலே தங்கியிருந்து ஒரு மூன்று வருட காலம் வரையிலும் நாடோறும் இரவு பகலாய்ப் போர்

புரிந்து பகைவரை விழக்காட்டினார். இங்ஙனமாகப் பகைவருடன் போர் புரிந்து ஒரு தனி வீரராயிருந்து மொத்தம் (42) நாற்பத்திரண்டு வருடம் பட்டமாண்டார். இவரது, புதல்வரே "சித்திரபுத்திர தேவன்," என்ற (11)-ஆம் பட்டக்காரர் ஆவார். இவர், திருநெல்வேலியில் அதிகாரியான "சயிது மகம்மதுகானை" யணுகித் தமது குறையெடுத்து உணர்த்தி அவர் மூலமாய் நவாபு சாகிப்பிடமிருந்து உத்தரவாய்த் தமது தந்தையார் காலத்துப் போயிருந்த ஆவுடையார்புரத்து அதிகாரத்தை மீட்டுக்கொண்டிருந்தார். இவர் மீதும் அச் சிவகிரியான் பாளையக்காரர் அழுக்காறுய் மீட்டுமொருமுறை படையெடுத்துப் பாளையப்பட்டைத் தம் வயமாக்கிக்கொண்டனர். அக்காலத்திலே ஈஸ்டு இண்டியா கம்பெனி துரையாளரது துரைத்தனமாகியிருந்தது. அவ்வமயம் இத் தேவர், "திருநெல்வேலி கலெக்டர்," "அறவான் சாகிப்," பிரபுவினிடம் விண்ணப்பித்து அவர் தயவால் ஷை சிவகிரியான் பாளையக்காரரிடமிருந்து தமது பாளையமான ஆவுடையார்புரமதனையும், மற்று, கூடலூர், பனையனூர், தாறுகாபுரம், பட்டக்குறிச்சி என்ற கிராமங்களின் அதிகாரத்தையும் பெற்று வாழ்ந்துவந்தார் என்று இன்னோரன்ன பண்டைய சரித்திர வரலாறுகளையும், தமது தோன்றல் முறைமையினையும் உணர்த்திப் போகிறார். முற்றும் உள்ளது. மிகப் பிழையுடன் இருக்கிறது. மிகவுஞ் சிதைவுற்றுள்ளது. இது மெகென்ஸி தொரையால் ஈட்டப்பெற்றது. டைலர் தொரை காட்லாக்கு 369-ஆம் பக்கம் 809-ஆம் நம்பரிலே வருணிக்கப்பெற்றிருக்கிறது. இப்பிரதியைப் பெயர்த்தெழுதிய மற்றொரு பிரதியும் உண்டு. முதலில் பேரேட்டில் ஆங்கிலத்தில் மல்லராசன் கைபீயத்து எனக் குறித்திருக்கிறது ? தவறு.

No. 3135. மறுதுரைக் கிராமம் ஆலாலசுந்தர பண்டிதர் வமிசாவளி.

MAṚUTUṚAIKIRĀMAM ĀLĀLASUNDARA PAṆḌITAR VAMIŚĀVAḶI.

Pages, 8. Lines, 23 on a page. Condition, much injured. Extent, 150 Granthas.

Begins on fol. 38-*a* of the manuscript described under D. No. 3130.

Complete.

A genealogical account of Ālālasundara Paṇḍitar of the village of Maṛutuṛai in Gāngēyam taluk near Dhārāpuram.

Beginning :

ఆగమశాస్త్ర ఆలాలసుందర పండితుల వైపీమతం.

தாராபுரம் துக்குடி காங்கேயம் தாலூக்காவுக்குச் சேர்ந்த மறுதுறை கிராமத்திலே யிருக்கும் ஆலாலசுந்தர பண்டிதர் என்னப்பட்டவருடைய வமிசாவளி முதலான வரலாறு, என்னவென்றல்,—

பூர்வத்தில் சுந்தரமூர்த்தி யென்னப்பட்டவர் தேவதா பிரயாசையினாலே திருநாவலூரில் கௌசிக கோத்திரத்தில் சடையன் நம்பியார் என்னப்பட்ட

சிவப்பிராம்மணன் சாதியில் இருக்கப்பட்டவருக்குப் புத்திரனாக அவதரித்து "சுந்தரமூர்த்தி," யென்னப்பட்ட பேர் பிரசித்திபட்டு ஈசுவரர் வரப்பிரசாதத்தினாலே சிவமூல்லியமாய்த் தேவாரம் என்னப்பட்ட பாட்டுகள் (கவிகள்) அநேகமாய் ஸ்தலங்களிலே யெல்லாம் சொல்லப்பட்டவராய்ச், சேர மண்டலத்தில் சேர ராஜாவையும் கைகொண்டவராய்ப் போதையுடனே கைலாசத்துக்குப் போனார். அக்காலத்துக்குக் கலியுக சகாப்தம் கூாடு௵ 905-ஆம் ௵ சுந்தரமூர்த்தி கைலாசத்துக்கு எழுந்தருளுங் காலத்திலே தன்னுடைய சிறு[தோ](த)கப்பனார் பிள்ளை பிரம்மநாதய்யன் என்னப்பட்டவருக்குத் தம்முடைய பேர் பூலோகத்திலே விளங்கத்தக்கதாக உபதேசங்கள் சமய விசேஷ ஞான நிர்வாணம் முதலான தச தீட்சாவிதியும் உபதேசஞ் செய்து பட்டாதிகாரியாய்க் கும்பாபிஷேகஞ் செய்து வமிச பரம்பரையாய் "ஆலாலசுந்தர பண்டித நாயனார்," என்னப்பட்ட நாமதேயம் வைத்தபடியினாலே வமிச பரம்பரையாய் ஆலாலசுந்தர பண்டிதர் என்னப்பட்ட நாமதேயம் வரப்பட்டது. * * * * * * *

சாலிவாகன சகம் ௲௭௱அ (1708-ஆம்௵) பிரபவ௵ என் தகப்பனார் ஆலால சுந்தர பண்டிதர் நாள்வரைக்கும் பட்டம். அவர் அவர்களது சரியைகள் இதன்கீழ் எழுதிவருகிறது.

End :

அந்த நாள் முதல் பக்தியுடனே சிவபூசை பண்ணிக்கொண்டு மறுதுறையிற் குடியிருப்புக்காரனாய் இருக்கும் நாளையில் சாலிவாகன சகாப்தம் ௲௭௱உ௰சூ௵ (1726) இரத்தாட்சி௵ ஆடிமீ ௰௩௨ நான் பண்ணிக் கொண்டுவந்த சிவபூசா மடத்திலே ஆத்துமார்த்த உடையவர் முதலானதும் ஆபரணங்கள் முதலானவையும் திருடன் கொண்டுபோய்விட்டபடியினாலே அந்த நாள் முதல் அந்த சிவலிங்கம் இல்லாமல் தீர்த்தபானமும் பண்ணுகிறதில்லை யென்று ஒரு பட்சம் (பதினைந்து நாள்) தீர்த்தபானம் இல்லாமல் இருந்தபடியினாலே ஆடிமீ உ௰அ-ம் தேதி நாள் அந்த ஆத்துமார்த்த இலிங்கம் தற்செயலாய் பூசைபெட்டி சம்புடத்தில் காஞ்சிமா நதிக்கரையில் சுவாமி தயவாய்ப் பெரியவர்கள் தெய்வ பிராம்மணர்கள் அனுக்கிரகத்தினாலே வந்து இருந்து சகலமான பேரும் அறியத்தக்கதாய் வந்து சுவாமி தரிசனமாயிற்று. அந்த நாள் முதல் சிவபூஜை பண்ணிக்கொண்டு மடாதிபதியாய் மறுதுறை குடியிருப்புக்காரராய் இருக்கிறேன்.

(கு. - பு.).—

இது, மறுதுறை கிராமத்தில் வசித்துவந்த ஆலாலசுந்தர பண்டிதர், சுந்தரமூர்த்திசுவாமிகளது மரபிலே, முதல் மடாதிபதியாய்ப் பட்டம் கட்டப் பெற்று, "ஆலாலசுந்தர பண்டிதர்," எனப் பட்டப் பெயரும் சமய தீட்சையும் ஷ சுந்தரமூர்த்திசுவாமிகளால் பெற்றிருந்த "பிரம்யநாதையர்," என்பவரை முதற்கொண்டு தம் வரையிலாகப் பதினாறு (16) மடாதிபதிகளினுடைய வாலாறுகளையும் அவர் அவரது ஒழுக்கங்களையும் கம்பெனி துரை மக்களுக்கு எடுத்து உணர்த்துந் துறையிலே அமைந்திருக்கின்றது. முற்றுமிருக்கிறது. எழுத்துப்பிழைகள் மிகவுள. மிக சிதையப்பெற்றிருக்கிறது.

45

டைலர் தொரை காட்லாக்கு 369–70-ஆன பக்கங்களிலே 809-ஆம் நம்பரில் வருணிக்கப்பெற்றுள்ளது. இதில், "சுந்தரமூர்த்திசுவாமிகள் தாம் கலியுகாப்தம் (கூாடு) (905) வருடத்தில் சேரமண்டலத்து சேரமான் பெருமாளேயும் உடன் அழைத்துச்சென்று கைலாயபதம் ஏறினர்," என்றது விளக்கமாகின்றது.

No. 3136. மறுதுறை கிராமத்துச் சைவ மடாதிபதி ஆலால சுந்தர பண்டிதர்க்குரிய பூதான சிலாசாஸனம்.

MARUTURAI KIRĀMATTUCCAIVA MAṬHĀDHIPATI ĀLĀLASUNDARA PAṆḌITARKKURIYA BHŪDĀNA ŚILĀŚĀSANAM.

Pages, 2. Lines, 22 on a page. Condition, much injured. Extent, 28 Granthas.

Begins on fol. 42-*a* of the manuscript described under D. No. 3130. Complete.

Inscription on stone of the Śaiva Maṭhādhipathi Ālālasundara paṇḍitar in the village of Maṟuturai Koṅkunāḍu. Gāṅgeyam taluk near Dhārapuram.

Beginning :

மறுதுறை கிராமத்திலே யிருக்கும் ஆலாலசுந்தர பண்டித நாயனுருக்கு மறுதுறை கிராமத்திலே நடந்துவந்த பூமிகளுக்குச் சிலாசாஸனத்துக்கு நக்கல் :—

ஸ்ரீமன் கிருஷ்ணராயர் காரியத்துக்குக் கர்த்தரான கொண்டம நாயக்கனுக்குச் செல்லாநின்ற தாதுவூ வையாசிமீ உயவ. காங்கேய நாட்டு மறுதுறையில் ஊரும் ஊரானவரும் நம்முடைய தம்பிரானுர் பட்டியாருக்கும் ஊரில் ஆலாலசுந்தரபண்டித நாயனுருக்கு நொய்யிலாற்றுக்கு வடகரையில் குளமும் எங்கள் முதன்மையில் சொவந்திரமும் கல்லணை நீர் போக்கி அக்கரையில் பாதியினில் அளவாக அதில் மாவடை மரவடையும், பட்டியாருக்கு ஒன்று பாதியும், ஆலாலசுந்தர பண்டித நாயனுருக்கு ஒன்று பாதியுமாகக் கொடுத்தோம்.

End :

கல்லணை நீர் போக்கிக் கரையில் பாதிநில அளவாக அதில் மாவடை மரவடையும் பட்டியாருக்கு ஒன்று பாதியும் ஆலாலசுந்தரபண்டித நாயனுருக்கு ஒன்று பாதியுமாகக் (கொடுத்தோம்).

(கு. - பு.).—

இது, மறுதுறை கிராமத்தில் இருந்த சைவ மடாதிபதி சுந்திரமூர்த்தி நாயனாது மாபில் உதித்த ஆலாலசுந்தரபண்டிதருக்கு உரிய, பூந்துறை கிராமத்தில் பூதான சாஸனமொன்றினை யெடுத்து உணர்த்துகின்றது. இச் சாஸனம், கிருஷ்ணதேவராயரது காரியக்காரராகிய கொண்டம நாயக்கரது காலத்தே ஷை நாயக்கராலும் ஊராராலும் சேர்ந்து அளிக்கப்பெற்றதாகும்.

இது செம்பினுங் கல்லினுமாக வெட்டப்பட்டதென்று இதிலிருந்து விளக்க மாகின்றது. முற்றும் உள்ளது. இறுதியிற் காணப்பெறும் பகுதி, மீட்டும் எழுதப்பெற்றது. எழுத்துப்பிழையுடன் உள்ளது. சிதைவு உள்ளது. இத்தானசாஸனம் வாங்கின பண்டிதர், எத்துணையாம் பட்டதாரியோ? இதில் அது விளங்கவில்லை. இது, டைலர் தொரை காட்லாக்கில் 809-ஆம் நம்பரில் (369–70-ஆம் பக்கம்) வருணிக்கப்பட்டிருக்கும் புத்தகத்தில் அடங்கினதாம். ஆனால் அதில், ஷ துரையாளர் இதன் பெயரைக் குறிக்காது விடுத்திருக்கின்றனர். யாது காரணம்பற்றியோ?

No. 3137. சிவகிரி சுப்பிரமணியசுவாமி தல வரலாறு.

SIVAGIRI SUPPIRAMAṆIYASUVĀMI TALA VARALĀṞU.

Pages, 10. Lines, 19 on a page. Condition, very much injured. Extent 150 Granthas.

Begins on fol. 44-*a* of the manuscript described under D. 3130.

Complete.

A legendary account of the temple of the God Subrahmaṇiya, worshipped in the village of Sivagiri, Erode taluk, Coimbatore district. This manuscript belongs to the Meckenzie Collections, and is similar to th? work described under No. 809, pp. 369–70 of Taylor's Catalogue, Vol. III.

Beginning :

கோயமுத்தூர் ஜில்லா, ஈரோடு தாலூக்கா, **சிவகிரி சுப்பிரமணியசுவாமி** ஸ்தல வரலாறு ஆதி முதல், அந்தம் வரைக்கும் ஷ ஸ்தலத்தார் எழுதிக் கொடுத்த கைபீயத்து. என்னவென்றால்,—

நைமிசாரண்யத்திலே சகலமான ரிஷிகளும், சூதரைப்பார்த்து, ப[ச்ச](ச்சிம) பில்வாரண்ய ஸ்தலம் ஆத்யம் முதல் சுப்பிரமணியசுவாமி வந்த பிரகாரமும் இது முதலான மகிமைகள் எல்லாம் வித்தாரமாகச் சொல்லச்சொல்லிக் கேட்டவிடத்தில் சூதர் சொல்லுகிறபிரகாரம். பூர்வம், காலாந்திரத்திலே கைலாசபருவதத்திலே பரமேசுவர தரிசனார்த்தமாகப் பிரம்மாதி தேவதைகள் வந்து ஓராறொரு பலத்தை (பழம்) காணிக்கையாக வைத்துப் பிரதட்சிண நமஸ்காரங்கள்பண்ணி ஸ்தோத்ரம் பண்ணுகிறபோது சுப்பிரமணியரும் விநாயகரும் இந்தப் பலம் உனக்கு எனக்கு என்று சண்டை பண்ணிக்கொண்டார்கள். * * * * * * *

End :

பின்னையும் முசுகுந்த சக்கிரவர்த்தி, பூருவம் பிராம்மணர்களை உதாசீனம் பண்ணி அவமானம் பண்ணினதினாலே சிறிது நாள்வரை இராச்சியம்விட்டு அலைந்து இந்தப் பில்வாரண்ய ஸ்தலம் வந்து சேர்ந்து சிறிது நாள் தபசு பண்ணிச் சுவாமியைப் பூசை பண்ணினார். அது[வும்](வின்) பேரிலே

பிராம்மணுவமான பாபம் பரிகாரமாய்த் தம்முடைய இராச்சியத்தை யடைந்து சுகித்திருந்தார். பிள்ளையும் [பெற கஸ்துதி] (பிருகஸ்பதி) புத்திரன் கசன் பில்வாரண்யத்திலே தபசுபண்ணிச் சுக்கிராசாரியரிடத்திலிருந்து மிருத சஞ்சீவினியை இந்த விடத்திலே யடைந்தாண்.

அதற்குப் பிற்காலம் காலாந்திரங்களிலே யிருக்கப்பட்ட இராசாக்கள் ஷெ தேவஸ்த்தானத்துக்குத் திருப்பணி முதலானவைகள். ஜீர்ணோத்தாரம் முதலானவை பண்ணிக்கொண்டுவந்தார்கள்.

௲௮௱௭ (1807-ஆம்) மேமீ் ௴ ௨.

ஸ்த்தானீகம் முத்தையன் கையெழுத்து.

(கு. - பு.).—

இது, கோயமுத்தூரில் ஈரோடு தாலூக்காவிலே யிருக்கும் "சிவகிரி" யென்று வழங்கப்பெறும், பச்சிம வில்வாரண்யத்தில் கோயிற்கொண் டிருக்கும் திரு முருகப்பிரானது ஸ்தல மகிமையினை யெடுத்து உணர்த்து கின்றது. இத்தலத்தில் ஆதியில், முருகனுர், விநாயகரோடு ஒரு பழம் பெறுங் காரணமாக சண்டையிட்டுக்கொண்டுவந்து இத்தலமேற சதசிருங் கத்திலேவந்து மங்களமானவற்றையெல்லாம் இத்தலம் தன்னகத்துக் கொண்டிருந்தமைபற்றி, " சிவோயங்கிரி ரித்யுக்த்வா நிஷஸாத சிவாத்மஜ:, தஸ்மாச் சிவகிரிக்கியாதி:," .... என்று சொல்லிவருகிற முறையில், இத்தலத்தை விரும்பி இருஹீசுவராது பிரார்த்தனைக்கிணங்க பில்வமரத்தடியிலே வதிந்து வருகின்றனர் என்றும் இத்தலம், முசுகுந்தன் முதலான பண்டைய மன்னர்களால் பூசிக்கப் பெற்றதொரு மிகப் பழமையான தலம் என்றும் ஈசான்ய திக்கில் ஸப்த ருஷிகளால் விஷ்ணு பிரதிஷ்டையும் சிவப் பிரதிஷ்டையும் ஆகியுள என்றும் இன்னோரன்ன தல வரலாறுகளையும் மான்மியங்களையும் எடுத்து இது விளக்குகின்றது. இதில் மற்றொரு விசேஷங் காணப்பெறுவதாவது, பஞ்ச பாண்டவர்கள் தமது உருக்கரந்தொளித் திருந்தநாளில் இத்தலத்துச் சுப்பிரமணியரை வழிபட்டு 15 நாளிருந்து பின்னர்க் கீழ்த்திசையிலே விராட நகரமான "பெரிய தாராபுரம்," வந்துசேர்ந்து மச்ச மன்னன் அவைக்களனில் அமர்ந்திருந்தனர். கோதாவரிக் கரையிற் கேதாரம் ஊரிலிருந்து சுமதி மனைவி குணவதியுடன் வந்து முருகனிடத்துப் புத்திரப்பேறும் பெற்றனர் என்பது. முற்றும் உளது. மிகப் பிழையுள்ளது. சிதிலமானது. 49-ஆம் ஏடு வெறுமனேயுள்ளது.

No. 3138. ஆண்டிப்பட்டி பாளையக்காரர் பொம்மநாயக்கன் வமிசாவளி.

ĀNDIPPAṬṬI PĀḶAIYAKKĀRAR BOMMA NĀYAKAN VAMIŚĀVAḶI.

Pages, 16. Lines, 20 on a page. Condition, much injured. Extent, 210 granthas.

Begins on fol. 51-(*a*) of the manuscript described under D. No. 3130.

Complete.

A genealogical account of the Pāḷaiyakkārar, Bomma Nāyakan of Aṇḍippaṭṭuppallaiyam in Aravakkuricchi taluk, Dharāpuram tukkuḍi.

Beginning :

தாராபுரம் துக்குடி அரவக்குறிச்சி தாலூக்காவுக்குச் சேர்ந்த ஆண்டிப் பட்டி பாளையக்காரர் பொம்ம நாயக்கருடைய வமிசாவளி முதலான கைபீ யத்து என்னவென்றால்,

பூர்வத்தில் குந்திதேசத்திற் கிராமத்திற் குடியிருப்புக்காரரா யிருக்கப் பட்ட கம்பளசாதியில் கோத்திரத்தில் "மூத்தம நாயக்கன்," என்கிறவன் சேவகம் சேவித்துக்கொண்டு இருக்கும் நாளையில் அவ்விடத்தில் சிறிது குஞ்சு குழந்தைகள் பந்துஜனம் உண்டானவள் ஆனபடியினாலே ஜீவனத் துக்கு மார்க்கம் இல்லாமல் பந்துச் சனங்களுடனே புறப்பட்டுக் காவேரிக்குத் தெற்கு முக்காத வழியில் இருக்கிற "தேவர்மலை," யென்று பேர்பட்டு இருக்கிற விடத்தில் ஆலமரத்தின் கீழே இறங்கியிருந்தார்கள். அந்நாளையில் கிடையிலிருந்து பால் கொண்டுவருகையிலே கைதடுக்கிப் பாற்பானை தவறி கீழே விழுந்தது. விசனத்துடனே யிருக்கும் வேளையில் அந்தப் பால் தவறி விழுந்தவிடத்தில் ஸ்ரீமன் நரசிங்கமூர்த்திசுவாமி யிருக்கிறேம் என்று சொப்பனம் ஆச்சுது. அந்நேரத்தில் அந்த விடத்தைச் சோதித்துப் பார்க்கும் இடத்தில் நரசிங்கமூர்த்தி பெருமாள் உண்டானபடியினாலே பூசை பண்ணி னார்கள். மேல் எழுதப்பட்ட மூத்தம நாயக்கனுக்குப் பிள்ளை அஞ்சு பேர்கள். (க) சக்கம்சாமே நாயக்கன், (உ) திருமலைமுத்து நாயக்கன், (ந) கெட்டப்ப நாயக்கன், (ச) சக்கம் பொம்ம நாயக்கன், (ரு) தோட்டம நாயக்கன். இந்த அஞ்சு பேரும் தேவர்மலையிலே யிருந்து * * * சக்கம பொம்ம நாயக்கன் * * * பில்லாநத்தத்துக்குப் போய்ச் சேர்ந்தான்.

End :

என் பாளையப்பட்டுக்குச் சேர்ந்த நாற்பாங்கு எல்லைக்குள்பட்ட பூமியில் வகையரு உாசயஅ பா. தீர்வை. ஷ ரூாஅ புனு ஷ அந்தனேலம் (இ)ராமகிரிபாளையப்பட்டு "சாமைய நாயக்கன்," எல்லைத் தகராறு செய்து, கட்டிக்கொண்டு இருக்கிறான். [கும்பிணி](கம்பெனி) சருக்காரிலே என் மானம் மரியாதைகள் அறிஞ்சு காப்பாற்றி இரக்ஷிக்கவேண்டிக் கட்டுப் பண்ணினபடிக்கு நடந்துவரக் காத்து இருக்கிறேன்.

௲அ௱எ௲ ஆகஸ்ட்௴ ௩௰௨யில் ஆண்டிப்பட்டி பாளையக்காரர்— பெரியதம்பி, பொம்மைய நாயக்கன் ஒப்பிதம்.

(கு. - பு.).—

இது, ஆண்டிப்பட்டி பாளையக்காரர் ஆம் பெரியதம்பி "பொம்மைய நாயக்கன்," என்றவர் தாம் தமது குடிமுதற் புருடரான மூத்தம நாயக்கரை முதற்கொண்டு தம்வரையிலாக இடையில் உள்ள பாளையக்காரர்களது தோன்றல் முறைமை (வமிசாவளி)யை யெடுத்துக்கூறி அவர்களில் சிலர் வீரபுருடராயிருந்து சரித்திர உலகிற் புகழ்பெற்றிருந்த சரித்திர வரலாறுகளை உணர்த்தும் வகையிலே யமைந்திருக்கின்றது. இதில், (12) பன்னிரண்டாம்

பட்டக்காரராகிய இவர், மூலபுருடருக்கு ஐந்து புதல்வர்கள் உண்டு. அவர்களில், (1) சக்கம் சாமைய நாயக்கர், மணவாடியிலும், (2) திருமலை முத்தைய நாயக்கன், முள்ளுப்பாடியிலும், (3) கெட்டப்ப நாயக்கன் (4) தொட்டம நாயக்கன் என்கிற இருவரும் தெற்கில் வரிசை நாட்டிலும், சக்கம் பொம்மைய நாயக்கன் பல்லாநத்தத்திலுமாகக் குடியேறினார்கள். சக்கம் பொம்மைய நாயக்கர், துர்க்கை பூசை செய்வார். சந்திரசேகர பாண்டிய மன்னரது ஆட்சியிலே பாண்டியனது ஆணையால் கொங்கு (24) இருபத்துநாட்டிலே கலியப்தம், 4428-ஆம்ஆண்டு இடைச்சி கணைவாய்க்குவந்து சேர்ந்து காடு வெட்டி நாடாக்கிக் கும்பூரு, கிராமமதனை யுண்டாக்கி நரசிங்க தேவஸ்தானமுங் கண்டு அதிலே வதிந்துவந்தார். பின்னர், கலியுக சகாப்தம், 4533-ஆம்ஆண்டு பொம்மைய நாயக்கர், பல்லாநத்தத்திலே குடியிருக்குங் காலத்தில், கொட்டிகம் நாகம நாயக்கரது புதல்வராம் விசுவநாத நாயக்கர் முன்னிலைக்குச் சென்று பேட்டிகண்டு, அவரால் இராயர் சம்ஸ்தானம் பெனுகொண்டையில் விசையபோக தேவமகாராயர் ? அவர்களிடம் சேவையில் அமர்ந்து விருது முதலானவை பெற்றராய் விசுவநாத நாயக்கரது ஆட்சியில் உதவி ஊழியம் செய்யுமாறு ஆணைபெற்றுத் தன் நாடேற வந்து இராயர் பாளையக்காரர் என்று பேர் பெற்றிருந்தார். தத்துப்பட்டி, மஞ்சுப்பள்ளி, ஈசன்நத்தம், அம்மாபட்டி, ஆலமரத்துப்பட்டி, அஞ்சுக்கவுண்டன்பட்டி, சின்னமருதப்பள்ளி, திருக்கோரணம், கும்பூரு என்னும்கிராமங்களிலே குடிகளை யேற்றி பேர்களையுண்டாக்கிக் குடகு நதியில் அணை கட்டி, இரங்கமலை மல்லிகார்ச்சுனசுவாமியையும், குடகு நதிக்கரை ஒத்தைப் பனை நீழலிற் பெரியநாயகி அம்மையையும் பத்து ஊருக்கும் நரசிங்கப் பெருமாள், அனுமந்தப்பெருமாள், வரதராசப்பெருமாள் இப்படியான தேவாலயங்களுக்கும் பிராம்மணர்களுக்கு மான்யம் முதலாயின விடுத்து ஒரு பெரும் வள்ளலராயிலங்கினர் என்றும், அவர் முதறகொண்டு தம் வரையாக (12) பட்டதாரிகளது சரித்திரங்களைக் கூறியிருக்கிறார் என்பது. நிற்க அரங்கமலை, மல்லிகார்ச்சுனக் கடவுளாரைப் பூசித்துவந்த பண்டாரம் அல்லது ஆண்டிகளிருந்ததொரு கிராமத்தில், இரண்டாம் பட்டக்காரரான "பெரியதம்பி பொம்மய நாயக்கர்," அங்கு பாலமடம் முதலானவை கட்டித் தமக்குக் கோட்டையுங் கட்டிக்கொண்டு குடியிருந்தமைபற்றி, யவ்வூர் ஆண்டிப்பட்டி " பொம்மயநாயக்கன் பாளையப்பட்டு" எனப் பேர் பெற்றது. (7) எழாம் பட்டக்காரரது நாளையில், இவர், நவராத்திரி கொலுவிருக்கையை வமிசபரம்பரையாய்ப் பெற்று, "இம்முடி, கதிர், பொம்மை நாயக்கன்" என்னப் பேர் பெற்றனர். அது முதல் இம் மரபினருக்கு "இம் முடிப் பட்டமும்," வழங்கப்பெற்று வருகின்றது. பதினோராம் பட்டக்காரரது நாளையிலே இம்முடி, வண்டை, பொம்மைய நாயக்கர் ஆண்டிப்பட்டியை விட்டு அம்மாபட்டி கிராமத்திற் குடியேறி மஞ்சரு செங்கரனுவிப் பட்டியிலே மாலைமடம் முதலாயின கட்டுவித்துப் பேட்டைகளும் உண்டாக்கியதில் வாசஞ் செய்து வந்தனர் என்றிவை முதலான விடயங்களும் இதில் விளங்கும். முற்றும் இருக்கின்றது. பிரதி மிகப் பிழைகள் மலிந்துளது. சிதைவுற்று உள்ளது. இது, மெகன்ஸி தொரையால் சம்பாதிக்கப்பெற்றதாய் டைலரது

காட்லாக்கு 369–70 ஆவ பக்கம், 809-ஆம் நம்பரிலே வருணிக்கப் பெற்றிருக்கின்றது.

No 3139. அரவக்குறிச்சி தாலூக்காகிராமக் கணக்கரிடமிருந்த பண்டைய கணக்குகள் வரலாறு.

ARAVAKKURICCI TALŪKKĀ KIRĀMAKKAṆAKKARIḌA-MIṚUNDA PAṆḌAIYAKAṆAKKUKAḶ VARALĀṚU.

Pages, 22. Lines, 20–24 on a page. Condition, much injured. Extent, 330 granthas.

Begins on fol. 58-(*a*) of the manuscript described under D. No. 3130.

Complete.

Accounts, of the old documents concerning the Rāya dynasty which were found in the hands of the Kaṇakkuppiḷḷais or Karuṇikars (Karṇams) of various villages in Aravakkuruchi taluk, Dhārāpuram district.

Contains a copy of the stone Inscription (Kali. 3874 year) which was given, by the King Bhujabala Rāma Rayar of Ānaikoṇḍi to the 18 members of Śiṟutalai Vēṭṭuvar in Maṇalūr nāḍu," of Southern Dirāviḍa country.

Beginning :

தாராபுரம் துக்குடிக்குச் சேர்ந்துள்ள அரவக்குருச்சி தாலூக்கா கிராமங் களிலே கணக்கர் கிட்ட இருக்கப்பட்ட புராதனமான கணக்குகள் ஒழுங்குகள் முதலான கணக்குகளுக்கு நக்கல். தபசீல்.

வெஞ்சைமாக் கூடலூரு கணக்கு சிவப்பிராம்மண சாதியில் சின்ன மையன் குமாரன் முத்தையன் இடத்தில் இருக்கப்பட்ட புராதன கணக்கு, மதுரை சமஸ்த்தானத்தார் துறைத்தனம். விபரம்.

வெஞ்சைமாக் கூடலூரு தேவஸ்த்தானத்துக்கு. * * * * *

* * * * * * * *

End :

மணலூர்நாட்டுக், கோயமுத்தூர் கணக்குப்பிள்ளை யிடத்து இருக்கப்பட்ட மணல்நாட்டுக்கு எல்லே சர்க்கத்துக்கு இராயர் நாளையில், கொடுத்த சிலா சாஸனத்தின் நகலான புராதனம் ஆன ஓலையிலே தமிழ் இலிபியிலே எழுதியிருக்கப்பட்ட சாஸனத்துக்கு நக்கல் :—

புஜபலராயர் நாளையில்க் கல்ச்சாஸனம்—ஸ்வஸ்தி ஸ்ரீமன் ராசாதிராசன், ராஜபரமேசுவரன், ராசமார்த்தாண்டன், ராஜகம்பீரன், ராஜவளநாடன் எம்மண்டலமும் திரைகொண்டருளிய ராசகேசரி கண்டநாடுகொண்டு கொண்டநாடு கொடாதான் ஸ்ரீ தேசபதி, ரேபதி ? அசுவபதியாகிய ஆணைகுந்தி ராயர் புசபல ராம ராயர் அவர் இராச்சியபாரம் பண்ணுகிற

நாளையிலே கலியுக சகாப்தம் ௩ளூ௮ளஎ௰௪-ஷூ மேற் செல்லாநின்ற ஈசுவரஷூ வையாசிமீ உ௰௩௨. கொங்குமண்டலத்தில் திராவிட தேசம் தக்ஷிண ராச்சியத்தில் மணலூர்நாட்டில் இருக்கும் சிறுதலை வேட்டுவரில் "பெருமாள் கவுண்டன் மகன் சின்னப்பெருமாக் கவுண்டன் * * * * மூலைவெட்டுவன் சாலியன்," (என்ற) இந்தப் பதினெட்டுப் பங்காளிகளுக்கும் நாட்டில் எல்லைச் சாசனம் போட்ட விவரம். * * * * * * * * * * * * * *

* * * அதுக்கும் வடக்கு வில்லடிப் பாறையில்க் கல்ச்சாஸனம். அதுக்கும் வடக்கு அறியூருக்குத் தெற்கு, கருங்கற் பாரையில்க் கல்ச்சாசனம். அதுக்கும் வடக்கு செல்லாண்டியம்மன் கோவிலுக்கும் வடக்கு கல்ச்சாசனம். அதுக்கும் வடக்கு திருவகுந்திமலைக்கும் தெற்கு, கடைக்கால். இந்தப்படிச் சாசனம் எல்லை யறிந்துகொள்ளவும்.

கணக்கர் குமாரசாமிப் பிள்ளை ஒப்பிதம்.

(கு.-பு.)—

இது தாராபுரத்துக்கு அருகிலே அரவக்குறிச்சி தாலூக்காவுக்குள்ளிருக்கும் பல கிராமக் கணக்கர்களிடமும் இருந்த பண்டைய காலத்தில் மதுரைத் துரையாளர்களால் ஒவ்வோர் கிராமத்துக் கோயில்களுக்கும் ஊர்களுக்கும் உரிமையாக விடுக்கப் பெற்ற பிரம்மதாய, தேவதாயம் செலவு, படித்தனம் மான்னியம் நிலபுலங்கள் திரவியம் முதலான அவையிற்றின் அளவைகளைக் குறிக்கும் பல கணக்குகளையும் எடுத்து உணர்த்துவதாம். இதில், (1) வெஞ்சைமாக்கூடல் தேவஸ்தானத்துக்கு உரிய கணக்குகள், (2) மணல் நாட்டு, சூடாமணி கிராமத்துக்கு உரிய கணக்குகள், (3) வேங்கால நாட்டு, பத்ரியத்திப் பாளையப்பட்டுக்கு உரிய கணக்குகள், (4) ஷை நாட்டு, கல்நத்தம் கிராமக் கணக்குகள், (5) காருடையான் பாளையப்பட்டுக் கிராமக் கணக்குகள் (அரை குறையானது) (6) அறப்ப நாடு ? துக்காசி கிராமக் கணக்குகள், (7) கார்வளி கிராமக் கணக்குகள், (8) மணலூர் நாட்டுத் தென்னிலை கிராமக் கணக்குகள், (9) கோயமுத்தூரு கிராமம், கணக்குகள், (10) ஷை மணல் நாட்டு எல்லை பிரித்துக் காணும் பழைய சாஸனம் என்னுமிவை யடங்கியுள்ளன.

இக்கல்வெட்டு கலி-சகாப்தம், ௩ளூ௮ளஎ௰௪ (3874)ஷூ-க்கு மேல் ஈஸ்வர ஷூ வையாசிமீ உ௰௩ உ-யில் கொங்கு மண்டலத்து மணலூர் நாட்டில் இருந்த சிறுதலை வேட்டுவரில் பெ. சின்னப் பெருமாள் கவுண்டன் முதலான (18) பங்காளிகள் பதினெட்டு பேர்களுக்கும் நாட்டு எல்லை பிரித்துக் கட்டி ஆனை கொந்தி மகாராசாவான "புஜபலராமராயரால்" கல் வெட்டாகச் செய்து கொடுக்கப் பெற்றதாம். இனி மேற்கூறிய "பதரியந்தி பாளையம்", என்ற பெயரின் விளக்கம் வருமாறு—இவ்வூர் பண்டைய நாளில் பாண்டியர் காலத்து "நல்லூரு நாகப்பட்டணம்" என்று வழங்கப்பட்டிருந்தது. நாளடைவில் நாடு அழிந்து [பதரிக்காடு] இலந்தை மரக்காடாக மாறியது. பின்னர் நாடாகிப் "பதரியத்தி" என்னப் பெற்றிருக்கிறது. இது "பாளையப் பட்டு" எனக் காணப்படுகிறது. எந்தப் பாளையப்பட்டாரது ஆட்சியிலிருந்து வந்ததோ ? அவரது பெயர் குறிக்கப் பெறவில்லை. மற்று, "தென்னிலை"

யென்ற ஊர்ப் பேரின் விளக்கம் ஆவது. இத்தலம், திருநீலகண்டருக்கு வட திசையிற் கைலாயமே போலத் தென்றிசையில், கைலாசமாய் நிலேத்தமை பற்றியாம். தென்+நிலேயென பதம் பிரியுமாறு காண்க. இன்னும் இவ்வாருன விடயங்களும் பிறவும் இதிலிருந்து விளக்கம் உறும். முற்றும் உள்ளது. மிகச் சிதிலமானதாம். பிழையுடனிருக்கிறது. இது டைலர் (10) தொரை காட்லாக்கு 369, 809-ஆம் நம்பரில் வருணிக்கப் பெற்று உள்ளது.

No. 3140. கலச க்ஷேத்திர மான்மிய வரலாறு.
KALAŚA KṢĒTTIRA MĀNMIYA VARALĀṞU.

Pages, 22. Lines, 24 on a page. Condition, much injured. Extent, 330 granthas.

Begins on fol. 69-*a* of the manuscript described under D. No. 3130.

Complete.

A legendary account of the holy place of Kalaśa kṣēttiram on the banks of the Gōdāvari river.

Beginning :

கலச க்ஷேத்திர மான்மிய வரலாறு.—சகல பாவமும் விமோசனம் ஆகிற இடம். சருவ துக்கமும் நாசப்பண்ணப்பட்ட இடம். சருவதா சித்தர்கள் வாசம் பண்ணப்பட்ட இடம், மனேகரமாயிருக்கப்பட்ட "துங்கபத்திரா நதி" தீரத்திலே "கலச க்ஷேத்திரம்" என்று இருக்கிறது. அதுக்குச் சமானமாயிருக்கப்பட்ட க்ஷேத்திரங்கள் இல்லே * * * பின்னும் க்ஷேத்திரங்களுக்கெல்லாம், மேலான க்ஷேத்திரம் என்று சொல்லப்படும். யாதாமொருவன் ? (யாவன்) ஒருவன் இந்த க்ஷேத்திரத்திலே வாசம் பண்ணுகிருனே ? அவன் (றன)சன்மாந்திரத்தில் பண்ணப்பட்ட பாபங்களே யாவத்தும் விமோசனமாய் விடும். பின்னும் இந்தக் கலச க்ஷேத்திரம் மூன்று லோகத்துக்கும் அதிகமாயிருக்கப்பட்டது. ஆகையால் * * * * * * * அதிலே வாசம் பண்ணப்பட்டவருக்குச் சருவாதிசாயியான முத்தியைக் கொடுக்கிருர். இவ்விடத்தில் இருக்கப்பட்ட பிராம்மணர்களே அகத்தியர் காசி தேசத்திலிருந்து அழைத்துக்கொண்டு இவ்விடத்திற் சுகமாய் இருக்கச் சொல்லித் தாபித்து வைத்தார். பின்னும் அவர்களுக்கு வரங் கொடுத்தார் * * * * * * * இந்திரியங் கீழே விழுந்தால் உலகம் சகிக்க மாட்டாது என்று யோசனே பண்ணி ஒரு கலசத்தைப் பூமியில் அந்தத் தானத்துக்குக் கிட்ட வைத்தான். அந்தக் கலசத்திலே இந்திரியம் விழப்பட்டது ஆயிற்று ஆனதானபடியினலே அந்தக் கலசத்திலே அகத்தியர் பிறந்தவர் ஆனர். கலசம் நிறைந்து கீழே கொஞ்சம் விழுந்து நதியிலே சேர்ந்தபடியினலே அதிலே வசிட்டர் பிறந்தவர் ஆனர் * * * * * * * * * இந்தக் கலச க்ஷேத்திரம் மூன்று யோசனே தூரம் சதுரமும் கலச க்ஷேத்திரம் என்று

பேர் சொல்லப்படுகிறது. இதுக்கு உள்ளாகக் "காண்டிவ க்ஷேத்திரம்" ஒன்று இருக்கிறது. இவ்விடத்திலே பண்ணின புண்ணியங்கள் தாமே அவ்விடத்திலேயும் உண்டாகி இருக்கின்றன. காண்டீவத்திலே ஒரு புண்ணியம் பண்ணியிருந்தாலும் இவ்விடத்தில் பண்ணினதுக்குச் சமானம். அது எப்படியென்றால் சந்திரனுக்கு உள்ளே சந்திரன் இருந்தால் அது எப்படிக் கோ ? அப்படிக்காம். இந்த இரண்டும் ஒரு க்ஷேத்திரம்.

End :

சகல ஜனத்துக்கும் இதமாயிருக்கும்படிக்குத் தாம் தட்சிண தேசத்துக்குப் போகவேணும் என்று சொல்லுகையில், அந்த விஷ்ணு சொன்ன விசேஷத்தை அகத்தியர் கேட்டு நிரம்பவும் துக்காக்ராந்தராய் நான எப்படி இப்படிப்பட்ட கலியாண உற்சவத்தைக் கண்ணினாலே பாராமல் எப்படிப் போவேன் ? என்று பின்னும், கோபத்துடனே, விஷ்ணுவுடனே சொல்வார் : நான் இந்தக் காசிபுரியிலே வாசம் பண்ணவேணும் என்று இருந்ததற்கு நீங்கள் எல்லாம் விக்கினம் பண்ணுகிறீர்கள் என்று சொல்லும்(?)போது ஈசுவரர் அகத்தியரை நோக்கிச் சொல்லுகிறார். ஸூஅ தேயத்துக்கும், யோக்கியமாயிருக்கப்பட்ட கலச க்ஷேத்திரத்தில் நீர் போய் வாசம் பண்ணும் அவ்விடத்தில் நான் பார்வதீசமேதனு ? (க்காட்சியளிக்கிறேன்.)

(கு.-பு.).—

இது, தலபுராண வகையிற் சார்ந்ததாய்த் "துங்கபத்திரமாநதிக்", கரையிலே யமைந்துள்ளதொரு "கலச க்ஷேத்திரம்" என்ற புண்ணிய தலத்தின் மகிமையினையெடுத்து விளக்குவதாம். இப் பிரதி 1—4 அத்தியாயங்களைக் கொண்டிருக்கிறது. இதன் மொத்த அத்தியாயக் கணக்கு எத்தனையோ ? தெரியவில்லை. முதல் நாலும் யாதெனப் புலப்படவில்லை. நிற்க, இத்தலத்திலே, அகத்தியர் தோன்றிய வரலாறு— "மித்ரர், வருணர்", என்ற இவ் இருவரது தபோபலமும் இந்திரனது சூழ்ச்சியினால் அழியப் பெற்று, அவ்விருவரும் ஊர்வசியிடங் காதற் கொண்டாராக, ஒரு நாள், ஊர்வசியை இளைஞனை "வருணன்" என்பார் தன்னுடன் கூடிக்களிக்க வேண்டுகையில், அவள், தந்திரமாக உம் தமையனும் மித்திராவுக்கு வருவதாக வாக்குறுதியைச் செய்தேன் ஆதலின் இன்று சென்று நாளை வந்து உம்முடன் கூடுவேன், என ஏமாற்றியும், மற்று, அம்மித்திராவையும் இங்ஙனகவே ஏமாற்றி விட்டாள். அவ்விருவருக்கும் ஊர்வசிக்காதல் மிஞ்சி வீரியம் வெளிப்பட்டு வீழ்ந்தன. இந்திரன் அதனையுலகம் தாங்காதெனக் கருதி யத்தலத்தில் அதை ஏந்துவதற்காக ஒரு "கலயம்" அதனைக் கொண்டு வைக்க, அவ்விரு வீர்யமும் அக் கலயத்தில் விழுந்து நிரம்பிச் சிறிது கீழிருந்து வீழ்ந்தன. அக் கலயத்திலிருந்து அகத்தியர் தோன்றி உடனே ஈசனைத் துதித்தனர். அதுபோல், கீழிற் பெருகியதிலிருந்து வசிஷ்டமா முனிவரும் தோன்றினர். இத் தலத்தில், கலசேசுவர இலிங்கமும் கசராசன் என்ற ஒரு மூர்த்தமும், கஜதீர்த்தமும் உண்டு. இக் கஜராஜனை, தாரகாசுரனைக் கொல்லுவதற்காக வேண்டிப் பரமசிவன் பார்வதியுடன் கஜவடிவமாகப் பெற்றுக்கூடி

யுண்டாக்கினர். அக்கஜராஜன் ஈசன் அருளால் தாரகாசுரனைக் கொன்று அவன்தங்கையைத் தனக்கு மனைவியாகக் கொண்டார். பின் அக்கலச க்ஷேத்திரத்திலே வாசம் செய்து வந்தார். அக்காரணத்தால் கஜ தீர்த்தம் உண்டாயிற்று. கோடி தீர்த்தம், என்று மற்றொரு தீர்த்தமிருக்கிறது. இதில் அகத்தியர் தீர்த்தம் ஆடி "இல்வலன்" என்ற வசுரனைக் கொன்ற பாவமதனை நீக்கிக் கொண்டாராய் இதன் "அருகில் இல்வலேசுவரலிங்கம்" அதனையும் பிரதிஷ்டிப்பித்தார். (3) "பத்திரா நதி" யென புண்ணிய நதி இத்தலத்தில் மேற்றிசை நோக்கிப் பிரிகிறது. (4) வசிஷ்ட தீர்த்தம் இதில் நாளம்மாடி இந்திரன் விருத்திராசுரனைக் கொன்ற பாவம். நீங்கினான் (5) அம்பாள் தீர்த்தம் என ஒரு தீர்த்தம் உளது. இதில், "சைத்திரபகுள சதுர்த்தசியன்று ஸ்நானம் செய்தல் மிக உத்தமாம். இந்த க்ஷேத்திரம் பூமிக்கேயொரு அணிகலனாய், அகத்தியர், இருடிகட்கெல்லாம் சீரேட்டர் ஆணமை போலத் தலங்களுக்கெல்லாம் மிகச் சிறந்ததாகும், முற்றும் உளது. மிகச் சிதிலமாயுள்ளது, எழுதப்படவில்லை.

இது, மெகென்ஸி தொரையால் ஈட்டப் பெற்றதாம். டைலர் காட்லாக்கு 369-370-ம் பக்கம் 809-ஆம் நம்பரில் வருணிக்கப்பெற்றிருக்கிறது.

No. 3141. ஜைன மத யுகப் பிரளய வரலாறு.
JAINA MATA YUGAPPIRAḶAYA VARALĀṞU.

Substance, paper. Size, $8\frac{1}{4} \times 7\frac{1}{4}$ and $9\frac{1}{4} \times 7\frac{1}{2}$ inches. Pages, 8. Lines, 20 on a page. Character, Tamil. Condition, very much injured. Appearance, old. Extent, 104 granthas.

Begins on fol. 1 (*a*) of the other works herein are :—Jainamārga virōdhimannar varalāṟu, 6 (*a*). Śamaṇamatattilirundu Sāṅkhiyam mudalānavai Uṇḍānavaralāṟu, 11 (*a*). Yatidharumamum Śirāvakadharumamum, 16 (*a*). Jainar Pūrvakarumamum and Aparakarumamum, 20 (*a*). Meckenzieduṟaikku Jainamatattavar viṇṇappam, 25 (*a*). Tāmaṟaippākkam varalāṟu, 32 (*a*). Aḻakiya sēnan Anjātakavuṇḍnenravar varalāṟu, 41 (*a*). Pūṇḍi Jinālaya talapurāṇam, 50 (*a*). Cittāmūrkōvilmaṭhaṅkaḷin Nittiyappaḍidharmaṅkaḷ,56.Kaḻḻappuliyūr Veḷḷaikkan mēṭṭu varalāṟu, 66 (*a*). Tiruvāyppāḍi Dēvasthāna varalāṟum, Vayalūr Vīra Nārāyaṇa Sambhuvarāyan Kōṭṭai varalāṟum, 70 (*a*). Tuṟakal Jainarkkōviṟ Śilāśāsanam, 77 (*a*). Arankunṟaṅ kirāmam Aragiriparuvatā varalāṟu, 81 (*a*). Vēlūr tulukkar Pirabhukkaḷ vamiśāvaḷiyum, Śila Nāyakanṟanaḷiyum, 89 (*a*). Tiruppanaṅkaṭṭūr dēvasthāna varalāṟu, 95 (*a*). Nōkkar Jāti varalāṟu, 102 (*a*).

This manuscript belongs to the Meckenzie collection of manuscripts and is same as the work described under No. 827 of Taylor's Catalogue Restored in Meckenzie Restored Vol. I, pp. 73–75.

Same work as that described under D. No. 2978, with slight difference of readings, by Kauṇḍēsuvarakavi (a Jaini).

Beginning :

ஜைனமத யுகப் பிரளயம் கைபீயத்து கவுண்டேசுரகவி எழுதிவைத்தது.

இந்த லோகத்துக்கு மத்தியமமாகிய இலட்சம் யோஜன வீஸ்தீர்ணமும், விருத்தாகரமும் மகாலவண சமுத்திர பரிவேஷிதமுமாகிய இந்தச் சம்பூத் வீபத்தில் தெற்கில் நின்றும், பாரம ஹைமவதம் ஹரி வருஷம் விதேகம் ரம்மியகம் ஹெரணவதம் ஹைராவதமும் என்கிற இந்த எழு நாட்கள், தக்ஷிண திசையிலிருக்கும், பரத க்ஷேத்திரமும், உத்தர திசையிலிருக்கும் ஹைராவத க்ஷேத்திரமும், இந்த இரண்டும் ஒன்று. ஒன்றில், உத்ஸர்ப்பிணீ யென்றும் அவஸர்ப்பிணீயென்றும், இரண்டு காலம் ஆகும்.

* * * * * * *

End :

இந்தத் தர்மகண்டத்தில், உத்ஸர்ப்பிணீ, அவஸர்ப்பிணீ யென்கிற யுக பேதத்தில் இருபது கோடா(னு) கோடி கடற் காலம் அந்தியத்தில் ஸப்த வருஷங்களினால் யுகப்பிரளயம் முடிந்து, பூருவபக்ஷம், அமரபக்ஷம் போல அநாதி காலமாய் இப்படியே வாராநின்ற[துகள்]ன. இதில், முன் யுகப் பிரளயத்தில் அக்கினி வருஷம் வர்ஷித்து உத்ஸர்ப்பிணிபிற் பத்து கோடா கோடி கடற்காலமும், இப்போது நடந்து வருகிற அவசர்ப்பிணியிலே நாற் பத்தீராயிரம் வருஷங் குறையப் பத்து கோடி காலமுஞ் சென்று இந்தத் தீக்காலமாகிய கலிகாலத்தில் இரண்டாயிரத்து நானூற்றெண்பது வருஷஞ் சென்றது. இதுக்குச் சகாப்தத்திலே வருஷம் ஆயிரத்தெழுநூற்று முப்பத் தொன்பது (சாலி-சகம் 1739௵) முடிந்தது. இதின் மேல் இந்தத் தீக் காலசேஷம் பதினெண் ஆயிரத்து அறுநூற்றிருபது வருஷமும் அதன் மேல் தீதீக்காலம் இருபத்தோராயிரம் வருஷமுஞ் சென்று இந்தத் தர்ம கண்ட மாத்திரமாகிய பூமியில் அக்கினி மழை வருஷித்து யுகப் பிரளய மாம்.

(கு.-பு.).—

இது, டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2978-ஆம் நம்பர் பிரதியில் வந்த நூலேயாகும். வசனத்தில் சிறிது பேதம் உளது. முற்றும் உள்ளது. 4, 6—5 ஏடுகள் வெற்றேடுகள். இப்பிரதி, மையழியப் பெற்றுப் படித்தற்கு மிகவும் அரிதாயிருக்கிறது. மெகென்ஸி தொரை சம்பாதித்தது. டைலர் தொரை காட்லாக்கு 401-ஆம் பக்கம், 827-ஆம் நம்பரில் வருணிக்கப் பெற்றிருக்கிறது. இதுக்குப் பெயர்த்து எழுதிய மற்று ஒரு பிரதி மெகென்ஸி தொரை பெரிய வால்யும் முதலதில் 73—75-ஆம் பக்கங்களில் வந்துள்ளது. மிகச் சிதைவுற்றது. எழுத்துப் பிழை மிகவுள.

No. 3142. ஜைன மார்க்கவிரோதி மன்னர் வரலாறு.
JAINAMĀRGA VIRŌDHIMANNAR VARALĀṚU.

Page, 81. Lines, 19 and 27 on a page. Condition, injured. Extent, 90 granthas.

Begins on fol. 6 (*a*) of the manuscript described under D. No. 3141.

Complete.

Same work as that described under D. No. 2973. This manuscript belongs to the Meckenzie collections of manuscripts and is same as the work described under No. 827 of Taylor's Catalogue, pp. 401. This manuscript has been restored on pp. 76–78 of Big Vol. I of Mackenzie manuscripts.

Beginning :

ஜைனர்களை அநீதமாய் அழித்து நாள் தோறும் பத்து ஜைனர் தலை வெட்டின ராசர்களுடைய விசேஷித்த கைபீயத்து:

(கு.-பு.).—

இது, டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு **2973**-ஆம் நம்பரில் வருணிக்கப் பெற்றதே யாம். இது, மெகென்ஸி தொரை சம்பாதித்த புத்தகங்களிலே யொன்ருய் டைலர் தொரை காட்லாக்கு 827-ஆம் நம்பரிலே வருணிக்கப் பெற்றிருக்கிற தாம். மெகென்ஸி தொரை பெரிய வால்யும் முதலாவதில் பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றிருக்கிறது. முற்றும் உள்ளது. இப் பிரதியில் எழுத தின் மையழியப் பெற்று படித்தர்க்கு அரிதாயுளது. ஏடுகள் மிகவுஞ் சிதைவுற்றிருக்கின்றன. பின்னர் 10 (b)—11 ஆன ஏடுகள் வெற்றேடு களாம். இதில், **செஞ்சிக் கோட்டையில்** அரசு செலுத்திக் கொண்டிருந்த "கவரை சாதியர் வெங்கடபதி நாயக்கன்" என்றவர், ஒரு ஜைன மதத் தவரது பெண்ணை மணக்க விரும்பி அவர்களால் அவமானம் அடைந்து அவர்களுடன் மிக்க பகை கொண்டாருய் ஜைன மதத்தவர்களை யெல்லாம் தலை நறுக்கி ஒறுத்து வந்தனன். பின்னர், காஞ்சியில் "தாதாசாரி யரும்" அங்ஙனம் பகைத் திருந்தாராய் ஜைனருடன் வாதஞ் செய்து தோற்ருர். ஆகையால் இச் சைன மதம் இடையிற் சிறிது காலம்வரை வீழ்ந்திருந்தது. சிலர் மறைந்து வாழ்ந்திருந்தனர். ஆற்காட்டில் படை யெடுத்த நவாபு பாதுஷா காலத்தில் மறைந்திருந்த ஒரு ஜைனத் துறவினர் "வீராசே நாசார்யர்" என்றவரால் மீட்டும் தலைதூக்கி உலகில் நிலவிற்று. இவ் வீரசேநாசார்யர், திண்டிவனத்துக்குக் கிழக்கே உப்பு வேலூரில் இருந் தவர். இவர் (செஞ்சிதுக்குடியில் தாயனூரின்) துறவியாய் மேனுட்டில் "சிரவணபெள குளம்" என்ற தலத்தில் சில நாள் வசித்திருந்தார். காங்கேய உடையார் என்ற ஜைனர், உடையார்பாளையம் பாளையக்காரராரது அபிமானம் பெற்றிருந்தனர். (பெயர் காணப்படவில்லை). இவரே ஷ துறவியைக் கொண்டு ஜின மதத்தை உத்தரிப்பித்தார். அதற்காய்த் தாய னூர் உடையாருக்கு அக்கிர மரியாதை நடந்து வருகின்றது என்னும் இவ் வரலாறுகள் காணப்படுகின்றன.

No. 3143. சமண மதத்திலிருந்து சாங்கியம் முதலானவை தோற்றிய வரலாறு.

ŚAMAṆA MATATTILIRUNDU ŚĀNK YAM MUDALĀṆAVAI TŌṞṞIYA VARALĀṞU.

Pages, 6. Lines, 20 on a page. Condition, much injured. Extent, 70 granthas.

Begins on fol. 11 (*a*) of the manuscript described under D. No. 3141.

Complete.

Similar to or same as the work described under D. No. 3126. Account of the Śāṇkhya and other modes of religious credence. This manuscript belongs to Meckenzie collections of manuscripts and is same as the work described under No. 827 of Taylor's Catalogue, Vol. III, pp. 403.

(கு.-பு.).—

இது, டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 3126-ஆம் நம்பரில் வந்துள்ளதை யொத்து, சமண மதத்துக்குப் பின் சைவம், சாங்கியம், பௌத்தம் அத்துவைதம், வைணவம், மாத்துவம் முதலான மத பிரபேதங்கள் உண்டாகிய முறைகளை யெடுத்துக்கூறி, அவையிற்றின் இலக்கணங்களையும் வகை தொகைகளையும் உணர்த்திப் போகிறது. இதைச் "சாங்கியாதி மதோத்பத்தி வரலாறு", என்னலாம். மிகச் சுருக்கமாக அமைந்துளது. இதனை டைலர் தொரையவர்கள், மெகென்ஸி தொரை பெரிய வால்யும் முதலாவதில், 78—81 ஆன பக்கங்களிலே பெயர்த்து எழுதி வைத்திருக்கிறார்கள். அதிற் சிற்சிலவிடத்து முதலிற் எழுதுவதற்கு இடம் விடப்பட்டிருந்து பின்னர், அங்கங்கே காகித பென்ஸிலினால் எழுதப் பெற்றிருக்கிறது. மையினால் எழுதினால் நலமாம். இப்பிரதி, இது போழ்து, எழுத்து மை, யடியோடு அழியப்பெற்று உள்ளது. இங்ஙனம் இது டைலர் காலத்திலேயும் இருந்தது போலும். படித்தற்கு ஒரு சிறிதும் புலனாகவில்லை. சிதைவுற்றது. 13 b, 15 (b) ஷராயான ஏடுகள் வெற்றேடுகளாம்.

No. 3144. யதிதருமமும் சிராவக தருமமும் (ஜைனம்.)

YATI DHARUMAMUM ŚIRĀVAKA DHARUMAMUM.

Pages, 6. Lines, 30 on a page.

Condition much injured. Extent, 90 gronthas.

Begins on fol. 16 (*a*) of the manuscript described under D. No. 3141.

Complete.

An account of the customs and manners of the Jainas of the Chettup-pat district. Similar to or same as the work described under D. No. 2971. This manuscript belongs to the Meckenzie collections of manuscripts and is same as the work described under No. 827 of Taylor's Catalogue, Vol. III, pp. 402–403.

(கு.-பு.).—

இது, டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2971-ஆம் நம்பரில் வந்துள்ளதை யொத்து, சமணம் அல்லது ஜைனம் என்ற மதத்தில் துறவியானவர் களுக்கும், இல்லறத்தினருக்கும் உரிய பல தருமங்களையும் எடுத்து உணர்த்து கின்றது. இதற்குத் தமிழில் "சாரண சிராவக தருமங்கள்", எனப் பெய ரிடல் தகுதியாம். சாரணர்–துறந்தவரும், சிராவகர்—இல்லறத்தினரும் ஆவர். சாரணர் அல்லது ஜைன முனிவர்களுக்கு (10) பத்து தருமங்கள் உண்டு. சிராவகர் அல்லது சாவகர் என்ற ஜைனமத இல்லறத்தினருக்கு (11) பதினேரு தருமங்கள் ஆம். அவைகளைப் புத்தகத்தில் நேரில் படித் துணர்க. இதனை டைலர் தொரை தமது காட்லாக்கில் 402–403-ஆம் பக்கம், 827-ஆம் நம்பரின் குறிப்பில் வருணித்துக் கூறியிருக்கின்றனர். மெகென்ஸி பெரிய வால்யும் முதலாவதில், 81–84-ஆம் ஆன பக்கங்களில் பெயர்த் தெழுதியும் வைத்திருக்கிருர். இது, மிக எழுத்துப் பிழையுடன் இருக்கிறது. எழுத்துக்களின் மை யழியப்பெற்று உள்ளது. இப்பிரதி மிகச் சிதைந்திருக் கின்றது. (19)-ஆம் ஏடு வெற்றேடாயிருக்கின்றது.

No. 3145. சைனர் பூர்வ கருமமும் அபர கருமமும் (ஜைனம்.)

JAINAR PŪRVAKARUMAMUM APARAKARUMAMUM (JAINAM).

Page, 6. Line, 24 on a page. Character, Tamil and granthas. Condition, much injured. Extent, 20 granthas.

Begins on fol. 20 (*a*) of the manuscript described under D. No. 3141.

Complete.

Account or a list of the Pūrvakarumam and Aparakarumam. Purvakarumam is of 16 kinds and relates to ceremonies preceding birth, attendant on it, or consequent thereto, with any particular ceremonies on special occasions during life , (2) Aparakarumam is of twelve kinds ; and relates to ceremonies consequent on death. The names only are given without any description of the various ceremonies.

This manuscript belongs to the Meckenzie collection manuscripts and is same as to work described under No. 827. Taylor's Catalogue, pp. 403–404, Vol. III and D. No. 2975. Restored on pp. 81–84 of Meckenzie's Big Vol. I.

(கு.-பு.).—

இது தமிழ் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2975-ஆம் நம்பரிலே வந்துள்ள தைப்போன்று ஜைன மதத்திற் ருேன்றினவர்களுக்கு உரிய பூர்வ, அபர, கிரியைகளை யெடுத்து உணர்த்துகின்றது. பூர்வ கருமம் ஆவன, பிறந்தது முதல் உயிருடன் இருக்கும் வரையில் அவ்வவ்வோர் மதத்தைத் தழுவிச் செய்யப்பெறும் சில வைதீக கிரியைகள் ஆம். அபரகருமம் ஆவன, உயிர் நீத்த பின் அங்ஙனம் செய்யப்பெறும் தகனம் முதலாய சில கிரியாகலாபங்க

ளாம். அதற்கிசைய, ஜைனர்க்கு உரிய பூர்வ கருமங்கள் (16) பதினாறு வகையினவாம். அங்ஙனம் அபரகிரியைகளும் (12) பன்னிரண்டு வகையினவாம். இங்கு அவைகளின் பெயர்கள் மாத்திரம் (இலக்கணம் முதலாயின ஒன்றும் விளக்கப் பெறுமல்) உணர்த்தப்பட்டிருக்கின்றன. முற்றுமிருக்கிறது. இப் பிரதியை, டைலர் தொரை தமது காட்லாக்கில் 403–404-ஆன பக்கங்களில், 827-ஆம் நம்பரிலே குறித்து விளக்கியிருக்கின்றனர். இது, மெகென்ஸி தொரை பெரிய வால்யும் முதலாவதில், 84–85-ஆன பக்கங்களில் பெயர்த்து எழுதப் பெற்றுளது. இதன் இறுதியில், 23–24-ஆம் ஏடுகள் வெற்றேடுகளாய் உள்ளன. இது, மிகச் சிதைவுற்று உள்ளது.

No. 3146. மெகென்ஸி துரைக்கு ஜைன மதத்தவர் விண்ணப்பம்.

MECKENZIE TURAIKKU JAINA MATATTAVAR VIṆṆPPAM.

Pages, 12. Lines, 21 on a page. Condition, very much injured. Extent, 126 granthas.

Begins on fol. 25 (*a*) of the manuscript described under D. No. 3141. Complete.

A representation of the Jainās of the village of "Śittambūr" near Śēttupput taluk, Chingleput district.

This manuscript belongs to the Meckenzie collections of manuscripts and is same as the work described under No. 827 of the Taylor's Catalogue, pp. 405–406. For the restored copy see pages 85–89 of the Meckenzie restored Vol. I by Taylor.

Beginning :

சைனர்கள் மனுவு.

இந்தியா சர்வேயர் ஜெனரல் கர்னல் மெகென்ஸி தொரையவர்களுக்குச், செங்கற்பட்டு ஜில்லா விருத்தாசலம் [ஜில்லா] தாலூக்கா, சித்தூர் ஜில்லா, கும்பகோணம் [ஜில்லா] தாலூக்காவுக்கு உள்ளிருக்கும் வெகு நூறு சைனக் குடிகள் பண்ணிக்கொள்ளுகிற மகா தாழ்மையான மனுவு :— என்னவென்றால்,

அநாதி காலம் துவக்கி வெகு காலம் வரைக்கும் இந்தப் பூமி முழுதும், சைனர்கள் குடியிருந்து சைன ராசாக்களால் பிரபுத்துவம் பண்ணப்பட்டிருந்தது என்று உலகப் பிரசித்தம் ஆய்த்தெரிந்திருக்கின்றது. அப்போது வெகு சைன ஆலயங்கள், மடங்கள், சங்கங்கள், பட்டவரிசை முதலியவைகள் ஏற்படுத்தப்பட்டும் வெகு பிரபலமாய் நடப்பிக்கப்பட்டும் நடந்தேறி வெகு காலங்களுக்குப் பிற்பாடு சைவமதம் என்றும், வைஷ்ணவ மதம் என்றும், அதற்குக் குருக்கள் பிராம்மணர்கள் என்றும், உண்டாகிச் சைன மதத் துவேஷிகளாகி வித்துயங்களினாலே ? இராசாக்களை மதம் புகப் பண்ணிச் சைனர்கள் பிராம்மணர்களுக்கு உத்கிருஷ்டமானவர்கள் என்று ஆசாரங்

களினலே யெண்ணப்பட்டவர்களாயிருந்தபடியினலே தங்களுக்குச் சிரேஷ்டத் துவம் உண்டாகும்படிச் சைனர்களைத் துன்பப்படுத்தி மித்திர பேதங் களினலே வெகு ஜைனர்களை அநீதமாய்ச் சங்கரித்துச் சைன ஆலயங்கள், மடங்கள், சங்கங்களை

* * * * * * *

End :

சித்தாம்[பூ](மூ)ர் அநாதி ஸ்தலத்தையும் அதுக்குட்பட்ட எங்கள் ஆசாரிய மடத்தையும், முன் கர்னடக பிரபுக்கள் நடப்பித்துச் சில சாஸனம் இருக்கிறபடி[ரொ] (திர)ம்பவுஞ் செய்யாமல் தகுமானபடி இத்தோடுகூட வருகிற நித்திய கணக்குப்படி நடப்பித்து வெகு நாறு சைனக் குடிகளாகிய எங்கள் வந்தனைக்கு யோக்கியமாய்ப் பண்ணும்படிக்கும் வேண்டிக் கொள்ளு கிறேம். எங்களையெண்ணி இதை நடப்பிக்கும்படிக்கும் வேண்டிக் கொள்ளுகிறேம். இப்படிக் கொத்த தருமம் எங்களுக்குச் செய்வதில் எங்கள் வந்தனையின் பலன் துறையவர்களுக்கு எர்வையாயிருக்கும்.

(கு. - பு).—

இது, சித்தாம்பூர் அல்லது சித்தாமூர் என்னும் ஊரிலிருந்து வந்த ஜைன மதத்தினர் பலரும் ஒன்றுகூடி, கர்னல் மெகென்ஸி துரையவர்கள் முன்னிலைக்கு எழுதி விடுத்ததொரு விண்ணப்பம் ஆம். சித்தமூர், மிகப் பழமையானதொரு ஜைனர்த்தலமாம். இத்தலம், (1) இமசீதள மகா ராசன் (1100ஞூடித்துக்கு முன்) காலம் முதற்கொண்டு மிகப் பிரசித்தமா யுளது. சித்தாமூர், திருநறுங் கொண்டை, திருமலை, திருப்பதிக்குன்று, கரந்தை என்ற இவ்வைந்து ஸ்தலமும், "ஜைனர் பஞ்சஸ்தலம்," என்னப் பெற்றிருக்கும். தஞ்சை குலோத்துங்க சோழன், ஆதொண்டைச் சோழன் என்ற மன்னர்கள் முதலில் சிலநாள் வரை ஜினபக்தர் மீது பகை கொண்டிருந்தனர். இறுதியில், அவர்கள் மீது மனம் இரங்கி மேற் கூறிய பஞ்ச ஸ்தலங்களிலும் கோயில் முதலாயின கட்டுவித்துக் கல் வெட்டுஞ் செய்து போந்தனர். வருடம் ஒன்றுக்கு 4,000 வராகன் சர்வ மானியஞ் செய்து அதனைக் கல்வெட்டிலும் ஸ்தாபித்திருக்கின்றனர். பின் விக்கிரம சோழனூர் இக் கோயிலுக்கு 2,500 வராகன் வருடந்தோறுங் கொடுத்து உதவினர். பிறகு, 600 நூற்றுச் சில்வான ஆண்டிற்கு முன்னிருந்த யெடதராயர் ? விஷ்ணு தேவராயர் என்ற வள்ளல்கள், வரு டத்துக்கு 2,000 வராகன் காணுமாறு செய்தனர். இருநூறு (200) வரு டங்கட்கு முன்பிருந்த "ஸ்ரீ ரங்கராயர்" என்னுமவர், வருடம் ஒன்றுக்கு 1,240 வராகன் வழங்கியுள்ளார். அவர்க்குப் பின் சுமார் இருநூறு வரு டங்களுக்கு முன்னன "வேங்கடபதிராயர்" என்னும் பெரு வள்ளலார் 1,000 வராகன் வரையில் வழங்கி வந்தனர்; என்றிங்ஙனமாகக் கரு நாடக மன்னர்கள் பலரும் இச் சித்தாமூருக்கு நியாயம் வழங்கியுள்ளார்கள். துருக்கர் அரசாட்சியிலும் இதுக்கு 200 வராகன் வரை வழங்கப்பெற்று வந்தது. ஆற்காட்டுச் சுபா பண்ணின "ராயிஜீ" என்பவர் அங்ஙனம் இல் லாது மிகக் குறைவாக ஞூ-க்கு 40 வராகன் ஆகக் கொடுத்து வந்தார்; என்றிவை முதலாயின பண்டைய வரலாறுகளை யெடுத்துக்கூறிக் கம்பெனி

துரை மக்களிடத்து ஷெ கோயில் நித்தக் கட்டளைக்குப் போதுமான வரையில் பொற் காசு வழங்குமாறு அவர்களை வேண்டிக் கோடல் முறையிலே இது அமைந்து இருக்கின்றது. இதில் அங்கங்கே அவ் பிரபுக்கள் இக் கோயிலுக்கும் மடத்துக்கும் வழங்கியவைகட்கு அத்தாட்சிகளான ஒரு சில சாஸன பிரதிகளையும் இப் பிரதியுடன் அனுப்பியதாகக் குறிக்கப்பட்டிருக் கின்றது. ஆனல், அவையெல்லாம் இதுபோது இங்குக் காணப் பெற வில்லை. யாது காரணமோ ? முற்றும் உளது. இதனை டைலர் தொரை மெகென்ஸி தொரையின் பெரிய வால்யும் முதலாவதில், 85–89 ஆன பக் கங்களில் பெயர்த்து எழுதி வைத்துள்ளார். மற்று, ஷியாரது காட்லாக்கில், 827-ஆம் நம்பரில் வருணித்துக் கூறியுள்ளார். 405-406 ஆம் பக்கங்களின் குறிப்பை நோக்குக. இப் பிரதி மை யழியப்பெற்றுப் படித்தற்கு அரிதிலும் அரிதாய் மிகப் பிழைகளுடனும் அமைந்து மிகச் சிதைந்தும் இருக்கிறது.

No. 3147. தாமரைப்பாக்கம் வரலாறு.
TĀMARAIPPĀKKAM VARALĀṞ.

Pages, 10. Lines, 18–24 on a page. Condition, much injured. Extent, 150 granthas.

Begins on fol. 32 (*a*) of the manuscript described under D. No. 3141.

Complete.

An account of " Tāmararaippākkam ", in the Arcot district.

In the beginning of the era of Sālivahana this country (Toṇḍai-maṇḍalam) was governed by the Cuṟumbars, who built forts; and Kulōttunga Chōḻa hearing that they were bad people, came and conquered the land, which he gave to his posterity. After some time, in the days of " Vīrā Śambhuva Rāyar ", one named Vīravasanta Rāyar gained authority in this mud fort and changed the name to Vīra Vasantapuram. Buildings and temples after sometime decayed together with his authority. In the time of Achyuta Rāyar of Vijayanagaram an investigation was made by him; he had a car made and a fane built to Varada Rāja. In the time of " Zulficar Khan, the country went to ruins. In the time of the Nabob Wallajah this mud fort was cared for; a Killadar and revenue court were fixed there.

In the great disturbance many people from the vicinity took refuge within it. The fort is fifteen *cawnies* in extent. There follows a list of the fanes, or temples which are around together with sacred pools and porches.

Beginning :

ஆற்காட்டு தாலூக்கா, தாமரைப்பாக்கம் கைபீயத்து.

ஆற்காட்டுத் தாலூக்காவைச் சேர்ந்த தாமரைப்பாக்கம், சித்தேரி, பொன்பத்தி கிராமம் மூன்றுக்கும், ஆதி பூருவிகம் நடந்த கைபீயத்து—நாமா மகா ஜனங்கள் எழுதி வைத்தது. என்னவென்றல்,

ஆதியிலே சாலிவாகன சகாப்தம் ஆனவுடனே இந்த இராச்சியத்தைக் குறும்பர் இரட்சித்துக் கோட்டைகள் கட்டிக் கொண்டிருந்தார்கள். (அவர்) வெகுவாய்த் துஷ்டத்தனஞ் செய்து கொண்டு மனம்போன போக்கராய் இருக்கிறார்கள் என்று, குலோத்துங்க சோழராசரானவர் கேட்டு இத் தேசத் துக்கு வந்து குறும்பர்களைச் செயித்து இந்த இராச்சியத்துக்குச் "செயங் கொண்ட சோழ மண்டலம்"? என்ற கிதாப்பும் உண்டாக்கித் தம்முடைய வமிசத்தார் வந்து இவ்விராச்சியத்தை இரட்சித்துக் கொண்டு முன்னிருந்த குறும்பர் மண் கோட்டையைப் பந்தோபஸ்த்து செய்து அக் கோட்டையில் கச்சேரி பண்ணிக் கொண்டிருந்த சில நாள் கழித்து **வீரசம்புரவராயர்** நாளையில் "வீரவசந்தராயர்", இந்த மண் கோட்டையில் சில நாளிருந்து இந்த **அக்கிரகாரத்துக்கு வீர வசந்தராயர்புரம்**", என்று பிரதி நாமம்வைத்து

* * * * * *

End :

இந்த ஊருக்கு மேற்கு பொன்பெற்றி கிராமம் எரி க. ஷெ. எரி யெதிர் வாயில் பூருவீகஞ் சிவஸ்த்தலமாய் ஈசுவரன் கோவிலிலிருந்து இப் போது லேமாய்ப் போய்விட்டு இப்போது இருக்கப்பட்டது கல் விருஷபம் க.

இந்தப்படி இந்தக் கிராமம் வேங்கடராயர் மெய்யர் சாமாவையர், பாப்பு வையர், சுப்பராயர் ஊர்க்கணக்கு—பொன்னப் பிள்ளை கையெழுத்து.

(கு - பு).—

இது, ஆற்காட்டுத் தாலூக்காவிலே சேர்ந்துள்ள இப்போது "தாமரைப்பாக் கம்", என்ற பேரால் வழங்கப்பட்டு வரும் ஒரு கிராமத்தினது பண்டைய வரலாற்றினை யெடுத்து உணர்த்துவதாம். இக் கிராமம், சாலிவாகன சகாப்தம் ஆரம்பிக்கையில் "**வீரசம்புவராயர்**" நாளையிலே "வீரவசந்த ராயர்" என்றவர் அரசாட்சியிற்றோன்றியவரால் இங்குள்ளதொரு பண்டைய குறும்பரது மண் கோட்டையே ஆட்சித்தலமாக் கொள்ளப் பெற்று "வீர வசந்தராயர்புரம்", என்னப் பெற்றிருந்தது. இவ்வூருக்கு ஈசான்யத்திலே "கைலாச நாதர் கோவில்" என ஒரு சிவஸ்தலமும் எற்பட்டது. அங்ஙனே மேலண்டையிலே கோதண்டராம சுவாமி கோவிலும் ஏற்படுத்தப் பட்டது. பின்னர், இராயர் ஸம்ஸ்தானத்தில் அச்சுதராயர் தோன்றி மிகப் பழமையானதென்று சீர்ணோத்தாரணம் பண்ணி அவ்வூரைக் கிரய சாதனமும் பண்ணுவித்துக் கொண்டிருந்தார். அவர், கிராமத்தை யறு பத்து நாலு பங்காக்கி, ஒரு கருட வாகனமும் அமைத்துத் தக்கணத்தில் வரதராஜன் கோவிலைக் கட்டுவித்தார். அவ் வரதராஜருக்கு நெல்லுப் பொரியபிஷேகஞ் செய்து வைத்து யதனை விநியோகஞ் செய்து வந்தனர். ஆதலின், "பொரி வரதராஜர்", என்ற பேரும் தோன்றிற்றும். பிறகு, "முதல்வர்" ஆட்சியிற்றோன்றினர். அவரது மனிதர் (32) முப்பத்திரண்டு சேவக மக்களும் பன்னிரண்டு நிமந்தக்கார மக்களும் இவர்க்கு உதவி செய்ய ஆட்சி புரிந்திருந்தனர். அதுக்குப் பின் "சுலுப்புக்கான்", நாளையில் சிறிது லேமாயிருந்தது. இதன் சுபாவை, "நபாபு தவத்துக்கான்", வசஞ் செய்து கொண்டனர். முதலவர் நாள் முதற்கொண்டு, நபாபு வாலாசா நாள் வரைக்கும், கில்லேதாரரும் தாலூக்கா கச்சேரி நடத்திக்கொண்டு வந்தனர். இக்கோட்டை மண் கோட்டையாய்ப் பதினைந்து காணி விஸ்தீர

ணமுமாய்ச் சுற்றியொரு யகழியையு[ங்] கிழக்கில் கோட்டை வாயிலையுங் கொண்டிருக்கிறது. மற்று, முன்னம் இத்தலத்தில் குறும்பர்கள் குறுநில மன்னராயிருந்து மிக மிடுக்குடையராயிருந்தமை பற்றிக் குலோத்துங்க சோழ மன்னர் இந்நாடேற வந்து குறும்பர் குறும்பையடக்கி இந் நாட்டுக்குச் "செயங்கொண்ட சோழ மண்டலம்" என்ற பெயரினையும் வழங்கினார் என் கின்றது. நிற்க, இதில் இறுதியிலே, இத்தலத்தில், (1) கைலாச நாதர் கோவில், கோதண்டராம சுவாமி கோவில், (இவை வசந்தராயரது பிர திஷ்டையாம்). அங்காளம்மை கோவில், தருமராசர் கோவில், விணப்பூர் அம்மன் கோவில், மாரியம்மன் கோவில், பிள்ளையார் கோவில், பொரி வரதராஜப் பெருமாள் கோவில், (இது, அச்சுதராயரது பிர்திஷ்டை), சித் தேரி குளக்கரையில் பிள்ளையார் கோவில், பிடாரி கோட்டியம்மன் கோவில், குடி தண்ணீர் கைக்கோளன் குளம், நாக்க குளம் ஆற்காட்டுச்கோயில் சோசியர் தருமசத்திரம், ஷை குளம், வடக்கில் சித்தேரி கிராமம் மேற்கில் வெள்ளைக் கால்வாய் முள்ளண்டரம் ஊர் மடுவும் "பொன் பெற்ற கிராமம்" இன்னும் இன்னுரென்ன குளம் ஏரிகள் முதலாயின அமைந்திருக்கும் இருப்பினையும் வித்தாரமாகக் கூறுகின்றது.

இத்தாமரைப்பாக்கம் கிராமம் ஆற்காட்டுக்குந் திருச்சிராப்பள்ளிக்கும் போகிற பாட்டையில் ஆற்காட்டுக்குத் தெற்கில் காத வழியும் வடக்கே ஆரணிக்கு நாழி வழியில் முற்றும் இருக்கிறது. சிதைந்துள்ளது. எழுத்து மை யழியப்பெற்றது. இதனை டைலர் தொரை தமது காட்லாக்கில் 827-ஆம் நம்பரில் வருணித்துக் கூறியுள்ளார். 406—407-ஆம் பக்கங்களை நோக்குக. நிற்க, இது மெகென்ஸி பெரிய வால்யும், முதலாவதில், **91—95**-ஆன பக்கங்களில் பெயர்த்து எழுதப் பெற்றிருக்கின்றது. **37—40** எடுகள் வெற்றேடுகள் ஆம்.

No. 3148. அழகிய சேனன் அஞ்சாத கவுண்டன் என்றவர்கள் வரலாறு.

ALAKIYASĒNAN ANCĀTAKAVUNDAN ENRAVARKAL VARALĀRU.

Pages, 16. Lines, 15–20 on a page. Condition much injured. Extent, 160, granthas.

Begins on fol. 41 (*a*) of the manuscript described under D. No. 3141. Complete.

A historical account of Alakiya Kavuṇḍan and Añcāta Kavuṇḍan who ruled in the fort of Ayiliyam malai (a mountain) in the Arcot taluk.

Anciently all this surrounding country was waste land. The abovementioned persons came from the north, and built forts on the hills, named Kudiraitondi and Vaiyalitoṇḍi, with a town, named, "Alakīyasēnai", having a palace therein, with a surrounding wall and gate; they also built a lower fort, and an upper Citadel. These chiefs extended their authority to some distance around, strengthened by fortified posts; and

bein without fear of overlords, they began to molest the common people. About three hundred years ago "our fore fathers" came from the district of "Śrī Sailam" in the north to this country for reasons not known. By the permission of "Yommunār" who built the fort of Vellore or Rāya Vellore, they lived under his authority, and constructed a small military fort forming a check on the beforementioned marauding chieftains. They formed five villages into one district; and protected the people. From that time, downwards, whether they held the land by Sarvamāṇyam (tax free) or Ardhamānyam (half tax) we do not know. Subsequently from the time of Sabdulla Khan, they were accustomed to pay a small, and easy tribute. From the time of Rayigi's Subah, that easy taxation ceased; and regular tribute, to the full extent, was paid. In the time of the Nabobu, in consequence of the molestation of one named Śilam Nāyaham (supposed to be s me predatory chief), he built a small fort of bricks for protection; and afforded a maintenance to the troops that kept it, from the proceeds of the land.

After the assumption of the government of the country by the Honourable company that allowance was discontinued; and only the fort now remains. They continued to cultivate the ground and pay tribute to the company ,like others; some times by direct tax to Government and sometimes an intermediate lease to farmers.

There are two old fanes, one Śaiva, one Vaishnava in the neighbourhood. Some other unimportant details of fanes sacred pools, etc., are given at the close of the document.

Beginning :

ஆற்காடு தாலூக்கில் ஆயிலியம் மலைக்கோட்டையில் ஆண்ட அழகிய சேனன் அஞ்சாத கவுண்டன் என்றவர்களின் கைபீயத்து.

பூர்வீகக் காலத்திலே இந்தப் பிரதேசம் முழுதும் வனாந்திரமாய்க் கிடந்தது. அப்போது அழகிய சேனன் அஞ்சாத கவுண்டன் என்றவர்கள் வடக்கேயிருந்து வந்து "குதிரை நொண்டி, வையாளித் தொண்டி" யென்று இப்போது பேர் உண்டாயிருக்கிற மலையின் பேரிலும் அதன் அருகிலும் கோட்டைகள் அழகிய சேனையென்ற பட்டணங்கட்டி அதில் அரண்மனை கட்டிக்கொண்டு * * * * * ராணுவமும் ஏற்படுத்தி * *

End :

ஊருக்கு வடக்கே நாழிகை வழியில் கெட்டம் சுரப்பரெட்டி வெட்டினகுளம் .க · ஆகக் குளங்கள் கூ ஷை ஊரில் சேர்ந்த மலைகளில் ஊருக்கு மேற்கே குரஞ்சுனை, கன்னிகள் கோயில் மலையில் சுனை. உ. ஊருக்கு வடமேற்கே இரண்டு நாழிகை வழியிலே யமன் மலையிலே யமன்

சுனை .௧. ஆகச்சுனைகள். ௩. இந்தக் கிராமத்துக்கு மேங்காவல் அடி காவல் இரண்டும் இல்லை. கிராமத்தின் கீழ் துர்க்ககிரி. ௨. இதுவே கிரா மங்கைபீயத்து.

(கு.பு.).—

இது, ஆற்காடு தாலூகாவில் ஆயிலியம்மலைக் கோட்டையில் ஆட்சி செலுத்தியிருந்த அழகிய சேனன், அஞ்சாத கவுண்டன் என்றவர்களின் வரலாற்றை யெடுத்து உணர்த்துவதாம். இவர்கள் குதிரைத் தொண்டி வையாளித் தொண்டி, என்றிப்போது வழங்கப்பெறும் தலங்களிலும், அருகிலும் ஆகப் பல கோட்டைகளைக் கட்டுவித்து, "அழகிய சேனன் கோட்டை" யென ஒரு பட்டணங்கட்டுவித்தானாய்ப்பாளையஞ் செய்து வந்தான்.

சாத்துலக்கனன் நாள் முதல் இராயிஜிசுபாவரையில் இவ்வூர் மானியமாய் நடந்து வந்தது. நபாபு நாளையிலே சீலி நாயக்கன் என்ற ஒருவரால் சிறிது உபத்திரவம் எற்பட்டிருந்தது. இவ்வூருக்கு அருகில் அனேக மலைகள் சூழ்ந்திருக்கின்றன. ஈசுவரன் கோவில், பெருமாள் கோவில் இரேணுகை முத்தாலம்மை கோவில், பிடாரிக்கோவில், வயிரவநாதன் கோவில், குறுஞ்சுனைமலை மேல் கன்னியர் கோவில் என்று (6) ஆறு கோவில்களும், வெங்கு ரெட்டி, முத்து ரெட்டி, இரட்டியப்ப ரெட்டி, சூரப்ப ரெட்டி, முதலியோர்கள் கட்டுவித்த குளங்கள் (9) ஒன்பதும், யமன்சுனை கன்னியர் கோவில் சுனைகள் (2) இரண்டும் ஆகிய இவைபோல்வன இத் தலத்தில் அமைந்திருக்கின்றன என்கின்றது. இவ் வரலாற்றினைத் தெரிவிக்கின்றவரின் பெயர் இன்னது என்று இதில் குறிக்கப் பெறவில்லை. ஆனால் இவரின் முன்னோர்கள், சுமார் (300) முன்னூறு வருடங்களுக்கு முன்னர் நெல்லூருக்கு வடக்கில் ஸ்ரீசைலம் என்ற பிராந்தியத்திலிருந்து வேலூர் கோட்டை கட்டின யம்முனார் அவரது ஆதரவினாலே இத்தலத்துக்குக் குடியேறினர் என்கிறார். அழகிய சேனைகோட்டைக்கு வடகிழக்கில் விஷஸ்தானக் கொடிமலை என்கிற ஒரு மலையமைந்திருக்கின்றது என்றுந் தெரிகிறது. முற்றும் இருக்கிறது. இது, மெகென்ஸி தொரையால் சம்பாதிக்கப் பெற்றவைகளில் ஒன்றாம். டைலர் தொரை காட்லாக்கில் 407-ஆம் பக்கம், 827-ஆம் நம்பரில் வருணிக்கப் பெற்றிருக்கிறது. மிகப் பிழையுடன் உள்ளது. மிகச் சிதையப் பெற்றிருக்கிறது. எழுத்தின் மை யழியப் பெற்றதாய்ப் படித்தற்கு மிகவும் அரிதாயிருக்கிறது. இவ்வூரை ஷ காட்லாக்கில் "அயிலம்" என்றழைக்கப்பட்டு இருக்கிறது. மெகென்ஸி மானஸ்கிருப்ட்ஸ் பெரிய வால்யூம் முதலாவதில 95—99-ஆன பக்கங்களிலே பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றிருக்கிறது. இறுதியில் 49-ஆவது வெற்றேடாயுள்ளது.

No. 3149. பூண்டி ஜினாலயதலபுராணம்.
PŪNDI JINĀLAYA TALA PURĀṆAM.

Pages, 10. Lines, 24 on a page. Condition, much injured. Extent, 150 granthas.

Begins on fol. 56 (*a*) of the manuscript described under D. No. 3141. Complete.

A Legendary account of the Jaina fane of Pūṇḍi village in Aṛaṇi taluk.

Beginning :

ஆறணி தாலூக்கிற் தாலுக்கா பூண்டி ஜினலயம் ஸ்தல் புராணம் :—

புவிமீதில் விளங்கி வரும் புண்ணிய தலத்தில்
அதிக மாம் பூண்டியருகர் சினலயம்
அதனுடைய பெருமை யளவிட வொண்ணாத
ஆதி காலத்திலே யாகாசமளவாய்
வளர்ந்தோங்கிநிற்கும் வனமது தன்னில்
செண்பகம் கொங்கு தேக்குடன் ஆச்சா
பெருக்கமாய் வளரும் புண்ணிய வனத்தில்
வாழையுங் கமுகும் வளர்ந்திடுந்தென்னஞ்
சோலையாயெங்குஞ் சூழ்ந்திருக்கும் வனத்தில்
அசோக விருட்சமும் அதிற் பாரிசாதமுஞ்
செழித்திடும் [பி](ப) லாவுந் தேங்கு மாதளையும்
மல்லிகை முல்லை மந்தாரை கொன்றை
முள்ளு சாமந்தி முள்ரியுஞ் சூழ்ந்து
பொங்கமாய் வளரும் புண்ணியவனத்தில்
இன்னமுமதிசயம் இயம்பவே கேளாய்.

End :

தக்கிணந் தன்னிற் செய்பது மநதியும்
உத்தர திக்கில் கேசரந்தியும்,
இப்படி யாகச் செய்தனர் முனிவர்,
வனமதிற் றிரியும் இருவரும் வேடர்
வரமது கேட்க வருகின்றி சேர்ந்தார்
இணையடி பரவி வரமது கேட்பார்
அப்போது முனிவர் அனுக்கிரகஞ் செய்தார்
இரும்பனுக் கிரும்பே டென்றும்
பூண்டனுக்குப் பூண்டி யென்றும்
அவனி தலத்தில் அழியாப் பதவியாய்
வரமது வளித்து வகுத்தனர் முனிவர்
இப்படி யாக விருந்திடும் நாளிற்
சமைய நாத ர்தவமது பெருகிப்
பொன்னியில் வட்டம் புகுந்தனர் முனிவர்

(கு.பு.).—

இது, ஆறணிக்கு அருகில் அமைந்த பூண்டி யென்ற ஜைனர் ஊரின் பண்டைய வறலாற்றை யெடுத்து உணர்த்துவதாம். இதில், ஷை அருகர் ஜினலாயம் உற்பத்தியான செய்தி விளக்கமாகின்றது. அதாவது இத்தலம் ஆதியில் ஆரண்ணியமாயிருந்தது. வனத்தில் "இரும்பன்" பூண்டன் என்ற இரு வேடர்களும் வான்மீகத்து வள்ளிக்கிழங்குகளைக் கல்லுகையில் அங்குத்தவஞ்செய்யுஞ் சமயநாத முனிவரைக்கண்டு திகைத்து மூர்ச்சித் தனராம். பின்னர், அம்முனிவரால் இருவரும் மூர்ச்சை தெளியப் பெற்று ராய் எங்கள் தலத்திலேயே நம்போன்ற தொரு பதுமையுங் காணப்படுகின் றது என்ன, முனிவரர்தாம்.—

இப்பூண்டித்தலமேற்சென்று அருகரது மூர்த்தம் அதனைத் தரிசித்து இறும்பூது கொண்டிருந்தார். நிற்க அவ்வேடர், இவ்வரிய செய்தியினை அக்காலத்து மன்னர்க்கு அறிவிக்கச் சென்றனர் அங்கு அம்மன்னரது அரும்

புதல்வியாம் "இலட்சுமிதேவி" என்பாளை ஒரு பேய் பிடித்துக்கொண்டு பன்னிரண்டு ஆண்டுகள் அளவும் அலைந்துக்கொண்டிருந்தது. அப்பேய்க் கூத்தைக்கண்ட அவ்வேடர் இருவரும் அத்தருணத்தில் தாங்கண்ட சமயநாதமுனிவரது விருத்தாந்தம் அதனை இராயருக்கு உரைத்தாராக, அதைக் கேட்ட அப்போழ்தே அப்பேய் நமக்கு இனி தக்கதானதோர் புகலிடங்காணல் வேண்டும் என்று அவ்விடம் விட்டுப் பெயர்ந்தது. அரையன் மகள் முன் போலத் தன்னியல்பினில் இருந்தனள். இப்பேயும் முனிவரைக்கண்டு தனக்குரிய ஒரு புகலிடத்தை வரங்கேட்க, அவர், அப்பேய்க்கு இவ்வனமதை யருளாமல் காவல் புரியுமாறு கட்டளையிட்டார், இராயரும் இம்மகானுபாவரைக் காணுமாறு தன் மனைவி புதல்வியருடன் இப்பூண்டி தலத்துக்கு வந்தாராய்ச் சமயநாதர் அடிபணிந்து நின்றிருக்கையில், இலட்சுமிதேவிக்குச் சுவர்க்கபதமதை வரமாக அளித்து இத்தலத்துக்கோயிற்கொண்டிருக்கும் அருகக்கடவுளாருக்குத் திருக்கோயின் முதலானவற்றைச் செய்து முடிக்க ஆணையிட்டனர்- அங்கனமேயவர் பாரிசுவநாதர் கோவில், பொன்னெயில் நாதர் கோவில், நடுவில் தருமதேவதை கோவில், பிரதட்சண பிரகாரங்கள் பலமண்டபங்கள் முதலானவற்றைத் திருப்பணிசெய்து முற்றுவித்தார். இறுதியில் வேடர் இருவருக்கும் அளித்த வரம் ஆவன இரும்பனுக்கு "இரும்பேடு" என்னும் கிராமமும் பூண்டனுக்குப் "பூண்டி" யென்னுங் கிராமமும் உரித்தாய் உலகில், என்றும் அழியாப்பதவியாக விருக்கக் கடவன் என்று வரம் அளித்தார் என்பது. இது, செய்யுள் நடையிலே யமைந்திருக்கின்றது. இதனை இயற்றினர் இன்னர் என்று புலப்படவில்லை. நிற்க, இங்கு எடுக்கப்பெற்ற இராயரது பேரும் அவரது காலமும் இன்னது என்று உணர்த்தப்பெருமலிருக்கின்றன. முற்றும் உள்ளது. சிதைந்துள்ளது. மை யழியப்பெற்றுள்ளது. மெகென்ஸி தொரையால் சம்பாதிக்கப் பெற்றதாம். டைலர் தொரை காட்லாக்கில். 827-ஆம் நெம்பரில் வருணிக்கப் பெற்றது. மெகென்ஸி பெரிய வால்யும் முதலாவதில் 99—105-ஆன பக்கங்களிலே பெயர்த்து எழுதப் பெற்றிருக்கிறது. கடையில் 55-ஆம் எடு வெற்றேடாம்.

No. 3150. சித்தாமூர்க்கோவில் மட்டங்களின் நித்தியப்படி தர்மம்.

CITTĀMŪRKKŌVIL MAṬHAṄKAḶIN NITTIYAPPAḌI-DHARMAM.

Pages, 20. Lines, 22–26 on a page. Condition, very much injured. Extent, 320 granthas.

Begins on fol. 56 (*a*) of the manuscript described under D. No. 3141.

Complete.

A list of daily expenses of the Jaina temple and the Maṭham in Cittāmūr village, Chettuput taluk.

The required expenditure referred to, in the preceding article follows herein.

Beginning :

சேத்துப்பட்டு தாலுக்கில் சித்தா[ம் பூ] (மூ) ர் ஜினலயம் மடம் (இவை களின்) நித்தியபடி தர்மங்கள் :

* * * * * * * * *

End :

ஜைன பட்டாசாரியர் அவர்களும் மடத்தவர்களும் மேலும் தரியாபத்துப் பண்ணவேண்டிய பத்ததிகள் வருமாறு :—

க. பூருவீகந் தொடுத்து இத்தையில் வரைக்கும் புராண சித்த மாயும் வாக்கு மூலங்களாயும் (ஏற்படும்) இந்தப் பூமியையாண்ட ராசாக் களுடைய ஜாபிதா. அதில் அவர்கள் தேசம் பட்டணங்கள் வருடங்கள் முதலானவைகள் விசேஷமாய்க்கண்டெழுதவேணும்.

(எ) அக்கினி மழை மண்வாரி வருஷத்துப் பூமி யழிக்கப்பட்டதைப் பற்றிச் சைனர்கள் சொல்லுகிறதென்ன. (அ) லாட [லெபி] (லிபி) எந்தத் தேசத்திலிருந்து உண்டானது. (கூ) யதி தருமம், கிருகஸ்த்த தருமம் (ய) மதங்கள், சாதிகள் எந்தெந்த தேசங்களிலிருந்து உண்டான [து] (வை) கள் என்று வயணமாய் எழுத வேண்டியது.

குறிப்பு :—மிகுதியான பகுதி புரியாமல் இருக்கிறது.

(கு. - பு.).—

இது சேத்துப்பட்டு தாலுகாவில் உள்ள சித்தாமூர் கிராமத்திலேயிருக் கும் ஜைனர் கோவில்களுக்கும் ஜைன மடத்துக்கும் தினந்தோறும் நித்தக் கட்டளையிற் செலவாகும் பூசை சாமான்களது சட்ட திட்டங்களை மெகென்ஸி தொரைக்கு எடுத்துரைத்து, ஷ சாமான்களைப் பெறுதற்கான பொற்காசு களை வழங்குமாறு வேண்டிக்கோடன் முறையிலேயமைந்தது எனத் தோன்றுகிறது.

இப்பகுதி, முன்னர் 3146-ஆம் நம்பரில் வந்துள்ள மெகென்ஸிக்கு ஜைன மதத்தவர் விண்ணப்பம் என்னும், "பகுதியின் பக்கத்திலே இருத் தற்குரியதாம்" என்க. அதில் அதனுடன் ஷ நித்தியப்படிக் கட்டளையின் பிரதியொன்றும் எழுதி யனுப்பியதாகக் குறிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, இப்பகுதி யதுவேயாகலாம் என நிச்சயிக்கப்பட்டது. டைலர் தொரையவரும் தமது காட்லாக்கில் 406-ஆம் பக்கம் 827-ஆம் எண்ணில் இக்கட்டளையைக் குறித்துப் போகின்றார், அங்கு, இப்பகுதியைத் தாம் பெயர்த்து எழுதி வைக்கவில்லையென்கிறார். பொது மக்களுக்கு இது அத்தனையின்பம் பய வாது என்றெண்ணி விடுக்கப்பெற்றது என்றும் கூறியுள்ளனர். ஆனால், இவ்வட்டவணைக்குப் பின் காணப்பெறும், ஜைன பட்டாசாரியர்களையும் மடத் தவர்களையும் விளித்து ஜைனமத சம்பந்தமான சில (11) வினாக்களை விடுத்து அவைகட்குத் தக்க விடைகளைத் தெளிவாக விளக்குமாறு கேட்டிருப் பதான ஓர் பகுதியை மாத்திரம். ஷ தொரை மெகன்ஸி, பெரிய வால்யும், முதலில் 89 & 90-ஆன பக்கங்களிலே பெயர்த்து எழுதி வைத்திருக்கின்ற னர். அவைகட்கு உரிய விடைகளை நாம் இங்கும் அங்குமாகவிருக்கும் வேறு சில பிரதிகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம். முற்றும் உள்ளது. எழுத்து மையழிந்து புரியாமலிருக்கிறது. மிகச் சிதைந்தது.

No. 3151. கள்ளப்புலியூர் வெள்ளைக்கன் மேட்டு வரலாறு அல்லது (இல்வலவாதாபியர் வரலாறு).

KAḺḺAPPULIYŪR VEḺḺAIKKANMĒṬṬU VARALĀṞU.

Pages, 8. Lines, 14 on a page. Condition, much injured. Extent, 50 granthas.

Begins on fol. 66 (*a*) of the manuscript described under D. No. 3141.

Complete.

An account of a hillock of white pebbles (Fossil remains) at Kaḻḻap-puliyūr village, Chettupat taluk.

To the east of the above village there is a hillock entirely of white stones. The hierophant of the fane in that village gave the following account of them.—Two Rākṣasās named Vātan (Vātāpi) and Vilvātan. (Ilvalan), lived here; and were accustomed to feed travellers in the following manner. Vilvātan, would first slay, his younger brother, Vāthan, and would cook him in pots, out of which he fed the traveller. The meal being finished; Vilvathan would call his brother by name, who would come out alive, rending the bowels of the guest, and the brothers would feast on the dead body of the guest. On the occasion of the marriage of Śiva and Pārvati, at Kailāsa they sent Agastya to the Potikai mountain in the south; who, on his way, came by the residence of these Rākṣasās and killed them. The bones of these two Rākṣas s having broken to pieces, and becoming petrified, are now termed white pebbles or sphatika stones.

Beginning:

சேத்துப்பட்டுத் தாலூக்கில் கள்ளப் [பி] (பு) லியூர் என்கிற கிராமத்துக்குக் கீழ்ப்புறம் "வெள்ளைக்கல் மேடு", என்று ஒரு மேடு இருக்கிறது. அந்த மேடு அகலமும் பருமனும் நீளமுமான வெள்ளைக் கல்லுகளினாலே நிறைந்திருக்கிறது. அதன் வரலாறு.—கள்ளப் புலியூர் கோவில் குருக்கள் சொல்லுகிறபடி யென்ன வென்றால்—

பூர்வீக காலத்திலே வாதன் என்றும், வில்வாதி யென்றும், இரண்டு இராக்ஷதர்கள் இவ்விடத்தில் வாசம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். அவர்கள், பாட்டை சாரியாய் வருகிறவர்கள் போகிறவர்களுக்கு விருந்து பண்ணியனுப்பிக்கவயணம் * * * * *

End:

கைலாச பருபதத்தில் சிவனுக்குக் கலியாணம் நடக்கிறபோது, அகத்தியரைப் பொதியமாமலைக்கு அனுப்புவித்தார்கள். அவர் இந்த மார்க்கமாய் வருகிறபோது, வில்வாதி யென்னப்பட்டவன், * * * அவருக்கு யதாபிரகாரம் விருந்து பண்ணி வைத்து அவர் திருப்தியாகிறபோது வில்வாதியாகப்பட்டவன் வாதா (பீ) என்று சத்தம் போட்டுக் கூப்பிட்டான். இந்த இரகசியம் அவருக்குத் தெரிந்து சீரணம் ஆகுவாய் என்று சொல்லித்தம் வயிற்றைத் தடவினார். வாதன் சீரணமாகிப் போனான்.

வில்வாதியையுங் கல்லாகச் சபித்துப் போட்டார். அவனும் உடனே செத்தான். அவர்கள் காயதீர்க்கரானபடியினாலே அவர்கள் அழிந்து போன பிறகு அவர்களுடைய எலும்புகள் கல் ரூபமாயிருந்து ஒரே குவியலாகிக் கிடக்கிறபடியினாலே வாதன் வில்வாதி யென்னப்பட்ட இராக்ஷதர்களுடைய எலும்பு இப்போது வெள்ளைக்கன்மேடு என்று அழைக்கப்பட்டிருக்கிறது.

(கு. - பு.).—

இது, சேத்துப்பட்டுத் தாலூக்கிலே "கள்ளப் புலியூர்" என்ற கிராமத்தில் கீழ்த்திசையில் "வெள்ளைக்கன்மேடு", என்ற தலத்தினது பண்டைய வரலாற்றை யெடுத்து உணர்த்துகின்றது. இத்தலத்தில், இல்வவன், வாதாபி யென்று இருவர் அரக்கர்கள் வதிந்திருந்து வழியில் வருபவர் போவார் அவர்களை அழைத்து வலுவில் விருந்திட்டுக் கொன்று போட்டு அவர்களை உணவாக்கிக் கொண்டிருந்தனர் ஆம். அங்ஙன் ஆக, அகத்தியர் சிவபெருமானது திருமணக்கோலம் காண வந்திருந்தவரை காரணவிசேடத்தால் தென்றிசையில் பொதிகை மாமலைக்கு ஏகுமாறு ஆணையிட, அகத்தியர், அங்ஙனம் வரும் வழியிலே இத்தலமேற வந்திருக்கையில், அவ்வரக்கர், இவர்க்கும் வழக்கம்போல் விருந்திட்டுக் கொல்ல முயற்சி செய்ய, அவ்விருவரையும் முனிவரர் வயற்றில் இருந்த வாதாபியைச் சீர்ணமாக்கியும், இல்வலனை (பெரியவன்)க்கல்லாகவுஞ் சபித்தனர். இங்ஙன் ஆக அவ்வரக்கர்களும் அகத்தியரால் மாண்டிருந்தனர். அவர்கள் உடலின் எலும்புகளே இப்படி நிறமான கற்களாய்ச் சமைந்திருக்கின்றன என்ற இப்பழைய வரலாறு புலனாகிறது. முற்றும் உளது. நிற்க, கள்ளப் புலியூரைப் பற்றிய விசேடம் ஒன்றும் இதில் விளக்கம் பெறுமலிருக்கிறது. மிகச் சிதைந்து உள்ளது. மெகென்ஸி தொரையது பெரிய வால்யும் முதலாவதில் 105& 106-ஆம் பக்கங்களில் பெயர்த்து எழுதப்பெற்றதாம். டைலரது காட்லாக்கு 827-ஆம் நம்பரிலே வருணிக்கப் பெற்றிருப்பதேயாம். அக்காட்லாக்கு 409-ஆம் பக்கக் குறிப்பை நோக்குக.

No. 3152. திருவாய்ப்பாடி தேவஸ்தான வரலாறும் வயலூர் வீர நாராயண சம்புவராயன்கோட்டை வரலாறும்.

TIRUVĀYPPĀDI DĒVASTHĀNA VARALĀRUM VAYALŪR VĪRA NARĀYAṆAŚĀMBHUVA RĀYANKŌṬṬAI VARALĀṚUM.

Pages, 10. Lines, 20 on a page. Condition, very much injured. Extent 100 granthas.

Begins on fol. 70 (*a*) of the manuscript described under D. No. 3141.

Complete.

Accounts of the temple of the village of Tiruvāypāḍi and of the ancient fort of Ādinārāyaṇa Śāmbhuva Rāyar at Vayalūr in Chettuput taluk.

In ancient times Parāśara Ṛṣi (father of Vyāasa) and Mārkaṇḍēya Ṛṣi retired for penance to this mountain named Sudariśanam. Vishnu came thither to see them, and remained reposing on Ādiśēsha ; giving

Mōksham (or eternal bliss) to such as came to worship him there. These visitors being not men, but the inferior gods, formed mountain-pools for bathing, which now make five cascades. The tīrthās (or pools) are designated by names ; in one of them the footsteps of Vishṇu are visible, by the marks left. A little to the east of this hill Vīra Nārāyaṇaśāmbhava Rāyan built a fort ; governed the country, and made some charitable grants. Fragments of buildings in brick work indicate the site of this fort. His palace was on a hill at some distance westward ; where, also vestiges appear ; there is also a Vaishnava fane ; as only a few dwellings are in that place, it is now called " Vayalūr " (a hamlet in the open fields). At the foot of the hill there was once a śaiva fane, of which now only the emblem of Śaiva remains.

Under the hill are other antique vestiges ; among them there is a wide street, with Manṭapās (or proches) and other similar things, appandages to Hiṇḍu worship. In a former Yuga (or age) the Vānarās (Sylvans) paid homage to Rāma, the incarnation of Vishṇu ; and some remained to the present day, in Vaishṇava fanes, to attend on the God. The black-faced species of apes especially abound in the district.

This statement was written according to the account given by the Nambiyān (a Brahmin) of Tiruvāyppāḍi and of Vēṅkaṭēśa Mudaliyār.

Beginning :

பூர்வகாலத்திலே பராசருஷியும், மார்க்கண்டேயருஷியும் பகவானுடைய தரிசனையாகி அபீஷ்டஞ்சித்திக்கவேணும் என்று இந்தச் சுதர்சன பருவத்தில் வந்து தபசு செய்து கொண்டிருக்கையில் வைகுண்டத்திலேயிருந்து இலட்சுமீஸமேதராய் கருடன் மீதிலே எறிக்கொண்டு இந்த இருடிகள் தபசு செய்து கொண்டிருக்கிற விடத்துக்கு வந்து பிரத்தியக்ஷமாய் அவர்களுடைய அபீஷ்டஞ்சொல்லி அந்தப் பருவதத்துக்குமேலே தெற்கே தலை வைத்து மரக்காலை தலைக்கணையாக வைத்துக்கொண்டு ஐந்து தலையுடனே ரூபம் எடுத்திருக்கிற ஆதிசேஷன் பேரிலே பள்ளிகொண்டு * * *
சகல தேவதைகளும் இருஷிகளும் பகவானுடைய தரிசனத்துக்கு வந்து இந்தப் பருவதத்திலேயிருந்து தபசு பண்ணிக்கொண்டு அவர் அவர்கள் ஸ்நானத்துக்கு ஒவ்வொரு தீர்த்தம் மலையின் பேரிலே யுண்டாக்கிச் சுவாமியைப் பூசை செய்து கொண்டிருந்தார்களாம். அந்தத் தீர்த்தங்களிலே இப்போது காணப்படுகின்றது ஐந்து தீர்த்தம் ஆம். அவை ஐந்து தாவிலே சுனையாகி வெகு ஆழத்துடனே வடியாமல் இருக்கின்றன. *
* * * * * * * * *

இந்தச் சுதர்சன பருவத்துக்குக் கிழக்கே அரைநாழிகை வழியிலே வீரநாராயணசம்புவராயன் கோட்டை கட்டிக்கொண்டு அதிலே சிறிதுநாளிருந்து இந்தத் தேசங்களை ரக்ஷித்துத் தேவாலாயங்களுக்குத் திருப்பணி முதலானவைகளை நடப்பித்துச் சிலாசாஸனங்களாய்த் தருமங்களை நடப்பித்தார்களாம். * * * * " * *

அவ்விடத்திலே ஒரு பெருமாள் கோவிலிருக்கிறது. அதற்குப் பூசை நின்றிருக்கிறது. அந்தப் பிரதேசம் இப்போது "வயலூர்," என்று பேர் உண்டாகிக் கொஞ்சங் குடிகள் வீடு கட்டிக் கொண்டிருக்கிறார்கள். * * *

End :

அந்தச் சுவாமியார் சயனம் பண்ணிக்கொண்டிருக்கிற அரங்கஸ்த்தலங்களிலே இந்தக் கலியுகத்திலேயும் இந்த ரூபத்தையும் தரிசனஞ் செய்து கொண்டு இருக்கின்றன. இப்போது இந்த மலையில் "கொண்டமுசு," என்கிற வானரங்கள் [வாறதுகள்] வருகின்றன. நிரம்பவும் தீர்க்கமாயும் முகங்கள் நிரம்பவுங் கருப்பாயும் விஸ்தரித்துக் காணப்படுகின்றன. இப்படிக்குத் திருவாய்ப்பாடி கோவில் நம்பியானும் வேங்கடாசல முதலியும் ஆக எழுதிக்கொடுத்த [கைபீயத்து] (வரலாறு.)

(கு. -பு.).—

இப்பகுதி, சேத்துப்பட்டு தாலூக்காவில் இருக்கிற திருவாய்ப்பாடியிற் சுதரிசனபருவதத்தில் ஸ்ரீவிஷ்ணுவானவர் ஸ்ரீரங்கநாத மூர்த்தியாகி வியாசருக்கும் மார்க்கண்டேய முனிவருக்கும் பிரத்தியட்சமாகி, யவரது வேண்டுகோளால் இங்கு ஆதிசேஷன்மீது மரக்காலைத்தலையணையாக்கொண்டு திருப்பள்ளிகொண்டிருக்கும் பண்டைய வரலாற்றையும், மற்று, இத்தலத்துக்கு அண்மையில் அரை நாழிகை வழியிலே "வீரநாராயண சம்புவராயன்" என்றவொரு பெருநில மன்னர், தமது பேரால் இத்தலத்தில் ஒரு கோட்டை கட்டியும் அரண்மனையுங் கொண்டிருந்து இந்நாட்டில் விஷ்ணுவாலயம் சிவாலயங்களுக்குப் பல திருப்பணிகளையும் முற்றுவித்து கல்வெட்டுகளுங்கண்டிருக்கிறார் என்றும், அத்தலம் இப்போது "வயலூர்," எனப்படுகின்றது என்றும், அம்மலையில், கோயிலுக்குக் கிழக்கில் பிர்ம்ம தீர்த்தமும், மேற்கே வராக தீர்த்தமும், வாயுமூலையில், சாளக்கிராம தீர்த்தமும், வடக்கில் இலட்சுமீ தீர்த்தமும், அதுக்கு மேற்கில் ஸ்ரீபாத தீர்த்தமும், இத் தீர்த்தக்கரையிலும் உள்ளிலும் ஆகத் திருமாலின் திருஇணையடிகளின் சுவடுகள் காணப்படுகின்றன வென்றும் இன்னோரன்ன வரலாறுகள் பலவற்றினையுந் தெரிவிக்கின்றது. மலையில் நாற்பாங்கிலும் தேரோடும் வீதிகளும், அரங்கநாதர் அரங்கநாயகியாரது திருக்கோயில்கள் இரண்டும் ஊர் கிழக்கில் முன் நாளில் சிவன் கோவிலிருந்து இந்நாளில் இலிங்கம் மாத்திரம் மிகுதியாகவிருக்கும் சிவன் கோயில் ஒன்றும், அரண்மனைக்கண்டையிலே யொரு திருமாற் கோயிலும், (பூசையில்லாததாம்). சூடிக் கொடுத்த நாய்ச்சியார் அல்லது திரு ஆண்டாள் கோயில் ஒன்றும், அங்கே பல்வேறு மண்டபங்களும் நீர் நிலைகளுமாகத் தென்பட்டு அவை யெல்லாம் இத்தலமானது அம்மன்னரது காலத்திலே மாபெரும் பட்டணமாக விருந்ததைப் புலப்படுத்துகின்றன. இவ்வரலாற்றைத் "திருவாய்ப்பாடி தேவஸ்தானத்து நம்பியாரும், ஸ்தானீகர் வேங்கடாசல முதலியாரும் கூடி எழுதிக்கொடுத்தார்கள்" என்றுங் கடையகத்துக் குறிக்கப்பட்டிருக்கின்றது. மிகச் சுருக்கமாயிருக்கிறது. இம்மலையில் கொண்ட முசுக்கள் விசேடமாக உளவாம். இது மெகென்ஸி தொரையினதாய் டைலரது காட்லாக்கு மூன்றும் வால்யூம்

409-ஆம் பக்கமதில் 827-ஆம் எண்ணின் குறிப்பிலே குறிக்கப்பட்டிருக்கிறது. மெகென்ஸி தொரை பெரிய வால்யூம் முதலாவதில் 107—109-ஆம் பக்கங்களிலே பெயர்த்து எழுதப் பெற்றிருக்கிறது. இப்பொழுது மாதுருகையின் ஏடுகள் எல்லாம் மிகப்பொடிப்பொடியாய்க் கிழிந்து மையும் அழியப் பெற்றிருக்கின்றன. நிற்க, இதில் எடுக்கப்பெற்ற வீரநாராயண சம்புவராயரது காலமானது விளக்கப்பெறவில்லை. ஆனால், முன் 3147-ஆம் நம்பர் பிரதியிலே வீரசம்புவராயர் என்றொரு மன்னரின் பேரும் அவரது காரியக்காரர் வீரவசந்தநாராயணர் பேரும் வழங்கப்பட்டிருக்கின்றன. இங்கு உள்ள வீரநாராயணசம்புவராயரும் அங்குள்ள சம்புவராயரும் ஒருவரேயாக இருப்பின் இவரது காலம், அதில் கூறியபடி சாலிவாகன சகாப்த ஆரம்பத்துக்குப்பின் ஒரு சிறிது காலம் தள்ளிய காலமாயிருக்கலாம் எனத் தோன்றுகிறது. மூன்றாங் குலோத்துங்க சோழ மன்னருக்குப் பின்னிருந்தவர் என சரித்திர உலகில் பிரசித்தம் ஆம். இப்பெயரில், டைலர் தொரையவர்கள் திரிபாக இவரை "ஆதிநாராயணசம்புவராயன்", என்று கூறினர். அஃது ஆராயற்பாலதாம் என்பது. இவ்வூரின் பேரும் அங்ஙனமாக ஒருவிடத்து திருவப்பாடியென்றும் மற்றோரிடத்துத் திருவாய்ப்பாடி யெனவும் வழங்கித் திரிபுகொண்டு உள்ளது. இப் பெயர் வந்ததின் காரணம் சரியாகப் புலனாகவில்லையாதலால் இதன் இயற்கைப் பேரைக்கண்டு உணர்தல் இதுபோது அரிதாக வுள்ளது.

No. 3153. துறகல் ஜைனர்க் கோவில் சிலாசாஸனம்.
TUṞAKAL JAINARKKŌVIL ŚILĀŚĀSANAM.

Pages, 8. Lines, 13 on a page. Condition, much injured. Extent, 60 granthas.

Begins on fol. 77 (*a*) of the manuscript described under D. No. 3141.

Complete.

A copy of the Inscription on stone at the gate of the Jaina temple in the village of Tuṟakal in Vandavāśi taluk. There is a short account of this village by Appāvu, Colonel Meckenzie's servant. This manuscript belongs to one of the Meckenzie's collection manuscripts and is same as the work described under No. 827 of Taylor's Catalogue, Vol. III, pp. 419.

Beginning :

வந்தவாசி தாலூக்கில் துறகல் சினாலயத்தில் அடிப் பிறதி மைப்பலகையில் இருக்கப்பட்ட சிலாசாஸனமும் துறகலைப்பத்தி அப்பாவுனுடைய கவனிப்பும் திருமுகப்பும்.

ஸ்ரீகோவப்பெருஞ்சிங்கன் துர்க்கந்தானத்தாரும், ஊரவருங்கண்டு விடைதுரக்கலு இவ்வூர்ப்பள்ளிச்சந்தமும் முன்பிலாண்டுகள் அனைத்தாவங்கரும் இருக்க [இதையிலயே] ? (இந்த எல்லையை) யனுபவித்தும் போந்தப்படியே மூன்றுவது கார்த்திகைமீ மாதம் முதல் செல்வதாக மவயாரி ஸ்வாமிகள் சிஷ்யவிருத்தி உதாரண ஸாமதி தேவர்க்குக் கொடுத்தோம்.

இவருடைய பண்டிதர்களுக்கு நற் கடமை குடியைப் பொக்கறுப்பதாகவும் துரக்கல்லேரிக்கு அண்டையில்க் கால்க்கலேச் சாதப்பூண்டியெல்லேயில் வச்சிரக்கால் தோண்டிக்கொள்வது. மலச்சன்னேம் ? இப்படி தெய்வ தெஸமுதலி.

அப்பாவினுடைய கவனிப்பு :—

துரக்கலில் ஒரு (குன்றி) [ண்ணி] ருக்கிறது. அந்தக் குன்றின் பேரிலே ஒரு விநோதமான ஒரு சினலயம் இருக்கிறது. அந்த குன்றுக்கு அடியிலே பிராகாரத்தையுடைத்தான ஒரு சினலயம் இருக்கிறது. இந்தப் பிராகாரத்துக்குள் மூலஸ்தானம் முதலான்வைகளேத் தவிரக் குன்றிலே காயா சொற்கமாய் ? ஒரு சின விம்பம் மகாரூபமாய்ச் செய்திருக்கிறது. இந்தச் சினலயத்துக்கு எதிர்வாய் எதிர்ப் புறத்திலே ஒரு சின்ன குன்று இருக்கிறது. அந்தக் குன்றைச்சுற்றிலும் மகாவிநோதமாய்க் காயா சொற்கமாகவும் பல்லங்கியாசனமாகவும் பெரிய சின பிம்பங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அதற்கடியிலே மூன்று சிலாசாஸனங்கள் கன்னடத்திலே ஒன்றும், தமிழிலே ஒன்றும், சமஸ்கிருதத்திலே ஒன்றும் மகா கருதலான எழுத்தாய் எழுதியிருக்கின்றன. இவை சைன ராசர்களுடைய சாசனமாய் எண்ணப்பட்டிருக்கின்றன. இவை கரு [த] (வ) லான எழுத்தான படியினலே கண்டு பிடிக்க நிரம்பவும் பிரயாசப்படவேண்டும்.

End :

இதுவன்றி மாபலிபுரத்தைப்போலே மலேயில் நாலு கால் மண்டபம் வெட்டத்துவக்கி வேலே முடியாமல் கிடக்கிறது. இந்தத் துரக்கல் குன்றைச் சுற்றிவர வெகு குகைகள் இருக்கின்றன. அவைகளில் மூன்று குகைகளில் சின விம்பங்கள் பல்லங்கி ஆசனமாய்ச் செய்யப்பட்டிருக்கின்றன. இதிலே சைன முனீசுவரர்கள் வாசஞ் செய்கிருர்கள் என்று சொல்லப்படுகிறது. பூர்வ காலத்திலே இவ்விடத்தில் சைனர் சங்கம் இருந்ததாம். இப்படி, லோகநாத நயினர் எழுதி வைத்த சாஸனமும் கைபீதும்.

(கு. - பு.).—

இது, வந்தவாசி தாலூக்காவிலே "துறகல்" என்னும் ஓர் சைன ஊரின் வரலாற்றினேயும் அங்குள்ள ஓர் குன்றின் மிசையிருக்கும் ஜைனர் கோவிலின் இறும்பூதுகளேயும் அத்தலத்திற் காணப்பெறும் சிலாசாஸனப் பிரதியொன்றையும் எடுத்து விளம்புகின்றதாம். இக் கோயிலில் ஓரிடத்து தென்மொழி வடமொழி கன்னடங்களில் ஆன (3) மூன்று சைனர்க்குரிய சிலாசாஸனங்கள் காணப்படுகின்றன வென்றும், அவை இது போழ்து படித்தற்கு அரியவாயிருக்கின்றன வென்றுங் கூறப்பெற்றிருக்கின்றது. முற்பகுதி சிலாசாஸனம் ஆம். பிற்பகுதி துரகல் கிராமத்தின் வரலாறும். இத் தலக் குன்றின்மேலிலும் அடியிலுமாய்ப் பல்வேறு குகைகளும் மூன்று குகைகளிற் பல்லங்கியாசனத்தில் அமைத்த சின விம்பங்களும், மாபலிபுரத்தையொத்து அரைகுறையாக விடுக்கப்பெற்றதொரு போற்றத்தகும் செயல் அமைந்த நாற்கால்மண்டபமும் மற்று கண்கவரும் வேலேப்பாடுகள் அமைந்த ஜீன விம்பங்கள் ஐந்தும், இன்னும் இன்னேரன்ன சில விநோதங்களும்

அமைந்துள்ளன என்பதாகக் கூறப்பட்டிருத்தல் குறிக்கொள்ளத்தக்கதாம். முற்றும் இருக்கிறது. மிகச் சிதையப்பெற்றிருப்பது. இதனைப் பெயர்த்து எழுதிய பிரதி யொன்று, மெகென்ஸி துரை மானஸ்கிரிப்ட்ஸ் முதல் வால்யும் 105—111 ஆன பக்கங்களில் காணப்பெறுகின்றது. டைலரது காட்லாக்கில் 419 ஆம் பக்கம் 827 ஆம் எண்ணிலே வருணிக்கப்பெற்றிருக்கிறதாம். மற்று, இத்தலத்தில் ஒரு சைனர் சங்கமும் இருந்ததாகத் தெரிகின்றது. இவ்வூருக்கு இப்பெயர் அமைந்ததற்குக் காரணம் இதில் சரியாக விளங்கப் பெறவில்லை.

No. 3154. அரன்குன்றங் கிராமம் அரகிரிபருவத வரலாறு.
ARANKUNṞAṄKĪRĀMAṂ ARAGIRIPARUVATA VARALĀṞU.

Pages, 14. Lines, 16–19 on a page. Condition, much injured. Extent, 126 granthas.

Begins on fol. 81(*a*) of the manuscript described under D. No. 3141.

An account, of Aragiri hill (in Tamil "Arankunṛam") near the village of Arankunṛam in the Arcot district.

In the Skāndapurāṇa by Vēda Vyāsa, an account is given of a place three and half Yōjanās (leagues of ten miles each) west of Conjeevaram, where there was a celebrated fane, endowed by many Rajas like Kulothunga Chōḻa and others. In the Tīrthanātha and Cudapa - Natana áre inscriptions of the year 1120 of Śālivāhana era. On a large stone there is an inscription of the time of Kulōttuṅga Chōḻa commemorating a treaty between Sambu Rāyan who ruled in the west country the conqueror of a Paṇdiya king and Rājakēsari Varma. There are besides many other inscriptions, commemorating grants by other persons. The Mahomedans broke down this fane and used the materials in the building of Arcot.

In the shrine of one of the emblems of Śiva to north-east, some offerings continue to be paid. There is a perpetual spring (fountain) near the place. In the era of Śālivāhana 1122 one named Śrikēṇi Vikkiramarāyar Sambu Rāyar built a fane to the (grāma dēvatai) village tutelary goddess; an inscription on a pillar of the Manṭapam or porch is the attestation. Various bene factors built and endowed particular places; and after their time a Chieftain named Aṅjātakaṇḍan acquired authority, and fixed boundary gates at a great distance around. At the time, Vellore, Arcot and Arani forts were not built. When those were constructed that Chieftain's power had passed away. In the end of this work is appended a list of ten sacred pools, or tanks and two larger reservoirs.

This work contains much historical information. The inscriptions etc., in Conjeepuram district may be very helpful for resear

We find herein a confirmation of section II of Vīra Nārāyaṇasambhuva Rāyar and that Sambhuvarāya was probably the titular name of some series of Rajas or Kings of Soḻa.

Beginning :

ஆறுகாடு தாலூக்கில் அருங்குன்றங் கிராமத்தில் இருக்கும் அரகிரி பருவதத்தினுடைய [கைபீயத்து] வரலாறு :—

வேத வியாசராலே சொல்லப்பட்ட ஸ்காந்த புராணத்திற் சொல்லப் பட்டபடிக்குத் (து)[தொ]ண்டீர் மண்டலத்திற் காஞ்சீ பட்டணத்துக்கு மேற்கு மூன்றரை யோசனே தூரத்திலே ஷடாரண்ய க்ஷேத்திரத்துக்கும் க்ஷீர நதிக்கும் நிருருதிதிக்கிலே அரகிரி பருவதம் அருங்குன்றம் என்றும் பேருடைத்தாயிருக்கிற பரமேசுவரர் பருவத ரூபமாயிருந்துகொண்டு நாலு, யுகங்களிலும் ஸ்த்தாவரங்களாயிருக்கிற விருக்ஷங்களுக்கும், சங்கமங்களா யிருக்கிற மனுஷ்யாதிகளுக்கும் தரிசனத்தினுலேயும் பிரதக்ஷிணங்களினுலே யும் அபீஷ்டங்களைக் கொடுத்துக்கொண்டிருந்ததாய்ப் புராணங்களிலே சொல்லியிருக்கிறது.

அப்படிப்பட்ட பருவதத்திலே வீரவிநோதீசுவரன் கோவிலிலே இந்தக் கலியுகத்திலே உண்டான இராசர்கள் அநேக தருமங்களைச் சுவாமியாருக்குச் செய்து சிலா சாஸனங்களும் பண்ணிக்கொடுத்தார்கள். சோழ ராசர் வமிசத்திலேயுண்டான "குலோத்துங்க சோழன்," முதலான இராசர்கள் இந்த வீரவிநோதீசுவரன் கோவிலைப் பிரபலமாய்க் கட்டித் தருமங்களைச் செய்து அரகிரி பருவதத்தைச் சுற்றி எட்டுதிக்கிலேயும் இலிங்க பிரதிஷ்டை கள் பண்ணிப் பூசை நைவேத்தியம் முதலானவைகளை நடப்பித் தார்கள். * * * * *

End :

அப்பருவதத்துக்கு அக்கினி திக்கிலே கிராமதேவதைக்குச் சாலீவாகன சகம் (௲௱௨௰௨). 1122-ஆம்வூ வருஷத்திலே செங்கேணி விக்கிரம சம்புவராயர் கோவில் கட்டிவைத்திருக்கிருர். அதற்குச் சிலாசாஸனம் அந்தக் கோயில் மண்டபத் தூணிலே எழுதியிருக்கிறது இதற்குத் தெற்கு விக்கினேசுவரன் கோவில் க. மாரியம்ன் கோவில் க. * * *

"அஞ்சாத கண்டன்," என்கிற பாளையக்காரன் காடு வளர்த்துக்கொண்டி ருந்தான். அவன் இவ்விடங்களிலே வெகுதூரம் வரையில் தெத்துப் போட்டுக்கொண்டிருந்தான். அப்போது இன்னும் வேலூர், ஆற்காடு, ஆறணி, கோட்டைகள் கட்டப் பட்டனவில்லை. இ[து](வை) கட்டப்பட்டபோது அவன் கிலமாய்ப்போனன்.

குளங்களின் ஜாபிதா. ஊருக்கு ஈசானியத்திலே அண்ணு சாஸ்திரி குளம்(க) * * ஆகக் குளங்கள், பத்து (10) அல்லிக்குளம் சலம் இல்லாமல் மேடாய் இருக்கின்றது. நீர் உள்ளகுளம் (20). ஊருக்குத் தென்புறம் ஏரி. க. மேற்கு ஏரி. க. ஆக ஏரிகள், உ ஆம்.

(கு.- பு.).—

இது, "ஷடாரண்யம்," என்னும் 'ஆறுகாடு' தாலூக்காவில் "அருங்குன்றம்" என்ற ஊரிலே அரகிரி (ஹரகிரி) யென்னப்பெற்ற

பரமேசுவரர்ப் பருப்பதத்திலே "வீரவிநோதீசுவரர்," என்னுந் திருநாமத்துடனே திருக்கோயிற் கொண்டிருக்கும் மிகப் பழமையான தொரு சிவாலயத்தின் அருமை பெருமைகளை யெடுத்துணர்த்துந் திறனிலே யமைந்திருக்கின்றது. இக்குன்றம் காஞ்சிமா நகர்க்கு மேற்குச் சுமார் மூன்றரை யோசனை தூரத்தின்கண் உள்ளதாம். ஆகவே இவ்வூர் தொண்டை நாட்டைச் சார்ந்ததாகும். இதன் பெருமை வடமொழி ஸ்காந்தத்தில் விளக்கமுறும் என ஆதியிற் குறிக்கப் பெற்று உள்ளது. பரமசிவனே இக் குன்று வடிவமாய் ஆகியிருத்தல்பற்றி இது, வடமொழியிலே "பரமேச்வரர்ப் பருப்பதம், அரகிரி" என்றுங்கு அழைக்கப்பட்டு வரும் என்ப. இனி தமிழ்ப் பெயர் "அரன் குன்றம்" என்றிருந்து காலக்கிரமத்தில் அஃது அருங்குன்று, என்று மருவி வழங்கப்பெற்றது போலும். மற்று அக் குன்றின் பேரே இவ்வூருக்கும் வழங்கப் பெற்றிருக்கலாம் என ஊகிக்க இடன் உண்டு. இம்மலையில் கலியுக மன்னரில் பலரும் வந்து தரிசித்துச் சிவத் திருத்தொண்டுகள் பல செய்தும் அவைகட்கு அவர் அவர் பல கல்வெட்டுகளையுங் கண்டிருக்கின்றனர் என்றும் இதிலிருந்து விளக்கமுறுகின்றது. இது, சிறு வடிவினதாய் அமைந்திருப்பினும், பல பண்டைய அருஞ்சரித்திரங்களை யுணர்த்துவதால், விடயத்தான் நெடிதேயாம் என்னில் மிகையாகாதாம். நிற்க, இவ் வாலயத்தில், குலோத்துங்க சோழ மன்னர், இவ் வீர விநோதீசுவரருக்குப் பலதிருப் பணிகளைச் செய்திருப்பதாகக் குறிக்கின்றது. ஷை சோழன் காலத்தில் சாலிவாகன சகம் 1120 ஆம்ஸு இல் "அத்திமல்ல சோழன் என்னும் சம்புவராயர்," அரசன் இவ் வீரவிநோதீசுவரரது நித்தக்கட்டளை யாராதன பூசைகள் முதலாய் வருடாந்தரமான திருவிழாக்களை நடத்திப் போந்தாராய்ப் பிற்காலத்திலும் அங்ஙன் நடக்க ஷை அரன் குன்றங் கிராமத்தை உம்பளிக்கையாக வழங்கி மாறுதிருத்தற்குக் கற்சாசனம் ஒன்றையுங் கண்டிருக்கிறார். அக்கல்வெட்டும், குன்றின் மிசை கன்னிமார்ப் பாறையிலே காணப்படுகின்றதாம். இனி மற்றொரு பெரிய பாறையிலே குலோத்துங்க சோழர் காலத்து பாண்டிய மன்னரைச் செயித்திருந்த "இராசராச சம்புவராயர்" என்றவர், படைவேட்டுநகர் இராச்சியபாரஞ் செலுத்து நாளில், அவருக்கும், சமகாலத்திய இராசகேசரிவர்மாவுக்கும் ஆக இவ் இருவர்க்கும் நிகழ்ந்து போந்ததொரு உடன்படிக்கைச் சீட்டிலே இவ் வீரவிநோதீசுவர்க்கு உற்சவாதிகளை நடத்திப்போந்த பழைய செய்தி சாஸன பூர்வமாய்க் காணப்படுகின்றது. இதில், "தீர்த்தநாதர்," "கடப்பநாதர்," என்ற இருவரது கோயில்களும் உள. அவைகட்குச் சாலிசகம் 1120 ஆண்டு அத்திமல்ல சோழ சம்புவராயர் என்றவர் பூசை, நைவேத்தியம் முதலானவைகளை நடப்பித்தாராய்ச் சாசனமுங் கண்டிருக்கிறார். சாலிவாகன சகம் 1122 ஆம் ஆண்டில் இருந்த செங்கேணி விக்கிரம சம்புவராயர் என்ற மன்னர் அவ்வூர் கிராம தேவதைக்குத் திருக்கோயிற்கட்டுவித்து அக்கோயிலின் மண்டபத்துத்தூணில் ஒரு கல்வெட்டுங் கண்டிருக்கின்றார். இதற்கருகில் விக்கினேசுவரர் கோயில், மாரியம்மன் கோயில்கள் உள. குன்றுக்கு மேற்கில் வில்வ பத்திரி பெரிய மலைக்குக் கீழ்ப்புறத்திருந்த தர்ம ராசாக்கள் இத் தலத்துக்குப் பல தருமங்கள் செய்துளார். அவர்கட்குப் பின்னர் "அஞ்சாதகண்டன்,"

பாளையக்காரர் தோன்றி இத் தலத்து ஆட்சி புரிந்திருந்தனர். இவரைப் பற்றிய வரலாற்றுக்கு D No. 3148-ஆம் நம்பரின் குறிப்புகளை நோக்குக. அக் காலேயிலே வேலூர், ஆற்காடு, ஆரணி என்ற ஊர்களிலே கோட் டைகள் கட்டப்பெறவில்லையாம். அவை, பின்னரே கட்டப்பெற்றவைகளாம். அக்கிரகாரத்துக்கு வடக்கில் பெருமாள் கோவில் ஒன்றும், குன்றின் அங்கித் திசையிலே சுப்பிரமணியர் தலம் ஒன்றும் இருக்கின்றன. இனி, இக் குன்றில் எட்டுத்திக்கிலும் ஒவ்வொரு இலிங்கம் ஆக ஆதியில் பிரதிஷ்டிக்கப் பட்டு இருக்கின்றன. அவைகளில், ஈசான்ய இலிங்கமான திருமேசுவரருக்கு மாத்திரம் பூசை முதலாயின நடந்தேறி வருகின்றன. மற்றவைகளின் கோயில் கற்களை யெல்லாம் துலுக்கர் ஆட்சியிலே அவர்கள் ஆற்காட்டைக் கட்டுகையிலே எடுத்தேகினர் என்கிறது. மற்று, இம்மகாதலத்தில் மேற் சரிவிலேயிருந்து "சிவகங்கை" யென்ற புண்ணியநதி பெருகுகின்றது. அந் நதிநீர் மிகவும் அழகாயும் உருசியாகவும் அமைந்து ஒரே பாறையிலிருந்து என்றும் ஆறுத வொழுக்காய்ப் பெருகும். தவிர, அண்ணுசாஸ்திரிகுளம் முதலாகச், சித்தாறிகுளம் வரையாக 10 குளம் உண்டு. அவைகளில் அல்லி குளம் நீர் இல்லாததாம். தெற்கிலும் மேற்கிலும் ஆக (2) ஏரிகள், பெரு நீர் நிலைகள் அமைந்திருக்கும். மற்றொரு விசேடம் வருமாறு.—ஷடா ரண்யம் அல்லது "ஆறுகாடு," என்ற தலத்திற் சார்ந்ததொரு முன்னில் சப்தருஷி யாசிரமங்களுள் வசிஷ்டாசிரமமான "வேம்பூர்" என்ற தல விசேடத்தில் நின்றும், வசிஷ்ட விக்கிரகம் பலவைபவச் சிறப்புகளுடன் இக் குன்றேறிச் சென்று சிவகிரியை வலம் வந்து பூசை நடத்திவிட்டுச் செல்லும் பாவனையிலே ஒரு சிறப்புவிழா சிவகிரி பிரதக்ஷிணோற்சவ விழா" என்றதாக ஒன்று உத்தராயணத்தில் இன்றுவரையில் நடந்தேறி வருகின்றது, என்கிறதாம். இவ்வரலாறு ஒன்றே இத்தலம் மிகப்பழமையாம் என்ற தைக் குறிக்கும் எனவிடுக்க. இப்பிரதி மெகென்ஸி தொரையின் ஆர்ச்சிதங்களில் ஒன்ருய் டைலர் தொரை காடலாக்கு 827 ஆம் எண்ணின் குறிப்பிலே வருணிக்கப் பெற்று இருக்கின்றது. முற்றும் இருக்கின்றது. மிகச் சிதைந்திருக்கிறது. இதனை, மெகென்ஸி பெரிய வால்யும் முதலதிலே 111–114-ஆன பக்கங்களிலே பெயர்த்து எழுதிவைத்திருக்கிறார் கள். இப் பிரதி சரித்திர நாளாராய்ச்சியாளர்க்கு மிக ஊதியம் பயக்கும் என்க. இனி இதில், "சம்புவராயர்," என்ற துணைப் பெயர் பல மன்னர்களுக் கும் வழங்கி யிருத்தற்பற்றி, அப் பெயர், ஒருகுடியின் மரபிலே பரம்பரை யாகத் தோன்றினர்க்கு மரபுப் பெயராய் வழங்கப் பெற்றிருக்கின்றது என்று நாம் நிச்சயித்து உணரலாம். 88-ஆம் ஏடு வெற்றேடாம். இப் பிரதி, பழைய அட்டவணையில் "அரகிரிபருவதக் கைபீயத்து," என்ற பேரால் அழைக்கப்பட்டுள்ளது.

No. 3155. வேலூர் துலுக்கர் பிரபுக்கள் வமிசாவளியும் சீலநாயகன் அழிவும்.

VĒLŪR TULUKKAR PIRABUKKAḶ VAMIŚĀVAḶIYUM ŚĪLA NĀYAKANAḺIVUM.

Pages, 10. Lines, 20 on a page. Condition, very much injured. Extent 100 granthas.

Begins on fol. 89 (*a*) of the manuscript described under D. No. 3141.

Complete.

A Genealogical account of the Vellore Mohomedan Chiefs, composed by Veḻḻikandaiyar.

Gholam Āli Khān ruled Vellore. Had four sons. The names of these are mentioned and an account or their rule is also given. Acbar Moho med Āli was the youngest, and most distinguished. In his time one named Śīla Nāya kan caused great disturbance in the country. A force was sent against him; of which the marchings and halts are stated. On coming to the boundary of Śila Nāyakan, spies were sent; who after having ascended the hill fort of Śila Nāyakan returned and reported that they had only seen women. Many of these were ordered to be sent to Arcot, and one named Raṅgappa Chetti advised to have their hands and feet cut off; which it is implied, was done. Mention is made of a lame Pundit, who supplied Sadutulla Khan with ten lakhs of money. The cause of the above hostile movement is stated to have orginated in a disagreement between Śīla Nāyakan and one named Varadaiyar, who had been accustomed mutually to accommodate each other with loans to the extent of 30,000 pieces of mony. But, on one occasion, the loan of only 4,000 was refused to Śila Nāyakan.

In resentment, Śīla Nāyakan, way laid the pregnant daughter of Varadaiyar; and after seizing her, had her bowels ripped open, the foetus taken out, and its place filled with thorns; the abdomen was afterwards sewed up by Varadaiyar, went to Arcot and by Mahomedan aid effected the destruction of his cruel neighbour. In the end of the work there is a very loose paragraph, of no weight, about what the writer had heared of the Mahāraṭṭās and Mahomedans in the peninsula. It states that the Rāyar ruled 500 years before the Mahomedans, the Veḻḻālas for 700 years before the Rāyar. The 300 years preceding are not filled up with any history and antecedently to that period the Chēra. Chōḻa, Pāṇḍiya Kings, and the Chakravartīs ruled.

This manuscript may serve only to explain, who was Śīla Nāyakan before referred to (Section 8) and to show how ruthless human nature can sometimes be under particular circumstances.

Beginning :

வேலூர் துலுக்கர் பிரபுக்கள் வமிசாவளி :—வெள்ளி கந்தப்பையர்கவி :

திருவளர் செம்பாவை வாழுஞ் செல்வ விநாயகன் திருவடியை
மருவிய தணிகை மலே வாழு மயிலடி வேலவர் திருவடியைப்
பரநதி வெள்ளிமலே காளத்தி

* * * * * * *

வாரணி பிள்ளையரே சடையாண்டி வலசை கதை சொலவ க்கருள்வீர்,
தாரணி கலியுகத்தில் கல்வியுமி லவியும் மிகவுளதாய்,

* * * * * * *

* * * * * *

End :

துலுக்காணத்தில் கலக சங்கதி—

சி[லு](ல) நாயகனுக்கும் வரதையருக்கும் லாவாதேவி (30,000) வரைக்குங் கொடுக்கல் வாங்கல் உண்டாய் ஒரு தருணத்தில் நாலாயிரம் (4,000) தேவையிருந்ததாயும் வரதையர் இந்நேரம் நாலாயிரம் இல்லை யென்று சொன்னதாயும் சிலு(ல) நாயகன் வரதையரது குமாரத்தி கலசப் பாக்கத்துக்குப் போகிறதாயும் (ள) (6) மாதங் கருப்பவதியாயிருக்க, அவளைக் கீறி முள்ளுப்போட்டுத் தைச்சதாயும் அது முன்னிலையாய்க் கலகஞ்சீமர மூலத்தில் உண்டாச்சுது என்று கேட்டேன்.

(கு. பு.).—

இது, வேலூர் இராச்சியபாரஞ் செலுத்திப் போந்த மகம்மதிய பிரபுக் களுடைய வரலாற்றையும், மரபில் தோன்றின முறைமையையும் எடுத்து உணர்த்துந் திறனிலே யமைந்திருக்கின்றது. இதில் முன்நாளில், வேலூர் நகரில் குலாம் அல்லீகான் அரசு செலுத்திஞர். அவருக்கு நாலு புதல்வர் இருந்தனர். பின்னர் அம்மரபில், கனு சாயுபுக்கு இளையவராகத் தோன்றி யிருந்த "நபாபு சாத்துலக்கான்" என்றவர், இவ்வுலகை தமது ஒரு குடை நிழலில் வதியுமாறு செய்து நீதியாக அரசாண்டிருந்தார். இவர் வேலூரையே தமக்குத் தலை நகராகக் கொண்டிருந்தவராம். அந் நாளிலே ஆற்காட்டிலே நபாபு சாயபு என்றவர் ஆட்சி புரிந்திருந்தனர். அவருக்கு உதவியாக "லாலா," என்று ஒரு திவான் இருந்தார். அக்காலை யில் வேலூர் நகரம் ஒரு தனிப்பெரும் நகராகச் சிறப்புற்றிருந்ததாம். நிற்க, அந்நாளிலே "சீலு நாயகன்" என்றபேர் உண்டான ஒரு மிகக் கொடியோன் தோன்றியிருந்து உலகில் நெடுந்தூரம் வரை தனது மிடுக் கைச் செலுத்தியவனாய் பல இடுக்கண்களையும் விளைத்துக்கொண்டிருக்க, போலூர் வரதையர் இரங்கப்ப செட்டியார் முதல்வரான நாட்டாண்மைக்காரர் கள் பலருங்கூடி அக்கொடியோன்றனது மிடுக்கை யடக்குமாறு லாலாவை வேண்டினர்கள். உடனே லாலாவும் சாத்துல கானும் படைகள் புடைசூழ மறுநாளே புறப்பட்டுச் சாத்தேரிக்கரையில் ஒரு நாளிருந்து பின் ஆரணிக்குச் சென்று அத் தலத்துள்ள ஆரணி வேங்கட்டராவையும் தமக்கு உற்ற துணை யாகக்கொண்டு அங்கிருந்து, போலூர் ரண்டர் பட்டியினில் (3) மூன்று நாள் முகாம்பண்ணி அங்கிருந்து கலசப்பாக்கந் தன்னிலே படையை யிறக்கி அங்குச் சீலி நாயக்கனது தெத்தடி செக்கில் போயிறுத்து அங்குச் சில வேவுகாரர்களை (ஒற்றர்கள்) அச்சீலி நாயகக் கொடியோனை நீவிர் கைப்பிடி யாகக்கொண்டுவரல்வேண்டும் என்று ஆணையிட்டனுப்பினர். அவர் அங்ஙனஞ் சென்று குன்றேறித் தேடிப்பார்க்கையில் அக்கொடியோன் எங்கயோ ஓடி ஒளித்திருந்தான். தேடிய அவ் ஒற்றர்கள் அங்குள்ள அவன்றன் பெண்டுகள் "நாங்கள் பெண்டுகளேயல்லாமல் மற்றொரு

நொண்டி சீலு நாயகனைக்காணேம் என்றதையுரைத்தவர்களாய்த் தாங் கைப்பிடியாகக் கொண்டுவந்த பெண்மக்களை தம் யசமானர்கள் முன்னிலை யிலே நிறுத்தினர்கள். பின் அக்கைதிகளை ஆற்காடேறக் கொண்டுபோக உத்தரவாய்த் தளம், திரும்பி வந்து திருவண்ணுமலையிற் றங்கியிருந்து ஆற்காடு வேலூர்களில் சேர்ந்ததாம். இரங்கப்ப செட்டியார் அந்நிகழ்ச்சி விகிருதி வருடத்தில் ஆனது என்றும் அப் பெண் கைதிகளது கை கால்களை வெட்டுவித்தார். இனி, இங்ஙனகச் சீலி நாயகன்றன் உபத்திரவம் நீங்கிப் பொதுமக்கள் சுகமாக வாழ்ந்து வந்தார்கள். இனி, சீல நாயகன் விளைத்து வந்த தீங்குகளுக்கு எடுத்துக்காட்டாக "துலுக்காணத்திற் கலக சங்கதி," எனப்பேர் கொடுத்து ஒரு கதை வருமாறு: சீலி நாயகனுக்கும், போளூர் வரதையருக்கும் சுமார் 30,000 ரூபாய் வரையிருந்து அதில் எல்லாங் கொடுக்கப்பெற்று, இறுதியில் சுமார் 4,000 ரூபாய் மாத்திரம் பாக்கியாக இருக்கச் செய்தே யத்தொகையைச் சீலி நாயகன் கேட்டனுப்பியதுக்கு, வரதையர் தற்காலம் அத்துணைத்தொகை கையிலே இல்லை யென்றுராம். உடனே, நாயகன் கடுங்கோபங் கொண்டானய்ப் பழிவாங்க வெண்ணியிருந்து, அவ்வமயம் அவரது மகள் ஆறு மாதக் கருவினளாயிருந்து கலசப் பாக்கத்திற் புக்கவகத்துக்குச் செல்லுகையிலேயோ செல்லவிருக்கையிலேயோ அப் பூரண கருப்பிணிப் பெண்ணை வயிற்றைக்கீறி முள்ளிற்குத்தித் தைத்தா னும். ஐயோ! பாவம், பெண் கொலையிலுங் கருச்சிதைத்தல் மிகக் கொடிதன்றே; மற்று, இது வாயிலாக வருவாய் (சமா) முதலான வைகளிலும் பிரத்துவேஷம் மூண்டதென்பது. நிற்க, இடையில் சாத்துவி கான் சாயபு அவர்கள் சீலி நாயகனது கொடுவலியை யடக்கிவரும் வழி யிலே, "நொண்டி பண்டிதர் கிருஷ்ணம நாயகர்" என்னும் அவர் தமக்குப் பத்து லட்சம் பொன் கொடுத்து அனுப்புமாறு சொல்லி ஓலை விடுத்தனர், என்றதாக ஒரு தொடர் மொழி இயைபிற் கூற்றுய்க் காணப் படுகின்றது. மற்று, இறுதியிலே இந்நூல் ஆசிரியர் (வள்ளி கந்தையர்.) தாம் ஒருவாறு கர்ணபரம்பரையிற் செவியுற்றிருந்த அரசியல் கால முறை மையை மேல் கூறியவாறு கூறுவர். அஃதாவது இரகோசிங்கு, பத்தே சிங்கு, அல்லிகான், சின்ன மராட்டியன், பெரிய மராட்டியன், சந்தா சாயபு, பீட சாயபு, நாசர்சிங்கு, மாமதல்லீகா, நபாபு உட்படத் துலுக்காணம் ஆண்டது 400-ஷூ. அக்காலத்துக்குமுன் இராயர் அப்பாசி யாண்டவருடம் 500. பொம்மூர்கட்டினது, முன்வள்ளாளராசர். அவர், ஆண்ட வருடம் 700. முன்னே 500ஷூ. இதுக்குமுன்னே சேரன் சோழன், இதக்கு முன்னே சௌந்திர பாண்டியன், உக்கிர பாண்டியன், உஞூறா. இதுக்கு முன் சக்கரவர்த்திகள் ஆண்டது. ஆறுபேர் என்று கேள்விப்பட் டேன் என்று.

இப் பிரதி, மெகென்ஸி தொரையவர்கள் திரட்டுவித்தவைகளில் ஒன்றும். டைலர் காடலாக்கு 827 ஆம் எண்ணிலே 1314 பிரிவுகளின் இடையிலே வருணித்துக் கூறப்பெற்றுள்ளது. 412–413-ஆம் பக்கங்கள் குறிப்பை நோக்குக. செய்யுள் நடையின் அமைந்தது போலும். மிகப் பிழையுடன் உள்ளது. இது, முன் D. No. 3148-ஆம் நம்பரில் குறிக்கப்பெற்ற "சீலி நாயகன்" விருத்தாந்தமாம், இச் சீலி நாயகன் "கலசப்பாக்கம்"

அதின் அருகில் ஒரு மலையிலே அரண்மனை கட்டிக்கொண்டு வாழ்ந்து வந்ததாகக் குறிக்கின்றனது. இப் பிரதியின் தலைப்பேர் அட்டவணையில், இப் பகுதியின் பேர் குறிக்கப் பெறுமலிருக்கின்றது. காரணம், தெரிந்திற்றிலது. மெகென்ஸி பெரிய வால்யும் முதலாவதில் 114–118 பக்கங்களிலே பெயர்த்தெழுதப்பெற்றுஉள்ளது.

No. 3156. திருப்பனங் காட்டூர் தேவஸ்தான வரலாறு. TIRUPPANANKĀṬṬŪR DĒVASTHĀNA VARALĀṞU.

Pages, 13. Lines, 15–20 on a page. Condition, very much injured. Extent, 130 granthas.

Begins on fol. 95 (*a*) of the manuscript described under D. No. 3141. Comple e.

A Legendary account of the Dēvasthānam of Tiruppanaṅkāṭṭūr of Toṇḍai Nāḍu in Tiruvōttūr taluk.

When all the Gods, sages and others assembled near the Mountain Kailasa at the time of the marriage of Śiva with Pārvathi, the burden became concentrated so much at one place that the position of the earth became disturbed. To set it right, Śiva asked the sages Agastya and Pulastya to go to the north and restore the balance of the earth. He also promised them that at the time of his marriage, they too could witness the whole ceremony as he would appear before them also wherever they happened to remain at that time. True to his promise, he revealed his marriage celebrations to them at Thiruppananṇkādu, in the Daṇḍakāraṇya forest, abounding with Panair i.e., palmyra) trees. At a subsequent period three celebrated poets, named, Sundarar, Appar and Sambandhar, came to Tiruvo tūr and sang the p aises of that p'ace. A little to the south of Tiruvōttūr, at Tiruppananṅkāḍu, the God appeared to them in the guise of an old man, struck the ground with his Sūlam, produce water and provided food. Subsequently a Chōḻa king, who had incurred the guilt of killing a Brahmin came that way, and removed that guilt of ki ling a Brahmin. Seeing the place without a fane, he built two shrines for the God and Goddess, with the usual grants recorded in inscriptions. After the Chōḻa kings had passed away, one named "Tamalavāru", built a large Maṇṭapam (porch) in front of the shrine with a mud fo t around. Subsequently some district chieftains turned these fortification into a strong hold, and put troops therein. In the time of "Anvali Khān", Nabab of Arcot, five hundred Maharattās came and treacherously took the fort killing "Mūrti Nāyakam", a Pāḷiyappār of Tiruppanankāḍu and raised it to the ground. The families of people for ten miles around, through fear of the Mahārāṭṭa cavalry, had taken refuge in the fort ;

many of these were killed by the Mahīrāṭṭa some escaped wounded ; the shrine was plundere and its worship ceased. In the time of "Rāyaji", the ruler of Arcot, a wealthy man "Saiva Muthiya Mudali" from Madras. made some endowments. During the firme of Muhammadan rule worship ceased. The Brahmins did not succeed in obtaining the patronage of the Honourable Company. A Brahmin made some repairs, with the money collected by him, and the Kumbhābhishēkam was performed. Herein, it is mentioned that, Sundarar, after having worshipped the shrine of Tiruppanaṅkādu, proceeded to Kuraṅkaṇin muṭṭam.

Beginning :

திருவோத்தூர் தாலுக்காவைச் சேர்ந்த சோழக்கட்டாகிய திருப்பனங் காட்டூர் தேவஸ்த்தானக் கைபீயத்தும் அதின் ஆதி வரலாறும்.

பூருவ யுகாந்திரத்திலே கைலாச இரியிலே பரமேசுவரர் பருவதராசன்றன் குமாரத்தியார் பார்வதீ தேவியைத் திருக்கலியாணேச்சவம் பண்ணுகையில் சகலமான தேவதைகள் இருஷீசுவரர்கள் முதற்கொண்டு யாவத்து மக்க ளும் திருக்கலியாணம் பார்க்கவேணும் நிமித்தார்த்தமாய்க் கைலாச கிரியைச் சூழ்ந்து வந்திருக்கையில் பூமிபாரம் பொறுக்கமாட்டாமல் வடதிசை கீழும் தென்றிசை மேலுமாய்ப் பூமிசாய்வுகண்டு பரமேசுவரர், அகத்தியருஷி புலத்திய ருஷிகளை வரவழைத்து நீங்கள் தெற்கு திசைக்குப் போய்ப் பூமி[யை] சமானமாக்கப் பாருங்கள் என்று அனுப்ப, அவர்கள், நாங்க்ள் திருக்கலியாணம் பண்ண காட்சியைப் பார்க்கக்கொடுக்கவேணும் என்று கேட்க, நீங்கள் போகிறபோது கலியாண காலத்தில் எந்த இடம் போயிருக்கிறீர்களோ அந்த இடத்தில் (யாம்) ஒரு முகூர்த்த நாழிகை திருக்கலியாண ரூபமாய் வந்து காக்ஷி கொடுக்கிறோம் என்று சொல்லக் கேட்டு அகத்திய இருஷியும் புலத்திய இருஷியும் தக்ஷிணம் நோக்கி வருகிற (வமயம்) ஆரண்யத்தில் இறங்கி இரண்டு தீர்த்தமும் இரண்டு சுவாமியும் இரண்டு அம்மனும் (கொண்டு) பூசை பண்ணிக்கொண்டிருக்கச் செய்தே அந்த நாள் கைலாசத்திலே சுவாமிக்குத் திருக்கலியாணமாகி முன் சொன்னபடிக்குச் சுவாமிவந்து அகத்திய ருஷி புலத்திய ருஷிகளுக்குக் காட்சிகொடுத்து அவர்கள் பேறுபெற்று (அத்தலம்) "திருப்பனங்காட்டு" என்று தலமாயிற்று * * * * * *

End :

சுக்கிலஷூ ஆவணி மாதத்தில் கும்பாபிஷேகம் ஆயிற்று. இராசு (இராயி) ? சாயபுக்கு [வியவகாரம்] (அதிகாரம்) போய்ப் பதில்.

கிலின் துறை வந்த பிற்பாடு கிராமத்திலேயிருந்து போய்க்காண்பித்துக் கொண்டு இந்தக் கோவிற் சேதிகளைச் சொன்னோம். துசாறுணமாகிற "துவஜாரோகணம்", ஆகிற தலமாகையாலே இப்போது துவஜாரோகணம் பண்ணால் கோவிலுக்கு இஸ்துவை உண்டாக்கிக் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். அந்த வருடம் மாசி மாதத்திலே துவசாரோகணமும் பண்ணி உச்சவமும் பண்ணோம். பிரஜோத்பத்திஷூ பத்து வருஷம் இசாராவாகச் செய்தே கலெக்ட்டர் துறை கிரீன் அவர்களுக்குப் பிராதிலே

இந்தத் தலத்திலே முன்னாலே நடத்தும், இப்போது ஆதாரம் இல்லாம லிருக்கிறதும் இனி நடக்கவேண்டியதற்கும் எழுதிக்கொண்டோம். அந்தப் பிராதைக் கேட்டுக்[கும்பினி] கம்பெனி, சப்தியிலே இஸ்த்துவையைப்பற்றிச் செய்திருந்தால் நாம் சரிபண்ணிலாகும் என்று சொன்னார். அதற்குப் பிற்பாடு யுவஞ யாசகம் பண்ணித்துவசாரோகணமும் இரண்டு காலமும் பூசையும் நடந்துவருகிறது. இப்போது அந்தக் கோவிலுக்கு ஒரு காணி மாணியமும் தேவரும் நடந்துகொண்டுவருகிறது.

(கு. பு.)—

இது, தொண்டை நன்னாட்டுத் திருவோத்தூர் (திருவத்தூர்) தாலுக்கில் இருக்கும் "வன்பாக்கம்," என்ற கிராமத்துக்குச் சமீபம் மேற்கில் 1½ மைல் தூரத்துல் உள்ள பனங்காட்டூர் அல்லது "திருப்பனங்காடு", என்னப் பெற்றது ஒரு கிராமத்தின் பழைய வரலாற்றை யெடுத்து உரைக்கின்றதாம். இப்புண்ணியதலத்தில், சிவபெருமான், தன் திருமணக் கோலத்தை அகத்தி யருக்கும் புலத்தியருக்கும் காட்சி கொடுத்தளித்து அவர்கள் பேறு பெற்றார்க ளாம். இத்தலமானது, முன் நாளில் பனைமரம் அடர்ந்த காடாகவிருந்தது போலும். இவ் வூருக்குப் பேர், சிவஸ்தல மஞ்சரியிலே 192-ஆம் எண்ணிக்கையுற்றதின் குறிப்பிலே வன்பாக்கத்தான் பனங்காட்டூர், என்ப தாகக்கொடுத்து வழங்கப்பெற்றிருக்கின்றது. இத்தலத்தில் சுவாமி தெற்கில் கோயிற்கொண்டிருக்கும் இலிங்கம் அகத்திய மாமுனிவரால் பூசிக்கப்பெற்றதாம். பேர்: தாளபுரீசுவரர் (பனங்காட்டீசுவரன்), என்பது. தேவியாரது திருநாமம் தூல கோமலபதாம்பாள் என்பது. வடக்கில் இருப்பது, புலஸ்தியரால் வழிபட்டுப் பூசிக்கப்பெற்ற இலிங்கமாம். சுவாமி பேர் கிருபாநாதேசுவரர் என்பது. தேவியார் பேர் கிருபாநாயகி என்பது. ஆலயத்துக்கு எதிராக முன்னில் இரண்டு பனைமரங்கள் இருந்தன. இது போது ஒரு சிறு பனங்கன்றே உள்ளது என வேறு ஓர் இடத்தில் குறிக்கப் பெற்றிருக்கிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குச் சுவாமி, ஒரு விருத்தராய்த் தோன்றி, அவர்க்கும் அவரது உடன் வந்தாருக்குமாகக் கட்டமுது அளித்து விடாய் தணிவிக்கப் பின்னர், சுந்தரமூர்த்திகள், சுவாமியை நோக்கி, நீர் யார்? எங்கு உறைவீர்? எனறதுக்கு, "யாம் வன்பாக்கத்தோடும் இந்தப் பனங்காட்டோடுமாக விருக்கிறோம்," என்று விடைகூறி மறைந்தாராய் அவரைக்கொண்டு திருப்பாடல்கள் பாடுவித்துக் கொண்டதாய் ஒரு திவ்விய தலமாம் என்பர். இனி, இவ்வரலாற்றுக்கு, அத்தாட்சியாக "விடையின் மேல் வருவானை வேதத்தின் பொருளானை யடையிலன்புடையானை யாவர்க்கு மறிவொண்ணா மடையில் வாளைகள் பாயும் வன்பாத்தான் பனங்காட்டூர் சடையிற் கங்கை தரித்தானைச் சாராதார் சார்வென்னே," என்ற தமிழின்னிசைப் பாடல் ஒன்று சான்றுபகர்வதை உற்று நோக்குக. சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத்தலத்தில் பாடியபின்னர் தொண்டை நாட்டுக் "குரங்கணின்முட்டம்", என்ற திவ்விய தலமேறச்சொன்றார். இது மிகப் பழைய தலமாதலின், சோழ மகாராசர் தாம், தமது பிரம்மத்தியை நீக்கிக்கொள்ளுவான் விழைந்து தம் இராச்சியத்துத் திவ்விய தலங்க டோறுஞ் சென்று பூசித்துவரும் வழியில் இத் தலத்துக்கும் வந்து

சுவாமிகளை வணங்கி, இரண்டு கோவில்கள் இரண்டு மகா மண்டபங்கள் முதலான சில திருப்பணிகளை முற்றுவித்துச் சிறிது தானதருமங்களையும் நிகழ்த்திவைத்து அவற்றுக்குச் சில சாஸனங்களையுங் கண்டிருக்கின்றார். காலக்கிரமத்தில் திருப்பனங்காட்டுப்பாளையக்காரர்கள் தோன்றிக் கோட்டை முதலாயின கட்டுவித்துக் காப்பாற்றி வந்தனர். அவர்களில், பெரிய மூர்த்தி நாயக்கர் நாளில் அக்காலத்து "நபாபு அன்வாலீகான் சாயபு", நாளையிலே மராட்டிய மன்னர் ஒருவர் வடக்கிலிருந்து 500 குதிரை வீரருடன் படையெடுத்து வந்து வஞ்சனையாகக் கோட்டையையழித்து ஷெ நாயக்கரையும் வெட்டிப்போட்டுப் போனாராம். அது முதல் இந் நாட்டில் சில கொள்ளைகளும் வழிப் பறிகளும் நடந்துவந்தன. இக் கோயிற் சாமான்களும் சில போய்விட்டன. ஆற்காடு ராயஜியாரது நாளையில் ஹேவிளம்பி யாண்டில் சென்னையிலிருந்து "சைவ முத்தியா முதலியார்" என்றவர் இத் தலத்தில் வந்து சில திருப்பணிகளை நடத்திவைத்தார்கள் என்றின்னோரன்னவைகளைத் தெரிவிக்கின்றது. இது முற்றும் உள்ளது. ஆனால் மிகப் பிழைபட எழுதப்பெற்றது. மிகச் சிதைந்ததாம்.

மற்று, இப்பிரதி, டைலரது காடலாக்கு 827-ஆம் நம்பரில் வருணிக்கப் பெற்றிருக்கின்றது. (P. P. 413.) மெகென்ஸி வால்யும் முதலாவதில் 118–122-ஆம் பக்கங்களிலே பெயர்த்தெழுதப்பெற்றும் இருக்கிறது. பின் 101-ஆம் ஏடு வெற்றேடாயிருக்கின்றது.

No. 3157. நோக்கர் சாதியினர் வரலாறு.
NŌKKAR JĀTIYINAR VARALĀṚU.

Pages, 10. Lines, 14–18 on a page. Condition, very much injured. Extent, 90 granthas.

Begins on fol. 102 (*a*) of the manuscript described under D. No. 3141.

Complete.

Account of the tribe of "Nōkkars", in the village of Tiruvattūr. This class of mountebanks arose about the year two hundred and fourteen, of Śālivākan. They acquired skill by the assistance of Dēvi or Durga. On one occasion they especially exerted themselves at Tirunomalai. There they performed a wonderful feat with the help of a pole fixed on the top of one of the loftist turrets. They then, as a body, begged of the spectators to affiliate them into their tribes, which request was refused. At length the tribe of weavers consented to receive, and incorporate them into that tribe. Hence they are considered to be the weavers' adopted children. This manuscript belongs to the Meckenzie collections of manuscripts and is same as the work described under No. 827 of Taylor's Catalogue, Vol. III, pp. 413–414. For the restored copy of this manuscript see the pages 122-124 of the Mechenzie's restored, Vol. I. The copying was finished on 7th September 1837 in pp. 73–122, Vol. I.

Beginning :

நோக்கர் என்னப்பட்டவர்களுடைய விசேஷித்தகைபீயத்து சாலிவாகன சகம் ஊாகசு-க்கு மேல் 'நோக்கர்' என்று ஒரு சந்ததியிருந்தது. அவர்களுக்கு 'நோக்கன்" என்று சொல்லப்பட்டவனுடைய தபோபலத் தினுலே மந்திரசாமர்த்தியம் அதிகமாகித் தேவி சகாயம் உண்டாயிற்று. இதனுலே இவர்கள் நாளுக்குநாள் சாதகவித்தியாப்பியாசம் உண்டாயிற்று. இப்படி இவர்கள் சொல்லப்பட்ட இந்த வித்தியைகளில் தேறிப்போய்க் கடையாந்திரம் இவர்கள் கெடையேறி ஆடத்தலைப்பட்டு வெகு அருமையான தொழில்களிலே அல்லது வித்தைகளிலே நாளுக்குநாள் தேறி கடையாந் திரத்திலே அருணகிரி யெனப்பேர் கொண்டிருக்கிற திருவண்ணுமலை தேயு க்ஷேத்திரத்தில் பெரிய கோபுரத்தின்பேரில் கிடைகட்டி இந்திர சாலங்கள் மயேந்திர சாலங்கள் கோகர்ணங்கள் காரடவித்தைகள் ஒட்டியம், சல்லியம் [ஞே] (நோ)டியம், இப்படிப்போல் ஒத்த அதர்வண வித்தைகள் முதலான வைகளும் காண்பித்துப் பிற்பாடு பெரிய கோபுரத்தின் பேரிற்கட்டியிருந்த கிடையின்பேரில் ஏறிச் சாதகவித்தைகளைக் காண்பிக்கும்போது * * *

End :

இவர்கள், கைக்களவருக்குப் பிள்ளைப்பூந்தவர்கள் என்று அழைக்கப்படு கின்ருர்கள். நாளதுவரைக்கும் அவர் தரிக்கு இரண்டு பணம் விழுக் காடாய்க் கொடுத்துச் சம்ரக்ஷணம் பண்ணிக்கொண்டு இருக்கிருர்கள். இவர்களது வித்தைகளை இராசாக்கள் முதலானவர்களும் பார்த்துச் சில விருதுகள் வலங்கைக்குடையவைகளாகிச் சம்பந்தப்பட்டிருக்கின்றன வற்றைக் கொடுத்திருக்கிருர்கள். இவர்களுடைய ஆசாரங்கள், நடப்புகள் மதங்கள் எல்லாம் கைக்களருக்கு ஒத்தவைபோல நடந்து வருகின்றன. இவர்களது வித்தைகளைப்பார்க்க வெகுதூரங்களிலேயிருந்து மனிதர்கள் வருகிருர்கள். எல்லாத் தொழிலைவிட இவர்களது தொழில்கள் மகா அருமையான தொழில்கள் என்று யாவர்க்கும் பிரசித்தியாய்த் தெரியப் பட்டிருக்கின்றது. இதே நோக்கர் சரித்திரமாம் என்பது.

(கு. பு.)—

இது, "நோக்கர்" என்னும் ஒரு வகை சாதியினரது வரலாற்றைப்பற்றிக் கூறுவதாம். இவர்கள் குடி, சா-சகம், 214-ஆம்ஆண்டுக்குமேல் இந்நாட்டில் பல்கியிருப்பதாக இப்பிரதி குறிக்கின்றது. "நோக்கன்," என்றவரே இக் குடிக்கு மூலபுருடர் ஆவர். இக்குடியினர் கம்பக்கூத்து, சாலம், மயேந்திர சாலம், செப்பிடுவித்தை, ஒட்டியம், சாலியம் மற்று ஆதர்வணிக வித்தைகள் முதலான சாதக வித்தைகள் பலவுங்கற்று இருந்து மந்திர சாத்திரங் களிலும் மிகவல்லுனராய்க் காளியின் வரப்பிரசாதம் பெற்றவராயிருப்பர். இவர் ஒரு கால், திருவண்ணுமலைக்குச் சென்று தம்வித்தியை முதலான வைகளைக் காட்டுவாராய் மலைமேல் ஒரு கம்பம் நாட்டியிதில் பல வித்தைத் தொழில்களையும் பல தேயத்துப் பொதுமக்களுக்குக் காண்பித்து அவர்களை வியப்புறச் செய்தனர். இறுதியில் அம்மக்கள் அங்கிருந்தாரை நோக்கித் தம்மை ஏற்றுக்கொண்டு பாதுகாத்துவருமாறு வேண்டிக்கொண்டார்களாம். அங்கிருந்தார், அதுக்கு உடன்படாது மறுத்துவிடவே, இறுதியாக இவர்களை

"கைக்கோளர்," என்னுஞ் சாதியினரே ஏற்றுக்கொண்டு தரிக்கு (2) இரு பணம் விழுக்காடாகக் கூலி கொடுத்து தம் அருகில் அமர்த்திக்கொண்டு புத்திராபிமானமாயப் புரந்து வருகின்றனர். இவரது பழக்க ஒழுக்கம், கைக்கோளரது பழக்க ஒழுக்கங்களைப் பின்பற்றியது. இக் குடியினர், வலங்கை இடங்கை சாதி வகைகளில் வலங்கையாராகக் கருதப்படுவார்கள். இனி, இவர், "தொம்படவர்," "தம்பக்கூத்தாடியர்," அல்லது கம்பம் ஆடுவார், தம்பம் ஆடுவார் என்றங்கு வழங்கப்பெற்றுவருஞ் சாதியின்ரேயாக விருக்கலாம் என யாம் ஊகிக்கின்ருேம். இவரே கழாய்க்கூத்தர் எனப் பண்டைக் காலத்தில் வழங்கப் பெற்ருர்போலும். முற்றும் உள்ளது. பிரதி மிகச்சிதைந்ததாகும். இதை மெகென்ஸி பெரிய வால்யும் முதலாவதில் 132–134 ஆன பக்கங்களில் பெயர்த்து எழுதி வைத்திருக்கிருர்கள்.

No. 3158. கொங்கு தேச ராசாக்கள் சரித்திரம்.
KOṄKU DĒŚA RĀJĀKKAḶ CARITTIRAM.

Pages, 50. Lines, 20–28 on a page. Condition, good. Extent, 500 granthas.

Begins on fol. 1 (*a*) of the manuscript described under D. No. 2016.

Complete.

This manuscript seems to be a restored copy of D. No. 2726.

(கு. பு.)—

இது, டிஸ்கிருப்டிவ்காடலாக்கு 2726–ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்தெழுதி வைத்த பிரதியென்று தெரிகிறது. முற்றும் இருக்கிறது. பல எழுத்துப் பிழைகளுடன் உள்ளது.

இதுக்கு வேறு பிரதி முன்னர் டைலர் தொரையவர்களால் மெகென்ஸி பெரியவால்யும் முதலாவதிலே 5–71 ஆன பக்கங்களிலே பெயர்த்து எழுதப் பெற்றிருக்கிறது. இன்னும் இரண்டு பிரதிகளிருக்கின்றன. அவை பின்னர் வரும். மொத்தம் நான்கு பிரதிகள் உண்டு.

No. 3159. கொங்க தேச ராசாக்கள் சரித்திரம்.
KOṄKA DĒŚA RĀJĀKKAḶ CARITTIRAM.

Pages, 68. Lines, 32 on a page. Condition, good. Extent, 476 granthas.

Begins on fol. 11(*a*) of the manuscript described under D. No. 213, T.D.C. Vol. I.

Incomplete (wants 49–60 pages in the Middle of the Portion).

Same work as the above.

(கு.-பு.).—

இது முன் நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும். இப் பிரதியில் இந் நூல் முற்றும் உள்ளதாமாயினும் இடையில் 49—60 ஆன பக்கங்களைக்

கொண்ட (6) ஆறு ஏடுகள் இது போழ்து இங்குக் காணப்பெறவில்லை. உள்ள பகுதியிலும் 61—68 வரையான பக்கங்களைக்கொண்ட (4) ஏடுகள் 12-ஆம் பக்கத்துக்குப் பின்னர் வைத்துத் தவருகப் பைண்டு செய்யப் பெற்றிருக்கின்றன. இப் பிரதியின் கையெழுத்து மிகத் தெளிவாக அழகா யிருக்கின்றது. ஆயினும் மிகப் பிழைகள் காணப்படுகின்றன.

No. 3160. பழனிமலைப்புலிப்பாணி பாத்திர உடையார் வமிசாவளி.

PAḺANIMALAIPPULIPPĀṆI PĀTTIRA UḌAIYĀR VAMIŚĀVAḶI.

Pages, 25. Lines, 20 on a page. Condition, good. Extent, 325 granthas.

Begins on fol. 81(*a*) of the manuscript described under D. No. 404, T.D.C. Vol. I.

Complete.

A Genealogical account of the Pāṇipāttira Uḍaiyār of Paḻanisthalam, which was found in the temple of Daṇḍāyudha Pāṇisvāmi on the Paḻani hill.

Beginning :

கோய[ம்பு]முத்தூர் ஜில்லாவைச் சேர்ந்த திண்டுக்கல் வகையரா பழனி அய்யம்பள்ளிதுக்குடிக்குச் சேகரம் பழனிமலை தண்டாயுதக் கடவுளார் சந்நிதியில் பாணி பாத்திர ஐயன் என்கிறவரின் வமிசாவளி வரலாறு விவரம் கடுதாசி ௬, பந்து ௰௨, பக்கம் 24, புஸ்தகம் க 1.

யாதாஸ்த்து பழனியூரில் இருக்கும் '' பாணிபாத்திர உடையார் '' என் னப்பட்டவர் பரம்பரை வரலாறு.—அய்யம்பள்ளிதுக்குடிக்குச் சேர்ந்த திண் டுக்கல் வகையரா கோயம்புத்தூர் ஜில்லாவைச் சேர்ந்த சேகரம் பழனியி லிருக்கும் ஹரிகிருஷ்ணன் எழுதிவைத்த வரலாறு. ௲அ௱௰௬ ௵ (1816-ஆம்௵) ஜூன்மீ அ௨ (8௨.) தரியாபத்து நிடில நாயன் அய்யன்.

பூர்வத்தில் கிருத யுகத்தில் அகஸ்த்தியர் பொதிகையிலிருந்து கைலாச கிரிக்குச் சுவாமி தரிசனத்துக்குப் போனர். அவ்விடத்தில் அங்காரமுனி யென்கிறவர் அகஸ்தியரைக்கண்டு உமக்கு என்ன தபம் செய்தும் சிவ போதகம் தெரியாமல் போச்சுதேயென்று சொன்னர். அகஸ்தியருக்கு நிரம்பவுங் கோபம் வந்து அப்படியா வென்று மனதை ஒரு வழிப்படுத்தி ஈசுவரனை நோக்கித் தபசு பண்ணினர். ஈசுவரன் இருஷபவாகனரூடராய் காட்சியைக் கொடுத்தார். * * * * சுவாமி அடுமைக்குச் சிவபோதகம் செய்யவேணும் என்று வரங் கேட்க அப்படியே ஆகட்டும் என்று ஈசுவரன் சொல்லிப் பின்னையும் உத்தரவானது என்ன வென்றால் : நாமும், உமை சக்தியும் சிவகிரியென்றும், சக்திகிரியென் றும், இரண்டு கொடுமுடியாகக் கந்தமாதன பருவதத்தின் கொடுமுடியில் இருக்கிறோம். அந்தக் கொடுமுடியாகிய சிவகிரி, சக்திகிரிகளுக்குப்பூஜை

பண்ணினதேயுண்டானுல் உமக்குச் சிவபோதகம் செய்கிறேம் என்ருர்.

* * * * * * * *

புலியின் மேலே எறிக்கொண்டு வந்து பாணியைத் திரட்டிக்கொண்டு வந்து தண்டாயுதக் கடவுளாருக்கு அபிஷேகஞ் செய்தார். * * * * நடப்புவித்ததுகளை யெல்லாம் குகையிலே தபசு பண்ணுகிற போதநாதர் கண்டு “ புலிப்பாணி பாத்திர உடையார் ” என்று நாமகரணம் இட்டார். * * * * * இப்படிப் புலிப்பாணி பாத்திர உடையார் என்று பேர் ஏர்ப்பட்டு உலகம் அறிந்து இருந்த காலம் கலியுக சகாப்தம் ௩௰௫௱௭௰௩த்துக்கு மேல் என்று சொல்லப் படுகிறது. * * * * * * அப்போது தொண்டைமண்டல வமிசத்தில் “ நயினுத்தே முதலியார் ” என்கிறவர் அடுத்துச் சிறிது நாள் காத்து இருந்ததில், புலிப்பாணி பாத்திர உடையார் தம்மிடத்தில் பணிவிடை செய்து கொண்டு இருக்குமாறு திட்டஞ் செய்தார். * * * * அப்போது புலிப் பாணிப் பாத்திர உடையாருக்குச் சந்தோஷம் வந்து அஷ்ட மாசித்துக்களும் * * ஜலந்திரட்டுகிற வித்தையையும் உபதேசம் பண்ணிப் பூ பிரதக்ஷிணம் பண்ணி வந்தபடியினுலே உனக்கு லோக குருவாயிருக்கப்பட்ட “ நயினுர் பண்டாரத் தார் ” என்று நாமகரணமிட்டுத் தண்டாயுதக் கடவுளாருக்குப் பூசை பண்ணிக்கொண்டு வரச் சொல்லிக் கட்டளையிட்டார். அப்படிக்கு நயினுர் பண்டாரத்தார் என்று வரப்பட்டுத் தண்டாயுதக் கடவுளாருக்குப் பூசை பண்ணிக்கொண்டு வருகிற நாளையில் சேரமான் பெருமாள் இராச்சிய பரி பாலனம் பண்ணிக்கொண்டு வருகிற நாளையில் குன்று தோறுடலை யெல் லாம் தரிசனம் பண்ணிக்கொண்டு மூன்ரும் படை வீடாகிய திருவாவினன் குடியிலே (பழனியிலே) யிருக்கிற சுப்பிரமணியக் கடவுளாரைத் தரிசனம் பண்ண வந்து * * * தண்டாயுதக் கடவுளா ருக்கு அர்த்தமண்டபம், கர்ப்பகிரகம், கட்டிவைத்து சுவாமிக்குப் பூசை, நைவேத்தியம், மாலை, சந்தனம், திருமஞ்சனம் நடக்கும்டடி பூமிகள் சில விட்டுச் சிலா சாஸனங்களும் பண்ணி வைத்துக்கொடுத்தார். * *

* * * * * * * * *

பழனியூரில் பண்டாரவாடையாயிருக்கும் நாளையில் லோக குருவாகிய வர புலிபாணி பாத்திர உடையார் மடம் (க), பாளையகாரர் நாளில் வந்து சேர்ந்திருக்கும் மடங்கள் விவரம் : பாலையர் மடம் (க), பச்ச கந்தையர் மடம் இப்படிக்கு மூன்று மடங்கள் உண்டாயிற்று. பாலையர், பச்ச கந்தை யர், பரதேசிகள் என்றும், சன்னியாசிகள் என்றும் சொல்லப்படுகிறது. இப்படிக்கு சூஅ௱௰சூ௵ எப்ரல்மீ௳ உ௰அ௳-க்குத் தமிழ் தாது௵ சித்திரைமீ௳ ௰அ௳ எங்கள் வமிசப் பேர் கருப்ப கிரகத்தில் தெரியும். அரிகிருஷ்ண புலிப்பாணி பாத்திர உடையார் கையெழுத்து என்று எழு தின எடுகளுக்கு நக்கல் எழுதி முடிந்தது. நிட்டல் நாயன் அய்யர்.

(கு.-பு.).—

இது “ திருவாவினன் குடி ” யென்னும் திருமுருகப் பிராஞரது படை வீடுகள் ஆறனுள் மூன்ரும் படை வீடான “ பழனி ” யென்ற திவ்விய தலத்தினது வரலாற்றையும் மகிமையினையும் மற்று அம் மலையின் மிசை

முருகன் முன்னிலையிற் கருப்பக்கிரகத்திலே காணப் பெறுவதொரு "புலிப் பாணி பாத்திர உடையார்" என்ற பட்டதாரிகளுடைய தோன்றல் மரபினையும் எடுத்து விளக்குந்துறையிலே அமைந்து இருக்கின்றது. இதிலே போகநாயனாரது சீடராம் (கன்னட சாதியர் [ஒ]உடையார் ஒருத்தர்) போக நாயனாரிடமிருந்து பல வித்தியைகளையுங் கற்று உணர்ந்து தம் ஆசிரியரால் பழனி தண்டாயுத கடவுளார்க்குப் பூசை புரிந்திருந்தாராய்ப் பின்னர், தொண்டை நன்னாட்டில் நின்றும் இவன் போந்திருந்த "நயினர் முதலியார்" என்றவரைத் தமக்குச் சீடராக அருகில் அமர்த்திக்கொண்டு அவரை உலக குருவாக்கிவைத்து அவர் முதலாக இம்மரபில் பிற்றோன்றிய யாவரும் பரம்பரையாய் முருகன் பூசை செய்துவரக் கட்டளையிட்டுத் தாம் யோகத்திலேயமர்ந்திருந்தார். போக நாயனாரது காலம் கலியுகாப்தம் (ராயசா) 116 ஷ மேலாம் என்றும் புலிப்பாணி பாத்திர சுவாமி யென்றது, புலியின் மீதேறிக் கரமாகிய பாத்திரத்திலே ஷண்முக நதியின் புனித நன்னீரைத் திரட்டியெடுத்து வந்து அபிஷேகஞ் செய்தமையால் ஆம் என்றும் மற்று அகத்தியனாரது சீடனும் இடும்பாசுரன், (இவன் சூரபன்மனுக்கு வில்வித்தை பயிற்றுவித்தவன்) என்றவன் அகத்தியனாரது கட்டளையினால் கந்தமாதன பருவதத்திலிருந்து "சிவகிரி, சத்திகிரி" என்ற இவ்விரு சிகரங்களையும் காவடியில் எடுத்துவந்து, வரும் வழியிலே இத்தலத்தில் அச் சிகரங்களை வைத்துச் சிவ பூசை செய்து மீட்டும் பெயர்த்து எடுத்துச் செல்ல நினைக்கையில் அச் சிகரங்கள் ஒரு சிறிதும் புடை பெயராமல் மிகப் பாரமாயிருந்தன. பின் அவன் யாது செய்வதென்று ஆலோசித்திருக்கையில் அவ்வமயம் குமரகுருபரனார் இளம்பிள்ளை வடிவாய்க் காட்சியளித்து அருள் புரிந்தார் என்றும் "தொண்டைமண்டலம் நாயனார்" என்னும் புலிப் பாணிபாத்திர சுவாமிகள் ஒரு நாளில் தமது ஆடுமாடுகளில் பசு ஒன்றை ஒரு ஓநாய் தின்றுவிட உடனே யோகத்திலிருந்தே சமாதியின் உணர்ந்து கொண்டு காட்டு மிருகங்களையெல்லாம் தருவித்துக் கள்ளன் எல்லாம் நில்லுங்கள், வெள்ளன் எல்லாம் போங்கள் என்று ஆணையிடுகையில் பசுவைத்தின்ற ஓநாய் மாத்திரம் நின்றுவிட, நீ யிந்த வரையிலிருந்து உருண்டு போ! என்ன, அதுவரையின் தென் பக்கமாய் உருண்டு போயிற்று; ஆகவே அவ்வரை "ஓநாயுருட்டியவரை" என இன்று வரையினும் வழங்கப்பட்டு வருகிறது என்றும், நயினர் பண்டாரம் முதலாகப் பட்டம் நடந்து வருகையில், கலியுகசகாப்தம் (சதஉாஅடிரு) 4285-ஆம்ஆண்டு-க்கு மேல் வடதிசையிலிருந்து இங்குக் குடியேறிய "கோசல சின்னப்ப நாயக்கன்" என்றவர் வராககிரி மலைச்சாரலிலே தங்கியிருந்து ஒரு தினம் தண்டாயுதக் கடவுளாரைத் தரிசிக்க வந்து ஆறுமுகப் புலிப்பாணிபத்திர உடையாரிடத்தில் சீடராய் அமர்ந்திருந்து அவரும் குரு கட்டளை யிட்டாங்குத் தண்டாயுதனாரை வந்தனை வழிபாடுகள் செய்து வந்தார். அவர் "பழனி பாளையப்பட்டு சின்னப்ப நாயக்கன்" என்று மிகப் புகழ் பெற்றிருந்தனர். அக் காலையிலே தண்டாயுதபாணியின் சக்தியைக் குறைக்கவெண்ணி வந்த ஒரு வைராக்கியர் அங்கனஞ் சூழ்ச்சி செய்துகொண்டிருக்கையில், அதை யுணர்ந்து கொண்ட பாணி பத்திர உடையார் அவர்கள் அப் பைராகியை ஷி நாயக்கரைக்கொண்டு கொல்லுவித்தும்; அது முதல் திருமஞ்சனக் குடம் திருப்பணியில் ஒரு பங்குச் சின்

னப்ப நாயக்கனுக்கும் உண்டாமாறு கட்டளை புரிந்ததால் இம் மரபிற் பாளையக்காரருக்கும் அத் திருமஞ்சன திருப்பணி இன்று வரையிலும் நடந்தேறி வருகின்றது என்றும், பிறகு, மதுரை சமஸ்தானத்து இராமப் பய்யர் நாளில், அவர் இத்தலத்தில் விசயஞ்செய்து முருகனுக்கு அஷ்ட பந்தனும் முதலாகிய பல திருப்பணிகளை முற்றுவித்தனர் என்றும், ஷி சின்னப்ப நாயக்கர் முதல, 16 ஆம் பட்டதாரியான அரிகிருஷ்ண புலிப் பாணி பாத்திர உடையார் வரையிலாக உள்ளவரது வரலாறுகள் இன்னவை இன்னவையாம் என்றும், இன்னும் அத்தலத்தின் புராதன பழக்க ஒழுக்கங் கள் இன்னவையாம் என்றும் இன்னோரன்னவைகளை விளக்கிப் போருகின் றது. முற்றும் இருக்கிறது ; மிகப் பிழையுடன் உள்ளது. இப் பிரதி எதி லிருந்து பெயர்த்து எழுதப் பெற்றது என்பதை இதுபோது நிச்சயித்து உணர முடியாமல் இருக்கிறது. 16-ஆம் பட்டதாரியான அரிகிருஷ்ண புலிப் பாணி பாத்திர உடையாரே இந்நூலை யெழுதுவித்தவர் என்று தெரிகின் றது. நிற்க, இனி சின்னப்ப நாயக்கரது வரலாற்றையும் இராமப்பய்யரது வரலாற்றையும், முன்னர் டி. நெ. 3092-ஆம் நம்பரில் வந்துள்ள "சின் னப்ப நாயக்கர் வமிசாவளி" என்ற நூலைப் படித்துந்தெளியலாம் என் பது. இப் பட்டத்தில் ஒரு சிலர் அஷ்டமாசித்தும் யோகவன்மையும் பெற் றிருந்தனர் என்பது குறிக்கத் தக்கது ஒன்றும். சிலர் இல்லறமும் பூண் டிருந்தார்கள் என்பது. இங்கு ஷி யார் ஐவர் சமாதியுண்டு.

No. 3161. நிலக்கோட்டை ஜமீன்தாரி கூளப்ப நாயகன் வமிசாவளி.

NILAKKŌṬṬAI JAMĪNDĀRI KŪḶAPPA NĀYAKAN VAMIŚĀVAḶI.

Pages, 13. Lines, 22 on a page. Condition, good. Extent, 250 granthas.

Begins on fol, 93 (*b*) of the manuscript described under D. No. 404.

Complete.

A Genealogical account of the Zamindar "Kūḷappa Nāyakar", of Nilakkōṭṭai near Dindical, Madura district.

This manuscript is same as the work described under D. No. 2832.

Beginning :

மதுரைச் ஜில்லாவைச்சேர்ந்த திண்டிக்கல் வகையரா நிலக்கோட்டை பாளையப்பட்டு ஜமீன்தாரி கூளப்ப நாயக்கன் வமிசாவளி.

பூர்வத்தில் இராயர் சம்ஸ்த்தானத்தின் மீதில் பாதுஷா தண்டெடுத்து வந்தபோது சமஸ்த்தானம் எடுபட்டுப் போகிறதாக விருக்கிற சமயத்தில் ம. ரா. ரா. ஸ்ரீ இராயர் அவர்கள், சிகப்பு வஸ்த்திரங்களைக் கொண்டுவைத்து, இதில் சம்சாரத்தின் பேரில் ஆசையில்லாமலிருக்கப்பட்ட பேர்கள் * * * * * யாரோ அவர்கள் எல்லாம் சிகப்பு

வஸ்திரங்கள் எடுத்துக்கொண்டு தாம்பூலம் வாங்கிக்கொண்டு இரண களத்துக்குப் போகச் சொல்லி உத்திரவுகள் கொடுத்தார்கள்.

End :

இப்படி வருஷத்துக்கு வருஷம் சதூ௩௲ தக்கு விழுந்தபடியினாலே ஷ பணத்துக்காகக் கம்பெனியார் [கு] (கொ)டுத்த பணத்தில் வருஷாத் வருஷம் கொடுத்து வந்ததிலே பணஞ் செல்லாகாமல் பிரமோதூத வரு ஷத்தில் . . . . பாக்கி நின்றது, அந்தப் பணத் துக்காகக் கம்பெனியார் அமீனு நேமிச்சார்கள். துறைத்தனம் ஹு௰ உ௰௫ ௰௭ ஆம்பட்டம் கூளப்ப நாயக்கர்க்கு குரோதி ஹு௰ முதல் பிரமோதூத ஹு௰ வரை உ௱௫ * * *

சாலிவாகன சகாப்தம் ஹு௰ சத உ௱அ௰அ கலியப்தம் ஹு௰ சதூசளசூ௰௫ ஹு௰ உருதிரோத்காரி ஹு௰ முதல் சாலிவாகன சகாப்தம் சத ௭௱உ௰உ கலி யப்தம்.

சதூசூ௱௰௧ ஹு௰ பிரம்மோதூத வருஷம் வரைக்கும் சாசூ௰௪ ஹு௰க்கு

பட்டம் ௰௭. க்கு விவரம்.

(க) மாக்க[ள](முல்) நாயக்கர் உருதிரோத்காரிஹு௰ முதல் பவஹு௰ வரை ௰உ.

(உ) (அவர்மகன்) கூளப்ப நாயக்கர் பவஹு௰ முதல் விளம்பிஹு௰ வரை வருடங்கள் உரு * * * * * *

(௰௭) கூளப்ப நாயக்கர் குரோதிஹு௰ முதல் பிரமோதூதஹு௰ வரை வருடங்கள் உ௰௭. ஆக ஹு௰ சாச௰௪ ஆகப்பட்டம் ௰௭.

(கு.-பு.).—

இது, தமிழ் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 2832-ஆம் நம்பரில் வந்துள்ள தைப் பெரும்பாலும் ஒத்திருக்கின்றது. முற்றும் இருக்கின்றது, ஆனால் அங்கு அது ஒன்பத்தூர் ஜமீன்தாரி கூளப்ப நாயக்கர் வமிசாவளி, என்ற பேரால் வெளி வந்திருக்கின்றது. இங்கு, இது, “ நிலக்கோட்டை ஜமீன்தாரி கூளப்ப நாயக்கர் வமிசாவளி ” என்பதாக வெளி வந்திருக்கின்றது. இந் நூலில், 12 ஆம் பட்டக்காரர், மதுரையதிகாரி இராமப்பய்யர் அவர்களது சம காலத்தவர் ஆவர் ; இவர், இராமப்பய்யருக்குச் “ சேதுபதிதுரை பேரில் ” படையெடுத்த காலத்தில் உதவியாளராகவிருந்து சேதுபதி “ பாம் பனாற்றுக்கு ஓடிப்போய் ஒளித்துக்கொள்ள, அங்குச் சென்று, அவ்வாற்றில் அணைகட்டுவித்துச் சேதுபதியைப் போரில் வென்று வந்தவர். ஆதலின், இவர்க்குத் “ தண்டு கூளப்ப நாயக்கர் ”, என்ற பேர் வழங்கப் பெற்றதாம். ஆண்டவருடம், இருபத்தைந்து. மற்று, அவரது குமாரர் (13) ஆம்பட்டதாரி யான “ விறலிவிடு தூது கேட்ட நாகம நாயக்கர் ” என்பவர், நக்கலூத்து அக்கிரகாரமதனையும், குளத்தையும் கண்டாராய் நிலக்கோட்டையைக் கற் கோட்டையாகவுங் கட்டுவித்தார். இன்னும் மற்றுச் சிலர் கரியாம்பட்டியை யும், சீரங்கப்பட்டியையும், இன்னுஞ் சில ஊர்களையுங் கண்டார்கள் என்று சில விசேட செய்திகளை விளக்குகின்றது இது. இதன் மாதுருகைப் பிரதி இனி 3175-ஆம் நம்பரில் வரும்.

No. 3162. விருபாக்ஷிமலை தேவஸ்தான வரலாறும், கூளப்ப நாயகன் வரலாறும் (அண்டநாடு).

VIRŪPĀKSHIMALAI DĒVASTHĀNA VARALĀṞUM AND KŪḶAPPA NĀYAKAN VARALĀṞUM (AṆDA NĀḌU).

Pages, 15. Lines, 20 on a page. Condition, good. Extent, 300 granthas.

Begins on fol. 99 (*b*) of the manuscript described under D. No. 404, T.D.C. Vol. I.

Complete.

A Legendary ac ount of th D vasthānam of Virūpākṣhi hill at Virū-āk i aluk near Dindical district and an account of the life of Pallaiyakār named Kū'appa Nāyakar of Virūpākṣhi village.

Beginning :

திண்டுக்கல் வகையரா விருபாக்ஷி சீமைமலை தலைகுத்து முதலரன வரலாறு எழுதினது. (அண்டநாடு).

கடுதாசி ரு. பக்கம் எ.

ருஅாயசு ௲ஙுய எப்ரல்மீ கூ வ திண்டுக்கல் வகையரா சீமை விருபாக்ஷி தாலூக்கா கசுபா "கோபூறணபுரம்" எல்லைக்குச் சேர்ந்த விருபாக்ஷி மலையில் ஆறு வருகிற தலக்குத்துக்குச் சுப்பிரமணிய குருக்கள் மகன் நாட்டாண்மைக்காரர் முதலான இருபது சனத்தோடே போய் அவ்விடத்தில் கண்டு காணப்பட்ட வரலாறு முதலாகி விருபாக்ஷி தேவஸ்தானம் முதலான கைபீயத்து. தரியாபத்து நிட்டல நாயன் அய்யன். வராக கிரியென்று பேர் புராணப் பிரசித்தமாகிப் பாடலிலே சொல்லி வருகிற பருவதத்துக்கு சய காதம் வழி கிழக்கு மேற்கு உள்ள மலையென்றும் மேற்கு சமுத்திரம் அனுசரித்திருக்கிறதென்றும் சொல்லப்படுகிறது. * * * * * * வெகு காலத்துக்கு முன்னே தொட்டியர் வந்து சேர்ந்து அவர் அவர்கள் பிரபலிச்சு இருப்பிடம் பண்ணிக்கொண்டு அதன் பிறகு அவர் அவர்கள் ஹத்துக்களுக்கு அவர் அவர்கள் பேர் உண்டாச்சுது. ந. அதில், விருபாக்ஷி மலையென்று பேர் உண்டான மலையிலிருந்து தெற்குப்புறமாய் வடக்கு நோக்கி அரவக்குறிச்சிக்குக் கிழக்கு "வெஞ்சமாக் கூடலூர்", ஆகிய அமராவதியில் சங்கமம் கூடுகிறது. * * * * * மேல் எழுதிய தொட்டியரில் ஒருத்தர் தலக்கீத்துச் சரிவில் சேர்ந்த "விருபாக்ஷிபுரம்", என்று நகரமும் உண்டாக்கிச்சுவாமி சந்நிதியிற் சேர்ந்த நாள் முதல் நாளுக்கு நாள் விருத்தியாகி ஆசிரய பலத்தினலே குடிபடை சேர்ந்து "விருபாக்ஷி பாளையக்காரர்", என்று பேர் உயர்ந்தது.

End :

ஷ வமிசத்தில் கூளப்ப நாயகர் என்கிறவர் விருபாக்ஷி சீமையை ஆளுகிற போழ்து அவர் மிகவும் பிரஜைகளைப் பீடிக்கிறதும் யாராகிலும் ஒரு குடி பசியாகவிருந்தால் தண்டம் பீடிக்கிறதும், யாசகர்கள் வந்தால் அவர்களுக்கு ஏதாகிலுங்கொடுத்து மறுபடி வழியில் அடித்துப் பிடுங்குகிறதும், வர்த்தகர்கள், வியாபாறிகள் வந்தால். அவர்களை மரியாதை பண்ணி

அழைத்து அவர்கள் அண்டையிலிருக்கிற சரக்கை அவர் சொன்னவிலையைக் கொடுத்துவாங்கி அவர்கள் போகிற போழ்து வெகுமானமும் பண்ணி வழி யேறப்போகிற போது தன் மனுஷ்யரை விட்டு அந்தப் பணத்தைப் பிடுங்கிக் கொண்டுவரச் சொல்லுகிறது. இப்படித் துன்மார்க்கமாய் நடந்துகொண்டு இருந்ததில் குடிபடை இறந்துபோய் "விரூபாக்ஷி நகரம்", எடுபட்டுப்போய் இருந்தது. இப்படியிருக்கும் அளவில் "முத்துச் சேவைக்காரன்" என் கிற ஊழியக்காரன் துன்மார்க்கத்தினாலே எழு பேர் துலுக்கர் ராவுத்த மாரை அபாண்ட பழி போட்டு * * * * உயிரோடே பள்ளத்திலே போட்டுக் கொன்று போட்டான். கூளப்ப நாயக்கனாற் கொல் லப்பட்ட எழு பேர்களது பிள்ளைகள், மணியக்காரர் இராவுத்தன் முதலிய வர்கள் போய்க் கும்பினி (கம்பெனி)யாரிடத்தில் தெரியப்படுத்தி மேஸ்த்தர் "ஆரடீசு தொரை", யவர்களைக் கண்டு ஷை விரூபாக்ஷி வழி காண்பித்துக் கொடுத்துக் கும்பினிக்கும் கூளப்ப நாயக்கனுக்கும் உள்ள சண்டையிற் குடிபடை ஓடிப்போய்ச் சீமையழிஞ்சு கும்பினியார் கூளப்ப நாயக்கனைப் பிடிக்க, இரண்டு மூன்று மாதம் சென்று குஞ்சு குட்டிகளைத் திண்டுக்கல் லிலே பாராபோட்டுக் கள்ள நாட்டில் பாப்பாப்பட்டியில் அகப்பட்ட கூளப்ப நாயகனை விரூபாக்ஷியில் கும்பினியார் தூக்குப்போட்டார்கள். முத்துச் சேவக்காரனையும் தூக்குப்போட்டார்கள். குப்பளனை உயர எழுந்ததின் பிறகும் கம்பெனியார் சீமைகட்டி விரூபாக்ஷியில் குப்பளநயகன் வீடு இடித்து நிறுவிக் குடிகளுக்குக் கவுல் கொடுத்த பிறகு இராச்சியத்தில் குடிபடைகள் குடியாக வந்து நிலைத்தது. பாளையக்காரர் நாளையில், மலை கிராமமும் சேர்ந்து விரூபாக்ஷி சீமை கிராமம் என்று சொல்லப்படுகிறது.

* * * * * * * * *

ஆக மலை கிராமம் ரு. ஆகக்கிராமம் சயிசு. இந்த நாற்பத்தாறு கிரா மமும் கூடினது விரூபாக்ஷி சீமையென்று சொல்லப்படுகிறது. * * * * * * * * * குப்பா நாயக்கன் தாயாதி இலக்ஷ்மண நாயக்கன் தாசரிபட்டி சேவைகாரனையும் சத்திரர்பட்டியில் தூக்குப்போட்டது.

(கு.-பு.).—

இது, வராககிரியின் மகிமையினையும், திண்டுக்கல்லுக்கு அருகில் விரூ பாக்ஷி தாலூக்காவில் கோபுரபுரம் எல்லைக்குச் சேர்ந்திருக்கும் விரூபாக்ஷி மலையிலே உள்ள விரூபாக்ஷி தேவஸ்தான வரலாற்றையும் அதன் மகிமை களையும், வளப்பையும் மற்று, ஷை கிராமத்தில் பாளையம் ஆண்டு இருந்த பாளையக்காரர் "கூளப்ப நாயக்கன்", என்ற ஒரு "பாளையக்காரர்" குடி களுக்கும், ஈஸ்டு இண்டியா கம்பெனியாளருக்கும் பல தீங்குகளையியற்றி இறுதியில் கம்பெனி துரையாளர் "ஆரடீசு துறை" கலெக்டர் அவர் களால் 1801 வருடத்தில் கள்ள நாட்டில், பாப்பாபட்டியிலே கைதியாக்கப் பெற்று "முத்துவீர சேவைக்காரன்" என்ற தன் ஊழியக்காரனுடன் விரூபாக்ஷிபாளையத்திலே தூக்கிலிடப்பட்டு மாண்டு போனதாகச் சீமையாட்சி கம்பெனியாரது வசமாயிற்று என்ற இவ் வரலாற்றையும் பின்னர் அங் ஙனம், குப்பன் நாயக்கன் என்ற மற்றொருவரும் பிறரும், கம்பெனி மக் களுக்கு விரோதியாகவிருந்து நிர்மூலமான வகையினையும், இனி இப்

பாளையப்பட்டுக்குச் சேர்ந்துள்ள கிராமங்கள் மொத்தம் (சயசு) (46) நாற்பத்தாறு என்றும், அவையிற்றின் பேர்களையும் அவைகளில் அமைந்துள்ள சைவ வைணவ கோயில்களையும், நதிகளையும்; இன்னும் இன்னோரன்னவைகள் பலவற்றையும் எடுத்துக்கூறி விளக்குகின்றது. பெரிய கோட்டையில் விருபாக்ஷியீசுவரரைச் சேரன் பிரதிஷ்டிப்பித்தார். நீலகண்டேசுவரர் நீலமலையீசுவரர் என்றும் வழக்கப்பெறுவார். முற்றும் உள்ளது. நிற்க, மிக எழுத்துப் பிழைகளுடன் உள்ளது. இப் பிரதிக்கு மாத்ருகையாம் பிரதி, இனி 3176-ஆம் நம்பரில் வருணிக்கப்படும்.

No. 3163. பழனி பாளையப்பட்டு சின்னப்ப நாயகன் வமிசாவளி.

PAḺAṆI PĀḺAIYAPPAṬṬU CINNAPPA NĀYAKAN VAMIŚĀVAḶI.

Pages, 15. Lines, 20 on a page. Condition, good. Extent, 230 granthas.

Begins on fol. 107 (*a*) of the manuscript described under D. No. 404.

Complete.

This is a restored copy of the manuscript described under D. No. 3092.

(கு.-பு.).—

இது, டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 3092-ஆம் நம்பரில் வந்துள்ள நூலைப் பெயர்த்து எழுதப்பெற்ற பிரதியாம். மிக எழுத்துப் பிழையுடனிருக்கிறது. இது விசய வைகாபுரி சின்னப்ப நாயகன் வமிசாவளி யென்னவும் பெயர் பெறும். "விஜயா" என்ற சொல் விஜயகிரியைக் குறிக்கும். விஜயகிரியிலிருந்து இவரது முதியோர் இந்நாட்டில் வராககிரிச் சாரலிற் குடிபுகுந்தனர் ஆதல்பற்றி இக்குடியில் தோன்றிய யாவர்க்கும் அச் சொல் பட்டப்பேராய் அல்லது மரபுப் பேராய் இயற்கைப் பேருடன் துணைப் பெயராகச் சேர்த்து வழங்கப்பட்டு வருகின்றது.

No. 3164. பழனித்தல வரலாறு.

PAḺANITTALAVARALĀṞU.

Pages, 17. Lines, 22 on a page. Condition, good. Extent, 260 granthas.

Begins on fol. 114 (*a*) of the manuscript described under D. No. 404, T.D.C. Vol. I.

Complete.

This is a restored copy of the manuscript described under D. No. 3093.

(கு.:பு.).—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 3093-ஆவது நம்பரில் வந்துள்ளதைப் பெயர்த்து எழுதி வைக்கப்பெற்றதாம். முற்றுமிருக்கிறது. பிழைகள் உள. 122 (b)—128 (b)—ஆன ஏடுகள் வெற்றேடுகளாம்.

No. 3165. கன்னிவாடி மலையாண்டி அப்பைய நாயகன் வமிசாவளி.

KANNIVĀḌI MALAIYĀṆḌI APPAIYA NĀYAKAN VAMIŚĀVAḶI.

Pages, 48. Lines, 25 on a page. Condition, good. Extent, 1140 granthas.

Begins on fol. 41 (*a*) of the manuscript described under D. No. 178.

A genealogical account of the Pallaiyakarar named Malaiyāṇḍi Appaiya Nāyakan of Kannivādi zamin.

Similar to the work described under D. No. 3009.

Beginning :

கன்னிவாடி (ஜமீன்) அப்பைய நாயக்கர் வமிசாவளிக்கு விபரம் :—

சாலிவாகன சகாப்தம் ௲௬௱௨௰௫ கலியுக சகாப்தம் ௪௲௯௱௪ இதன் மேற் செல்லா நின்ற ஈசுவர௵ வடக்கேயிற்கை யிலிருக்கிற ? நாளையில் இராயரது ஸமஸ்தானத்தில் சேவகம் பண்ணிக் கொண்டிருந்தார்கள்.

* * * * * * * * *

அதே பிரகாரம் உத்திரவு வாங்கிக் கொண்டு காதங்கோட்டை கொத்தபல் லக்கு வந்து "எற்றண்ணன்" என்கிற இடையக்கோட்டையை நேமுகஞ் செய்து "சின்னண்ணன்" என்கிறவனுக்கு விருபாக்ஷியில் இருக்கச் சொல்லிக் "கொத்தபல்லி" தாதங் கோட்டையில் "அப்பண்ணன்" என் கிறவர் இருந்தார். அப்போது வ்ராககிரிமலைச்சார்பாய் ஒரு சக்கிலியன் வனுந்திரமான காட்டுக்குள்ளே கோட்டை போட்டுக்கொண்டு சிறிது சனங் களைச் சேர்க்கை செய்து காசி, இராமேசுவரம், பழனி இந்த மார்க்கங்களில் போவார் வருவார் சனங்களைச் சல்லியஞ் செய்துகொண்டு அதில் இருந்தான்

* * * * * * * *

End :

அப்பால் இலட்சும நாயக்கனைப் பிடித்துக்கொண்டு வருகிறதற்கு மேல் அப்பால் ம.ரா.ரா. ஸ்ரீபாரீசு துறையவர்கள் என்னை வரவழைத்து நீ கும்பினிக்குப் பெற்ற பிள்ளையானதினுலே நீ நிரம்பவும் பிரயாசைப்பட்டாய், உன்னுடைய பிரயாசம் நிரம்பவும் தெரிய வந்தது என்று சந்தோஷஞ் செய்துகொண்டு என்னையும் என் சனத்தையும் என்னூருக்குப் போகச் சொல்லி அனுப்பிவிச்சி விட்டார்கள். அதன் பிறகு நான் என்னூரில் வந்து கும்பினிக்கு உண்டாகிய பணமுங்கொடுத்துக் கொண்டு வருகிறேன். நான் பட்டத்துக்கு வந்து மிக ௵ ஆயிற்று. நெடுக்கவும் அரண்மனை காரியம் முக்கியமாய்க் கீழ்ப்படிந்து நடந்து வந்தது. அல்லாது வேறில்லை. இது சித்தம் அறியவேண்டியது. இந்தப்படிக்குக் கன்னிவாடி மலையாண்டி அப் பைய நாயக்கர்.

(கு.-பு.).—

இது கன்னிவாடி ஜமீன்தாரி "மலையாண்டி அப்பைய நாயக்கர்" என்னும் அவர் நரசிங்க நாயக்கரது மகனர் தாம் தமது முன்னேரான அப்பண்ணன், எற்றண்ணன், சின்னண்ணன் என்றவர்களை முதலாகக்

கொண்டு தம் வரையிலாக உள்ளவர்களின் வமிசாவளியை யெடுத்து உரைக்கும் வகையிலேயமைந்திருக்கின்றது. இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 3009-ஆம் நம்பரில் வந்துள்ள "கன்னிவாடி பாளையக்காரர் அப்பைய நாயக்கர் வமிசாவளி" என்றதோடு சிறுபான்மை ஒப்புமை யுடைத்தானது. முற்றும் உள்ளது. இதில் இராயரது பிரஸ்தாபமும், பின் சந்திரசேகர பாண்டியர், வீரசேகர சோழராசர் என்ற இவ்விருவருக்கும் நேர்ந்தபோரும் அதில், இராயர் அவர்கள் (கிருஷ்ண ராயர்) கொட்டியம் நாகம நாயக்கரை மதுரை சமஸ்தானத்துக்கு அனுப்புவித்து சந்திரசேகர பாண்டியருக்குப் பட்டங்கட்டுவிக்குமாறு ஏவிய வரலாறும், பின் நாகம நாயக்கர் முற்கூறிய அப்பண நாயகரைத் தம்மிடம் ராஜகாரியத்தில் உதவி புரியுமாறு அமர்த்திக்கொண்டும் அதுக்குக் கைம்மாருக இவர்களுக்குப் பலகாடு வெட்டி, நாடு உண்டாக்கிக் காதங்கோட்டை கொத்தபல்லியைக்கட்டிக்கொள்ளச் சொல்லி இவர் தம்பியர் எற்றண்ணருக்கு இடையக்கோட்டை எல்லையதிகாரத்தையும், சின்னண்ணருக்கு விருபாட்சி சீமையதிகாரத்தையும் வழங்கினுர் என்ற இவ் வரலாறுகளையும் மற்று விசுவநாத நாயக்கரது ஆட்சியிலிருந்து கம்பெனி மக்களது ஆட்சி வரைக்கும் ஆன இவ்விடைக்காலத்தில் தோன்றிய பல பிரபுக்களுக்கும் நம் முதியோர் பலரும் பாளையம் எற்று முறையே சேவகம் புரிந்து வந்த திறனையும், இறுதியாக இவர் நரசிங்க நாயக்கருக்குப் பின் பட்டம் எற்றுக்கொண்டு ஈஸ்டு இண்டியா கம்பெனி துறையாளர். ஆறடீசுதுறையவர்களுக்கு உதவியாகவிருந்து அவருக்கு அக்காலையில் மாருக விருப க்ஷிபாளையத்தில் சல்லியஞ் செய்து கொண்டிருந்த ஒருபாளையக்காரரையும் (கூளப்ப நாய்க்கர்) அவர் பிரதானி முத்துவீர சேவைக்காரனையும், தளி பாளையக்காரன் ஒருவனையும் (தளி யென்றது கூளப்பன் ஓடியொளிந்த விடமாம்). அவர் தாயாதி இலட்சும(ண) [மீ] நாயக்கரையும் மற்றேனையவர்களையும் வலியடககி வீறுபெற்று வந்த வரலாற்றினையும், பிறவற்றையும் நன்கு விளக்கமாகக் கூறியிருக்கின்றுர். நிற்க, இக் கூளப்ப நாயக்கரது சரித்திர விரிவை முன்னர் 3162-ஆம் எண்ணின் பிரதியில் வந்துள்ள விருபாட்சி பாளையக்காரர் கூளப்ப நாயகரது வரலாற்றைப் படித்து உணர்க. மிக எழுத்துப்பிழையுடனிருக்கிறது. மெகென்ஸி பெரியவால்யும் மூன்றுவதில் (417—439)-ஆன பக்கங்களில் வந்துள்ளது, இதுக்கு மற்றோர் பிரதியாம்.

No. 3166. சிலங்குலம் போடிநாயகன் வமிசாவளி.

ŚĪLAṄKULAM BŌḌINĀYAKAN VAMIŚĀVAḶI.

Pages, 11. Lines, 25 on a page. Condition, good. Extent, 176 granthas.

Begins on fol. 64 (*b*) of the manuscript described under D. No. 178.

Complete.

A genealogical account of the Pāḷaiyakkār named Bōḍi Nāyakar of Śilaṅkulam.

Beginning :

சில வாரம் (?) குலம் **போடி நாயக்கர் வமிசாவளி**க்கு விவரம். ஆதியிலே பாளையப்பட்டு (?) காதலருரவு பிறந்ததுமுதல் இது நேர் வரைக்கும் நடந்த சரித்திரங்களுக்கு (?) என்னின செய்தியிட்ட அட்டவணை விவரம் :—

ஆதி நாளையிலே எங்களுடைய வமிசம் (?) குத்தி தேசத்துக்குத் துறைத்தனமாய் இருந்த[ார்கள்](து). அப்படியிருக்கிற நாளையிலே வடக்கேயிருந்து பாச்சாய் முகலாயித்தார்வந்து உயுத்தஞ்செய்து சீமையை அபகரித்துக்கொண்டார்கள். அப்போது சிடீமயிலிருந்து குடிபடைகள் சர்வாத்திரளுக தட்சிணப் பிரதேசம் நோக்கி (வந்து) அவர் அவர்களுக்குத் தோன்றின இடங்களிலே சாருவுகள் பார்த்து இடஞ் செய்துகொண்டார்கள். அதன்மேல், நாமும் புறப்பட்டு கணைவாய்க்குமேல் ஒரு கிராமத்தில் அஞ்சு வருஷம் ஒதுங்கியிருந்து அப்பால் அவ்விடம்விட்டுக் கணைவாயிறங்கி (?) மழைசை கிராமத்தில் வந்து இருந்து * * * *
அப்புறம் வைகை அருகாண்மையில் உத்தரபாரிசுவக்கரையில் வந்திருந்தோம். அப்போதைக்கு நம்முடைய சீமையிலிருந்து கலாபத்துக்கு வந்த உற்றூர் உறவின் முறையார் சாருவு பண்ணிக்கொண்டு இருந்த பேர்கள் நம்மைக் கண்டு மரியாதை செய்து வைத்திருந்தார்கள். அப்படியிருக்கிற நாளையிலே இந்த சீமை வனசர(பூயிஷ்டமாய்) அரண்ணியமாய், அபுரூபமாய் (?) அதிலே பத்துக் கிராமம் வரைக்கும் **பூனையாற்று ராசாக்க**ளுக்குள் குடித்தனஞ் செய்துகொண்டிருந்தார்கள். * * * *
அப்படியிருக்கும் தருவாயில் பூனையாற்று ராசா (பெயர் தெரியவில்லை) அவர்கள் மலையைவிட்டுக் கீழேயிறங்கி நிலப் பக்கத்தில் வந்திருந்தார்கள்.
* * * * * * *

இந்தப் பாண்டிய தேசத்துச் சார்வில் நமக்கு உண்டான பூமி சகலமும் உனக்கே கொடுத்தோம். நீயே நமக்கு முந்தின பிள்ளையென்று சொல்லிப் பட்டும் வளையும், கொடுத்துக் கூடவே மலையாளத்துக்குக் கூட்டிக்கொண்டு போய்ப் பல்லாக்குங்கொடுத்து மணிப்பாறி விருதுங்கொடுத்து இராசு நாயகர் (?) என்று பேருங்கொடுத்து * * * *
பட்டக் காணிக்கையுங் கொடுத்துக்கொண்டு ஆண்டு அனுபவித்துக்கொண்டு இருக்கச்சொல்லித் திருக்கைச் சிறப்புஞ்செய்து நம்முடைய சீமை மலைப் புறத்தில் **மங்கலாதேவி** முதல் பாண்டிய சீமைக்குள்ளே **தொட்டப்ப** நாயகனூர்க் கணைவாய் நாகமலைச் சாத்தாவின் கோவிற் சந்நிதானத்தில் சிலைக்கல் நாட்டி ஆனைத்துறட்டி முத்திரையும் போடுவித்து அதுக்கு வடகிழக்குச் சுண்டக்காய்க் கணைவாய் மத்தியில் பாதைக்கு அருகாமையில் வடபாரிசுவத்தில் சிலைக்கல் நாட்டி ஆனைதுறட்டி முத்திரையும் போட்டு வச்சுக்கொடுத்தார்கள், அப்படிக்கொடுத்தவர், மதுரை பாண்டிய ராசாக்களுக்குள்ளே பாண்டிய தேசம்விட்டு மலையாளம்போய்ச் சேர்ந்த ராசாக்களிலே பூனையாத்துத் தம்பிரான்களில் குலசேகர பாண்டியன் பெரியபொன்னு பெருமாள் தம்பிரான் அவர்கள் வாங்கிக் கொண்டவர், எங்கள் ஜ்ஞாதியில் சக்க நாயக்கர் தம்பிரான் அவர்கள் திருவெழுத்துச் சாதனம் எழுதிக்கொடுத்துப் பூருரைகறிஞு சோழியர் (?) ஸ்ரீ சாலிவாகன

சகாப்தம் ௲௨௱௫௰௮ (கி. பி. 1336) ஷூ த்துக்குமேற் செல்லாநின்ற ஈசுவரஷூ வைகாசிமீ ௰௭ ௨.

முதற்சக்கு நாயக்கர் அவர்கள் பட்டம் ஷூ ௩௰௭ அவருக்குச் ஸ்ரீசாதி ௨ அவர் புத்திரன் ராசு நாயக்கர். * * * * * * * * * *

சீலம் போடி நாயகர் பட்டம் ஷூ ௰௪ அவருக்கு ஸ்த்ரீசாதி , புத்திரர்கள் . அதில் உள்ள வர்த்தமானம் இராயர் சமஸ்த்தானத்தில் பாச்சாய் முகலாயிலிருந்து மல்லாக்கான் ராவுத்தன் வெகு விருதுகள் போட்டுக் கொண்டு சனசேகரத்துடனே ஒருவந்து துவசமும் போட்டுக்கொண்டு * * எதிர்த்த இடத்தில், சீல போடி நாயக்கர், இந்தச் சமாச்சாரஞ் செவியுறலாய்க்கேட்டு பேச போனதில் நடந்த சமாசாரம் சகல அமீருகளாலேயும் செயிக்கமாட்டாமல் மல்லாக்கா ராவுத்தன் றன் கைமேலாகிறதானதுக்குச் சீலம் போடி நாயக்கர், கையிற் கத்தியும் கேடயமும் வாங்கிக்கொண்டு ராதினே சிலம்பத்தொழில் மேலாய் அவனையும் வெட்டிச் செயஞ் செய்துகொடுத்த இடத்தில், இராயர் சந்துஷ்டியுடனேயழைத்து * * * அநேக விருதுகளையெல்லாம் வாங்கிக்கொடுத்துத் "திருமலை போடி நாயக்கர்," என்று பேருங்கொடுத்து தாமும் அதிக வெகுமதியுஞ் செய்து அனுப்புவித்தார்கள். * * * * * *

End :

என்னுடைய ஆதீனம் காசை நகருக்கு நான்கு எல்லைக்கு விவரம் :— காசை நகருக்கு வடக்குப் பாரி கலவைபாதை மேடு, இதன் கிழக்கு பாரி யாற்றுக்குக் கிழக்குப் போடி நாயகர் பாறை, இதன் தெற்கு வீரப்பைய நாயக்கர் கோவில், * * * * * * *
சுடலையாறு இத்தியாதி நான்கெல்லை எங்கள் ஞாதியில் ஆதிசக்கு நாயக்கர் பட்டம் முதல் பட்டத்துக்குப் பட்டம் பட்ட காணிக்கை ௩௰ வராகன். ஒரு பச்சை வடமும் கொண்டுபோய் பூனையாத்துத் தம்பிரான் அய்யன் அவர்களுக்குப் பாதக்காணிக்கை வைத்துக் காண்கிறது. அதற்கு மேல் அவர்களுடைய திருக்கைச் சிறப்புப்பட்டும் வளையும் கொடுத்து அந்தப் பட்டும் வளையும் வந்து இவ்விடத்துக்கு வந்து தரித்ததின் பிறகு பட்டம், அதே முறைக்கு நாளிதுவரைக்கும் நடந்து வருகிறோம்.

(கு. பு.).—

இது, ? "சீலங்குலம் போடி நாயக்கர்" என்னும் அவர், தமது மூல புருடர் ஆன ஆதிசக்கம் நாயக்கரை முதற்கொண்டு தம் வரையாக முறையாக வந்த பாளையக்காரர்கள் பலருடைய வரலாறுகளையும் அவர் அவர் காலத்து நிகழ்ந்த பல அதிசய செயல்களையும் கம்பெனியாளருக்கு எடுத்து விளக்குந் துறையிலே யமைந்திருக்கின்றது இதிலே, இச் சீலங் குடியினர், வடபுலனிலிருந்து தென் றிசைக்கு வந்து குடியேறி, அக் காலையில் இருந்த மலையாள அரசர் குலசேகரபாண்டியன், பெரியபொன்னு பெருமாள் தம்பிரான்," என்றவரது அபிமானம் பெற்றிருந்து அவரால், மலைப்புறத்து, "**மங்கலாதேவி**" சீமை முதற்கொண்டு பாண்டிய சீமை

தொட்டப்ப நாயக்கனூர் கணைவாய் நாகமலைச் சாத்தாகோவில் வரையிலாக உள்ள நாட்டுக்கெல்லாம் நாட்டாண்மை புரிந்திருந்தனர். இவ் வரசர் பாண்டியநாடு விட்டு, மலை நாடேறச் சென்றவராம். இவர், மலைப்புறஞ் சென்றதுக்குக் காரணம் இதில் குறிக்கப் பெறவில்லையென்பது. மூலபுருடர், ஆதிசக்க நாயக்கர், என்றவர். இவர் பட்டம் எற்றகாலமானது. சாலிவாகன சகம் ௲௨௱௫௰௮ ௵ (1258)" கி. பி. 1336 ௵க்கு மேல் வையாசி௴ ௳ ௨ என்றதாம். பின்னர், இவர் மரபில், சீலம்? போடி நாயக்கர் என்னும் ஒரு வீரர், இராயர் சமஸ்தானத்துக்குப் போயிருந்து, அங்கு அட்டகாசஞ் செய்திருந்த ஒரு முகம்மதியர் "முல்லாக்கான் ராவுத்தர்," என்றவரைச் சிலம்பத் தொழிலால் போரில் வென்று வீழ்த்தி இராயரது சன்மானமும் விருதுகளும் பெற்றிருந்தாராய், "திருமலை போடி நாயக்கர்" என்னப் பெற்றிருந்தாராம். என்றின்னோரன்ன பண்டைய வரலாறுகள் பல விளக்கமுறுகின்றன. இதுக்கு மற்றோர் பிரதி, மெகென்ஸி துரை மான்ஸ்கிருப்ட்ஸ் பெரிய வால்யும் மூன்றுவதில் 439—444-ஆம் பக்கங் களிலே பெயர்த்து எழுதப்பெற்றுள்ளது, முற்றும் உளது. இப்பிரதியின் கையெழுத்து தெளிவாகவிருப்பினும் மிகப் பிழைகள் உள. இதன் பேர், பழைய அட்டவணையில் "சீவரங்குலம் போடி நாயக்கர் வமிசாவளி," என்பதாக வழங்கப்பட்டிருக்கிறது. முதலிற் காணப்பெறும் "சீலங்குலம்," என்றதின் விளக்கம் இன்னதென்று தெரியவில்லை. வடக்கே ஸ்ரீசைலத்திலிருந்து வந்து தென்புலத்திற் குடியேறியதால், "ஸ்ரீசைலம்," என்ற குறிப்புப்பேரே "சீலம்," என மருவி வழங்கப்பெறுகின்றதோ? என ஐயுறவும் இடன் உண்டு. ஆராயற்பாலதாம். மற்று நாகம நாயக்கர், விசுவநாத நாயக்கர் இவர்கள் இடையில் கூறப்பட்டு உள.

No. 3167. பெரியகுளம் இராமபத்திர நாயகன் வமிசாவளி.

PERIYAKUḺAM IRĀMABHADDIRA NĀYAKAN VAMIŚĀVAḺI.

Pages, 24. Lines, 25 on a page. Condition, good. Extent, 390 granthas.

Begins on fol. 69 (*b*) of the manuscript described under D. No. 178.

Complete.

A genealogical account of a Pāḻaiyakkār named Irāmabhaddira Nāyakar of Periyakuḻam.

Beginning :

பெரியகுளம் இராமபத்திர நாயக்கர் [பாளையப்பட்டு] வமிசாவளி.

பூர்வத்தில் எங்கள் பெரியோர்களில் இராயர் சமஸ்தானத்தில் கொட்டியம் நாகம நாயக்கர் அவர்களிடத்தில் சேவகமாய் இராமபத்திர நாயக்கர் இருந்தார். * * * * *

உன்னிடத்தில் இராமபத்திர நாயக்கரை நேமுகஞ் செய்திருக்கிறோம்,

அவர் வசத்திலே பணஞ் செலுத்திவையென்று சொன்னதுக்குச் சந்திர சேகர பாண்டியன் சொன்னவயணம் எங்கள் பாட்டனுருடைய வைப்பாட்டி மக்கள் பஞ்ச பாண்டியர்கள் அஞ்சுபேர்கள் உண்டு. அவர்கள் தென் காசி, கெங்கைகொண்டான், கயித்தாறு இந்தமுகத்திலே யிருந்துகொண்டு என்பேரில் சல்லியம் செய்துகொண்டு இருக்கிறுர்கள். வீரசேகரசோழனும் எந்நேரமும் என்பேரில் சல்லியஞ் செய்துகொண்டு இருக்கிறுர்கள். இவர் கள் சல்லியஞ் செய்கிறபடியினுலே என்னுலே கொட்டியத்துக்குப் பணம் செலுத்தி வைக்கிறதற்குக் கூடாது. நீங்கள்தானே இந்தப் பூமிக்கு அதிபதியாயிருந்துகொண்டு எனக்கு அன்ன வஸ்திரங்களுக்குத் தடையில்லா மல் நடப்பித்துக்கொண்டு சகல காரியமும் விசாரணை பண்ணிக்கொள் ளுங்கள் என்று இராச்சியத்தை அவர் வசம் ஒப்புவித்துப் போட்டார்.

* * * *

* * அவர் சிறிய தகப்பனுர் மகன் கொண்டம நாயக்கர் தொரைத்தனம் ஸ்ரீ௶ ௩௰௫ அவர் குமாரன் நாகம நாயக்கர் தொரைத் தனம் ஸ்ரீ௶ ௫௰ அவர் குமாரன் வேங்கடசாமி நாயக்கர் தொரைத்தனம் அனுபோகம் ஸ்ரீ௶ ௨௰ இது வடகரை பாளையப்பட்டு வமிசாவளி. இந்தப் படிக்கு வடகரை இராமபத்திர நாயக்கர் நக்கல்.

(கு - பு) .—

இது, பெரியகுளம் பாளையக்காரர் இராமபத்திர நாயக்கர் என்பவரது வமிசாவளியைக் குறிக்கின்றதாம். இதன்பெயர், இறுதியில், "வடகரை இராமபத்திர நாயக்கர் வமிசாவளி," என்பதாகவுங் கூறப்பெற்றிருக் கிறது. இக்குடிக்கு மூல புருடராம் இராமபத்திர நாயக்கர், இராயர் சமஸ்தானத்தில் கொட்டியம் நாகம நாயக்கரது அருகில் சேவை செய் திருந்து பின்னர், அந் நாயக்கரது ஆணையால், மதுரை சமஸ்தானத் துக்குள் வந்து சந்திரசேகர பாண்டியனுர்க்குள்ள பகையாளர் வீரசேகர சோழ மன்னரையும், பஞ்சபாண்டியர் என்னும் பேருடை யராய்த் திருநெல்வேலி, கெங்கைகொண்டான், கயத்தாறு முதலான சீமைகளைத் தம் வயமாக்கிக்கொண்டு இடுக்கணை விளைத்துக் கொண்டிருந்த அப் பாண்டியனுரது மூதாதையின் வைப்பாட்டி மக்க ளாம் ஐவரையும் வலியக்குவித்து அங்கேயே இராச சேவை செய்து கொண்டிருந்தனர். இராச்சியம் சுபிட்சமாயிருந்தது. பிற்காலம் கம்பங் கூடலூரில், சோழரில் ஒருவர் விசுவநாத நாயக்கர் அவர்களுக்குத் திரைப் பணம் அல்லது வரி கொடாமலிருக்க அவர் மீது பாளையஞ்சென்று செயித்துக் கம்பத்துக்கோட்டையைத் தம் வசமாக்கிக்கொண்டு போரில் சிறிது விழுப்புண்ணுடன் மீண்டு வந்தனர். அதுக்குக் கைம்மாருக நாயக்கர் அவர்களும் சிறிது பூமிதானமும் செய்தார்களாம். விசுவநாத நாயக்கர் பெரியகுளத்தில் தங்கியிருக்கும்போது இராமபத்திர நாயக்கரை நோக்கி மிக வியந்து, இனி நாம் உமக்கு, வடகரை கிராமமதனைச் சுவய ஆட்சி செய்துகொள்ளுமாறு வழங்கினேம்; ஆதலின், நீவிர், அத்தலத்துப் பாளையம் அமைத்துக்கொள்வீராகவெனக் கட்டளையிட்டார். இத்தலம், அரு கில் வராக நதிக்கு வடக்கில் காமாக்ஷி கோவிலும் வராககிரிச் சார்பில் அகத் தியரால் பிரதிஷ்டிப்பிக்கப்பெற்ற கும்பக்கரை மல்லீசுவரர் கோவிலும்

ஆக வமைந்து ஓர் சீர்பெறும் தலமாக விளங்குவதாம். அங்ஙனம் இந் நாட்டுரிமையை வழங்கினது சாலிவாகன சாகப்பதம் ௲௩௱௫௰௬ (1356 ஷ) இல் ஆம். பின்னர், திருமலை நாயக்கரது தளபதியாம் இராமப்பய்யர் அவர்கள் "சேதுபதி சடைக்காத் தேவர்," மீது போர்புரியச் செல்லும் போது, அக்காலத்து, மாச்சி நாயக்கர் என்றவர், உதவியாயிருந்த அப் பாம்பனுற்றைக் கடந்து இராமமேசுவரஞ் சென்று அங்கு ஒளிந்திருந்த அப் பகைவரைச் சிறைப்படுத்தி வந்து நாயக்கரது முன்னிலையில் நிறுத்தின ராம். மற்றொருத்தர் நாரணப்ப நாயக்கர் என்னும் பாளையக்காரர் மதுரை சமஸ்தானத்தினர் சொக்கநாத நாயக்கர் அவர்கள் காலத்தில் பாளையம் உய்த்துத் தஞ்சை விசயராகவ நாயக்கர் அவர்களுக்கும் இச் சொக்கநாத நாயக்கருக்குமாகப் போர்த் திகழுகையில் தஞ்சை சென்று பகைவரைக் களக்கைதியாக்கித் தம் அதிகாரியிடம் ஒப்புவித்தார். இங்ஙனமாக இக் குடியினர் பலரும் மாவீர புருடராக இருந்து வந்தனர் என்பது இதிலிருந்து விளங்குகின்றது. முற்றும் இருக்கிறது. மிகப் பிழையுடன் இருக்கிறது. மற்றோர் பிரதி, மெகென்ஸி பெரிய வால்யும் 3-ஆவதில் 444–450-ஆவது பக்கங்களில் எழுதப்பெற்றிருக்கிறது.

No. 3168. மதுரை திருமலை கொண்டம நாயக்கர் வமிசாவளி.

MADURAI TIRUMALAI KOṆḌAMA NĀYAKAR VAMIŚĀVAḶI.

Pages, 8. Lines, 25 on a page. Condition, good. Extent, 130 granthas.

Begins on fol. 75 (*a*) of the manuscript described under D. No. 178. Complete.

A genealogical account of a Pāḷaiyakkār named Tirumalai Koṇḍama Nāyakan of Madura.

Beginning :

மதுரை சமஸ்த்தானத்துக்கு உள்பட்ட திருமலை கொண்டம நாயக்கர் பாளையப்பட்டு வமிசாவளிக்கு விவரம்.

சாலிவாகன சகாப்தம் வருஷம் ௲௩௱௪௰௨ ஷ கலியுக சகாப்தம் ச௲௫௱௨௰௯ ஷ இதன் மேற்செல்லாநின்ற ஷ ச௲௬௱௪௰௬ ஷ (?) எங்கள் பெரியோர்கள் குதகு (?) தேசமத்தியிலிருந்தவர்கள் இராயர் சமஸ்த்தானத்தில் வந்து பால முத்தையா நாயக்கர் என்கிறவர் சேவகஞ் சேவிச்சுக்கொண்டு இருந்தவர்கள். அவ்விடத்தில் சரிப்படாமல் குஞ்சு குழந்தைகள் பந்து சனங்கள் சகிதமாய்த் தெற்கே தேவர்மறியென்று காவேரிக்குத் தெற்கு எழுகாத வழிக்கு இப்பறம் இருந்தது. தேவர்மறி யென்கிற ஆலமரத்தடியில் வந்து இறங்கினோம் * * *

End :

திருமஞ்சனக்கோட்டை வாசலுக்குப் பிரதட்சணமாக அம்பத்தேழாம் கோத்தளம் காத்துக்கொண்டு இந்தப் பூமியும் அனுபவித்துக்கொண்டு குமாரவர்க்கமாக இருக்கச் சொல்லிக் கட்டளையிட்டு உடுகரையுங்கொடுத்து

அனுப்புவித்தார்கள். அவர்களும், அதே முறைக்கு ஊர்க்கு வந்து சிறிது நாள் இருக்கும் வரையில் தெற்கே கயத்தாறு, கங்கைகொண்டான், ஆழ்வார். திருநெல்வேலி.

இவை முதலிய தலங்களிலே பாண்டியன் வைப்பாட்டி மக்கள் "பஞ்ச பாண்டியர்கள்" என்று பேர்வைத்துக்கொண்டு அஞ்சு பேர் அஞ்சு கோட்டையும் போட்டுக்கொண்டு தட்சிண பூமியை வியாபித்துக் கொண்டு இருந்ததில் விசுவநாத நாயக்கர் அவர்கள் அரிய நாயக முதலியார் அவர்களையும் விருஷன்பாகம் (?) கேசவப்ப நாயக்கரையும் சிறிது சனத்தையும் சேகரித்து அனுப்புவித்து அந்தச் சீமை கைவசம் ஆகும் படியாய் * * *

(Unfinished in the original manuscript).

(கு. பு.).—

இது, மதுரை சமஸ்தானத்தில், இராயர் அவர்களது தொரைத்தனத்தில் இருந்த கொண்டம நாயக்கர் அவர்களது பாளையத் திறனையும் அவர் வமிச முறைமையினையும் எடுத்துக் கூறுவதாம். இதில், இக் குலத்துக்கு மூலபுருடர் வத்திப்பாலம் முத்தைய நாயக்கர். அவர், வடபுலனிலிருந்து தெற்கில் குடியேறித் "தேவர்மலை" யென்னும் தலத்தில் ஓர் ஆலமரத்து நிழலில் வாசஞ்செய்து கொண்டிருந்தனராம். அக் காலையில் ஆதி புருடர், தம் மாட்டுக் கடையிலிருந்து பால்கொண்டு வரும் வழியில் தடுக்கி இடறிப் பால் கீழிற் சொரிந்த அளவில். அவர் அத்தலத்தைக் கண்ணுற்றபோது அத்தலத்தில் நரசிங்க மூர்த்தி தோன்றிக் காட்சி கொடுத்தார். அவர் அம் மூர்த்தத்தை யாராதித்து வருவாரானார். ஆனால் நாளடைவில், அவருக்குத் தாரம் இருவர் ஆனார். மூத்தவள் சக்கம்மாள். இளையவள் பொம்மம்மாள். மூத்த மனைவிக்குக் "கொண்டம நாயக்கர்," "முத்தைய நாயக்கர்" என இருவர் பிறந்தனர். இளையாளிடத்துத் தோட்டப்ப நாயக்கரும், சக்கம் சாமி நாயக்கரும் பிறந்தனராம். ஆக, வத்திப்பாலம் முத்தைய நாயக்கருக்கு ஆண்மக்கள் நால்வர் ஆவர். அவர்களிடத்தில் நின்றும் இம் மரபு பல்கினதாம் என்க. இந் நூல் அரை குறையாக விடுக்கப்பட்டுள்ளது. மற்றோர் பிரதி, மெகென்ஸி பெரிய வால்யும் 3 ஆவதில், 451–453 ஆம் பக்கங்களில் எழுதப்பெற்றிருக்கிறதாம்.

No. 3169. குன்றத்தூர் புதையல் வரலாறு.
KUNṞATTŪRPPUDAIYAL VARALĀṞU.

Pages, 3. Lines, 25 on a page. Condition, good. Extent, 48 granthas.

Begins on fol. 78 (*b*) of the manuscript described under D. No. 178 of T.D.C. Vol. I.

Complete.

An account of the hidden treasure at the various places of Kunṟattūr hill near Madhurāntakam taluk in Chingleput district.

Beginning :

மதுராந்தகத்துக்குக் கிழக்கு, மூன்றதுகுளம், முள்ளிவீரண்ணன் குன்றம் இவைகட்குக் கிழக்கு, நீலமங்கலத்துக்கு மேற்கு, தச்சூருக்கு வடக்கு,

மாம்பட்டுக்குத் தெற்கு இருக்கும் குன்றத்தூரில் ஒரு மலையிருக்கிறது. அதன் பேரில் ஒரு ஆழ்வார் கோவில் இருக்கிறது. இதில் பாரம்பர்யமாய் ஒரு வள்ளுவன் பூசைபண்ணி வருகிறான். இப்போது அந்தச் சந்ததியிலிருக்கிற வள்ளுவர் பெருமாள் தாசரி மாமூல்படி தன் பிள்ளைக்கு நாமம் தரிப்பிக்கிற நிமித்தம் பார்த்துத் தன் சம்சாரத்துடன் வரும்போது அங்கே கோயிலில் வெகுநாளாய் உச்சத்தில் கட்டியிருந்த ஒரு பெட்டியறுந்து விழுந்து கிடந்தது * * * * * * *

உடைத்துத் திறந்து பார்க்கும்போது சில கணக்கு வழக்குகளும் ஒரு தாமிர சாசனமும் இருந்தது. வாசித்துப் பார்க்கும் இடத்தில் அதில் நீலமங்கலம், மாம்பட்டு, குன்றத்தூர், தச்சூர் என்ற அந்தக் கோயிலுக்குச் "சோத்திரியம் கிராமம்," என்றும் இதுவன்றியில் நுனி மலையிலேயும் அடி நிழலிலிலேயும் தனம் [பொ] (பு) தைத்து வைத்திருக்கிறது என்றும், தச்சூரிலேயும் ஒரு சிறு புதையல் இருக்கிறது என்றும் எழுதியிருந்தது.

* * * * * * * *

End :

இன்னமும் அந்தப் பாழுந் துரவில் பணம் இருக்கிறதென்றும் பிரக்யாதி. இதைப் பரிசோதிக்கிறதுக்கும், இந்தத் தாமிரசாசனம் வாங்கிப் பெயர்த்து எழுதுகிறத்துக்கும் கலெக்கட்டர் சர்ச்சுகளுடைய அதிகாரக் கடுதாசி வேண்டியிருக்கிறது. இதை வாங்குவதில் அதை வெட்டிச் சோதிக்கிறத்துக்கு வேறே அனுமானம் இல்லை. இதனாலே வலுத்த ஆதாயம் வரும்போலே தோன்றுகிறது.

(கு. பு.).—

இது, "மதுராந்தகம்" தாலூக்காவுக்கு அருகில் உள்ள குன்றத்தூர் மலையிலே நுனியிலும் அடியிலுமாகப் பணப்புதையல் உண்டென்றும், அக்கோயிலுக்கு உரிமையானதொரு தாமிரசாதனமதிலே நீலமங்கலம், மாம்பட்டு, குன்றத்தூர், தச்சூர் என்ற கிராமங்கள் அக்கோவிலுக்குச் சுரோத்திரிய கிராமங்களாக விடுக்கப்பெற்றவையென்றும், தச்சூரிலே ஒரு தனப் புதையல் இருக்கிறது என்றும் இன்னும் இன்னோரன்ன சில விசேடச் செய்திகள் பலவும் காணப்பெற்றிருக்கின்றன எனக் கூறி முடிக்கிறது. மிகச் சுருக்கமானது. ஆனால், அத் தாமிரசாசனமானது இன்னாரால், இக்காலத்து, எழுதிவைக்கப் பெற்றது என்றறிய இவைகளில் ஒன்றும் இதிலிருந்து விளங்கப்பெறவில்லை. மிக எழுத்துப் பிழைகளுடன் உள்ளது. இதுக்கு மற்றோர் பிரதி மெகென்ஸி மேனஸ்கிருப்ட்ஸ் பெரிய வால்யும் மூன்றுவதில், 454-ஆம் பக்கத்திலே எழுதப்பெற்றிருக்கிறது. நிற்க, ஷ குன்றத்தூரில் ஒரு பாழுங் கிணற்றில் ஒரு தனப் புதையல் உளது என்று பிரசித்தமாக வழங்கிக்கொள்கின்றனர் என்பதாகவும் இறுதியில் குறிக்கப் பட்டிருக்கிறது. அதுபோகக் கடையகத்து "இவை கன்னிவாடி அப்பைய நாயக்கர் வமிசாவளி விவரம் முற்றிற்று. 1891-ம்ஸ்ரீ மேமீ 6உ இராசுமுதலி யெழுதியது." என்பதாக ஒரு தொடர்மொழி காணப்படுகிறது. அது எங்கேயோ எழுதவேண்டுவது இங்கு எழுதிவைக்கப் பெற்றிருக்கிறது போலும். இங்குப் பயன் இல்லாதது.